In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ENCYCLOPAEDIA OF NATARASA PERUMAN

IN SIVAGAMAS - SILPA SASTRAS - YANTRAS - AND PUJAS

நடராசப் பெருமான்



திருவாவடுதுறை ஆதீனம் சரசுவதி மகால் நூல்நிலைய ஆய்வுமையம்,
திருவாவடுதுறை – 609 803.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நீரில் துளிர்த்த நூல்?

ஜனம் என்ற சொல்லுக்கு ஜனித்தவை என்று பொருள். ஆக, மனிதர்கள் மட்டுமல்ல; இந்தப் பூமியில் தோன்றும் அத்தனை ஜீவராசிகளுமே ஜனம்தான்.

இந்த மாபெரும் ஜனக்கூட்டம், பழக்க வழக்கத்தில் கோடானுகோடி வித்தியாசங்களைக் கொண்டது. இன்னும் சொல்வதானால் ஒவ்வொரு ஜீவனும் ஒவ்வொரு விதமானவை.

அந்த வகையில், பல கோடிக்கணக்கில் வித்தியாசமான இயல்புகளைக் கொண்ட இந்த பிரம்மாண்ட ஜனக்கூட்டத்தில் ஒத்துப்போகிற ஒரே அம்சம் ஒன்று உண்டெனில், அது ஆனந்தம் அடைய வேண்டுமென முயற்சிக்கும் இச்சைதான்.

ஆம்... புழு முதல், மனிதன் வரை எல்லோரும் ஆனந்தத்தை விரும்புகின்றனர்; அதை அடைய, தங்களால் இயன்ற அனைத்தையும் செய்கின்றனர்; அதற்காகவே வாழ்கின்றனர்.

ஆனால் ஜீவகோடிகளால் ஆனந்தம் அடையப்படுகிறதா எனக் கேட்டால் உண்மை உணர்ந்த எவருமே இல்லை என்றுதான் கூறுவார்கள். ஏனெனில் ஜீவாத்துமாக்கள், செண்பக மலரென்று நினைத்து சகதியை முகர்ந்து, அதுவே ஆனந்தமென எண்ணி ஏமாறுகின்றன... இல்லையில்லை, ஏமாற்றப்படுகின்றன.

யார் இப்படி ஏமாற்றுவது? என்ற கேள்விக்கான விடை ஞானிகளிடம் மட்டுமே உள்ளது. அவர்களைக் கேட்டால், மாயையால் ஜனக் கூட்டம் வஞ்சிக்கப்படுகிறது என உரைப்பார்கள்.

அவர்கள் உரைத்தால் மட்டும் போதுமா? நிஜமான ஆனந்தத்தை நாம் உணரவேண்டாமா? அதற்கு என்ன வழி...?

வழி இருக்கிறது! யாரிடம் மெய்யான ஆனந்தம் உண்டோ, அவரை அண்டினால் நாமும் அதை அனுபவிக் கலாம். யார் மலர் வேறு, மணல் வேறு என்று காட்டித் தருவார்களோ அவர்களே ஆனந்த சாம்ராஜ்யத்துக்கு வழியும் சொல்வார்கள்.

அப்படி வழிகாட்டும் தகுதியுடைய வள்ளல்களில் ஒருவர் உமாபதி சிவாசாரியார். இவர், சைவ சமய சந்தானக் குரவர்களில் ஒருவர். அவரிடம் மனப்பூர்வமாகப் பிரார்த்தித்து, ஆனந்தத்துக்கு வழி கேட்டால், ஆனந்த ஞான மாநடராசப் பெருமானை சரணடைந்தால் ஞானம் கிட்டும்; அதன் பயனாய் நிலைத்த ஆனந்தமும் ஏற்படும் எனப் போதிப்பார்.

இதை மெய்யென நிரூபிக்கும் வகையிலே, மெய்க்கண்டார் சந்ததியின் அருட்கொடையாய் விளங்கும் திருவாவடுதுறை ஆதீனம், **நடராசப் பெருமான்** என்ற தலைப்பிலே அற்புத நூலொன்றை வெளியிட்டுள்ளது.

தில்லையில் உள்ள அம்பலவாணரே, தான் உமாபதி சிவத்தின் பூஜைப் பெட்டகத்தில் உள்ளதாகக் கூறியது இங்கே நினைவு கூரத்தக்கது. அந்தப் பெட்டகத்தில் விளங்கியவரே திருவாவடுதுறை ஆதீனத்தில் ஞான மாநடராசப் பெருமானாக அருள் பாலிப்பதும் சிந்தித்து மகிழக்கூடிய பொருத்தமாகும்.

சிவபெருமானுக்குரிய இருபத்தைந்து மகேஸ்வர வடிவங்களில் நடராஜ வடிவமும் ஒன்றெனக் கூறுவார் உண்டு. காமிகம், காரணம், அஜிதம், ரௌரவம் முதலான சிவாகமங்கள் அப்படிக் கருதியே நடேஸ்வர வழிபாட் டுக்குரிய அனைத்து நெறி முறைகளையும் வகுத்துள்ளன. அவற்றைப் பற்றிய விரிவான விளக்கங்களை இந்த நூலில் காணலாம்.

இது தவிர சிவபெருமானின் நூற்றியெட்டுத் தாண்டவ வகைகள் பற்றிய குறிப்புகள், திருமந்திரத்தில் உள்ள திருவம்பலச் சக்கரங்கள் பற்றிய விளக்கம் என ஆடல்வல்லானைப் பற்றிய பல்வேறு தகவல்களை உள்ளடக்கிய களஞ்சியமாக இப்புத்தகம் திகழ்கின்றது.

நூலின் இறுதிப் பகுதியில் இடம் பெறும் நடராஜர் அஷ்டோத்திரமும், ஸஹஸ்ர நாமாவளியும் மெய்யன்பர் களுக்கு அளவற்ற ஆனந்தத்தை ஏற்படுத்தும்.

இப்புத்தகத்தில் பரவலாகக் காணப்படும் கூத்தப்பெருமானின் புகைப்படங்களும், கோட்டோவியங்களும், **ஆடஎடுத்திட்ட பாதத்திடம்** அளவற்ற அன்பை ஊட்டும்.

இந்நூலாசிரியர் திருவிடைமருதூர் எஸ். நாராயணசுவாமி, அம்பலவாணரின் கழலாகவே மாறி அத்தனை விளக்கங்களையும் ஒலிக்கச் செய்துள்ளார். இந்நூலை நேசித்து வாசிப்பவர்கள், சேரமான் பெருமாள் போல கூத்து வல்லானின் கழலோசையை நெஞ்சருகே உணரலாம்.

ஆகமங்கள், மகேஸ்வர வடிவங்களில் ஒன்றாக ஆடல் வல்லானைக் கொண்டாலும் அடியார்களின் அனுபவம் வேறானது. உமாபதி சிவம், அம்பலவாணரின் நடன வேகத்தால் அவருடைய சடை வழியே தெறித்த கங்கை நதியின் நீர்த் திவலைகளே ஆங்காங்கே உள்ள தலங்களில் சிவலிங்கங்களாகவும், மூர்த்திகளாகவும் ஆயின என்று தான் இயற்றிய ஸ்ரீகுஞ்சிதாங்கிரி ஸ்தவம் (ஸ்லோகம்:111)ல் கூறுவார்.

அந்த நீர்த் திவலைகளில் ஒன்றுதான் துறைசையாதீனம் வெளியிட்டுள்ள நடராசப் பெருமான் என்னும் இந்நூலாகவும் முகிழ்த்ததோ எனத் தோன்றுகிறது.

நடராசப் பெருமான்

வெளியீடு: திருவாவடுதுறை ஆதீனம் சரசுவதி மகால் நூல் நிலையம் மற்றும் ஆய்வு மையம், திருவாவடுதுறை – 609 803. பக்கங்கள்: 134, விலை ரூ.125.

–தமிழன் எக்ஸ்பிரஸ் ஜனவரி 8–14,2003; பக்கம் 12,13.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

திருக்கயிலாய பரம்பரைத்
திருஆவடுதுறை ஆதீனம்

அருள்மிகு ஞான மாநடராசப் பெருமான் ஆனித் திருமஞ்சன விழா மலர்

திருவள்ளுவர் ஆண்டு 2033
மெய்கண்டார் ஆண்டு 779
விஷு ஆண்டு – ஆனி 14–ஆம் நாள்
புதன் கிழமை
28.6.2001

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உரிமை பதிவு:
ஆதீன வெளியீடு எண்: 477
விலை ரூபா.125.00

ஸ்ரீநமசிவாயமூர்த்தி ஆஃப்செட் அச்சகம்,
திருவாவடுதுறை.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

நடராசப் பெருமான்

NATARASA PERUMAN

(Encyclopaedia of Natarasa Peruman in Sivagamas - Silpas - Yantras - Pujas)

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம்
23-ஆவது குரு மகாசன்னிதானம்
சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிக பரமாச்சாரிய சுவாமிகள்
அவர்களின் 19-ஆவது ஆண்டு அருளாட்சியில்
வெளியிடப்பெறுவது

நூல் ஆசிரியர்

திருவிடைமருதூர்
S. நாராயணசுவாமி, M.A.(Phil), M.A.(His), M.Ed., Dip. in Sanskrit.
(ஆசிரியர் . திருவாவடுதுறை ஆதீனக் கல்வி நிலையம்)
ஆராய்ச்சியாளர், சிவாகமம் மற்றும் சிற்ப ஆராய்ச்சித்துறை,
திருவாவடுதுறை ஆதீனம் சரசுவதி மகால் நூல் நிலையம் மற்றும் ஆய்வு மையம்.

திருவாவடுதுறை ஆதீனம்
28.6.2001

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்



குருமரபு வாழ்த்து

கயிலாய பரம்பரையிற் சிவஞான
போதநெறி காட்டும் வெண்ணை
பயில்வாய்மை மெய்கண்டான் சந்ததிக்கோர்
மெய்ஞ்ஞான பானு வாகிக்
குயிலாரும் பொழிற்றிருவா வடுதுறைவாழ்
குரு நமச்சிவாய தேவன்
சயிலாதி மரபுடையோன் திருமரபு
நீடூழி தழைக மாதோ.



– மாபாஷ்யகாரர்
அருள்திரு மாதவச் சிவஞான சுவாமிகள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆதீனம் குருமுதல்வர்

அருள்திரு நமசிவாயமூர்த்திகள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம்

குரு பரம்பரை விளக்கம்

சீகண்ட பரமசிவம்

|

திருநந்திதேவர்

சனகர் — சனந்தனர் — சனாதனர் — சனற்குமாரர்

சத்தியஞான தரிசினிகள்

பரஞ்சோதி மாமுனிவர்

மெய்கண்ட தேவ நாயனார்

அருள்நந்தி சிவாசாரியார்

மறைஞானசம்பந்த சிவாசாரியார்

உமாபதி சிவாசாரியார்

அருணமச்சிவாயர்

சித்தர் சிவப்பிரகாசர்

1. ஸ்ரீ நமச்சிவாயமூர்த்திகள் ***(திருவாவடுதுறை ஆதீனக் குருமுதல்வர்)***
2. ஸ்ரீ மறைஞான தேசிகர்
3. ஸ்ரீ அம்பலவாண தேசிகர்
4. ஸ்ரீ உருத்திரகோடி தேசிகர்
5. ஸ்ரீ வேலப்ப தேசிகர்
6. ஸ்ரீ குமாரசுவாமி தேசிகர்
7. ஸ்ரீ (பின்) குமாரசுவாமி தேசிகர்

(2–7) .... 1360 – 1625

8. ஸ்ரீ மாசிலாமணி தேசிகர் 1625 – 1658
9. ஸ்ரீ இராமலிங்க தேசிகர் 1658 – 1678
10. ஸ்ரீ வேலப்ப தேசிகர் 1678 – 1700
11. ஸ்ரீ (பின்) வேலப்ப தேசிகர் 1700 – 1730
12. ஸ்ரீ திருச்சிற்றம்பல தேசிகர் 1730 – 1770
13. ஸ்ரீ அம்பலவாண தேசிகர் 1770 – 1789
14. ஸ்ரீ (வேளூர்) சுப்பிரமணிய தேசிகர் 1789 – 1845
15. ஸ்ரீ அம்பலவாண தேசிகர் 1845 – 1869
16. ஸ்ரீ (மேலகரம்) சுப்பிரமணிய தேசிகர் 1869 – 1888
17. ஸ்ரீ அம்பலவாண தேசிகர் 1888 – 1920
18. ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் 1920 – 1922
19. ஸ்ரீ வைத்தியலிங்க தேசிகர் 1922 – 1937
20. ஸ்ரீ அம்பலவாண தேசிகர் 1937 – 1951
21. ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் 13.4.1951 முதல் 23.9.1967
22. ஸ்ரீ அம்பலவாண தேசிகர் 23.9.1967 முதல் 07.4.1983
23. ***சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் 7.4.1983 முதல் இவ்வாதீன ஞான பீடத்தில் வீற்றிருந்து அருளாட்சி செய்து வருகின்றார்கள்.***

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

ஆதீனம் குருமுதல்வர் அருள்வரலாற்றுச் சுருக்கம்

உலகம் ஓர் குலம்; உலகு அனைத்தும் இன்புறவேண்டும் என்ற பரந்த மனம் படைத்தது ஆசாரியப் பரம்பரை. திருக்கயிலையில் உண்டாகிய இப்பரம்பரை காலம் பல கடந்து இடையறாது இந்நாள் வரை வளர்ந்து வருகிறது. கயிலைப் பரம்பரையின் மெய்கண்ட சந்தான ஆசாரியர்களில் ஸ்ரீஉமாபதி சிவாசாரியரிடம் உபதேசம் பெற்ற ஸ்ரீ அருணமச்சிவாயரிடம் தீட்சை பெற்றவர் ஸ்ரீசித்தர் சிவப்பிரகாசர். அவரிடம் சிவஞான அபிஷேகமும், ஆசாரிய பரம்பரையைப் பாதுகாத்துவர திருஆணையும் பெற்று, திருவாவடுதுறையில் ஆதீனத்தைத் தோற்றுவித்த முதற்பெரும்குருமூர்த்திகள் ஸ்ரீநமசிவாயமூர்த்திகள்.

இவர்கள் சோழ மண்டலத்தில் மயிலாடுதுறைக்கு அருகில் உள்ள மூவலூரில் பரம்பரை சைவ வேளாளர் குலத்தில் தோன்றியவர்கள். இவர்களது பிள்ளைத் திருநாமம் வைத்தியநாதன் என்பது. இளம் பிராயத்தில் இவர்கள் தம் பெற்றோருடன் புள்ளிருக்கு வேளூரில் (வைத்தீஸ்வரன்கோயில்) ஸ்ரீவைத்திய நாதப் பெருமானை வழிபட்டுத் திருவருளில் ஒன்றிய சிந்தையினராக மனமுருகி நின்றபோது, பெருமானே ஒரு சிவாசாரியர் திருமேனி தாங்கி வந்து சிவலிங்கத் திருமேனி ஒன்றினைத் தந்தருளிய பேறுடையவர்கள்.

தல யாத்திரையாகத் தம் அடியார் திருக்கூட்டத்துடன் மூவலூர் சேர்ந்த ஸ்ரீசித்தர் சிவப்பிரகாசர், சிறிய பெருந்தகையாராக விளங்கிய வைத்தியநாதரைக் கண்டார்கள். சிவஞானப் பேற்றிற்கு உரிய குறிகளையும் திருவருட் குறிப்பையும் உணர்ந்து, பெற்றோர் இசைவுடன் பிள்ளையைத் தம்முடன் அழைத்துக் கொண்டு திருவாவடுதுறையை அடைந்தார்கள்.

அங்கு ஸ்ரீசித்தர் சிவப்பிரகாசர் அப்பிள்ளைக்கு ஞானதீக்கை புரிந்து **நமச்சிவாயம்** என தீட்சாநாமம் சாத்தி, குரு பரம்பரையில் தாம் பெற்ற சிவஞான உபதேசத்தை அருளிச் சிவாஞானானந்த அனுபவம் கைவருமாறு அநுக்கிரகம் செய்தார்கள். குருமரபில் தாம் பெற்ற ஸ்ரீஉமாபதி சிவாசாரியர் பூஜை செய்த ஸ்ரீஞானமா நடராசப் பெருமானையும், தம்முடைய ஆன்மார்த்த மூர்த்தியையும் பூஜித்து வரும் அதிகாரத்தையும் வழங்கினார்கள். தாம் வீற்றிருந்த இடத்தில் வரை கீறி அமைக்கப்பெற்ற அறையுள் அமர்ந்து சைவ சித்தாந்த மரபு தழைக்க சிவஞானோபதேசம் செய்துவர ஆணையருளி, தாம் திருமறைக் காட்டிற்குச் சென்றருளினார்கள்.

ஸ்ரீநமச்சிவாய தேசிக மூர்த்திகள் தம் ஞானாசிரியர் திருவாணையின் வண்ணம் அவர் வகுத்த அறையிலிருந்து, வரும் பக்குவ ஆன்மாக்களுக்கு சிவஞான உபதேசம் அருளி சுத்தாத்துவித சைவ சித்தாந்த பரிபாலனம் செய்து வந்தார்கள்.

இவ்வண்ணம் ஆதீன முதற்பெரும் குருமூர்த்திகளாக வீற்றிருந்து சுத்தாத்வித சைவ சித்தாந்த நன்மரபு தழைக்கச்செய்த ஸ்ரீநமச்சிவாயமூர்த்திகள், தங்கள் குரு சந்தானம் வளர்ந்தோங்கி வர, அம்பலவாண தேசிகருக்கு ஞானாபிஷேகம் செய்து துவிதீய ஆசாரியராக அமைத்து, ஒரு தை மாதம் அசுவதி நன்னாளில் சித்தாந்த சுத்தாத்வித முக்தி அடைந்தருளினார்கள். ஆதீனக் குருமுதல்வர் ஞான சமாதித் திருக்கோயிலில் நாள்தோறும் இரு காலம் பூசைகள் நடைபெற்று வருகின்றன.

பிரதி வருடம் தை மாதம் அசுவதி நன்னாளில் (மகரத்தலைநாள்) ஆதீன முதற்பெரும் குருமூர்த்திகளாக விளங்கும் ஸ்ரீநமச்சிவாயமூர்த்திகளின் குருபூஜை வழிபாடுகள் 10 நாட்கள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

இவ்வாறாக ஸ்ரீநமச்சிவாயமூர்த்திகளின் வழிவழி வருகின்ற சிவஞான உபதேச, அபிஷேக பரம்பரையில், இந்நாளில் இவ்வாதீனத்து 23–ஆவது குரு மகாசன்னிதானம் சீர்வளர்சீர் சிவப்பிரகாசதேசிக பரமாச்சார்ய சுவாமிகள் சித்ராசன சிவஞான பீடத்தில் எழுந்தருளி அருளாட்சி செய்து வருகின்றார்கள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

Sivamayam

Thirukkayilaya Paramparai,. Thiruvavaduthurai Adheenam, During the Holy Reign of the 23rd Guru Mahasannidhanam Seer-valar-Seer

SIVAPRAKASA DESIKA PARAMACHARYA SWAMIGAL

BIBLIOGRAPHICAL DATA

1.	Title of the book	:	NATARASA PERUMAN
2.	Editor	:	S. NARAYANASWAMY, M.A., M.A., M.Ed., Dip.in.Sanskrit.
3.	Publisher	:	Thiruvavadurthurai Adheenam Sarasvathi Mahal Library & Research Centre, Thiruvavaduthurai - 609 803.
4.	Publication No	:	477
5.	Price	:	125.00
6.	Subject	:	Religion (Agama - Silpa - Yantra - Pujas including Fine Arts).
7.	Languages	:	Tamil & Sanskrit
8.	Number of Pages	:	134 + 16
9.	Number of Photos	:	95
10.	Edition	:	Ist Edition.
11.	Number of Copies	:	1000 Copies
12.	Date of Publication & Festival	:	28.6.2001 - Thiruvavaduthurai Adheenam Natarajar - AANI THIRUMANJANAM DAY.
13.	Paper used	:	Seshayee.
14.	Size of the Book	:	1/4 Demmy Size.
15.	Printing type used	:	Offset printing.
16.	Binding	:	Stip Binding.
17.	Printer	:	Sri Namasivayamurthy Offset press, Thiruvavaduthurai - 609 803.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ
சிவமயம்

பொருளடக்கம்

	முன்னுரை	... i
	INTRODUCTION	... v
1.	தில்லையும் திருவாவடுதுறையும்	... 1
2.	நடராசர் திருமேனிச் சிறப்பு	... 8
3.	சிவாகம வடிவம்	... 14
4.	திருச்சிற்றம்பலத்தில் அருள்பாலிக்கும் தாண்டவேசுவரர்	... 18
5.	பஞ்ச சபைத் தலங்கள்	... 21
6.	நூற்றெட்டுத் தாண்டவங்கள்	... 39
7.	சிவபராக்கிரமத்தில் நிருத்த மூர்த்திகள்	... 48
8.	உத்தர காமிகாகமத்தில் நிருத்த மூர்த்தி ஸ்தாபன முறை	... 53
9.	உத்தர காரணாகாமத்தில் நடேச ஸ்தாபன விதி (மூலபாடம்)	... 58
10.	அஜிதாகமத்தில் – புஜங்கத்ராச நிருத்தம், சந்தியா நிருத்தம், தண்டபாத நிருத்தம்	... 60
11.	ரௌரவாகமத்தில் – நிருத்த ரூபங்கள் (மூலபாடம்)	... 62
12.	பிரதிமாலட்சணத்தில் நிருத்தமூர்த்தி வடிவங்கள்	... 68
13.	பிரதிமாலட்சணத்தில் நிருத்தமூர்த்தி வடிவங்கள் – மூல சுலோகங்கள்	... 74
14.	காஸ்யப சில்ப சாஸ்திரத்தில் நிருத்த மூர்த்தி	... 92
15.	சில்ப ரத்னத்தில் நடனமூர்த்தி	... 97
16.	ஸ்ரீதத்வநிதி சிற்பநூலில் சப்த தாண்டவ மூர்த்தி ரூபங்கள்	... 99
17.	மூர்த்தி தியானத்தில் நடேசர் – சிவகாமி தியானங்கள்	... 101
18.	பிரபஞ்சசார சங்கிரகத்தில் – சிதம்பர பஞ்சாட்சர தியானம், யந்திரம், மந்திரம் (மூலபாடம்)	... 103
19.	திருமந்திரத்தில் திருவம்பலச் சக்கரங்கள்	... 107
20.	சிவாலயங்களில் (பரார்த்த பூசை) நடராசர் பூசை	... 114
21.	நடராசப் பெருமானின் ஆறுகால அபிஷேக காலங்கள்	... 116
22.	நடராசப் பெருமான் அஷ்டோத்தர நாமாவளி	... 118
23.	நடராசப் பெருமான் சகஸ்ர நாமாவளி	... 120

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

எடுத்தாண்ட நூல்கள்

1. திருவாவடுதுறை ஆதீன வரலாறு
2. ஆடல்வல்லான்
3. சிவாலயத் திருமேனிகள்
4. சிதம்பரம் – கும்பாபிஷேக மலர் 1986
5. சைவ வேதாந்தம்
6. திருமுறைத் தலங்கள்
7. 1,2,3 திருமுறைகள் (தருமை பதிப்பு)
8. சிவபராக்கிரமம்
9. படிமக்கோடுகள்
10. உத்தரகாமிகம்
11. உத்தர காரணாகமம்
12. அஜிதாகமம்
13. ரௌரவாகமம் – கிரியாபாதம்
14. அம்சுமத் பேதாகமம்
15. காஸ்யப சில்ப சாஸ்திரம்
16. சில்ப ரத்னம்
17. ஸ்ரீதத்வநிதி
18. மூர்த்தித் தியானம்
19. பிரபஞ்ச சார சங்கிரகம்
20. திருமந்திரம் மூலம்
21. திருமந்திரம் நான்காம் தந்திரம் உரை
22. பரார்த்த பூசா விதி
23. தில்லை நடராசப் பெருமானின் ஆறுகால அபிடேக விளக்கம்.
24. ஆகாச பைரவ கல்பம்
25. பிரதிமா லட்சணம்
26. மகா மிருத்யுஞ்சயர்
27. அரசவனத்து அறநிலையம்
28. மெய்கண்டார் இதழ்கள் மலர் 17ல் இதழ் 12, மலர் 18ல் இதழ் 1,2,3
29. குஞ்சிதாங்கிஸ்தவம்
30. நடேஸ்வர தாண்டவம்
31. நவக்கிரகத் தலங்கள் – ஆலய மஞ்சரி
32. யந்திர கோசம்
33. 12ஆம் திருமுறை பெரியபுராணம்
34. ஷ நூலாசிரியரின் கையெழுத்துப் பிரதிகள் ஆகம விஷயங்கள் – 3
35. திருவாவடுதுறை ஆதீன் சரசுவதி மகால் அச்சு நூல்கள்
36. சைவ நீதி – மலர் 4 இதழ் 3, கொழும்பு
37. Bronzes of South India
38. Hindu Iconography
39. Master pieces of early South Indian bronzes
40. Early Chola
41. Temples of South India
42. South Indian Images
43. Pondicherry - French Indology Photos
44. Pratima Kosha
45. Tanjore Art Gallery - photos
46. Pondicherry - French Indology - Agama Books
47. Siva Thandava.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

முன்னுரை

எங்கும் திருமேனி; எங்கும் சிவசத்தி;
எங்கும் சிதம்பரம்; எங்கும் திருநட்டம்;
எங்கும் சிவமாய் இருத்தலால், எங்கெங்கும்
எங்கும் சிவனருள் தன்விளை யாட்டே.

– திருமந்திரம் 2722

உலகெ லாம்உணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்;
அலகில் சோதியன்; அம்பலத் தாடுவான்;
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.

–பெரியபுராணம் .

கலை

கலை என்பது அழகின் செறிவு; கருத்தின் பதிவு; கவர்ச்சியின் நிறைவு; மகிழ்ச்சியின் உறைவிடம்; பண்பாட்டின் சிகரம், வளர்ந்த நாகரிகத்தின் சின்னம்; இவ்வண்ணம் எல்லாந்தான். கடவுள் எங்கும் பரவி என்றும் விளங்குவது போலக் கலையும் எங்கும் பரவி என்றும் விளங்கத்தான் செய்கிறது. கலைகளின் இருப்பிடம் நமது திருக்கோயில்கள். கலைகளின் வாயிலாக கண்கண்ட தெய்வங்களின் திருமேனியின் அழகு, ஒன்றை ஒன்று விஞ்சுவனவாக உள்ளது. கலைஞன் தனது மனோ நிலையினை முன்னதாக ஓவியத்தில் தொடங்கி சிற்பத்தில் முடிக்கின்றான். 64 கலைகளில் சிற்பக் கலையானது கண்டோரை வசப் படுத்தும் காந்த சக்தியாகவே அமைகிறது.

மூன்று வகை

இவ்வாறாக வாழும் உயிர்களாகிய நாம் உய்யும் பொருட்டு பல்வேறு வடிவங்களைத் தாங்கி வந்து ஆட்கொள்ளும் பெருமான் சிவனே ஆவான். அங்ஙனம் ஆட்கொள்ளும் வடிவங்கள் நமது தகுதிக்கேற்ப போக வடிவினனாகவும், யோக வடிவினனாகவும், வேக வடிவினனாகவும் வந்து அருளுகின்றான்.

இரு வழிபாடு

நமது முன்னோர்கள் சிவ வழிபாட்டில் பல நியதிகளை வகுத்துள்ளனர். ஆன்மார்த்த வழிபாடு, பரார்த்த வழிபாடு. ஆன்மார்த்த வழிபாடு என்பது நமது வீட்டில் சுற்றத்தாரோடு நலம் பெற வேண்டிப் பூசித்தல் (தனி மனித வழிபாடு), பரார்த்த வழிபாடு என்பது திருக்கோயில் வழிபாடாகும். திருக்கோயில் வழிபாடுதான் உலக நலன் கருதி செய்யப்படுவது. அவ்வாறான திருக்கோயில் வழிபாடும், அங்கு அமைந்து அருளும் சிவமூர்த்தங்கள் எண்ணிக்கையிலும், தத்துவங்களிலும் விரிவாகவே காணப்படுகின்றன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிவபெருமானின் பல்வேறு ரூபங்களை வேதங்களும், ஆகமங்களும், சிற்ப நூல்களும் திருமுறைகளும், சங்க இலக்கிய நூல்களும் பல்வேறு செய்திகளைக் கொடுத்துள்ளதை யாவரும் அறிவர். சிவலிங்க வடிவே ஏனைய எல்லா சிவமூர்த்தங்களுக்கும் மூல வடிவாகும். சிவனாரின் 64 ரூபங்களில் (அஷ்டாஷ்ட விக்ரக லீலை) 25 ரூபங்கள் (பஞ்சவிம்சதி ரூபங்கள்) சிறப்பாக எல்லா ஆலயத்திலும் காணலாம். அதில் சிறப்பினில் சிறப்பாக நடராசர் திருமூர்த்தமானது அளவிட முடியாத கலையம்சத்தையும் தத்துவங்களையும் கொண்டுள்ளது.

நடராசப் பெருமான் ஆடலில் வல்லவன் – ஆகவே ஆடல் வல்லான் என்று போற்றுவர். இவரது 108 தாண்டவங்களையும் ஏனையத் நிருத்தங்களையும் புராணங்களாலும், நாட்டிய நூல்களாலும் திருக் கோயில் வரலாறுகளாலும் மிகச் சிறப்பாகவே சித்தரிக்கப்பட்டுள்ளன.

துறைசையாதீனத்தில் ஞான மாநடராசர்

தில்லையில் உள்ள பெருமான் துறைசையாதீனத்தில் (பூஜா ஸ்தானத்தில்) ஞான மாநடராசர் எனும் திருப்பெயரோடு உபாசனா மூர்த்தியாக இருந்து இன்றும் அருள்பாலிக்கின்றார். இப்பெருமானை பூசிக்கும் பேறு திருவாவடுதுறை ஆதீனக் குருமூர்த்திகளுக்கே உரிய சிறப்பாகும்.

உபாசனா மூர்த்தி – சிவஞான வழி தொடர்தல்

கயிலை மலையில் ஸ்ரீகண்ட பரமேஸ்வரன் ஸ்ரீநந்தியெம்பெருமானுக்கு சிவஞான உபதேசம் செய்தார். அது முதற்கொண்டு வழி வழியாக உபதேசம் தொடர்ந்து வரும் நாளில் (ஆதீனக் குருபரம்பரை அட்டவணையை முன்பகுதியில் காண்க).

ஸ்ரீஉமாபதி சிவாசாரிய சுவாமிகள் புறச் சந்தானாசாரியர்களில் நான்காமவர். அவர் வழி வந்த ஞான பீடம் திருவாவடுதுறை ஆதீனம் ஆகும். அவர் பரம ஞானியாய்ச் சிவானுபூதி செல்வராய், தில்லையில் விளங்கிய தில்லைவாழந்தணர் மரபினர். அவருடைய ஞான நலத்தை அறிந்துய்யாமல் அந்தணர்கள் ஒதுக்கி வைத்திருந்தனர். அவர்கள் தில்லையின் எல்லையிலேயுள்ள கொற்றவன்குடி என்னுமிடத்தில் மடம் கட்டி அதில் வாழ்ந்து வந்தார்கள். அவ்வாறு வாழும் நாளில், தில்லைப் பெருமானுக்கு மார்கழித் திருவாதிரைப் பெருவிழா வந்தது. விழாவிற்கு கொடியேற்றத்தை தொடங்கினார்கள் அந்தணர்கள்.

இங்கில்லை – அங்குள்ளோம்

அப்போது தொண்டரை விளக்கங் காண்பானாகிய தூமறைபாடும் வாயனாகிய நடராசப் பெருமான் திருவருளால் கொடி என்ன முயன்றும் ஏறவில்லை. அந்தணர்கள் கவன்றனர். பெருமான் அசரீரியாக ''யாம் இங்கில்லை, உமாபதி சிவத்தின் பூசைப் பெட்டகத்திருக்கிறோம். உமாபதி சிவத்திடம் சென்று உரையுங்கள். கொடியேறும்'' என்றார். கேட்ட அந்தணர்கள் ஓடோடிச் சென்று, பணிந்து உமாபதியாரிடம் கூறினார்கள். உமாபதியார் திருவருளிருந்த படியைப் போற்றிக் 'கொடிக்கவி' என்னும் ஞானப் பனுவலை இயற்றித் தோத்தரித்தார். கொடி முயற்சியின்றியே ஏறியது. எல்லோரும் உமாபதி சிவாசாரிய சுவாமிகளுடைய திருவருளனுபவத்தை அறிந்து போற்றினர். அந்தப் பெட்டகத்துள்ளே விளங்கின ஆனந்தக் கூத்தப் பெருமானே ஞான பரம்பரையின் உபாசனா மூர்த்தியாக வந்து, இன்றும் திருவாவடுதுறை ஆதீனத்தில் ஞான மாநடராசப் பெருமானாக அருள் பாலிக்கின்றார்.

இப்பெருமானுக்கு நாள் வழிபாடும், சிறப்பு வழிபாடுகளும், அமையப் பெறுவதோடு மட்டுமல்லாமல், ஞான மாநடராசப் பெருமான் திருமஞ்சனம் ஏற்றருளும் நாளில், சிறப்பு நூல்களை வெளியிட்டருளுவதனைத் துறைசையாதீனகர்த்தர்கள் வழக்கமாகக் கொண்டுள்ளனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நூலில் காண்பன

அவ்வகையில் ஆடல் வல்லானாகிய நடராசப் பெருமானின் சிறப்பினைக் கூறும் நூல்களாக ஆடல்வல்லான், தில்லைக்கூத்தன், அன்பு தந்த அருள், திருவெம்பாவை, சிவாலய பூசை விளக்கம், தில்லை நடராசப் பெருமானின் ஆறுகால அபிடேக விளக்கம் ஆகிய நூல்கள் வெளிவந்தன.

இன்றைய மங்கள தினமான (28 .6.2001) ஆனித் திருமஞ்சன விழா நாளில் சிவாகமங்கள் மற்றும் சிற்பங்களைத் தாங்கி ''நடராசப் பெருமான்'' எனும் இந்நூல் இப்பெருமானின் திருவடிகளில் மலர்ந்து உலா வருகின்றது.

இந்நூலில் மூல ஆகமங்களிலும் மற்றும் உபாகமங்களிலும், சிற்ப நூல்களிலும் காணப்படும் நடராசப் பெருமானின் பிரதிட்டை மற்றும் தியானத்தால் வெளிப்படும் திருவுரு லட்சணங்களின் மூல பாடங்கள் மற்றும் விளக்கங்களும், நடராசப் பெருமானின் சிறப்பு, 108 கரணங்கள், தத்துவம், பல நிலைகளில் காணும் நடராசர் திருவுருவங்கள், திருமந்திரம் மற்றும் மந்திர சாத்திரத்தில் உள்ள யந்திரங்கள், பூஜா முறைகள், நாமாவளிகள் ஆகியன ஒருவாறாகத் தொகுக்கப்பட்டுத் திருவாவடுதுறை ஆதீனம் 23ஆவது குரு மகாசன்னிதானம் சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்களின் பூரண ஆசியோடு 19-ஆவது ஆண்டு அருளாட்சியில் மலர்கின்றது.

உறுதுணை

இந்நூலினைத் தொகுக்கும் காலத்தில் அவ்வப்போது பல அறிவுரைகளை வழங்கியும், திருத்தம் பல செய்து உடனாக இருப்பவர் ஷெ ஆதீனப் பன்மொழிப் புலவர், சிவஸ்ரீ. சி.எஸ்.சதாசிவம், எம்.ஏ.,(ஆங்கிலம்), எம்.ஏ., (வரலாறு), எம்.எ., (தமிழ்), எம்.எட்., எம்.ஃபில்., டி.எஸ்.எம்., சிவாகமச் சிற்பத் துறைத் தலைவர் அவர்கள் என்றென்றும் உறுதுணையாக உள்ளார்கள்.

ஞானக் களஞ்சியமாகத் திகழும் ஆதீன சரசுவதி மகால் நூல் நிலைய ஆய்வு மையத்தில் உள்ள நூல்கள் மற்றும் தஞ்சை சரசுவதி மகால் சிற்ப நூல்கள், பாண்டிச்சேரி பிரெஞ்ச் இந்திய கலை நிறுவனத்தில் வெளியிட்ட ஆகம நூல்களும் சில போட்டோக்களும் சில வரைகோட்டுப் படங்களும் துணையாக அமைந்தன. மேற்படி நிறுவனங்களுக்கு நெஞ்சார்ந்த நன்றி உரித்தாகுக.

மேலும் காலத்திற்கேற்ப நூல் அமையவேண்டுமானால், கலையம்சம் பொருந்திய நடராசர் சிற்ப புகைப்படங்களோடு, இன்றியமையாத நடராசப் பெருமானின் வரைகோட்டுப் படங்களை முன்னாள் திருப்பதி தேவஸ்தான ஸ்தபதி திரு. எஸ்.எம். கணபதி ஸ்தபதி அவர்கள் எழுதி ஆதீனத்தில் சமர்ப்பித்த நூற்றொகுப்பிலிருந்து எடுக்கப்பட்ட சில வரைகோட்டுப் படங்களும், மாமல்லபுரம் சிற்பக் கல்லூரியில் பணியாற்றிய கலைச்செம்மல். திரு. கோ. திருஞானம் அவர்கள் எழுதிய – ''படிமக் கோடுகள்'' நூலில் காணும் நடராசப் பெருமானின் வரைகோட்டு ஓவியங்கள், இந்நூலிற்கு மேலும் அழகு சேர்க்கின்றன. இவ்விரு கலைஞர்களுக்கும், இந்நூலினை செம்மையுற அச்சிட்ட இவ்வாதீனத்து ஸ்ரீநமசிவாயமூர்த்தி ஆஃப்செட் அச்சகப் பணியாளர்களுக்கும் என்றும் குருமூர்த்திகளின் அருளாசி கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன். வரும் காலத்தில் மேலும் செம்மையாக நூல் அமைய கருத்துக்களை வரவேற்கின்றேன்.

திருவடி போற்றுதல்

இத்திருமடம் பல ஆண்டுகளாக இது போன்ற ஞான நுண்கலை நூல்களை தமிழ்ச் சமுதாய மேம்பாட்டிற்காகவும், நமது பண்டைய தெய்வீகக் கலாச்சாரத்தின் சிறப்பை மீண்டும் பொலிவு பெறவும் தொடர்ந்து

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

செயலாற்றி வருகின்றது. கணபதி, முருகன், ஆடல்வல்லான், தட்சிணாமூர்த்தி பாகம் 1 மற்றும் 2, சோமாஸ் கந்தர், சண்டேசுவரர், சரசுவதி, இலிங்கோத்பவர், பைரவர், படிமத் திருக்கோலங்கள் (பிரதிமா லட்சணம்), சிவாலயத் திருமேனிகள், மகாசரசுவதி, மகா கால சம்ஹாரர் என்ற நூல்களின் வரிசையில் ஆனித் திருமஞ்சன விழா மலராக ''நடராசப் பெருமான்'' எனும் சிவாகம சிற்ப நூல் (**28**.6.2001) இப்பெருமானின் திருச் சந்நிதியில் மலர்கின்றது.

இத்தகு நூற் பணியினைச் செய்ய இவ்வெளியேனுக்கு அருள்பாலிக்கும் அடியேனின் ஞானாசாரிய மூர்த்தியாம் சிவக்ஷேத்திர குருக்ஷேத்திர செந்தமிழ்ப் பரிபாலனம் செய்தருளும் இவ்வாதீனத்து 23-ஆவது குருமகாசன்னிதானம் சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் அவர்கள் திருவடித் தாமரைகளை என்றும் சென்னிமீது வைத்துப் போற்றுவதை தவிர வேறு ஒன்றும்அறியேன்.

குருவருளும் திருவருளும் இயக்கிட கருவியாய் நிற்கும் அடியேனால் தொகுத்தாக்கம் பெற்ற இந்நூல் அனைவருக்கும் மெய்மைப் பூசனை விளைவிக்க மீண்டும் அடியேனின் ஞானாசிரியராக விளங்கி யருளும் 23-ஆவது குரு மகாசன்னிதானம் சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்களின் திருவடிகளையும், ஷெ ஆதீனத்தின் துவிதீய ஆச்சாரியராகப் போற்றப்பெறும் இளைய சன்னிதாகமாக விளங்கியருளும் சீர்மிகு காசி விசுவநாத தேசிக சுவாமிகள் அவர்களின் திருவடிகளையும் மீண்டும் மனம், மொழி, மெய்யினால் சிந்திந்து வந்தித்துப் போற்றுகின்றேன். சுபம்.

வாழ்க குருமூர்த்திகளின் திருவடிகள்!
வாழ்க துறைசையாதீனம்!
வளர்க திருக்கயிலாய பரம்பரை!

தேதி: 21.5.2001

இங்ஙனம்
நூலாசிரியர் – வடிவமைப்பு,
எஸ். நாராயணசுவாமி, M.A(Phil)., M.A (His)., M.Ed., Dip.in Sanskrit.
சிவாகமம் மற்றும் சிற்பத்துறை, திருவாவடுதுறை ஆதீன
சரசுவதி மகால் நூல் நிலைய ஆய்வு மையம்,
திருவாவடுதுறை – 609 803.

வீடு:
''நமசிவாய இல்லம்''
38/43, மேல சன்னதி,
திருவிடைமருதூர் – 612 104.
தஞ்சாவூர் மாவட்டம்.



In Public domain. Digitization Muthulakshmi Research Academy

INTRODUCTION

ADHEENAM

Thiruvavaduthurai Adheenam is situated in the District of Nagapattinam, between Mayiladuthurai and Kumbakonam (main bus route) and it lies on the southern bank of the sacred river Cauvery near Narasinganpettai Railway station.

The traditional convention of Thiruvavaduthurai Adheenam is to nurture Siddhanta Saivism, by contibution to the development of Tamil in particular - Saivite Literature. Siddhar Sivaprakasar - One among the "Navakoti Siddhas" was the cause and instrumental for the foundation of Thuraisai Adheenam through his cheif disciple "Namasivaya Moorthigal" the founder of the Adheenam.

23rd GURU MOORTHIGAL

The present 23rd Guru Maha Sannidhanam Seer-valar-Seer Sivaprakasa Desika Paramachariya Swamigal has adopted the Aptavaky "Guruve Sivam" as ordaind by St. Tirumoolar as his motto. He has made it a convention of releasing special publications on the Gurupoojas days and Gnana Maanatarajar abhisheka days.

NATARAJAR

Nataraja is the well-known dancing form of God Siva. It has four arms and a body besmeared with ashes. The back arm on the right side holds the Kettle-drum (Udukkai) while the other presents the raised palm of protection (Abhaya). Of the pair on the left, the upper holds a fire-pot and the lower is bent round across the breast to the right side. Its fingers gracefully pointing below, towards the left leg which is raised in a dancing posture.

The position of this hand is known as Gaja-hasta. The ecstatic and violent nature of the dance described as Ananda Tandava in the sequel: whirling quickly round on one leg, placed on the back of the demon (Apasmara) is indicated by the matted hair (Jata) stretching out on both sides of the head in wavy lines one above the other and by the cloth, partly tied round the waist and partly thrown over the left shoulder also flying in the air. The right hand which shows the abhaya.

The dance of Nataraja is believed to symbolize the action of cosmic energy in creating, preserving and destroying, the visible universe.

Lord Nataraja's Thirumanjanam festivals are celebrated six times in all siva temples. On that occasions devotees have dharsan of Holy bath (Abishek) of Nataraja and also they perform puja by taking out in procession the miniature representations of Nataraja or,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

where such do not exist, the chief processional image of Siva. In Chidambaram, ofcourse the worship of Nataraja is the most prominent. The Sabha-Mandapa (Assembly Hall) is covered with gold plate (Ponnambalam). This festival is conducted on grand scal with enthusiasm, intense zeal and inspiration.

THIRUMANJANA MALAR - LORD NATARAJAP PERUMAN

This volume brings out the following features - Thillai & Thiruvavaduthurai Natarajar pratima lakshanam, philosophical thought of Lord Nataraja, short history of the five temples (Pancha sabhaṣ), Details of Nataraja in Agama and Silpa sastras, Yantras, Nataraja puja in temples (pararta puja), and Natarajar Namavaligal.

The Benign and Bounteous grace of my Gnanacharya, the present Guru Maha Sannidhanam, while commissioning me to this volume, has also provided me with the esteemed association of following team to achieve success to the core.

Guide - Sivasri C.S. Sadasivam, M.A., M.A., M.Ed., D.S.M., D.S.S, Dept. of Sivagamas & Silpas, adheenam Saraswati Mahal Library, a special mention has to be recorded of the Director - The Ecole Francaise D' Extreme Orient Centre D' Histore Et D' Archaeologic - Pondicherry for providing the upto date Agamic informations and black and white photos concerned with this volume. Andra State Ex-stapathi Sri. S.M. Ganapathi Stapati, Mamallapuram, Artist Kalaichemmal, Thiru. K. Thirugnanam's Line drawing of Lord Natarajar forms - useful for the aspirants to meditate upon. Adheenam Saraswati Mahal Library Staffs and Sri Namasivaya Moorthy Offset Press have rendered thier maximum assistance in bringing out this volume.

The combined efforts of all made is possible for the release as the Souvenir - "NATARASAP PERUMAN" on the Aani - Thirumanjanam festival (28.6.2001) day.

Once again being my bounden duty. I submit my most humble obvisances to my Deeksha Gnana Gurumoorthigal - the 23rd Guru Mahasannidhanam Seer-valar-Seer Sivaprakasa Desika Paramachariya Swamigal and Elaya Sannidhanam (Duvithiya Achariyar) Seermigu Kasi Viswanatha Desika Swamigal for the extreme kindness showered on me.

Suggestions for improvement of this volume from luminaries in the various faculties are always welcome.

Ever at the service of
The Guru Mahasannidhanam

S. Narayanaswamy, M.A(Phil).,M.A(His).,M.Ed.,Dip.in Sanskrit,
Dept. of Agama & Silpa, Thiruvavaduthurai Adheenam
Saraswathi Mahal library and Research Centre,
Thiruvavaduthurai - 609 803.

Resi:
"Namasiva Illam',
38/43, West Sannathi,
Thiruvidaimarudur 612 104.
Thanjavur District.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



ஸ்ரீசிவகாமி சமேத ஸ்ரீ நடராஜர்
(ஸ்ரீசுவேதாரண்யேஸ்வரர் திருக்கோயில் (ஆதி சிதம்பரம்) திருவெண்காடு)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



அஷ்டபுஜ சதுர தாண்டவர் – சிவகாமி
(ஸ்ரீகல்யாணசுந்தரேஸ்வரர் திருக்கோயில், நல்லூர்.)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

நடராசப் பெருமான்

(சிவாகமம் – சில்பம் – யந்திரம் – பூஜை)

தில்லையும் திருவாவடுதுறையும்

உலக இயக்கம்

நடராசப் பெருமானின் திருவுருவம் உலக மக்களைக் கவர்ந்தது போல் வேறு எந்த உருவமும் கவர்ந்ததில்லை. தமிழ் மக்களுடைய, வழிபாட்டிற்குரிய நடராச வடிவம், முற்றிலும் வேறுபட்ட நாகரிகத்தைக் கொண்டுள்ள, மக்களையும் கவர்ந்துள்ளது.

உயிர்கள் பிறப்பதும், வாழ்வதும், இறப்பதும் பேரின்ப நிலையில் சாவா மூவாப் பெருவாழ்வில் பொருந்துவதும் நடராசப் பெருமானின் அசைவினாலேயே நிகழ்கின்றன. தன் அடியார்களை பாதுகாத்து அரக்கர் முதலிய எதிர்ப்பாற்றல் களை வென்று வெற்றிக் களிப்பின் ஆடல்களே தாண்டவங்கள் அல்லது நிருத்தங்கள் எனச் சொல்லப்படுகின்றன.

எழுவகைத் தாண்டவங்கள்

சிவபெருமானின் எழுவகைத் தாண்டவங்களை ஆகமங்களும், சிற்ப நூல்களும், புராணங்களும் விரிவாகப் பேசுகின்றன. அவை, 1. ஆனந்த தாண்டவம், 2. சந்தியா தாண்டவம், 3. உமா தாண்டவம், 4. கௌரி தாண்டவம், 5. காளிகா தாண்டவம், 6. திரிபுர தாண்டவம், 7. சங்கார தாண்டவம். இவற்றுள் தில்லையில் ஆடிய தாண்டவமே சிறப்புடையது. (ஆனந்த தாண்டவம்) ஆகவே, இதே அமைப்பில் நடராசர் திருமேனி ஏனைய தலங்களில் பொதுவாகவும் சில அமைப்புகள் மாறி சிறப்பாகவும் காணப்படுகின்றன.

ஞானிகள் கண்ட கூத்துத் தரிசனம்

நடராசப் பெருமானின் திருமேனியினை அகத்தேயும் புறத்தேயும் கண்டு இன்புற்ற திருமூலர் இறைவனது கூத்தினைச் சிவானந்தக் கூத்து, சுந்தரக் கூத்து, பொறிபதிக் கூத்து, பொற்றில்லைக் கூத்து, அற்புதக் கூத்து என ஐந்து வகையினைக் கூறுகின்றார். இவையன்றித் திருக்கூத்து தரிசனம் என்னும் தலைப்பில் நடராசப் பெருமானின் நிருத்தத் தையும் மெய்ப்பொருளையும் திருவுருவச் சிறப்பையும் நன்கு விளக்குகின்றார்.

காரைக்காலம்மையார் – தமது திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகத்தில் ''அறவா நீ ஆடும் போதுன் அடியின் கீழ் இருக்கவேண்டும்'' என வேண்டுகின்றார். தேவார ஆசிரியர்களும் தத்தமது பனுவல்களில் தில்லைக் கூத்தனைத் தெய்வத் தமிழில் பல்வேறு நிலையாக வைத்து போற்றிப் பரவியுள்ளனர். சேரமான் பெருமான் நாயனார் – பொன்வண்ணத்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தந்தாதியில் ஆனந்த நடராசப் பெருமானின் அழகு வெள்ளத்தில் நம்மை திளைக்கச் செய்கிறார். பட்டினத்தார், நம்பியாண்டார் நம்பி முதலானோர் தில்லைப் பெருமானின் திருவழகை அனுபவித்துப் பாடியுள்ளனர். இவரது கூத்தினை அறிவியல் ரீதியாக ஒப்பிடுகையில் உலக இயக்கம் பொருத்தமாகவே அமைகின்றது.

நடராசப் பெருமான் – ஆடுவதில் வல்லான் – ஆடல்வல்லான் எனப் போற்றித் துதிக்கப்படுகின்றார். ஆடல் வல்லான் என்ற பெயரை உலகிற்கு அறிமுகப்படுத்திய மாமன்னன் முதலாம் இராசராசன். கோயில் அமைப்பில் ஆடல்வல்லானுக்கு என்று தனியாக மண்டபம் கட்டுவது இவன் காலத்தில்தான் தொடங்கியது. இவன் காலம் முதற்கொண்டு நடராசப் பெருமானின் செப்புப் படிமங்கள் உன்னத வளர்ச்சி பெற்று உலகப்புகழ் அடைந்தன என்றே கூறவேண்டும்.

தென்னகத்துத் திருக்கோயில்கள்

பல்லவர் காலத்துக் குடவரைக் கோயில்களில் அமைக்கப்பட்ட நடராசர் வடிவங்களில் திருவாசி இல்லை. காலடியில் முயலகன் இல்லை. திருவாசியும், முயலகனும் அமைப்பது பிற்காலத்தில் ஏற்பட்ட வளர்ச்சி என்பது அறிய முடிகிறது. நடராசப் பெருமானின் பஞ்ச சபைகளாகப் போற்றப்படும் திருவாலங்காடு, சிதம்பரம், மதுரை, திருநெல்வேலி, திருக்குற்றாலம் ஆகிய இத்தலங்களில் பல வேறுபாடுகளோடு நடராசப் பெருமானின் திருமேனிகளைக் காணலாம். தில்லைப் பெருமானின் திருமேனியில் விளங்கும் சடைகள் (தலையின் பின்புறம்) தொங்கியபடி திகழ்வது (விரிந்து இருக்காது) மிகச் சிறப்பாகும். பெரும்பாலானத் தலங்களில் காணப்படும் நடராசப் பெருமானின் சடைகள் யாவும் பரந்தும் விரிந்தும் காணப்படும். மேலும் அதில் ஊமத்தம்பூ, பிறை, கங்கை, சர்பம் முதலானவற்றைச் சிற்பிகள் கலை நயத்தோடு காட்டியிருப்பர்.

புடைப்புச் சிற்பங்கள்

இப்பெருமான் இதோடு மட்டுமல்லாமல் நில்லாது 108 நடன வகைகளை (கரணங்கள்) ஆடிக் காட்டியுள்ளார். இத்தகு பரத நாட்டிய நடன வடிவங்களை சிதம்பரம் நடராசர் கோயில், கும்பகோணம் சாரங்கபாணி கோயில், விருத்தாசலம், திருவண்ணாமலை, தஞ்சைப் பெரியகோயில் முதலான கோயில்களில் கற்புடைப்புச் சிற்பங்களாகக் காணலாம்.

இந்தச் சிவனாரின் 108 தாண்டவத்தினை ஓவியமாக திருவிடைமருதூர் ஸ்ரீமகாலிங்கசுவாமி திருக்கோயிலின் சித்திரப் பிரகாரத்தில் தீட்டியுள்ளனர். இந்த நாட்டிய ஓவியங்களை வேறு எந்தத் திருக்கோயில்களிலும் காண இயலாது. அதோடு மட்டுமல்லாமல், கணபதி, முருகன், சக்தி இவர்களின் பல நிலைக் கோலங்களையும் காணலாம்.

சிறப்புடைத் தலங்கள்

இவ்வாறாக இறை உணர்விற்கும் கலையுலகத்திற்கும் பெருமை சேர்க்கும் நடராசப் பெருமானின் திருமேனியினை திருக்கோயில்கள், அருங்காட்சியகம், வெளிநாட்டிலுள்ள அருங்காட்சியகம் ஆகியனவற்றில் கல்லிலும், ஓவியத்திலும், பஞ்சலோகத்திலும் காணலாம்.

பாடல் பெற்ற அனைத்து சிவாலயங்களில் காணப்படும் நடராசப் பெருமானின் திருமேனியானது ஒன்றுக்கொன்று வித்தியாசங்கள் காணப்படும். இதனை உன்னிப்பாக கவனித்தால் தெரியவரும். பஞ்ச சபைகள், அட்டவீரட்டத் தலங்கள், பஞ்சக் குரோசத் தலங்கள், சப்தவிடங்கத் தலங்கள், சப்தஸ்தானத் தலங்கள், வைப்புத் தலங்கள், மற்றும் இராசராசனுக்குப் பின் வந்த மன்னர்கள் எழுப்பிய ஆலயங்களில் காணப்படும் நடராசர் கற்றிருமேனிகள், பஞ்சலோக விக்ரகங்கள் யாவுமே தெய்வீகக் கலைப் பொக்கிஷமாகும்.

இப்பெருமானே பஞ்ச கிருத்தியத்திற்கும், ஞானத்திற்கும் மூல காரணனாக விளங்கும் நடராசப் பெருமான் திருவாவடுதுறை ஆதீனத்தில் உபாசன மூர்த்தியாக விளங்குகின்றார். இவருக்கு காலை மற்றும் இரவு பூசைகள் சீர்வளர்சீர் குரு மகாசன்னிதானம் அவர்களால் நிகழ்த்தப்பெறுகின்றன. நடராசப் பெருமானுக்கே உரிய பதி தில்லையாக இருந்தாலும் அத்தில்லையம்பெருமான் இத்துறைசையில் ஞான மாநடராசப் பெருமானாகு விளங்குகின்றார்.

ஸ்ரீகண்ட பரமேஸ்வரன் உபதேசக் கிரமமானது வழிவழியாக தில்லைவாழ் அந்தணர் மரபில் தோன்றி மறைஞான சம்பந்தர்பால் உபதேசம் பெற்றுச் சைவ சமய சந்தான குரவருள் நான்காமவராகத் திகழ்பவர் உமாபதி சிவாசாரியார் ஆவார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆடல் வல்லான்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



தில்லை – பொன்னம்பலம் – ஸ்ரீ நடராஜர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இவர் சிதம்பரத்துக்குக் கிழக்கேயுள்ள கொற்றவன்குடியில் திருமடம் அமைத்துக் கொண்டு சைவ சித்தாந்த உண்மைகளை உபதேசித்தும், பக்குவமுடையவர்கட்குச் சிவதீட்சை செய்தும் சைவ சமயத்தை வளர்த்தருளினார். தில்லைப் பெருங்கோயில் திருவிழாவில் கொடி ஏறாது தடைப்பட்டபோது ''கொடிக்கவி'' பாடிக் கொடி ஏறும்படி செய்தருளினார்.

சாம்பானுக்கு வீடுபேறு

நடராசப் பெருமான் 'பெற்றான் சாம்பான்' பொருட்டு, இவருக்குப் பரிந்துரைக் கைச்சீட்டு விடுத்தருளினார். அதனைப் பெற்ற இப்பெருந் தவச் செல்வர் சாதி பேதம் பாராட்டாது பெற்றான் சாம்பானுக்குத் தீட்சை செய்து வீடுபேறு அளித்தருளினார் என்பது செவிவழிச் செய்தியாகும். சித்தாந்த சாத்திரம் பதினான்கனுள் சிவப்பிகாசம் முதல் சங்கற்ப நிராகரணம் ஈறாகவுள்ள எட்டு நூல்கள் இவரால் இயற்றப் பெற்றனவாகும்.

பரம்பரை மலர்தல்

ஸ்ரீகண்ட பரமேஸ்வரன் நந்தியெம்பெருமானுக்கு உபதேசித்தருள ஒருவர் பின் ஒருவராக ஆச்சாரியர் – சிஷ்யர் முறையில் வந்தது திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனமாகும். உமாபதி சிவம் பூசித்து வந்த ஸ்ரீஞான மாநடராசப் பெருமான் திருமேனியானது திருவாவடுதுறை ஆதீனப் பெரிய பூசை மடத்தில் வெள்ளித் தேரில் விளங்குகின்றது. இன்றும் இப்பெருமான் ஆதீனத்து ஆன்மார்த்த மூர்த்தமாகவும் உபாசனை மூர்த்தமாகவும் பூசிக்கப்பெறுகின்றார்.

நடராசர் கோயில் வழிபாட்டு தடையும், விலகலும்

திருவாவடுதுறை ஆதீனக் குருமுதல்வரிடம் (ஸ்ரீநமசிவாயமூர்த்திகள்) உபதேசமும் தீட்சையும் பெற்று விளங்கிய சிவப்பிரகாச தேசிகர் என்பார் குருநாதர் கட்டளைப்படி நடராசர் கோயில் வழிபாடு தடைப்பட்டபோது, வேலூரில் இலிங்கம நாயக்கரைக் காண தமது ஆத்மார்த்த மூர்த்தியாகிய இலிங்கத்தினை – சிவலிங்க தாரணம் செய்து கொண்டு நல் உபதேசம் செய்ய இலிங்கம நாயக்கர் உடனே தில்லைக் கோயிற் பூசை தடைபடாது நிகழ ஏற்பாடு செய்தார் எனவும், இதனையுணர்ந்த திருவாவடுதுறையாதீனக் குருமுதல்வர் ஸ்ரீநமசிவாயமூர்த்திகள் சிவப்பிரகாசரைச் சிவலிங்கத் தாரணத்துடனேயே இருக்கும்படி பணித்தருளினார் எனவும், அது முதலாகச் சிவப்பிரகாசர் தலைமையில் துறையூரில் வீரசைவ மடம் தோன்றியதெனவும் வரலாறு அமைகின்றது.

தில்லையில் திருவாவடுதுறை மடம்

சிதம்பரம் மாலைக்கட்டித் தெருவில் இப்போது இருந்து வருகின்ற திருவாவடுதுறை ஆதீன மடமானது உமாபதி சிவாசாரியாரின் இல்லமாகும்.

திருவாவடுதுறை ஆதீனத்தின் கிளைமடமாகிய இத்திருமடம் – சிதம்பரம் மாலைக்கட்டித் தெருவில் உமாபதி சிவாசாரியார் திருமனையில் அமைந்துள்ளது. இத்திருமடத்தின் வளாகத்தில் பெண்ணைப் புனல்சூழ் வெண்ணெய்ச் சுவேதவனனாகிய ஸ்ரீமெய்கண்ட தேவநாயனார் திருக்கோயில் மற்றும் பூஜாமடம் கருங்கல் திருப்பணியாக உள்ளது.

திருவாவடுதுறை ஆதீனத்து குருமுதல்வர்களின் உபாசனா மூர்த்தியாக விளங்கும் சிற்றம்பலத்துச் செல்வப் பெருமானாகிய ஞான மாநடராசப் பெருமானை வழங்கியருளிய ஸ்ரீஉமாபதி சிவாசாரியாரின் இல்லக் கட்டிடத்தை இவ்வாதீனத்து 21ஆம் பட்டத்தில் விளங்கியருளிய ஸ்ரீசுப்பிரமணிய தேசிக மூர்த்திகள் தமது அருளாட்சியில் ரூ.40,000 செலவில் முழுவதுமாக திருப்பணிகளைச் செய்து புதுப்பொலிவோடு அமைத்தார்கள். மேலும் தமது அருளாட்சியில் ஆதீன மகாவித்துவான் ச. தண்டபாணி தேசிகர் அவர்களை ''ஆடல்வல்லான்'' எனும் நூலை எழுதச் செய்து, அச்சுவாகனமேற்றி சைவ நல்லுகிற்கு அரிய செல்வமாக வழங்கினார். பின்னர் இப்போது விளங்கியருளும் 23ஆவது பட்டம் அருளாட்சியில் மீண்டும் இக்கிளைமடம் ஜீர்ணோத்தாரணம் செய்விக்கப்பெற்று கும்பாபிஷேகம் நடைபெற்றது.

மேலும் இத்திருமடத்தின் ஆளுகையில் விளங்கும் சிதம்பரம் சிங்காரத் தோப்பில் ஸ்ரீமறைஞான சம்பந்தர் சமாதித் திருக்கோயிலும் விளங்குகின்றது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தில்லை சிவகாமி அம்மன் கோயில் ஓவியங்களில் – திருவாவடுதுறை ஆதீன அருளாளர்களும், தம்பிரான்களும்

சிதம்பரம் ஸ்ரீநடராசர் ஆலயத்திற்கு திருவாவடுதுறை ஆதீன குரு மகாசன்னிதானங்கள் தமது அருளாட்சிக் காலங்களில் கட்டளைகளை நிறைவேற்றி, திருக்கோயில் வழிபாட்டை, செய்தருளுவது தொடர்ந்து நடைபெற்று வருகிறது. அவ்வகையில் திருக்கோயில் தரிசனம் செய்யும் காலங்களில் ஆதீனக் கிளைமடத்தில் மாகேசுவர பூசையும் சிறப்பாக அமையும்.

தில்லை நடராசப் பெருமானின் வடப்பால் அமைந்த சிவகாமி அம்மன் ஆலய துவஜஸ்தம்ப மண்டப விதானத்தில் பல தரப்பட்ட வண்ண ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன. இவ்வண்ண ஓவியங்கள் கி.பி.18ஆம் நூற்றாண்டைச் சார்ந்த தாகும். மேலும் ஓவியங்களின் கீழே பழைய எழுத்தமைதியுடன் கூடிய விவரமும் உள்ளன. நூற்றுக்கு மேற்பட்ட ஓவியங்கள் தொகுப்பாக அமைந்துள்ளன. இந்த ஓவியங்களுள் திருவாவடுதுறை ஆதீன குரு மகாசன்னிதானம் நடராசரையும் சிவசாமியையும் வழிபடுவதாக அமைந்த ஓவியம் பெரிய அளவில் உள்ளது.

13ஆவது பட்டம் அம்பலவாண தேசிக மூர்த்திகள்

ஷெ மண்டபத்தின் விதானத்தில் அம்பலவாணர் ஓவியத்திற்கருகில் முத்துக்குமாரத் தம்பிரான், அருணாசலத் தம்பிரான் என்று மூன்று உருவங்கள் உள்ளன. இவர்களின் தோற்றம் முற்றிலும் திருவாவடுதுறை ஆதீன சம்பிர தாயங்களை ஒட்டியே உள்ளது.

அம்பலவாண தேசிகர் (13ஆவது பட்டம்) தில்லை நடராசரையும், சிவகாமியையும் வழிபடுவது போன்று ஓவியம் காட்டப்பட்டுள்ளது. மேலும் ஆதீனத்திற்குச் சொந்தமான கோயில்களான திருவாவடுதுறை கோயிலை மாடு பூசித்தது, மாயூரநாதர் கோயிலை அம்மை மயில் வடிவமெடுத்து வழிபட்டது, திருவீழிமிழலைக் கோயில் போன்ற ஓவியங்களும் உள்ளன. இந்த ஓவியங்கள் ஷெ ஆதீனத்தின் முயற்சியால் தீட்டப் பெற்றுள்ளன.

ஓவியத்தில் காணும் எழுத்தின் விபரம் மற்றும் விரிவான செய்தி

ஷெ ஓவியங்களில் பெரிய வடிவில் திருவாவடுதுறை ஆதீனகர்த்தரின் உருவம் அமைந்துள்ளது. ஏனைய புராண ஓவியங்கள் யாவும் சிறியவையாகும்.

''அம்பலவாணர் சதா சேர்வை'' – மழித்த தலை, தலையில் உருத்திராட்ச மாலை, கையில் துறவியருக்குள்ள கம்பு (நீண்ட தண்டம்), தலையில் மட்டுமின்றிக் கழுத்திலும் உருத்திராட்ச மாலை இவைகளோடு திருவாவடுதுறை ஆதீனத் திற்கே உரிய ஆடை (காஷாயம்)யின் கட்டோடு 13ஆவது பட்டம் அம்பலவாண தேசிகர் தில்லை எம்பெருமானை வணங்கும் தோற்றம். கையிலும் உருத்திராட்ச மாலை (ஜபமாலை), சிதம்பரம் நடராசர் காட்சி தருகிறார். முதலில் அம்பலவாணர் நந்தி முன் வழிபடும் சிறிய உருவம். நந்தி மண்டபத்தையடுத்து நாற்கரங்களுடன் நடராஜர் உருவம் பின் மூலஸ்தானம் (மூலட்டானேஸ்வரர் கோயில்) உமையம்மை, நடராசர், சிவகாமி இவர்களை வழிபடும் ஏழு அடியார்கள் உருவங்கள்.

''முத்துக்குமாரத் தம்பிரான்'' – சிதம்பர புராணத்து மகத்துவங்கள் யோகத்திலே இருக்கிறது என தொடர் அடுத்து உள்ளது. ''அருணாசலத் தம்பிரான்'' என்ற சொல் அடுத்துள்ளது. நந்திகேசர் என்ற சொல் அடுத்துள்ளது முத்துக்குமாரத் தம்பிரான் தலையில் தலைப்பாகை உள்ளது இவருக்கும் கழுத்தில் உருத்திராட்ச மாலை. இவரும் வணங்குகிறார். இவ்விரு தம்பிரான்கள் திருவாவடுதுறை ஆதீனத்தில் உள்ளவர்கள் என நிச்சயிக்கப்படுகிறது. சிவன், அம்மை நின்ற கோலத்தில் உள்ளனர்.

இவ்வோவியங்களோடு பல தரப்பட்ட தலங்களின் புராண வரலாறுகள், சிவபுராணச் செய்திகள், தில்லையைப் பற்றிய காட்சிகள், மாணிக்கவாசகர் வரலாறு, மனிதர்களும் தேவர்களும் ஏனைய உயிர்களும் சிவனை வழிபடும் காட்சிகள் ஓவியங்களாக அமைந்துள்ளன. இவற்றிற்கிடையே திருவாவடுதுறை ஆதீன குருமூர்த்திகளின் வழிபடு உருவம் சிறந்து விளங்குவது வரலாற்று முக்கியத்துவமாகும். இவ்வோவியத் தொகுப்பில் வேறு எந்தத் திருமடத்தின் அருளாளர்கள் காணப்படவில்லை.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

22ஆவது பட்டம் ஸ்ரீஅம்பலவாண தேசிகர் காலத்தில்...

இக்குருமூர்த்திகளின் அருளாட்சி காலத்தில் தில்லைப் பெருமானுக்குரிய நித்யபடி ஆதீனக் கட்டளைகளும் மாசி அபிஷேகமும் சிறப்பாக நடந்தேறின. மேலும் தில்லை ஸ்ரீசபாநாயகர் ஆலயத்திற்கு ஓர் யானை வாங்கி திருக்கோயிலுக்கு வழங்கியருளினார்கள். ஷெ யானையை இன்றும் திருக்கோயிலில் காணலாம்.

இப்போது அருளாட்சி புரிந்து வரும் 23ஆவது பட்டம்
சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள்

வழிவழி வரும் ஆதீனக் குருமூர்த்திகளால் தொடங்கப் பெற்ற கட்டளைகளைச் சிறப்பாக இவர்கள் நடத்தி வருகின்றார்கள். தில்லையில் நடராசருக்கு உரிய ஆறு அபிஷேக காலங்களின் பிரசாதங்களை, தில்லை தீட்சதர்கள் இன்றும் நேரிடையாக குரு மகாசன்னிதானம் அவர்களிடம் சேர்ப்பிக்கின்றார்கள். ஆதீனக் கிளைமடத்தில் திருக்கோயில் தரிசனம் செய்யும் அடியார்கள் தங்கி மகிழ கிளை மடத்தைத் திருத்தியமைத்துள்ளார்கள்.

ஆதீனத்தின் விசேஷ காலங்களிலும், குருமூர்த்திகளின் ஜன்ம நட்சத்திர நாட்களிலும், முதலில் தில்லைவாழ் அந்தணர்கள் (தீட்சதர்கள்) ஸ்ரீநடராசர் பிரசாதத்தை சமர்ப்பித்தல் என்பது தொன்றுதொட்டு வரும் சம்பிரதாயமாகும்.

இவ்வாறு தில்லை திருவாவடுதுறையோடு நெருங்கிய தொடர்பு இருப்பதைப் போல, கூத்தப் பெருமானுக்கு அருகில் விளங்கும் மாணிக்கவாசகர் திருப்பணி செய்த ஆவுடையார்கோயில் (திருப்பெருந்துறை) இவ்வாதீனத்திற்குச் சொந்தமானதாகும். தில்லையில் நிகழும் அனைத்து விழாக்களும் இங்கு நடைபெறும். தில்லையில் எம்பெருமானாகிய ஸ்ரீநடராசருக்கு எல்லாச் சிறப்பும் செய்யப்படுகிறது. ஆவுடையார்கோயிலில் எழுந்தருளியுள்ள அடியாராகிய மாணிக்க வாசகருக்கு சிவனார்க்கு உரிய அனைத்து அபிஷேகங்கள் அலங்காரங்கள், வாகன உலா, திருத்தேர் உலா ஆகியன சிறப்பாக அமைகிறது. அடியார்களை வணங்குதல் சிவனாரை வணங்குதற்குச் சமமாகும் என்பதற்கு எடுத்துக் காட்டாக விளங்கும் திருப்பெருந்துறைக் கோயில் இவ்வாதீனத்திற்கு உரியதாக அமைந்துள்ளது.

நின்றாடும் பெருமானும் (நடராசர்)
அமர்ந்தாடும் பெருமானும் (தியாகராசர்)

சைவ சமயத்தில் இரு ராசாக்கள் (அரசர்கள்) உளர் என்பர். காவிரித் தென்கரைத் தலத்தில் விளங்கும் பதியாகிய திருவாரூரில் தியாகராசர் விளங்குகின்றார். காவிரியின் வடகரையில் விளங்கும் பதியாகிய சிதம்பரத்தில் நடராசர் எழுந்தருளியுள்ளார். தியாகராசருக்கு சப்தவிடங்கத் தலங்கள் சிறப்பாக உள்ளன ஆயினும், புராண வரலாற்றில் இன்னும் பல தியாகராசர் தலங்கள் விளங்குகின்றன. அவ்வகையில் திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சொந்த மான நல்லூர், திருவாவடுதுறை – தலங்கள் தியாகராசர் தொடர்புடைத் தலங்களாகும். மேலும் திருவாரூரில் ஷெ ஆதீனக் கிளைமடம் கமலாலயம் வடகரையில் விளங்குகிறது. இவ்விரு திருமேனிகளின் ஒப்பீடு பின்வருமாறு அமைகிறது.

***ஆதிரையான்**

இருவரும் ஆதிரை நாளில் விழாக் காண்பவர்கள். திருவாரூரில் நடைபெற்ற திருவாதிரை விழாவின் சிறப்பை அப்பர் பெருமான் ஒரு பதிகமாகவே பாடியிருக்கின்றார். தில்லை நடராசர் திருவாதிரைக்கு முன்பு தேர் ஏறி வலம் வந்து அலங்கார அபிஷேகம் கண்டு சபைக்கு எழுந்தருளுகின்றார்.

தேர் ஊர்ந்த செல்வன்

இருவரும் தேரில் மட்டுமே வலம் வருபவர்கள். அப்படி வலம் வந்த பிறகு இருவருக்கும் பெரிய அளவில் சாந்தி அபிஷேகம் நடைபெறுகிறது.

**ஆதாரம்:– சிவமஞ்சரி – ஸ்ரீதியாகராஜர் – பக்கம் 479*

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கூத்து உகந்தான்

நடராசரின் நடனம் ஆனந்த தாண்டவம், தியாகராசரின் நடனம் அஜபா நடனம்.

ஆறு அபிஷேகங்கள்

இருவருக்கும் ஆண்டிற்கு ஆறு சிறப்பு அபிஷேகங்கள் நடைபெறுகின்றன. நித்திய பூசைகளான அபிஷேகங்கள், உடையவர் எனப்படும் ஸ்படிக லிங்கம், மரகத லிங்கங்களுக்கே நடைபெறுகின்றன.

ரகசியம்

தில்லைக் கூத்தரின் வலப்புறம் தனியாக சுவரில் திருவம்பலச் சக்கரம் அல்லது ஆகாச யந்திரம் அமைந்துள்ளது என்பர். அதுவே சிதம்பரம் ரகசியம் எனப் போற்றப்படுகிறது திருவாரூரில் பெருமானின் திருமேனியே ரகசியமாகப் போற்றப்படுகின்றது. இதுவே சோமகுல ரகசியம் எனப்படும்.

திருச்சாலகம் (ஜன்னல்)

சிதம்பரத்தில் 96 கண்களைக் கொண்ட வெள்ளியால் போர்த்தப்பெற்ற ஜன்னல் உள்ளது தியாகராசர் சந்நிதியில் திருச்சாலகம் என்னும் தென்றல் தவழ்ந்து வரும் ஜன்னல் உள்ளது.

செங்கழுநீர் தாமம்

இரண்டுபேரும் செங்கழுநீர் மாலைகளை விரும்பி அணிவதால் செங்கழுநீர்த் தாமத்தார் என்று சிறப்பிக்கப் பெறுகின்றனர்.

பூங்கோயிலும், பொற்கோயிலும்

தியாகராசர் கோயில் பூங்கோயில் என்றால் தில்லைக் கூத்தனின் கோயில் பொற்கோயிலாக உள்ளது.

மண்ணாகி, விண்ணாகி

திருவாரூர்ப் பெருமான் பூமி வடிவினர்; தில்லைப் பெருமான் ஆகாச வடிவினர். இருவரும் மண்ணாகி, விண்ணாகி அன்பர்களுக்கு அருள்பாலிக்கின்றார்.

பாத தரிசனம்

இரண்டு இடங்களிலும் பதஞ்சலி, வியாக்ரபாதர் தரிசித்துப் பாத தரிசனம் கண்டுள்ளனர். சிதம்பரத்தில் அவர்கள் பெருமானின் அதிர வீசி ஆடத் தூக்கிய இடது பாத தரிசனத்தைக் கண்டு மகிழ்ந்து, மார்கழித் திருவாதிரை நாளில் பேறு பெற்றனர். பின்னர் திருவாரூர் வந்து இருந்தாடும் கூத்து கண்டு பங்குனி உத்திர நாளில் வலது பாத தரிசனத்தைப் பெற்றனர்.

ஆயிரங்கால் மண்டபம்

இரண்டு இடத்திலும் ஆயிரங்கால் மண்டபங்கள் உள்ளன. இவற்றில் பெருமான் வீற்றிருந்து அபிஷேகம் காண்கின்றார். சிதம்பரத்தில் ஆயிரங்கால் மண்டபத்தில் இருந்து பெருமான் சிற்சபைக்கு எழுந்தருளுவதே தரிசனம் எனப்படும். அதுபோன்று திருவாரூரில் ஆயிரங்கால் மண்டபத்திலிருந்து பூங்கோயிலுக்கு எழுந்தருளுவதே பக்த காட்சியாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



ஸ்ரீதியாகராஜர்
(திருவாரூர்)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



ஸ்ரீமாணிக்கவாசக சுவாமிகள்
(ஸ்ரீஆத்மநாதசுவாமி திருக்கோயில், திருப்பெருந்துறை – ஆவுடையார்கோயில்)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருமூலட்டானம்

தில்லையிலும், திருவாரூரிலும் மூல லிங்கத்திற்கு மூலட்டானேசுவரர் என்றே பெயர்.

இரு பெருந்தேவியர்

திருவாரூரில் – கமலாம்பிகை, நீலோற்பலாம்பிகை என்ற இரண்டு அம்பிகையர்க்குத் தனிக்கோயில் இருப்பது போலவே, தில்லையில் சிவகாமி, மூலட்டானநாயகி என்ற இரண்டு அம்பிகை சந்நிதிகளைக் காணலாம்.

அடியெடுத்துக் கொடுத்தவர்கள்

இரு பெருமானும் அடியவர்களின் பெருமையைப் புகழ்ந்துப்பாட அடியெடுத்துக் கொடுத்தவர்கள். திருவாரூர்ப் பெருமான் சுந்தரருக்கு ''தில்லைவாழ் அந்தணர்'' என்று அடியெடுத்துக் கொடுத்தார். தில்லைக்கூத்தன் – பெரியபுராணம் பாட ''உலகெலாம்'' என்று அடியெடுத்துக் கொடுத்தார். திருவாரூர்ப் பெருமான் ''தில்லை'' என்ற முதலடியை கொடுத்துச் சிதம்பரத்தை நினைவுபடுத்துகின்றார். தில்லைக் கூத்தன் ''உலகம்'' என்று அடியெடுத்து மண் தத்துவமான திருவாரூரை நினைவுபடுத்துகின்றார்.

மடங்கள்

தில்லையிலும், திருவாரூரிலும் திருவாவடுதுறை ஆதீனத்திற்கு கிளைமடங்கள் உள்ளன.

திருமடத்தில்

ஷெ ஆதீனத்தின் பெரிய பூசை மடத்தில் ஞான மாநடராசப் பெருமான் விளங்குகின்றார். ஒடுக்கத்தில் சித்ரா சனத்தின் மேல் விதானத்தில் தியாகராசப் பெருமான் விளங்குகின்றார்.

இத்தகு சிறப்புப் பொருந்திய திருமேனியாக உள்ள நடராசப் பெருமான் ஆன்மீகம் மற்றும் அறிவியல் ரீதியில் முக்கிய டங்கினை வகிக்கின்றார். கலையுலகில் இப்பெருமானின் திருமேனியழகிற்கு எத்திருமேனியும் இல்லை எனலாம்.



In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நடராசர் திருமேனிச் சிறப்பு

தோற்றமும் வகைகளும்

சிவபெருமான், உமையம்மை, கண்ணன், விநாயகன், முருகன், திருமகள் முதலிய தெய்வங்கள் ஆடல் புரிந்துள்ளன. எனினும், சிவபெருமானுடைய ஆடலே பெரிதும் சிறப்புடையதாகக் கருதப்படுகின்றது. தாண்டவங் காரணமாகக் கொண்ட சிவனது சிறப்பினை ஆடல்வல்லான், தாண்டவன், ஆனந்த தாண்டவன், தாண்டவ மூர்த்தி, கூத்தன், கூத்தப்பிரான் முதலிய திருப்பெயர்கள் உணர்த்தும். நடனக் கலைக்கு நாயகனாகப் போற்றுவதற்கேற்ப அவனே பல்வேறு தாண்டவங்களை ஆடியுள்ளான். இதனைப் புராணக் குறிப்புகள் பலவற்றால் உணரலாம். தாண்டவத் தோற்றத்திற்கு இயைபான புராணச் சிறப்பினைத் தாருகவன நிகழ்ச்சி புலப்படுத்தும். அது வருமாறு:-

தாருகாவனத்தில்...

அண்ட சராசரங்களிடையே உயர் பேராற்றல் (மகத்தான சக்தி) எது என்பது பற்றித் தாருகவன முனிவர்கள் பெரிதும் தருக்க முறையில் முனைந்து சிந்திக்கலாயினர். தாம் கொண்ட கடுந்தவத்தின் ஆற்றலே பேராற்றல் என முடிவு கட்டியவர்களாய்த் தவத்திலும், அதற்கு வலிமை சேர்க்கும் வேள்வியிலும் நாட்டஞ் செலுத்தினர். அந்நிலையில் சிவபரம் பொருளின் பேராற்றலையும் முறையாக மதியாமல் அகந்தை கொண்டிருந்தனர். வேள்வி புரியவும் தொடங்கினர். இதனை யுணர்ந்த சிவனும், திருமாலும் காமதேவனது துணையைக் கொண்டு, அந்தத் தாருகவன முனிவர்களுக்குச் சரியான பாடம் புகட்டத் திட்டமிட்டனர். அவ்வாற்றான் சிவன் பிச்சையெடுக்கும் (பிட்சாடணர்) வடிவினராயும், திருமால் மோகினி வடிவினராயும் அங்குச் சென்று வேள்வியை அழிக்கக் கருதினர். மோகினியின் பேரெழில் வடிவத்திலே முனிபுங்கவர்கள் மதிமயங்கியவர்களாய், ஒவ்வொருவரும் மோகினியைத் திருமணம் கொள்ளவும், தம் வயமாக்கவும் முயன்று அலமந்தனர். சிவனது பிட்சாடணர் வடிவத்தின் அழகிலே – நிருவாணக் கோலத்திலே – முனிவர்களின் மனைவியர் தம்மை மறந்து ஈடுபட்டவர்களாய்த் தம் உயிரனைய கற்பையும் இழக்கலாயினர். இத்தகைய அவச் சூழலையுணர்ந்த முனிவர்கள் தம்மை வேள்வி செய்யவொட்டாமல் தடுத்தும், அவமானப்படுத்தியும் நின்ற சிவனையும், திருமாலையும் சாம்பலாகப் போகும்படிச் சபித்தனர்; சாபம் பலியாமற் போகவே, சிவனையழிக்கவேண்டி அபிசார வேள்வியைப் புரியத் தொடங்கினர். வேள்வியிலிருந்து உடுக்கை, மான், வேள்வித்தீ, யானை, புலி, சிங்கம், நாகம் முதலியவற்றைத் தோற்றுவித்துச் சிவன்மேல் ஏவினர். அவற்றையெல்லாம் மிக எளியனவாகக் கொண்டு, தான் ஆடல் புரிந்துகொண்டே சிவன் கட்டுக்குள் அடக்க முற்பட்டான். உடுக்கையையும், மானையும், வேள்வித்தீயையும் கையிலேந்திக் கொண்டும், நாகத்தைக் கழுத்தில் அணிந்து கொண்டும், புலி, சிங்கம், யானை ஆகியவற்றைக் கொன்று அவற்றின் தோல்களை ஆடையாகப் போர்த்திக் கொண்டும் ஆடல் புரிந்தான். தம் கடுமுயற்சி பலியாமற் போகவே, கடைசியில் முயலகன் எனும் கொடிய அசுரனை இறைவனிடம் முனிவர்கள் ஏவினர். அவ்விறைவனோ, முயலகனைக் கீழே தள்ளி அவன்மீது நின்ற கோலத்திலும் ஆடலைத் தொடர்ந்தான்; உலகமுய்யக் காட்சியளிக்கலானான். இந்த அழகிய ஆடலே தாண்டவம் எனப் பெயர் பெறலாயிற்று. இந்தத் தாண்டவம் சமயவுணர்வுடைய அடியவர்கள் போற்றும் வகையில் சிவனால் பல்வேறு காலங்களில் பல்வேறு நோக்கிலே சிற்சில மாற்றங்களுடன் ஆடப்பட்டது. இது பற்றிய செய்திகள் புராணங்களாலும் வரலாற்றாலும் அறியக் கிடக்கின்றன.

தேவர்களின் வேண்டுகோளுக்கிணங்கவும், பதஞ்சலி, வியாக்கிரபாத முனிவர்களின் வேண்டுகோளுக்கிணங்கவும் இந்தத் தாண்டவம் இசைக் கருவிகளுடன் ஆடப்பட்டது.

களிற்றுரி

களிற்றுரி போர்த்து ஆடிய தாண்டவம் தாருக முனிவர்களின் வேள்வித் தொடர்பில் நிகழ்த்திய சிவனது தாண்டவம் என்பது ஒருபுறமிருக்க, அதனையே வேறொரு நிகழ்ச்சி தொடர்பாக ஆடிய சிவதாண்டவமாகப் புராணம் கூறும். கசமுகன் என்னும் யானை முக அசுரன் பிரமனை வேண்டி நெடுங்காலம் தவம் புரிந்து, சிவபெருமானைத் தவிர வேறு யாராலும் வெல்லுதற்கரிய ஆண்மையும் ஆயுதங்களும் பெற்றுப், பிறகு ஆணவங் கொண்டு மூவுலகையும் அடிமைப்படுத்திக் கொடுமைக்கு உள்ளாக்கினான். அச்சூழலில் யாவரும் அஞ்சிப் பதற்றமுற்றுச் சிவனிடம் முறையிட்டனர். அவனும் அவர்களுக்கு அடைக்கலந்தந்து, யானைமுக அசுரனின் தோலையுரித்துப் போர்த்துத் தாண்டவமாடி நின்றான். அதனால்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸ்ரீநடராஜர் (கோஷ்ட மாடத்தில்)
(ஸ்ரீமாயூரநாதசுவாமி திருக்கோயில், மயிலாடுதுறை.)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



ஆடல்வல்லான்
(பஞ்சலோக விக்ரகம்,
ஸ்ரீபிரகதீஸ்வரர் திருக்கோயில், தஞ்சாவூர்
காலம் 11–ஆம் நூற்றாண்டு)



ஸ்ரீநடராசர் – கோஷ்ட மாடத்தில்
(ஸ்ரீபிரகதீஸ்வரர் திருக்கோயில், தஞ்சாவூர்
காலம் 11–ஆம் நூற்றாண்டு)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அனைவர் துயரமும் நீங்கியது. இதனைக் கந்தபுராணம் (6:13, 145, 6:13, 146) கூறும். இதனையே தியான சுலோகமாகக் கொண்டு, சிற்பிகள் கசசம்மார தாண்டவத்தைச் சிற்பத்தில் வடிக்க முற்பட்டனர் எனலாம்.

சிவதாண்டவங்கள்

சிவன் புரிந்த தாண்டவங்களுள் பண்டுதொட்டுச் சிறப்பான தாண்டவமாக விளங்குவது திரிபுர தகனத் தாண்டவ மாகும். இதனைக் கலித்தொகைக் கடவுள் வாழ்த்தினால் அறியலாம். முனிவர்களுக்கும் அடியவர்களுக்கும் பெருந் துன்பம் தந்துகொண்டிருந்தனர் திரிபுர அசுரர்கள். தாரகாட்சன், கமலாட்சன், வித்துன்மாலி எனும் அவ்வசுரர்களை வீழ்த்துவதற்காக அவர்களின் பொன், வெள்ளி, இருப்புக் கோட்டைகளை (திரிபுரங்களை) அழிக்கக் கருதினான் சிவன். அவற்றை எரித்துச் சாம்பலாக்கிய வண்ணம், உமையம்மையின் உதவியுடன் சிவன் ஆடிய ஆடல்கள் கொடு கொட்டி, பாண்டரங்கம், காபாலம் எனப் பெயர் பெற்றன. சிவன் எட்டுத் தோள்களுடையவனாய்த் – திரிபுரமெரித்த விரிசடைக் கடவுளாய்க் காட்சியளித்தமை மக்களிடையே சிந்தனையைப் பெரிதும் தூண்டியது. இறைவன் தன் தாண்டவத்தை இயற்றுகையில் உலகப் பொருள்கள் அனைத்தையும் அழித்துக் கொண்டே அவன் கைகொட்டி ஆடினான்; இதுவே ''கொடுகொட்டி'' எனலாயிற்று அங்ஙனம் அழித்தவற்றின் வெண் சாம்பலைப் பூசியாடும் ஆடலே ''பாண்டரங்கம்'' எனலாயிற்று. தலையோடு முதலிய எலும்புகளை ஏந்தியும் தாங்கியும் நின்றாடும் ஆடலே ''காபாலம்'' எனலாயிற்று என்பர். அத்தகைய ஆடலின்போது அமைந்த பறையோசை, திருநீற்றுப் பொலிவு, புலித்தோலாடை, கொன்றைமாலை, தலையோடு போன்றவை சிவனது தாண்டவம் பற்றித் தெளிவாக அறிந்துகொள்ள வாய்ப்பாகும். இவ்வாறான கருத்துக்களைக் கலித்தொகைக் கடவுள் வாழ்த்துப் பகுதி உணர்த்துதல் காண்க. திரிபுரங்களை அழிக்கப் பெரிய தேரில் அம்மையுடன் ஆடிய இறைவனது தாண்டவம் மிக வியப்பை விளைவிப்பதாகும். ஆடும்போது உடம்பு சிறிதும் அசையவில்லையாம்! வீரச்சுவை வெளிப்படுத்துவதாகிய மெய்ப்பாடு தோன்ற நின்ற நிலையில், அதாவது 'இசுதானகம்' என்ற சமநிலையிலிருந்த வண்ணம் சிவன் தன் புன்னகையால் திரிபுரங்களை எரித்து அழித்துள்ளான். எனவே, இந்தத் தாண்டவம் பாவ தாண்டவம் அல்லது திரிபுர சங்கார தாண்டவம் எனப் பெயர் கொண்டது. இத்தாண்டவத்தைச் சிலப்பதிகாரமும் போற்றிக் கூறுகிறது. அந்நூலின் இருவேறு இடங்களில் இத்தாண்டவம் பற்றிய குறிப்புகள் உள்ளன முதலாவதாகக் கடலாடு காதையில் (39–45) காண்க. அதனால், பாரதி (பைரவி) ஆடிய பாரதியரங்கமாகிய சுடலையில், திரிபுரங்களை அழிக்கவேண்டுமென்று பணிந்து நின்ற தேவர்கள் காரணமாக அவற்றை எரித்தருளினான் என்பதும், உமையவளை ஒருபாற் கொண்டவனாகவும், சிவன் தன் கொடு கொட்டியாடலை ஆடமுடியும் என்பதும் அறியலாகும். அடுத்ததாக இத்தாண்டவத்தின் பெருமையை உணர்த்தும் வகையில் நடுகற் காதையில் ஒரு நுணுக்கமான குறிப்பு உள்ளது. கூத்தச் சாக்கையர் ஆடுவதாக வரும் கொட்டிச் சேதம் பற்றிக் குறிப்பிடுகையில், சிவன் அதனை ஆடுகையில் சிலம்பு ஒலியிடவும், கையிலமைந்த உடுக்கை ஓசையிடவும், கண் ஆயிரக்கணக்கான திருக்குறிப்புகளை உணர்த்தவுமான அமைப்பு உள்ளது; எனினும், தன் கணவனுடன் தானும் இயைந்து ஆடாமல் அருகிலுள்ள உமையவள் அசைவின்றிக் காணப்படுகிறாளாம்; பாடகம் என்ற காலணி பதையாமலும், சூடகம் என்ற கையணி அசையாமலும், இடையிலுள்ள மேகலை ஒலியாமலும், மார்பு அசையாமலும், நீண்ட குழை ஆடாமலும், அழகிய கூந்தல் அவிழாமலும் இருக்கிறாளாம் (சிலப். நடுகல். 67–75). கொடுகொட்டியும் கொட்டிச் சேதமும் ஒரே ஆடலின் வேறு பெயர்கள் என்பர். இந்த ஆடலை ஆராய்கையில், சிவனுக்கு ஒத்தியங்க வேண்டிய இறைவி எதற்காக அச்சமும் வியப்புங் கொண்டு ஒதுங்கிய வண்ணம் அசைவின்றியிருக்கிறாள் என்ற கேள்வி எழும். கலித்தொகையில் இறைவனது ஆடலுக்கேற்பத் தாளமிடுகின்ற பொறுப்பேற்ற உமையவள் இங்கு இவ்வாறு இருப்பதன் நோக்கம் என்ன?

திருக்கூத்தின் சிறப்பு

உயிர்கள் மாட்டமைந்த பேரருள் காரணமாகவே ஆணவம் கன்மம் மாயையாகிய மலங்களை நீக்கஞ் செய்து இறைவன் திரிபுரமெரிக்கும் – எரித்த நிலையில் தாண்டவமாடுகின்றான். யாவும் ஒடுங்கும் பேரூழிக் காலத்தில் அயர்ந்து இளைப்பாறும் உயிர்களை மீட்டும், வினைக்கேற்பப் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல் அருளல் ஆகிய ஐந்தொழில்களை இறைவன் புரிகின்றான்; அந்தச் செயலெல்லாம் உணர்த்தும் அருளினது இயக்கமே திருக்கூத் தாக வெளிப்படுகிறது என்பது கலைநுட்ப உண்மைதான். எனினும், ஊழிப் பேரழிவுச் செயலை நினைக்கின்ற போது உமையானவள் பேரருட் பிழம்பாக விளங்குபவள் – செயலற்று விடுகிறாள்; அதாவது, அசைவற்றுக் காணப்படு கிறாள் என்று கொட்டிச் சேதத்தில் இளங்கோவடிகள் சுட்டிப் பெற வைக்கிறார். இதனையே கலித்தொகையில் சிவனது ஆடலுக்கு உமையவள் சீர், தூக்கு, பாணி தருவாளோ? என்று கேள்விக் குறியில் நிறுத்துகிறார் அச்செய்யுளா சிரியர். அதற்கு விடையகத் 'தரமாட்டாள்' என்ற எதிர்மறைப் பொருளும் உண்டாகிவிடுகிறது. தன் நாயகன் குறிப் பிற்கேற்ப ஒழுகும் உமையவள் ஒரு தலையகத் 'தருவாள்' என்ற உடன்பாட்டுப் பொருளும் ஈண்டு உண்டாகிவிடு கிறது. இத்தகைய முறையில் கருத்தினை உய்த்துணருமாறு புலவர்கள் பாடியுள்ளனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திரிபுர சம்மாரம்

திரிபுர சம்மார தாண்டவம் பெருமையையுணர்ந்த அருளாளர்கள் திருமுறைகளிலும் பிற்கால இலக்கியங்களிலும் அதனைப் போற்றிப் பாடியுள்ளனர். நல்லாட்சியையும் கலை மாட்சியையுங் கொண்ட மாமன்னர்களும் சமயவுணர்வுடையவர்களாய்த் திரிபுர சம்மாரத்தினை மனத்துட் கொண்டு, வெற்றி நல்கும் தெய்வமான திரிபுராந்தக மூர்த்தியை வணங்கிப் போற்றினர். இந்த வியத்தகு மூர்த்தியிடம் பெரிதும் ஈடுபாடு கொண்ட சோழமன்னன் இராசராசன் தான் எடுப்பித்துள்ள தஞ்சை இராசராசேச்சுரத்தில் (பெரிய கோயிலில்) இம் மூர்த்திக்குத் தனிச் சிறப்பளித்துள்ளான். பெரிய கோயிலில் தீட்டப் பெற்ற – வரலாற்றுப் புகழ்பெற்ற ஓவியங்களுள் திரிபுர சம்மார நிகழ்ச்சியும் சிறப்பிடம் பெற்றுள்ளது.

திரிபுரமெரிக்கும் விரிசடைக் கடவுளின் தோற்றத்தில், பகைவர்களைத் துச்சமாகக் கருதி இகழ்ந்து போர் தொடுக்கும் வேளையிலே வீரமும் வெகுளியும் திருமுகத்தே கொப்புளித்து நிற்பதைக் கண்டு யாரும் வியந்து நிற்பர். கொடுமையை எதிர்த்து வெற்றி கொள்ளவேண்டுமென்ற தன்னம்பிக்கையையும் துணிச்சலையும் இதனால் பெறுவர். இந்தத் தாண்டவத்தில் பாகுபாடு கொண்ட கலை வல்லுநர்கள் இதற்குச் சிறப்பான இலக்கண விதிகள் அமைத்துள்ளனர். சிவபெருமான் உலக உயிர்களின்மீது கொண்ட கருணையினால், அவ்வுயிர்களை வதைக்கும் பகைவர்களைச் சாடக் கருதி ஆடுகையில் எவ்வாறான அங்க அமைப்புகள் இடங்கொண்டன என்பதைச் சில நாட்டிய நூல்கள் விளக்கிக் கூறுகின்றன. நுதல்விழித் தாண்டவமாகக் காணும் சாத்தனார் இதன் ஒருவகைக் காட்சியைக் குறிப்பிடுகிறார்; உரையாசிரியர் அதனை விளக்குகையில், 'பின்கால் பின்புறமாய் வீச்சுற்றுச் சூசித்துப் பெருவிரலின்மிது நிற்ப, முன்கால் குதித் தூக்கின் மேல் முடக் குற்று முழங்கால் முன்னேறி நிற்ப, வட்டிடை திருக்கி, மார்பகம் ஏற்றி, நிமிர்ந்த முகத்தில் இமை விழிகள் துடிப்ப, செவ்வாய் முனைப்புற்றுச் சினந்து சீறிச் சிரிப்ப, இடக்கையில் ஒன்று பின்வாங்கி ஓங்கி மூவிலைச் சூலத்தைப் பிடிப்ப, மற்றோர் இடக்கை முன் நீட்டி மலைவில்லை வளைப்ப, வலக்கையில் ஒன்று மழுக்கனலை நேர்முகமாய் நீட்ட, மற்றொரு வலக்கை வில் நாணைச் செவிமிசை ஈர்ப்ப, முக்கண்ணன் முப்புரத்திலும் மூண்டு எரிமுழங்கி, அவை அழியும்படி தன் தீவிழியாம் நுதற்கண் நெருப்பை இறைவன் ஏவுதல் நுதல்விழித் தாண்டவத்துள் ஒன்றாம்' (பக்கம் 310) எனக் கூறுதல் காண்க.

பல தாண்டவங்கள்

இவ்வாறே சிவபெருமான் ஆடிய தாண்டவங்கள் பலவாகும். ஆகமங்களில் அறுபத்து நான்கு தாண்டவங்கள் (அட்டாட்ட மூர்த்தங்கள்) கூறப்பட்டுள்ளன. எனினும் மக்களுக்குப் பெரிதும் அறிமுகமாக உள்ளவை ஏழு தாண்டவங்களேயாகும். அவை, ஆனந்த தாண்டவம், ஊர்த்தவ தாண்டவம், காளிகா தாண்டவம், சதுர தாண்டவம், சம்மார தாண்டவம், சந்தியா தாண்டவம், திரிபுர தாண்டவம் ஆகும். சிலர் எழுவகைத் தாண்டவங்களாகக் காளிகா தாண்டவம், கௌரி தாண்டவம், சந்தியா தாண்டவம், சங்கார தாண்டவம், திரிபுரத் தாண்டவம், ஊர்த்துவத் தாண்டவம், ஆனந்தத் தாண்டவம் ஆகியவற்றைக் கூறுவர். இவற்றைப் பின்பற்றித் திருப்புத்தூர்ப் புராணம், சில நுண்குறிப்புகளைப் புலப்படுத்தும். அந்தப் புராணப்படி திருநெல்வேலித் தாம்பிர சபையிலே காளிகா தாண்டவம் அல்லது முனி தாண்டவம் படைத்தலைக் குறிக்கும்; திருப்புத்தூர்ச் சிற்சபையிலும் மதுரை வெள்ளியம்பலத்திலும் முறையே கௌரி தாண்டவமும், சந்தியா தாண்டவமும் காத்தலைக் குறிக்கும்; இருண்ட நள்ளிரவிலே சங்கார தாண்டவம் அழித்தலைக் குறிக்கும்; திருக்குற்றாலம் சித்திர சபையில் திரிபுர தாண்டவம் மறைத்தலைக் குறிக்கும்; தில்லைப் பொன்னம்பலத்தில் ஆனந்தத் தாண்டவம் ஐந்தொழிலையும் குறிக்கும் என்பது அறியலாகும். மேலும் எழுவகைத் தாண்டவத்தில் குறிப்பிடப்பெறும் காளிகா தாண்டவத்தைக் காளி தாண்டவம் எனக் கருதுதல் கூடாது. படைத்தல் செயலைக் குறிக்கும் காளிகா தாண்டவம் வேறு. அருட்செயலைக் குறிக்கும் காளி தாண்டவம் வேறு எனக் கொள்ளுதல் வேண்டும்.

ஐந்தொழில்

சிவபெருமான் உயிர்களின் உய்விற்காகச் செய்தருளுவது பஞ்ச கிருத்தியம் எனப்படும் ஐந்து செயல்களாகும். ஆகவே அவர் செய்யும் தாண்டவமும் ஐந்தாகத்தானே இருக்கவேண்டும்! ஏழாக இருப்பது ஏன்? இதற்குரிய காரணத்தை மயிலை சீனி. வேங்கடசாமி கூறுகின்றார். ஐஞ்செயலையும், தனித்தனியே காட்டுகின்ற தாண்டவங்கள் ஐந்து. ஐஞ்செயலையும் ஒருங்கே செய்கிற ஆனந்த தாண்டவம் ஒன்று. ஐஞ்செயல்களில் ஒன்றான காத்தல் செயலைச் செய்யும் கடவுள் உயிர்கள் செய்கின்ற நல்வினை தீவினை என்னும் இருவினைக்குத் தக்கபடி இன்பங் காத்தல். துன்பத்தினின்றும் காத்தல் என்ற இரண்டு வகையில் காத்தல் செயல்களைச் செய்கிறார். அந்த வகையில் காத்தல் தொழில் இரண்டாக, ஐந்தொழில் ஆறு ஆகிறது. ஐஞ்செயல்களை ஒன்றாகச் செய்யும் ஆனந்த தாண்டவத்தையும் சேர்க்கத் தாண்டவம் ஏழாயின என்ற கருத்து இயைபுடன் சிந்திக்கத் தக்கது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



கேசக் கிரீடம் அணிந்த நடராசர் – சிவகாமி
(மேலக் கரிவலங்குளம், நாங்குநேரி வட்டம்)
(காலம் 13–ஆம் நூற்றாண்டு)



விரிசடை நடராசர்
(அந்தநல்லூர், திருச்சி மாவட்டம்)
(காலம் 13–ஆம் நூற்றாண்டு)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



ஸ்ரீநடராசர்
(ஸ்ரீநெல்லையப்பர் திருக்கோயில், திருநெல்வேலி
காலம் 14–ஆம் நூற்றாண்டு)

ஸ்ரீநடராசர்
(ஸ்ரீஅட்சரபுரீஸ்வரர் திருக்கோயில், திருஇன்னம்பர்.
கும்பகோணம் வட்டம். காலம் 11–ஆம் நூற்றாண்டு)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆனந்த நடனம்

கலைவல்லாரின் மற்றொரு நோக்கில், தாண்டவங்களுள் தில்லையுள் ஆடிய ஆனந்தமா நடமும் (பஞ்சகிருத்திய தாண்டவமும்), திருவாலங்காட்டில் ஆடிய ஊர்த்துவ தாண்டவமும் மிகச் சிறப்பாகக் கருதப்படும். நாட்டிய நூலில் கூறப்படும் புயங்கத் திராசிதம் எனும் கரணமே ஆனந்தத் தாண்டவம் என்பது சிறப்புடைய குறிப்பாகும். இவ்வாறே கரண வேறுபாட்டினாலே தாண்டவ வேறுபாட்டினை ஆராய்ந்து இனங்காப்பது உண்டு. ஆனந்த தாண்டவம் உச்சச் சிறப்புடைய தாகலின் அதனை மக்கள் உணர்ந்து உய்யுமாறு அனைத்துச் சிறப்புடைய சிவன் கோயில்களிலும் சிவகாமியம்மையுடன் கூடிய நடராசப் பெருமானுக்குச் சிறப்பிடந் தந்துள்ளமை போற்றற்குரியது. உமையம்மையின் கூறாகத் தோன்றிய காளி முனைந்து ஆடுகையில் சினந்தெழுந்த சிவன் தன் ஒருகாலை உயரத் தூக்கி 'ஊர்த்துவ தாண்டவம்' ஆடினான்; அன்றியும் சிவனது ஆடலின்போது குழையொன்று நழுவி விழ, அதனைப் பிறர் காணாதவாறு தன் திருவடியால் எடுத்து அணிந்துகொள்ள ஆடியதே இதுவெனவும் கூறுதல் உண்டு.

பக்தி இலக்கியங்களில்

கார்க்கோடகன் என்ற நாக அரசனும், அனந்தர் என்னும் முஞ்சிகேச முனிவரும் விரும்பிய நிலையில் திருவருளால் ஊர்த்துவத் தாண்டவத்தைக் கண்டு வீடுபேறு பெற்றனர் என்ற புராணக் குறிப்பும் உண்டு.

காளியோடாடிய ஊர்த்துவத் தாண்டவத்தின் சிறப்பினை நக்கீரதேவர் உணர்ந்து தாம் பாடியருளிய கயிலைபாதி காளத்திபாதி அந்தாதியில் சிறப்பித்துக் கூறியுள்ளார்.

சங்காரத் தாண்டவம் அல்லது சம்மாரத் தாண்டவம் சிவனது அளப்பரும் பேராற்றலைப் புலப்படுத்துவதாகும். இதனை ஊழித்திருக் கூத்தாகவும் அந்தி நிருத்தமாகவும் கொள்ளுதல் உண்டு. அன்றியும், சங்கார தாண்டவம் வேறு, பிரளய தாண்டவம் வேறு எனக் கருதுவதும் உண்டு. சிலர் சம்மாரத் தாண்டவம் மார்க்கண்டேயருக்காகக் காலனை வதைக்கு முகத்தான் சிவன் ஆடியது என்றும் சிறப்பாகக் கூறுவர்.

திருவிளையாடற் புராணத்திலே கலைவல்ல பாண்டியனுக்காகச் சிவன் கால்மாறி ஆடி அவனது கவலையைப் போக்கியதைக் காணலாம். அவ்வகையில் அந்தத் தாண்டவம் கால்மாறியாடிய தாண்டவமாகக் கருதப்பெறும்.

திருவுரு உணர்த்தல்

தாண்டவம் புரியும் இறைவனுக்கு நான்கு, ஆறு, எட்டு, பத்து, ஆயிரம் கைகள் உள்ளனவாக அருளாளர்கள் பாடுவர்; சிற்பிகளும் அக்குறிப்பினை மனத்துட் கொண்டு சிலைகளை அமைப்பர். திருக்கைகள் பலவாகச் சுட்டுங் குறிப்பினால், விண்ணே இறைவனுக்கு உடலாகவும், திசைகளே கைகளாகவும் கொள்ளுதல் தகும்.

கலைவிளக்கந் தரும் பாங்கினில், இறைவன் ஆடிய எழுவகைத் தாண்டவங்களும் இசைநாதச் சிறப்புடன் போற்றுவர். தாண்டவங்கள் குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் ஆகிய ஏழிசைகளினின்றும் தோன்றியவை எனக் கொண்டு, அவற்றிற்குக் கலைநோக்கிலே மெய்ப் பொருளியல் விளக்கந் தருதலும் உண்டு. இத்தகைய சிறப்புடைய எழுவகைத் தாண்டவம் ஒருபுறமிருக்க, இறைவனைத் துவாதச தாண்டவச் சிறப்பினதாகக் கருதிப் பன்னிரண்டு தாண்டவங்களைப் போற்றிக் கூறுவதும் உண்டு. இக்கருத்தினையொட்டிச் சாரங்கதேவர் ஆடல்வல்லானின் வியத்தகு தாண்டவங்களைத் தேர்ந்தெடுத்து, ஆனந்தத் தாண்டவம், சந்தியா தாண்டவம், சிருங்கார த் தாண்டவம், திரிபுர தாண்டவம், ஊர்த்துவ தாண்டவம், முனிதாண்டவம், சங்கார தாண்டவம், உக்கிர தாண்டவம், பூதத்தாண்டவம், பிரளய தாண்டவம், புசங்க தாண்டவம், சுத்த தாண்டவம் எனப் பன்னிரண்டாய் இயம்புவர்.

அருளாளர்கள் சிலர் ஆண்டவனின் ஆடல்களையெல்லாம் ஐவகைத் தாண்டவங்களுள் அடக்கி, அவை அற்புதத் தாண்டவம், அநவரத தாண்டவம், ஆனந்த தாண்டவம், பிரளய தாண்டவம், சங்கார தாண்டவம் எனக் கூறிச் செல்வர். தாண்ட வத்தை வகைப்படுத்தும் அடியவர்கள் சிலர், பஞ்சகிருத்திய தாண்டவம், அகோர தாண்டவம், ஊர்த்துவ தாண்டவம், ஆச்சரிய தாண்டவம், ஆனந்த சௌந்தரிய தாண்டவம் எனப் பல்வகைப்படும் என்று கூறுவர். இவ்வாறு தாண்டவங்களின் எண்ணிக்கை அவ்வக் காலத்திலும் புராண உணர்வு கொண்ட சமயப் பெரியவர்களால் மாறுபடலாயிற்று.

பரதக்கலை

பரத நூற் கருத்துப்படி சிவன் ஆடிய தாண்டவங்கள் 108 என்றும், அவை அந்தி வேளையில் ஆடப்பட்டன என்றும் அறியலாம். இத்தகைய தாண்டவங்களின் நுண்கூறுகளைப் (கரணங்களை) பரத சூடாமணி, பரத சார சங்கிரகம், கூத்த

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நூல், ஆடல்வல்லான் முதலிய நூல்களில் காணலாம். அவ்வாறு காண்கையில் கலை வல்லார்களின் கற்பனை எவ்வா றெல்லாம் விரிந்து சென்று சிவதாண்டவத்திற்குக் கலை நேர்த்தியும் பெருமையும் உண்டாக்கியுள்ளதென அறியலாம்.

விஞ்ஞானத்தில் மெய்ஞானம்

தாண்டவத்தின் புலப்பாடானது அசைவு அல்லது இயக்கம் என்பதில் அமைந்துள்ளது. ஒரு பம்பரம் தன் ஆட்டத் தினால் அல்லது சுழற்சியினால் சிறப்பினைக் கொள்கிறது. ஆட்டம் ஓய்தலால்–விசை தளர்தலால் – அது நில்லாது விழுந்து விடுகிறது. அதுபோலவே இறைவனும் இறைவனால் இயக்கப்படும் பொருள்களுமாகும். இவ்வுலகமும் அனைத்து அண்ட கோளங்களும் அவற்றினூடே பொலியும் அணுக்களும் இயக்கமுற ஒரு பேராற்றல் முனைந்து செயற்படுகிறது. அந்த உந்து சக்தி அநாதிகாலமாய் இருந்துகொண்டிருக்கிறது. வியத்தகு அந்த ஆற்றலின் இயக்கமே சைவச் சான்றோர் களால் பரம்பொருளின் ஆடல் – ஆடல் வல்லானின் தாண்டவம் என போற்றப்படுகிறது. அறிவியல் நோக்கில் அதுவே 'அணுவில் தாண்டவம்' என்று கருதப்படுகிறது. இந்த உண்மை அறிவியலார்க்கும் ஒப்புக்கொள்ளக்கூடிய நிலைமையில் அமைந்த உலகப் பெரும் புதிராக இருந்து வருகிறது. இந்த இயக்கம் என்று தோன்றியது என்பது யாருக்கும் தெரியாது. அது அநாதி காலமாய்த் தன் நியதிக்கு உட்பட்ட நிலையில் கால தத்துவம் வரையிலும் அல்லது அப்பாலும் இருந்து கொண்டு தான் இருக்கும். அத்தகைய நியதியில் சிறிது பிறழ்ந்தாலும் அண்டங்கள் அனைத்தும் துகள் துகளாகச் சிதறிப் போகும் என்பதும் நம்பிக்கை. சமய மக்களது ஒன்றிய கற்பனைக்கும் அறிவுக்கும் தத்துவத்துக்கும் அப்பாற்பட்ட ஒரு நியதியான அந்தச் சிவ தாண்டவத்தை – நடராச தத்துவத்தைச் – சமயக் குறிக்கோளுக்காகப் பலரும் காணும்படி கலை வண்ணத் திருவுருவமாகக் கண்டு அருட் செல்வர்கள் காட்டியுள்ளனர். அந்தத் திருவுருவத்தில் ஒன்றிய நிலையில் தாம் கண்ட அருளநுபவங்களைத் தத்துவக் கூறுகளாகக் கூறி வருகின்றனர் சமய ஞானிகள்.

ஆன்ம விடுதலை

எண்ணற்ற பிறவிகளில் ஆன்மாக்கள் வினைச் சூழலில் பிறப்பதும், வினை புரிவதும் இறப்பதும், மீண்டும் பிறப் பதுமான தொடர்ந்த சுழற்சியிலே அல்லலுற்று அலமந்து தவிக்கின்றன. முடிவில்லாத இந்தச் சுழற்சியினின்றும் ஆன்மாக் களை மீட்கவும், அவ்வாற்றான் அவற்றுக்கு ஓரளவு ஓய்வு தருவதற்காகவுமே இறைவன் தன் திருவருள் நோக்கில் சங்கார தாண்டவம் புரிந்து வருகிறான் என்பர். சிவன் ஆடியருளிய தாண்டவங்கள் காலத்திற்கும் இடத்திற்கும் ஏற்பப் பல்வேறு நோக்கங்களைக் கொண்டவையாகும். அனைத்தையும் விரிக்கிற் பெருகுமாதலின், ஈண்டு ஐந்தொழிலியற்றும் ஆனந்த தாண்டவம் பற்றிச் சிறிது காணலாம்.

திருவுரு தத்துவம்

சிவன் ஆனந்த மாநடனம் புரிகையில் அவனது ஊன்றிய வலக்கால் முயலகன் என்னும் அசுரன் மீது பதிந்திருக்கும். முயலகன் ஆன்மாவின் அறியாமைக்கு அறிகுறி. சகச மலமாகிய ஆணவம் இன்றேல் ஆன்மா எளிதாக பரமனிடம் அடைக்கலம் பெறவும், அவன் தரும் பேரின்ப வெள்ளத்தில் இடையறாமல் திளைக்கவும் வாய்ப்பாகலாம். ஆனால், ஆன்மாவின் நிலை அவ்வாறு அன்று. ஆன்மாவின் சிற்றறிவை மறைத்து மயக்கிப் பேரின்பங் கொள்ளாமற் செய்வதும் ஒரு வகையில் இறைவனின் அருள் நிகழ்ச்சியாகவே அமைந்துவிடுகிறது. காரணம், ஆன்மா தன் வினையை அநுபவித்துத் தீர்ப்பதற்கு இவ்வாறான ஏற்பாடு வாய்ப்பளிக்கும் என்பதே. வினை தீர்ந்த நிலையில் ஆன்மா விடுதலை பெறவும் பேரின்பங் கொள்ளவும் அடிப்படையாக, இறைவனது ஊன்றிய திருவடி, இந்த மறைப்பைக் குறிக்கும் என்பர். இறைவனது தூக்கிய திருவடி – குஞ்சித பாதம் – அருளுக்கு அடையாளமாக வீசியெடுத்து நிற்கும். இதன் நிழலில் ஆன்மா தங்கி இன்புறும் என்றும், அதுவே முத்தி என்றும் சாத்திரங்கள் குறிப்பிடும். 'எடுத்திட்ட பாதமன்றோ நம்மை ஆட்கொண்டதே' என்ற திருமுறை வாக்கும் ஈண்டுச் சிந்திக்கத் தக்கது. கங்கை கொண்ட சோழபுரத்துக் கோபுரத்தில் கிழக்கு நோக்கி அமைந்திருக்கும் நடராசத் திருவுருவத்திலே தூக்கிய திருவடியின் கீழே காரைக்காலம்மையாரின் திருவுருவம் அமைந் திருப்பதும் இயைபுடன் நினைவுகூரத் தக்கது.

பொதுவாக நடராச திருவுருவத்தில் நான்கு திருக்கைகள் உள்ளன. அப்பரடிகளின் திருவாக்கிற்கேற்ப ''எண்டோள் வீசி நின்றாடும் பிரானாகவும்'' தாண்டவ மூர்த்தி – எட்டுத் திருக்கைகளுடன் விளங்குதல் உண்டு. சந்தியா தாண்டவம் ஆடுகையில் சிவபெருமான் நான்கு கைகள் எட்டுக் கைகளேயன்றிப் பத்துக் கைகளுடனும் விளங்குவதும் உண்டு. இவ் வாறு வெவ்வேறு அமைப்பில் தாண்டவ மூர்த்தியின் திருவுருவத்தை காண்பர். அந்நிலையில் தத்துவப் பொருத்தத்தையும் இயைபாகக் கூறுகின்றனர். கைகளைப் பொறுத்த வரையில் அவற்றைத் திசைகளாகவே கொள்வது தத்துவ மரபாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆடல் வல்லானின் திருவுருவம் உலகத்தில் பல்லோரின் நாட்டத்தைக் கவர்ந்துள்ளது அதன் தத்துவ உட்கிடை வியத்தகு சிறப்புடையது. அது வருமாறு: இறைவனுடைய நான்கு கைகளுள் வலப்புறப் பின்கை பிரணவ ஒலியை வெளிப்படுத்தும் ஓர் உடுக்கையை (படைப்பின் அறிகுறியாக) ஏந்தி நிற்கும். வலப்புற முன்கை உள்ளங்கை தெரியுமாறு அபய முத்திரை காட்டி நிற்கும்; உயிர்களை அஞ்சாமல் தன்பால் அடைக்கலப்படுத்துங் குறிப்பாக இது அமைந்தள்ளது இடப்புறப் பின்கை அனற்சுடரை ஏந்தி நிற்கும்; இது அழித்தலைக் குறிக்கும். (இதே அனற்சுடர், சங்கார தாண்டவத் திருமேனியைக் கலைஞர்கள் அமைக்கையில் வலப்புறப் பின்கையிலே பொருத்திக் காட்டுவர் என்பது குறிப்பிடத் தக்கது; காரணம் அந்தத் தாண்டவத்தின் அழித்தலே வலங்கொண்டு அமைதல் வேண்டும் என்பதாகும்). இடப்புற முன்கை மார்பையொட்டிக் குறுக்காக வீசிக் கைவிரலொன்றால் திருவடியைச் சுட்டிக் காட்டும்; உயிர்களின் ஆன்ம ஈடேற்றத்துக்கு வழி கோலுங் குறிப்பு இதுவாகும். நடராசத் திருவடிவப் பின்னணியில் ஒரு வட்டமான திருவாசியும், அதன் விளிம்பில் ஐம்பத்தொரு சுடர்களும் அமைந்திருக்கும். திருவாசியின் உட்பொருள் ஓங்காரம் என்பதும், இந்தப் பிரபஞ்சம் முழுவதுமே இறைவனுக்கு ஆடரங்கு என்பதும், ஐம்பத்தொரு சுடர்கள் மானுட அறிவுக்கு அடிப்படையான பேச்சுக்குக் காரணமான ஐம்பத்தொரு எழுத்துக்கள் என்பதும் உய்த்துணரத் தக்கவை. இந்த ஆனந்த தாண்டவம் தில்லையம்பதியில் நிகழ்கிறது என்பர். ஐம்பூதத் தலங்களில் வான் தலமாகிய தில்லைச் சிற்றம்பலத்தை ஞான ஆகாசம் என்றும், சிதாகாசம் என்றும், சிற்பர வியோமம் என்றும் சமய ஞானியர் கூறிக் காட்டுவர். இந்தத் தாண்டவம் படைப்பிற்கு முன்னும் இருந்தது; பிரளயத்திற்குப் பின்னும் இருப்பது என்பது நுணுகிய தத்துவமாகும்.

பஞ்சாட்சரம்

ஆனந்த தாண்டவ மூர்த்தத்தில் பிரணவத்துடன் கூடிய திருவைந்தெழுத்தைப் பொருத்திக் காட்டித் தத்துவம் உரைப்பர்; அதனில் 'சிவாய நம' என்னும் மந்திரத்தையும் ஐந்தொழிலமைப்பையும் விளக்கிக் காட்டுவார் மனவாசகங் கடந்தார். உடுக்கையாகிய துடியை ஏந்திய கை'சி' என்னும் எழுத்தையும், வீசிய கையாகிய கய அத்தம் (கஜ ஹஸ்தம்) 'வ' என்னும் எழுத்தையும், அபய முத்திரையுள்ள கை 'ய' என்னும் எழுத்தையும், தீச்சுடரை ஏந்திய கை 'ந' என்னும் எழுத்தையும், முயலகன் என்பவன் 'ம' என்னும் எழுத்தையும் குறிக்கும்.

அகமும் புறமும்

சிவபெருமான் எல்லாருடைய இதயக் குகையிலும் தாண்டவமாடிக் கொண்டிருக்கிறார். அசபாநடனம் என்னும் ஒருவகையில் சமய ஞானிகள் இதனையுணர்த்துவர். இதய அசைவே நடராசப் பெருமானது தாண்டவம் என்பதையுணர்ந்து தெளிந்தால், மனிதன் தன் இதயக் குகையிலும், உயிர்க்குயிரிலும் அந்தப் பெருமான் ஆடிக் கொண்டும் அனைத்தையும் ஆட்டுவித்துக் கொண்டுமிருக்கின்ற சூக்குமப் பொருள் புரியலாகும். அந்த நிலையில்தான், புறத்தே காண்கின்ற ஆனந்த தாண்டவத் தோற்றம் பொருளுடையதாகத் தத்துவப் பெரும் பொருள் விளக்கமாகத் தோன்றி மகிழ்விக்கும். சுருங்கக் கூறின் ஆனந்த தாண்டவம் பிண்டத்திலும் அண்டத்திலுமாக நடந்து கொண்டிருக்கிறது என்பதே தாண்டவத் தத்துவத்தின் ஒரு வகை நுண் விளக்கமாகும். மேலும், யோகநெறிப் பார்வையில் இந்த மண்ணுலகமே ஒரு புருட வடிவம். இடை கலை நாடி இமயம்; பிங்கலை நாடி இலங்கை; ஓடுகின்ற சுழிமுனை நாடி தில்லைச் சிற்றம்பலம்; அங்கிருந்து சிவபரம்பொருள் அல்லும் பகலும் ஆடிக்கொண்டே அனைத்துயிர்களையும் உய்விக்கிறது என்பதும் ஒரு வகையில் தத்துவ நுண் விளக்கமாகும்.

கூத்தப் பெருமானை அக மார்க்கத்திற் கண்டும் புறமார்க்கத்திற் கண்டும் சுவைத்த நிலையில் தம் அருளனுபவங் களைச் சமய ஞானியரும் சித்தரும் யோகியரும் உலக நலங்குறித்து விண்டுரைத்துள்ளனர். அவர்களுள் திருமூலர் மிகச் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவர். அவர் இறைவனது தாண்டவத்தைப் பல்வேறு கோணங்களில் கண்டு மகிழ்ந்து தம் திருமந்திரம் வாயிலாக உணர்த்தியுள்ளார். அவர் நோக்கிலே சிவதாண்டவம் மிகமிக வியக்கத் தக்கது. அண்ட பிண்ட சராசரங்கனெல்லாம் சிவன் திருமேனி எங்கும் அவனது அருளாற்றலாகிய சிவசக்தி; எங்கும் அவன் ஆடுகின்ற களமாகிய திருச்சிற்றம்பலம்; இயங்குபவை நிற்பவ்வயாகிய எல்லாப் பொருள்களிடத்தும் சிவன் விளங்குவதால் எங்கும் விளங்குவது அவனது அருள் தாண்டவமே எனக் கூறி, அந்தத் திருக்கூத்தினைச் சிவானந்தக் கூத்து, சுந்தரக் கூத்து, பொற்பதிக் கூத்து, பொற்றிலைக் கூத்து, அற்புதக் கூத்து என்று ஐவகையாகக் குறிப்பிட்டுச் சொல்கிறார். அவையெல்லாம் அன்னவர் தம் உள்ளுணர்வால் கண்டனுபவித்து விண்டுள்ள தத்துவப் பெட்டகங்களாகும். அவற்றையெல்லாம் நுணுகி நுணுகி ஆராய்ந்தால் தாண்டவத் தத்துவம் இனிது புலனாகும்.

இவ்வாறான தத்துவ நுண்பொருள்களையெல்லாம் கண்டு தெளிவதற்கு முதற்படியாக எல்லாத் திருமுறை நூல்களையும், சைவ சமய ஞானிகர்களின் பிற நூல்களையும் பயின்று அனுபவங் கொள்ளுதல் நன்று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிவாகம வடிவம்

சிவபெருமான் சதாசிவ வடிவம் தாங்கிப் பிரதிசம்மிதை எனப்படும் முறையிலும், மகௌகம் எனப்படும் முறையிலும் வெளிப்படுத்தி அருளிய காமிகம் முதலான ஆகமங்கள் சிற்சபையில் தங்கமயமான தூண்களின் வடிவில் விளங்கிக் கூத்தப் பெருமானைத் துதித்த வண்ணம் இருக்கின்றன எனக் குஞ்சிதாங்கிரிஸ்தவம் எனும் தோத்திர நூலில் கூறப் பெற்றுள்ளது. இதே கருத்து நடேசுவர தண்டகம் என்னும் தோத்திர நூலிலும் இடம் பெற்றுள்ளது. கூத்தப் பெருமானுக் குரிய ஆயிரம் திருப்பெயர்களுள் ஒன்று சிவாகம: என்பது. இதற்குச் சிவாகமங்களை வெளிப்படுத்தி அருளினவன் என்றும், இமவான் மடந்தையான பார்வதியால் அடைப்பட்டவன் என்றும், அம்பிகை அமர்ந்துள்ள சிகரத்தை அணுகியவன் என்றும், அடியார்களுக்கு விடுபேறு அருள்பவன் என்றும் பலவிதமாகப் பொருள் கூறுவர். நரிகளைக் குதிரை வடிவத்தில் வருவித்தவன் என்றும் பொருள் கொள்ளுவர். இவ்வாறு பல்வேறுபடப் பொருள் கொண்டாலும் முக்கியமான கருத்து, சிவாகம வடிவத்தில் விளங்குபவன் அல்லது சிவாகமங்களை வெளிப்படுத்தியவன் என்பதே. எனவே சிற்சபைக்கும் சிவாகமங்களுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. சிவாகமங்களில் கூத்தப் பெருமானைக் குறித்துக் கூறப்பட்டுள்ள கருத்துக்களுள் சிலவற்றை இங்கே காண்போம்.

மகேஸ்வர வடிவங்கள்

கூத்தப் பெருமானின் வடிவத்தைச் சிவபெருமானுக்கு உரிய மகேசுவர வடிவங்கள் இருபத்தைந்தனுள் ஒன்றாகக் கருதுவது ஒரு வகை. அவ்வடிவத்தைத் தத்துவங்களுக்கெல்லாம் அப்பாற்பட்ட தனி முதற் பொருளாகக் கருதுவது மற்றொரு வகை. நடேசுவர வடிவம் மகேஸ்வர வடிவங்களுக்குள் ஒன்று என்ற நிலையில் அவ்வடிவத்தை அமைப்பதற் குரிய வழிமுறைகளையும் வழிபாட்டு முறைகளையும் காமிகம், காரணம், அஜிதம், ரௌரவம் முதலான சிவாகமங்கள் விரிவாகக் கூறுகின்றன. மகேஸ்வர வடிவங்களுள் ஒன்றாகக் கொண்டால் கூத்தப் பெருமானின் வடிவம் திருச்சுற்று மாளிகையில் அமைக்கப்படவேண்டும். அல்லது விழா நாயகராக (உற்சவ மூர்த்தியாக) அமைக்கப்படவேண்டும்; சலபேரம் (இடம் பெயர் வடிவம்) என ஆகமங்கள் இவ்வடிவத்தைக் கூறும். வியக்த லிங்கம் என்பதும் சலபேரம் அல்லது மகேசுவர வடிவமே. சந்திர சேகரர், சோமாஸ்கந்தர், கங்காதரர், கல்யாண சுந்தரர் என எண்ணப்படும் மகேசுவர வடிவ வரிசையில் நிருத்த மூர்த்தியையும் அடக்கி மேற்கூறப்பட்ட சிவாகமங்கள் நடேசுவர வழிபாட்டைக் குறித்துக் கூறுகின்றன.

காரணாகமத்தில்

நடேசுவர வடிவத்தை எவ்வாறு தியானிக்கவேண்டும் எனக் காரணாகமம் கூறுகிறது. ஆனந்த வடிவமே நிருத்த வடிவம் எனக் கூறும் காரணாகமம், ''நான்கு திருக்கரங்களும் முக்கண்களும் உடையவராகவும், இளம்பிறை, பாம்பு ஊமத்தை, நறுமண மலர்கள் இவற்றால் அலங்கரிக்கப்பட்ட சடைமகுடம் உடையவராகவும், அனைத்து விதமான அழகிய இலக்கணங்கள் பொருந்தியவராகவும், செந்நிற ஆடை அணிந்துள்ளவராகவும், வெண்ணிறம் வாய்ந்தவராகவும், குமிண் சிரிப்பு உடையவராகவும் கூத்தப் பெருமானைத் தியானிக்கவேண்டும்'' எனக் கூறுகிறது. பிறிதோர் இடத்திலும் நிருத்த வடிவம் விளக்கப்பட்டுள்ளது. ''முக்கண், நான்கு திருக்கரம்; சாந்தமான தோற்றம்; வலச் செவியில் மகர குண்டலம்; இடச் செவியில் கர்ண பத்திரம்; ஊமத்தை, எருக்கு, கொக்கு மந்தாரை, கொன்றை, கங்கை, பாம்பு, இளம்பிறை இவற்றை உடைய விரிசடைக் கோலம்; புன்முறுவல்; வலது மேற்கையில் துடி; இடது மேற்கையில் அங்கி; வலது கீழ்க்கை அபய முத்திரை; இடது கீழ்க்கை வீசிய நிலை; எடுத்த திருவடி; அபஸ்மாரத்தின் மேல் ஊன்றிய வலது திருவடி; சிங்கத்தோல் ஆடை, புலித்தோல் மேலாடை (உத்தரீயம்); கிங்கிணி மாலை; நாகப் பூணூல்; கடகம், கேயூரம், நூபுரம் முதலான திருவாபர ணங்கள்; ஓங்கார வாசி (பிரபா மண்டலம்); வெண்மை நிறம்; முப்பத்திரண்டு இலக்கணங்கள் . இவற்றை உடையவ ராகக் கூத்தப் பெருமானைத் தியானிக்கவேண்டும்.

தாண்டவங்கள்

ஆனந்த தாண்டவம், சந்தியா தாண்டவம், கௌரீ தாண்டவம், திரிபுர தாண்டவம், காளி தாண்டவம், முனி தாண்டவம், சம்மாரத் தாண்டவம் எனப்படும். ஏழ்வகைத் தாண்டவங்களைப் பற்றிக் குறிப்பிடும் காரணாகமம் கலியாண சுந்தர வடிவத்திற்கும் நிருத்த வடிவத்திற்கும் இடையே பேதம் அறியப்படுவதில்லை எனக் கூறுகிறது.

ஆதாரம்:– சிதம்பரம் – கும்பாபிஷேக மலர் 1986. ''சிற்சபை நாதரும் சிவாகமங்களும்'' – டாக்டர். சபாரத்தினம். மற்றும் ''குஞ்சித சரண மகிமை'' – கட்டுரை சிதம்பரம் ஸ்ரீலஸ்ரீ ராஜசோம கோபாலசாமி தீட்சதர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



ஸ்ரீசிவகாமி சமேத ஸ்ரீ நடராஜர்
(ஸ்ரீபிராணநாதசுவாமி திருக்கோயில், திருமங்கலக்குடி.)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



ஆடல்வல்லான்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பல்வேறு தாண்டவ வகைகளுக்குள் புஜங்கத்ராஸ தாண்டவம் குறித்துக் காமிகம், காரணம்,அஜிதம், ரௌரவம், முதலான ஆகமங்கள் கூறுகின்றன.

சந்தியா நிருத்த வடிவத்தைக் குறித்துக் காரணாகமும் அஜிதாகமும் கூறுகின்றன. தண்டபாதம் அல்லது உத்தண்ட தாண்டவம் குறித்து அஜிதாகமமும் ரௌரவ ஆகமமும் அம்சுமத் காசியபமும் கூறுகின்றன. அத்யுண்ட தாண்டவம் என்னும் நிருத்த வடிவத்தைப் பற்றி ரௌரவ ஆகமமும் அம்சுமத் காசியபமும் கூறுகின்றன.

சிற்பரத்தினம்

சிவபெருமானின் தாண்டவ வடிவங்கள் நூற்றெட்டு வகை எனக் குறிப்பிட்டு அவற்றுள் ஒன்பது வகைப்பட்ட தாண்டவ வடிவங்களுக்கு உரிய இலக்கணங்களைச் சிற்ப ரத்தினாகரம் கூறுகின்றது.

மகுடாகமத்தின் சிறப்பு

இதுவரை கூறப்பட்ட நடேசுவர வடிவங்கள் அனைத்தும் மகேசுவர மூர்த்தங்களைச் சார்ந்தவை. மகுடாகமம் கூறுகின்ற நிருத்த வடிவமே தத்துவங்களுக்கு அப்பாற்பட்ட வடிவமாகும். சிவபெருமானுக்குரிய சிவாகமத் திருமேனியில் மகுடாகமம் மணிமகுடமாக ஒளிர்கின்றது என எல்லா ஆகமங்களிலும் கூறப்பட்டுள்ளது. மகுடமாக விளங்கும் மகுடாகமம் கூறும் நடராச வடிவம் ஏனைய ஆகமங்களில் கூறப்பெறும் நடராச வடிவத்தைக் காட்டிலும் தத்துவ நிலையில் மேம்பட்டது எனக் கூறலாம். தத்துவ – அதீதமான ஆனந்த தாண்டவ வடிவமே மகுடாகமத்தில் கூறப்படுவது.

சிவ வழிபாட்டின்போது சிவலிங்கத்தின் மேற்பாகத்தில் (தண்டாகாரமான வடிவத்தில்) கூத்தப் பெருமானைத் தியானிக்க வேண்டிய முறையைப் பற்றி மகுடாகமம் கூறுகிறது.

''காமிகம் முதல் வாதுளம் ஈறாக உள்ள இருபத்தெட்டுச் சிவாகமங்களையே தமது அழகிய திருமேனியாகக் கொண்டுள்ளவராகவும், தெற்கு நோக்கியவராகவும், ஆனந்த வடிவினராகவும், களங்கமற்றவராகவும் நிட்களராகவும் நடேசப் பெருமானை முதலில் தியானிக்கவேண்டும்''.

''தக்ஷிணசுவரரான நடராசப் பெருமானை எட்டுவிதமான அங்கங்களால் நாள்தோறும் சிவலிங்க வடிவத்தில் வழிபடவேண்டும்''.

''சதாசிவ வடிவமான சிவலிங்கத்தின் மேற்பாகத்தில் (அதாவது நாதம் அல்லது சோதி மயமான தண்ட ரூபத்தில்) படைப்பு முதலான ஐந்து தொழில்களுக்கும் மூல காரணமும் சோதி மயமானவரும், முப்பத்தெட்டுக் கலைகளால் ஆன திருமேனி உடையவரும், நடனத் திருக்கோலம் தாங்கியவருமான சதாசிவப் பெருமானை நான்கு திருக்கரங்கள் உடையவ ராகத் தியானிக்கவேண்டும்''.

''தக்ஷிணேசுவரரான நடராசப் பெருமானுக்கு உரிய மந்திரத்தை உச்சரித்துக் கருவறையில் உள்ள சிவலிங்கத்தின் மத்தியில் நடராச வடிவத்தைத் தியானித்து முறைப்படி வழிபடுக''.

''எப்பொழுதும் சிற்சபையில் திகழ்பவரும், சோதி வடிவானவரும், எப்பொழுதும் திருக்கூத்து இயற்றுபவரும், பரம குருவும், ஐந்தொழில்களுக்கும் ஆதாரமானவரும் ஆன தாண்டவேசுவரனை பிந்துமயமான பீடத்தின் மத்தியில் உள்ள நாதமயமான மேற்பாகத்தில் தியானித்து வழிபடவேண்டும்''.

இவ்வாறு சிவலிங்க வழிபாட்டையும் நடேசுவர வழிபாட்டையும் ஒன்றாக இணைத்துக் காட்டி நடராசப் பெருமானின் தத்துவாதீத நிலையை உணர்த்தும் மகுடாகமம் இப்பெருமானுக்குரிய பல பெயர்களைக் கூறி அவற்றின் பொருளையும் விளக்கிக் கூறுகிறது.

நடராசப் பெருமான் எப்பொழுதும் தூய்மையாகத் திகழ்வதால் சிவம் என்றும், மேலான பொருள்களுக்கெல்லாம் மேம்பட்டுத் திகழ்வதால் பராத்பரம் என்றும், மேன்மையும் பெருத்திருக்கும் தன்மையும் உள்ளதால் பிரம்மன் என்றும், அளவை இலக்கணங்களுக்கெல்லாம் அப்பாற்பட்டு விளங்குவதால் அப்பிரமேயம் என்றும், இயல்பாகவே ஆணவ

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மலத்தினின்று நீங்கி இருப்பதால் அநித்திதம் என்றும், ஒப்புவமை இல்லாக் காரணத்தால் அனௌபம்மியம் என்றும், பூதாகாசம், பரகாசம், மகாகாசம், சூரியாகாசம் என்பவைகளுக்கும் அப்பாற்பட்ட பரகாசமாகவும் ஞானாகாசமாகவும் திகழ்வதால் வியோமாதீதம் என்றும், தனக்கொரு காரணம் இன்றித் திகழ்வதால் நித்தியம் என்றும், எல்லாவற்றிற்கும் நாயக ரானதால் பிரபு என்றும் கூறப்படுகிறார்.

நடராசப் பெருமான் சோதித்தம்ப வடிவத்தில் (ஸ்தாணு, தூண்) விளங்குவதாகவும் மகுடாகமம் கூறுகின்றது. சதாசிவ வடிவே நடேசுவர வடிவம் என நிறுவும் இவ்வாகமம். பெருவிழாக் காலத்தில் அவ்வழி பாட்டின் போதும் நடேசுவர வடிவே தியானிக்கப்படவேண்டும் எனக் கூறுகிறது.

காமிகம் முதலான சிவாகமங்கள் கூறும் நடேசுவர வழிபாடு பரிவார ஆலய வழிபாட்டைச் சார்ந்தது என்றும் மகுடாகமம் கூறும் நடேசுவர வழிபாடு மூலத்தான வழிபாட்டைச் சார்ந்தது என்றும் மேற்கூறப்பட்ட கருத்துக்களால் தெரிந்து கொள்ளலாம்.

மௌளோகங்கா – சுலோகப்படி

நடராசரின் சிரசில் கங்கையும், பூர்ண கலையுள்ள சந்திரனையும், ஜடாதரரும் கருணை பொருந்திய வாமபாக பார்வதியைக் கொண்டவரும், பிரும்ம கபால மாலை தரித்தவரும், சர்ப்ப ஆபரணத்தை உடையவரும், டமருகத்தில் ஏற்பட்ட 14 சூத்திர எழுத்துக்களை உண்டாக்கியவரும், ''பயமுண்டோ வெமக்கே'' என்ற சொல்படி அபயஸ்தம் உடைய வரும், என்னை அடைந்த பக்தர்களுக்கு மிருத்தியுபாதை கிடையாது என்று குஞ்சிதபாதம் காட்டும் பீஜ ஹஸ்தத்தையும் (சத்யம்வதா) வேதத்தின் அர்த்தத்தையும் உடைய அக்னி ஹஸ்தத்தையும் உடைய நடராஜ மூர்த்தி குஞ்சித சரணத்தைப் பிரார்த்திக்கிறோம்.

அபிஷேகமும் பூசையும்

ஸ்ரீநடராஜ மூர்த்திக்கு வருடம் ஆறு அபிஷேகம் உள்ளது. அதற்கு அங்கமாக ஸ்படிக சந்திர மௌளீஸ்வரருக்கு தினந்தோறும் காலை மூன்று கால அபிஷேக தீபாராதனையும், காலை பத்து மணிக்கு இரத்தின சபாபதி அபிஷேகமும் இரவு மூன்று கால அபிஷேக தீபாராதனையும் நடைபெறுகிறது. அதற்கு அங்கமாகக் காலையில் கலச பூஜையும் அக்னி ஹோமமும் ஷோடசோபசார (16) தீபாராதனைகளும் நடக்கிறது. விபரம்; பதஞ்சலி பூஜா சூத்திரப்படி வைதீக பூஜை நடைபெறுகிறது. (ஜெய்முனி) வேத பாதஸ்தபம் நூலைச் செய்துள்ளார். வியாக்ரபாதர் புஷ்பார்ச்சனை விதிப்படி செய்துள்ளார். 1. தூபம், 2. தீபம், 3. இரததீபம் (அடுக்கு தீபம்), 4. நாக தீபம், 5. புருஷாமிருக தீபம், 6. விருஷப தீபம், 7. இரண்யபாத்ர தீபம், 8. பஞ்சபிரும்ம தீபம் (ஐந்து), 9. அக்னி ஹோத்ர தீபம், 10. நக்ஷதிர தீபம், 11. கற்பூர தீபம், 12. பஸ்பம் (விபூதி), 13. கண்ணாடி, 14. குடை, 15. சாமரம், 16. மந்திர புஷ்பம் எனப் பதினாறு. சிதம்பரப் புராணப்படி மரப்பூ, கொடிப்பூ, நீர்ப்பூ, நிலப்பூ என நான்கு விதமான புஷ்பங்கள் சேர்ந்து மந்திரங்கள் ஓதி நடராஜர் குஞ்சித சரணங்களில் அர்ப்பணிப்பது. தமிழ் பஞ்ச புராணம் ஓதிச் சிற்சபையில் தீபாராதனை செய்து திரஸ்கரணி (திரை விலக்கி) தரிசனம் காட்டுவது.

ரகஸ்யஸ்தானம்

''நசுக்குலம் நகிஷ்ணம் நரத்தம் நபீதம் ததக்கோ வசிஷ்ட சிவக்கேவலோகம்'' ஆச்சார்ய ஸ்மிருதிபடி ரகஸ்ய தரிசனத்தில் விபரம்:

முன்பக்கத்தில் வெள்ளித்தகடு, (துவாரத்தின் வழியாக) பின்புறம் கருப்புத்திரை, அதற்குப் பின்புறம் சிகப்புத் திரை, அதற்குப் பின்புறம் மஞ்சள் தங்க வில்வ மாலை. இவை நான்கும் நீக்கி அதற்குக் கடைசியில் கருப்புச் சுவரில் எழுதப்பட்ட ''தகரோ உபாசன'' மந்திர எழுத்துக்களே இரகஸ்யமாகும்.

சித்சபையில் உள்ள மூர்த்திகள்

ஸ்ரீகணபதி, ஸ்ரீசுப்பிரமண்யர், லட்சுமி, முகலிங்கம், ஹஸ்தராஜர், ரத்னபாதுகை, சந்திரமௌளீஸ்வரர், இரத்தினசபாபதி, சுவர்ணகாலபைரவர், சந்திர சேகரர் (நித்யோத்சவர்), 1. ஸ்ரீநடராஜர் ரகஸ்யம் சேர்ந்த பிரகாரம், 2. பத்து

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ரிஷபம் கூடிய பிரகாரம், 3. தக்ஷணாமூர்த்தி சன்னதியைச் சேர்ந்த பிரகாரம், 4. சிவகங்கையைச் சேர்ந்த பிரகாரம், 5. தேர் ஓடும் வீதி பிரகாரம், 6. மாலைகட்டித் தெரு பிரகாரம், 7. செங்கழுநீர் வினாயகர் தெரு பிரகாரம்,. புராணப்படி ஏழு பிரகாரங்கள். பதஞ்சலி வியாகரபாதர் அனுக்ஜைக்கு இணங்க தை மாத பூச நக்ஷதிரத்தில் குருவாரம் சேர்ந்த தினத்தில் தரிசனம் கொடுக்கச் செய்த அன்று சுவாமி சிவகங்கைக்குளத்தில் நடராஜ மூர்த்தி பக்தரை வெளிப்படுத்தத்தான் கிழவடிவம் கொண்டு சிவகங்கையில் மிதந்தார். ''என்னைத் தூக்குபவர்கள்தான் பாவம் செய்யாதவர்'' என்றும், திட நம்பிக்கையுள்ளவர்கள் என்னைத் தூக்குங்கள்'' என்றும் ஓலமிட்டார். எல்லோரும் பயந்தார்கள். ஸ்ரீசுந்தரர் ஓடி வந்து குளத்தில் குதித்துக் கிழவரைக் கரையேற்றினார். ரிஷபா ரூபராய் ஆகாயத்தில் வந்து தரிசனம் கொடுத்து லௌகீகராய் உள்ள சுந்தரனே உயர்ந்த பக்தன் என்று காட்சியளித்தார். உயர்ந்த தீர்த்தம் சிவகங்கா தீர்த்தம்.

அருளிய செயல்

ஸ்ரீநடராஜ மூர்த்தி இருப்பது ''சிற்சபை''. நந்திகேஸ்வரர் இருப்பது ''கனகசபை''. (3000) மூவாயிரம் தேர்கள் உள்ளதும் ஸ்ரீசாபரும் ஊர்த்துவ தாண்டவரும் உள்ளதும் நிர்த்த சபை. தீக்ஷதர்கள் சபை கூடுவதும் உற்சவ மூர்த்தி ஆபரணங்கள் உள்ளதும் ஸ்ரீசுந்தரர் வழக்கைத் தீர்த்ததும், ''பித்தா பிறைசூடி'' தேவாரம் சொல்லியதும் தேவசபை. ''உலகெலாம்'' என முதலடி எடுத்துக் கொடுத்துத் திருத்தொண்டர் புராணம் கூற அருளியபடி சேக்கிழார் (செய்–கிழார்) இயற்றிய பெரியபுராணம் உரை காண பிச்சுபுரத்தில் இருந்த ஸ்ரீமணிவாசகனை அழைத்து எழுதியதும், ஆனி உத்திரம், மார்கழித் திருவாதிரை நாட்களில் ஸ்ரீநடராஜப் பெருமான் மஹாபிஷேகம் கொள்ளும் சபை ''ராஜ சபை'' (ஆயிரங்கால் மண்டபம்) உள்ளது. ஐந்து சபைகள்.

நிருத்த சபை சிறப்பு

ஸ்ரீபிர்மா ஒரு சமயம் அந்தர் வேதியில் (ஆகாயத்தில்) வேள்வி செய்தார். அதற்குத் தில்லை வன தீக்ஷதர்கள் மூவாயிரவரும் அழைக்கப்பட்டு வேள்வி முடிவுற்றது. மூவாயிரவரையும் பிரமன் வைச்சுவ தேவம் செய்யச் சொன்னார். (போஜனம் ஏற்றல்). தாங்கள் ஸ்ரீநடராஜர் தரிசனம் செய்யாமல் போஜனம் செய்யோம் என்றார்கள். உடன் பிர்மாவானவர் யாக அக்னியைப் பிரார்த்தித்தார். உடன் ஒரு ஜோதி உண்டாயிற்று. அதை வேள்வி இடத்தில் உள்ள சந்தனம், பால், தேன் எடுத்து அபிஷேகித்து அக்னி பகவானை அழைத்தார். அதில் ஸ்ரீரத்னசபாபதி மூர்த்தி இருந்ததைக் கண்டு தீக்ஷதர்கள் பூஜை தரிசனம் செய்த பின்னர் போஜனம் முடித்து ஸ்ரீரத்ன சபாபதியை எடுத்துக் கொண்டு மூவாயிரம் ரதத்தில் மூவாயிர வரும் புறப்பட்டு சிதம்பரம் வடக்கு வீதியில் வந்தார்கள். உடனிருந்த ஹிரண்யவர்ம சக்ரவர்த்தியானவர் எண்ணிப் பார்த்தபோது ஒரு நபர் குறையக் கண்டு பயந்தார். அப்போது அசரீரி வாக்கில் ''நான் என் ஸ்தானத்தில் அமர்ந்தேன்'' மற்ற இரண்டாயிரத்து தொள்ளாயிரத்துத் தொண்ணூற்று ஒன்பதின்மரும் உள்ளனர். தீக்ஷதர்களும் யாமும் ஒன்றே'' என்று வந்த அசரீரி வாக்கியத்தை எல்லோரும் கேட்டு நமஸ்கரித்து வந்து சேர்ந்தார்கள். இவர்கள் வந்த மூவாயிரம் தேர்களும் தூணில் பொறிக்கப்பட்டுள்ள சபையே நிர்த்த சபையாகும். அது முதல் ரத்ன சபாபதி சுவாமிக்குப் பால், தேன், சந்தனம் மட்டும் அபிஷேகம் செய்து திருவருளைப் பெறுகின்றோம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருச்சிற்றம்பலத்தில் அருள்பாலிக்கும் தாண்டவேசுவரர்

(தாண்டவேசுவர சிவபரத்துவம்)

***சிதம்பர சக்தியே அனைத்துக்கும் காரணம்**

''அஸ்ய லோகஸ்ய கா கதிரித்யாகாச இதி ஹோவாச
ஸர்வாணி ஹவா இமானி பூதாங்யாகாசாதேவ ஸமுத்
பத்யந்த ஆகாசம் ப்ரதயஸ்தம் யந்தி''.!!

இந்த உலகத்தின் மூலம் (கதி) யாது? என, ஆகாயம் என்றார். இந்தச் செந்துக்களெல்லாம் ஆகாயத்திலே (சிதம்பர சத்தியிலே) நின்று தோன்றி, ஆகாயத்துக்கே (சிதம்பர சத்திக்கே) போகின்றன என்று சாந்தோக்கியம் கூறுகிறது.

''யத்ரைஷ ஏதத் சுப்தோ பூத்ய ஏஷ விஞ்ஞானமய:
புருஷ ஸ்ததேஷாம் ப்ராணாநாம் விஜ்ஞாநேந விஜ்ஞாந மாதாய
ய ஏஷோங் தர்ஹ்ருத ஆகாசஸ்தஸ்மிங் சேதா''!!

நித்திரை செய்யுங்கால் இந்த அறிஞனாகிய ஆன்மா பிராண விஞ்ஞான வாயிலாக விஞ்ஞானத்தைப் பற்றிக் கொண்டு இதயத்துள்ள ஆகாயத்திலே நித்திரை செய்கின்றான் என்று பிரகதாணியம் கூறுகிறது.

''கோ ஹ்யேவாங்யாத் க: ப்ராண்யாத்!
யதேஷ ஆகாச ஆநந்தோ நஸ்யாத்''!!

இந்தத் திருச்சிற்றம்பலம் ஆனந்தமாகாவிடின் ''யார் சுவாசிப்பார், யார் பிழைப்பார்'' என்று தைத்திரீயமும் கூறுகின்றன.

திருச்சிற்றம்பலத்துள்ள தாண்டவேசுவரர் அறியற்பாலர்

''யதிதமஸ்மிந் ப்ரஹமபுரே தஹரம் புண்டரீகம்
வேச்ம தகரோ ஸ்மிந்நந்தராகாச ஸ்தஸ்மிந்
யதந்தஸ்த தந்வே ஷட்வ்யம் தத்வாவ
விஜிஜ்ஞாசிதவ்யமிதி''!!

இந்த பிரஹ்மபுரத்திலே (சரீரத்திலே) தகர புண்டரீக வீடு உள்ளது. இந்த தகர புண்டரீக வீட்டினுள்ளே ''தகராகாயம்'' (திருச்சிற்றம்பலம்) உள்ளது. இத்தகராகாயத்துள்ளே உள்ளது, (தாண்டவேசுவரப் பிரஹ்மம்). தேடற்பாற்று, அறியப்பாற்று'' என சாந்தோக்கியம் கூறுகிறது.

''ய: ஸர்வஜ்ஞ: ஸர்வவித் யஷ்யை மஹிமாபுவி!
...
...
.... மம்ருதம் யத்விபாதி''!!

---

*1920ல் வெளிவந்த சைவ வேதாந்தம் நூலின் பக்கம் 77லிருந்து 83, 368, 369. ஆசிரியர் – காசிவாசி ஸ்ரீசெந்தில் நாத அய்யர் அவர்கள். இந்நூல் பதினாறு பிரகரணத்தைக் கொண்டது ஆகும். மொத்தம் பக்கங்கள் 381 ஆகும். சிவத்தின் மேன்மையினை தெள்ளத் தெளிவாக்கும் நூல். இந்நூல் இக்காலத்தில் கிடைக்கப்பெறாததால் ஒருசில பகுதிகள் மட்டும் கொடுக்கப்பட்டுள்ளது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

எவர் ''சர்வக்ஞரோ'', எல்லாம் அறிந்தவரோ, இவ்வுலகில் இந்த மகிமை எவருடையதோ, அவர் (தாண்டவேசுவரர்) பிரஹ்ம புரத்திலே (சரீரத்திலே) ''பரமாகாயத்தில்'' (திருச்சிற்றம்பலத்தில்) இருப்பவரன்றோ; அவர் ஞானமயர், பிராணனையும் சரீரத்தையும் செலுத்துபவர்; அன்னை சரீரத்துள்ள இதய சமீபத்தில் இருக்கின்றார்; அறிஞர்கள் ''அருண ஞானத்தினால்'' ஆனந்த ரூபமாய் விளங்கும் என்று முண்டக உபநிடதம் கூறுகிறது.

''ஆகாசோ வை நாம நாமரூபயோர் நிர்வஹிதா
தே யதந்தரா தத் ப்ரஹ்ம ததம்ருதம் ஸ ஆத்மா!!

''ஆகாயம்'' – (சிதம்பர சக்தி) எனப்பட்டவர் நாம ரூபங்களைப் படைப்பவர். இவையனைத்தும் அடங்கியிருக்கப் பெறுவது பரப்பிரஹ்மம்; அது சிவன், அது பரமான்மா, என்று சாந்தோக்கிய உபநிடதம் கூறுகின்றது.

''ய: புநரேதம் த்ரிமாத்ரேணை வோமித்யதே
நைவாக்ஷரேண பதம் புருஷமபித்யாயீ தஸ தேஜசி சூர்யே
ஸம்பந்நோயதா பாதோதரஸ்த்வசா விநிர்முச்யத
ஏவம் ஹவை ஸ பாப்மநா விநிர்முக்த: ஸ ஸாமபி
ருந்நீயதே ப்ரஹ்மலோகம் ஸ ஏதஸ்மாஜ் ஜீவகநாத் பராத்
பரம் புரிசயம் புருஷமீக்ஷதே''

எவன் மூன்று மாத்திரையையுடைய இந்த ஓம் என்னும் அக்ஷரவாயிலாகவே பரம புரூராகிய சிவபெருமானைத் (தாண்டவேசுவரரைத்) தியானிக்கின்றானோ அவன் ஒளியையும் சூரியனையும் அடைந்தவனாகின்றான்; சர்ப்பம் தன்தோலின்று விடுபட்டாற்போல, அவன் பாவத்தினின்று வீடுறுகின்றான். அவன் சாம கானங்களினாலே வழிகாட்டப் படுகின்றான். சீவகனராகிய இரண்ணிய கருப்பரினும் (பிரமன்), பாராய் உற்கிருஷ்டராயுள்ள நாராயணரினும் பரமோற்கிருஷ்டராய்ப் ''ப்ரஹ்மபுத்திரன்'' (சரீரத்தின்) கண்ணே அந்தர்யாமியாய்ச் சயனித்தலிற் புருஷர் எனப்படும் சிவபிரானைத் (தாண்டவேசுவரரை) காண்கின்றான் என பிரசன்நோபநிடதம் கூறுகிறது.

காயத்ரிப் பொருள் சிவபெருமான்

''ஓம் தத் ஸவிதுர் வரேண்யம் பர்க்கோ தேவஸ்ய தீமஹி!
தியோ யோந: ப்ரசோதயாத்!!''

சிவசூரியனுக்கு மத்தியிலே இருக்கின்ற யாதொரு ''பர்க்கர்'' தாண்டவேசுவர சிவபிரான் எங்களுடைய புத்தி முயற்சிகளைச் செலுத்துகின்றாரோ, அந்த முக்கியப் பொருளைத் தியானிக்கின்றோம், என்று ருக்வேதம் கூறுகின்றது.

''தேவஸ்ய ஸவிதுர் மத்யே யோ பர்க்கோ நோ திய: க்ரமாத்!
ப்ரசோதயாத் தத்வரேண்யம் தீமஹீத்யந்வய: க்ரம:!!''

சிவசூரியன் மத்தியிலுள்ள எந்தப் பர்க்கராகிய சதாசிவர் எங்களுடைய புத்தி முயற்சிகளைச் செலுத்துகின்றாரோ அந்த முக்கியப் பொருளைச் (சதாசிவரைத்) தியானிக்கின்றோம், என யாக்ஞவல்கியர் கூறுகின்றமையின் 344ம் பிரிவுப் பெருள் வலியுறுத்தப்படுகின்றது.

திருவாவடுதுறை ஆதீன திராவிட மாபாஷ்யகாரராகிய
சிவஞான சுவாமிகள் வாக்கில்

''உணர்ந்துளோருளத் தகர புண்டரீகமுந் துவாத சாந்தமு மும்பர்
வணங்கு மாதித்த மண்டல நடுவு நான் மறைகளின் முடிவுஞ்சீ
ரிணங்கு சோம லோகமுந் திருவம்பலத்திடமுந்தென் குளத்தூர் வாழ்
குணங் கடந்தவர் சிறப்பிடமா மெனக் கூறிடு மறைநூலே''

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

என்று சிவஞான சுவாமிகள் செய்யுளில் ''ஆதித்த மண்டல நடுவிலுளர்'' எனக் கூறினர். இங்ஙனமே கச்சியப்ப சிவாச்சாரியரும் கூறினமை நீலகண்ட சைவ பாஷ்யத் தமிழ் மொழிபெயர்ப்பின் (204) குறிப்புரையிற் காண்க.

இங்கே கூறப்பட்ட பர்க்கர் நம்மையெல்லாஞ் செலுத்துகின்றவராதலின், அவர் ஆட்டுபவர் எனவும், ஆடுபவர் எனவும் கொள்ளப்படுகின்றார். இது பற்றியே, இருக்கு வேதத்து 2ம் மண்டலத்து 36ம் சூக்தத்து 2ம் மந்திரம் பரதர் (கூத்தர்) என்று கூறிற்று. பரதர் என்பது தாண்டவேசுவரர் மேற்று என்று ''சுருதி சூக்தி மாலை'' 94-ம் சுலோகம் கூறுகின்றது.

''சிவார்க்க சக்தி தீதித்யா ஸமர்த்தீக்ருத சித்த்ருசா!
சிவம் சக்த்யாதிபி: ஸார்த்தம் பச்யத்யாத்மா கதாவ்ருதி!!''

''சிவசூரியனுடைய பராசக்தியொளியினால்'' வன்மையாக்கப்பட்ட ஞானக்கண்ணினால் ஆன்மாவானவன் சத்தியோடு கூடச் சிவத்தைப் பார்க்கின்றான்; பாசம் நீங்கிப் போயிற்று'' என்று நிச்சுவாச காரிகை கூறுகின்றது.

ஆகமப் பிரகாரம் அந்தக் காயத்திரி மந்திரத்துக்குப் பொருள் செய்யுங்கால் ''எந்தச் சிவசூரியனது (ஞான இச்சாக் கிரியா) சத்தியாகிய ஒளியானது எங்கள் ஞான இச்சாக் கிரியாசத்திகளைச் செலுத்துகின்றதோ, அந்த முக்கியப் பொருளைத் (அஃதாவது அந்தப் பராசத்தியொளியை) தியானிக்கின்றோம்'' என்பது காயத்திரியின் பொருளாய்ப் போந்தது.



ஷட்கோணத்தில் ஆடல்வல்லான்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பஞ்ச சபைத் தலங்கள்

(சுருக்க வரலாறு)

1. திருவாலங்காடு

தொண்டை நாட்டுத் தலம். சென்னையிலிருந்து திருவள்ளூர் வழியாக அரக்கோணம் செல்லும் பேருந்துப் பாதையில் இத்தலம் உள்ளது. சென்னையிலிருந்த திருவள்ளூர் அரக்கோணம் வழியாகச் சோளிங்கர் செல்லும் பேருந்தும் இவ்வூர் வழியாகச் செல்கிறது. காஞ்சியிலிருந்தும், அரக்கோணத்திலிருந்தும், திருவள்ளூரிலிருந்தும் இவ்வூர்க்குப் பேருந்துகள் உள்ளன.

ஆலங்காடு. இத்தலம் 'வடாரண்யம்' எனப் பெயர் பெற்றது. காரைக்காலம்மையார் தலையால் நடந்து வந்து நடராசப் பெருமானின் திருவடிக் கீழிருந்து சிவானந்த இன்பத்தை அனுபவித்துக் கொண்டிருக்கும் தலம். இறைவன் காளியுடன் நடனமாடிய தலம். இத்திருக்கோயில் திருத்தணி அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி கோயிலுடன் இணைந்தது, நடராசப் பெருமானின் ஊர்த்துவத் தாண்டவத் தலமாகவும், பஞ்ச சபைகளுள் இரத்தின சபையாகவும் சிறப்புற்றிலங்குவது இத்திருக்கோயில். கார்க்கோடகன், சுநந்த முனிவர் முதலியோர் வழிபட்ட தலம். சிறிய ஊர். பேருந்து நிறுத்தத்தில் இறங்கிச் செல்லும்போது கோயிலுக்குரிய அழகிய சிற்ப வேலைப்பாடு அமைந்த பழமையான தேரைக் காணலாம். இத்திருக்கோயில் திருப்பணி நிறைவாகி 1983ல் குடமுழுக்கு செய்யப்பட்டு புதுப்பொலிவுடன் திகழ்கிறது.

இறைவன்	–	வடாரண்யேசுவரர், தேவர்சிங்கப் பெருமான், ஆலங்காட்டு அப்பர்.
இறைவி	–	பிரம்மராளகாம்பாள், வண்டார்குழலி.
தலமரம்	–	பலா, ஆலமரம் என்றும் சொல்லப்படுகிறது.
தீர்த்தம்	–	சென்றாடு தீர்த்தம். (''செங்கச்ச உன்மத்ய மோக்ஷ புஷ்கரணி'') முக்தி தீர்த்தம். மிகப் பெரிய குளம். கரையில் நடனமாடித் தோற்ற காளியின் உருவம் உள்ளது.

மூவர் பாடல் பெற்ற தலம்

கோயிலின் முன்னால் பதினாறுகால் மண்டபம் உள்ளது. முகப்பு வாயிலில் வரசித்தி விநாயகரும், ஊர்த்துவ தாண்டவமும், ரிஷபாரூடரும், முருகனும், காளியும் உள்ள சுதை சிற்பங்கள் அழகுற அமைக்கப்பட்டுள்ளன. உள் நுழைந்தால் நான்கு கால் மண்டபம் உள்ளது. உள்கோபுரம் ஐந்து நிலைகளுடன் கிழக்கே நோக்கியுள்ளது. உள்ளே நுழைந்தவுடன் வலப்பால் சித்த வைத்தியசாலை நடைபெறும் நூற்றுக்கால் மண்டபம் உள்ளது. இம் மருத்துவச் சாலை தேவஸ்தானச் சார்பில் நடைபெறுகிறது. திங்கள், வியாழன் காலை வேளைகளில் மக்கள் வந்து மருத்துவம் பெற்றுச் செல்கின்றனர். இம்மண்டபத்தில்தான் நடராசர் அபிஷேகம் நடைபெறுகிறது.

கோபுர வாயிலில் வல்லபை விநாயகர் துதிக்கையுள்ளிட்ட பதினோரு கரங்களுடன் காட்சி தருகின்றார். மறுபுறம் வள்ளி தெய்வயானையுடனாகிய ஆறுமுகர் சந்நிதி.

வெளிப்பிரகாரத்தில் சந்நிதி ஏதுமில்லை சந்தன மரங்கள் உள்ளன. கோபுர வாயிலில் நுழைந்ததும் செப்புக் கவசமிட்ட கொடிமரம் உள்ளது. வலப்பால் துவஜாரோகண (கொடியேற்ற) மண்டபம், இடப்பால் சுக்கிரவார மண்டபம்.

அடுத்துள்ள உள் கோபுரம் மூன்று நிலைகளையுடையது. கோபுரத்தில் ஊர்த்துவ தாண்டவம், பிரம்மா, நந்தி மத்தளம் வாசித்தல், காரைக்காலம்மையார் பாடுதல், ரிஷபாரூடர், கஜசம்ஹாரமூர்த்தி, காரைக்காலம்மையார் வரலாறு முதலியவை சுதையில் சிற்பங்களாக அமைக்கப்பட்டுள்ளன.

ஆதாரம்:– திருமுறைத் தலங்கள் – பு.மா.ஜெயசெந்தில்நாதன், இந்து சமய மன்றம், காஞ்சிபுரம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வலப்பால் திருக்கல்யாண மண்டபம் உள்ளது. உள்ளே நுழைந்தால் எதிரில் மதிற் சுவர் மீது பஞ்ச சபைகள் உரிய நடராச தாண்டவத்துடன் வண்ணத்தில் சுதை சிற்பங்களாக அமைக்கப்பட்டுள்ளன.

கோபுரத்தில் உள் பக்கத்தில் தசாவதாரச் சிற்பங்கள், கண்ணப்பர் கண்ணை அப்புவது, அரிவாட்டாய நாயனார் மனைவியுடன் செல்வது முதலிய சிற்பங்கள் உள்ளன.

பிராகாரத்தில் வலமாக வரும்போது ஆருத்ரா அபிஷேக மண்டபம் இரத்தினசபை வாயில் உள்ளது. சபைக்கு எதிரில் நிலைக்கண்ணாடி வைக்கப்பட்டுள்ளது. வலமாக வரும்போது ஆலங்காடு என்னும் பெயருக்கு ஏற்ப மூலையில் பெரிய ஆலமரம் உள்ளது.

அடுத்து அம்பாள் சந்நிதி உள்ளது. தெற்கு நோக்கியது, நின்ற திருக்கோலம். இக்கருவறையில் கோஷ்ட மூர்த்தங்கள் இல்லை. சிற்பக் கலையழகு வாய்ந்த கல்தூண்கள் காண அழகுடையவை. உற்சவத் திருமேனிகள் பாதுகாக்கப் பட்டுள்ளன. அவற்றுள்:– பிட்சாடனர், விநாயகர், காரைக்காலம்மையார் (தாளமிட்டுப் பாடும் அமைப்பில்) சுநந்த முனிவர், கார்க்கோடகன், நால்வர் முதலியவை சிறப்பானவை.

இரத்தின சபை அழகு வாய்ந்தது. நடராசப் பெருமானின் ஊர்த்துவ தாண்டவச் சிறப்பு தரிசிக்கத் தக்கது அண்டமுற நிமிர்ந்தாடும் பெருமான் 'ரத்ன சபாபதி' என்று அழைக்கப்படுகிறார். சிவகாமி, காரைக்காலம்மையார் திருமேனிகள் உள்ளன. பக்கத்தில் பெரிய ஸ்படிக லிங்கமும், சிறிய மரகத லிங்கமும் (சபையில்) உள்ளன. இவற்றிற்கு நான்கு கால அபிஷேகமுண்டு. திருமுறைப் பேழை உள்ளது. இரத்தினச் சபையை வலம் வரலாம். வலம் வரும்போது சாளரத்தில் சண்டேசுவரரின் உருவம் உள்ளது சுந்தரர் பதிகம் கல்வெட்டில் திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடத்துக் கட்டளை யாகப் பொறிக்கப்பட்டுள்ளது இரத்தினச் சபையின் விமானம் செப்புத் தகடு வேயப்பட்டு ஐந்து கலசங்களுடன் விளங்குகிறது.

மூலவரைத் தரிசிக்க உள் பிராகாரத்தில் செல்லும்போது சூரியன், அதிகார நந்தி, விஜயராகவப் பெருமாள் தேவியருடன், சண்முகர், அகோர வீரபத்திரர், சப்த கன்னியர், நால்வர், காரைக்காலம்மையார், கார்க்கோடகன், முஞ்சிகேச முனிவர், பதஞ்சலி, அநந்தர், சண்டேச அனுக்ரஹர், எண்வகை விநாயகர் உருவங்கள் முதலிய சந்நிதிகள் உள்ளன.

கருவறை நல்ல கற்கட்டமைப்புடையது. கோஷ்ட மூர்த்தமாக விநாயகர், தட்சிணாமூர்த்தி, இலிங்கோற்பவர், பிரமன், துர்க்கை ஆகியோர் உள். துர்க்கைக்குப் பக்கத்தில் துர்க்கா பரமேஸ்வரர் உருவம் ஒன்று கோஷ்ட மூர்த்தமாக வுள்ளது. சண்டேசுவரர் சந்நிதி உள்ளது. பஞ்சபூதத்தல லிங்கங்கள் உள்ளன. சஹஸ்ரலிங்கம் தரிசிக்கத் தக்கது. சுப்பிரமணியர், கஜலட்சமி, பாபஹரீஸ்வர லிங்கம் முதலிய சந்நிதிகளும் உள. உபதேச தக்ஷிணாமூர்த்தி உருவம் மிக்க அழகுடையது. பைரவர் வாகனமின்றிக் காட்சி தருகின்றார். ஆலயத்துள் அறுபத்து மூவர் சந்நிதிகள் இல்லை.

மூலவர் சந்நிதி வாயிலில் விநாயகரும் முருகனும் உள்ளனர். நேரே மூலவர் காட்சி தருகிறார். வலப்பால் ஆனந்தத் தாண்டவ நடராசர் திருமேனி – சப்பரத்திலுள்ளது. தெற்கு நோக்கியது. எதிரில் வாயிலுள்ளது நடராசாவுக்குப் பக்கத்தில் மூலையில் சுரங்கப்பாதை உள்ளது. மூடியுள்ள கல்லைத் தூக்க இரு வளையங்களையும் மேலே வைத்துள்ளார்கள். சுரங்கம் எங்குச் செல்கிறதோ? தெரியவில்லை. துவார பாலகர்களைத் தாண்டிச் சென்றால் மூலவர் தரிசனம். சுயம்புமூர்த்தி.

மூலவருக்கு மேல் உருத்திராக்க விதானம். திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடத்துப் பணி – உள்ளது.

மூலவரின் பக்கத்தில் போகசக்தி அம்மன் உற்சவத் திருமேனி உள்ளது. சிவலிங்கத் திருமேனியின் மீது கோடுகள் அமைந்துள்ளன. பங்குனி உத்திரத்தில் பெருவிழா நடைபெறுகிறது. ஊருக்குப் பக்கத்தில் காளிகோயில் உள்ளது. இத்தலத்திற்குத் தொடர்புடைய 'பழையனூர்' கிராமம், பக்கத்தில் 2 கி.மீ. தொலைவில் உள்ளது. இறைவன், இறைவி சந்நிதிகள் உள்ளன. இங்குள்ள இறைவன் – அம்மையப்பர்; இறைவி – ஆனந்தவல்லி. மேற்கு நோக்கிய சந்நிதி.

பழையனூருக்குச் செல்லும் வழியில், திருவாலங்காட்டிலிருந்து ஒரு கி.மீ. ல் பழையனூர் வேளாளர்கள் எழுபது பேர் தீப்பாய்ந்து செட்டிப்பிள்ளைக்குத் தந்த வாக்குறுதியைக் காத்த 'தீப்பாய்ந்த மண்டபம்' உள்ளது. திருவாலங்காட்டுப் பேருந்து நிலையத்திலிருந்து பார்த்தாலே மண்டபம் தெரிகின்றது. இங்குள்ள தொட்டியின் உட்புறத்தில் இவர்களுடைய உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. யாகம் வளர்த்து இறங்குவது போன்ற சிற்பம் உள்ளது. இதன் எதிரில் கிழக்கு நோக்கிய சந்நிதியாகச் 'சாட்சி பூதேஸ்வரர்' காட்சியளிக்கின்றார். எதிரில் தீப்பாய்ந்த இடம் உள்ளது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஊர்த்துவ தாண்டவர்
(ஸ்ரீவடாரண்யேஸ்வரர் திருக்கோயில், திருவாலங்காடு)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



ஸ்ரீகாளி தாண்டவம்
(ஸ்ரீவடாரண்யேஸ்வரர் திருக்கோயில், திருவாலங்காடு)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தீப்பாய்ந்த வேளாளர்களின் மரபில் பழையனூரில் தற்போதுள்ளவர்கள் நாடொறும்திருவாலங்காடு வந்து இறைவனைத் தரிசித்துச் செல்லும் மரபை நெடுங்காலமாகக் கடைப்பிடித்து வருகின்றார்கள். சதாகாலமும் சேவைக்கு வந்து செல்லும் இவர்கள், இம்மரபைப் பிற்காலத்தோரும் அறியும் வகையில் ''கூழாண்டார் கோத்திரம் சதாசேர்வை'' என்று கல்லில் பொறித்து, அக்கல்லை, கோயிலின் முன் வாயிலில், உயர்ந்த படியைத் தாண்டியவுடன் முதற்படியாக வைத்துள்ளனர்.

இம்மரபினரின் கோத்திரமே 'கூழாண்டார் கோத்திரம்'. அதாவது தாங்கள் கூழ் உணவை உண்டு, விளைந்த நெல்லை இறைவனுக்குச் சமர்ப்பித்தவர்கள் என்பது பொருளாம். சிவப்பற்றினை உணர்த்தும் இச்செய்தி நெஞ்சை நெகிழ வைக்கின்றது.

கல்வெட்டில் நடராசப் பெருமானின் பெயர் 'அரங்கில் அண்டமுற நிமிர்ந்தருளிய நாயனார்' என்று குறிக்கப் பட்டுள்ளது.

கேடும் பிறவியும் ஆக்கினாரும் கேடிலா
வீடுமாநெறி விளம்பினார்எம் விகிர்தனார்
காடுஞ்சுடலையும் கைக்கொண்டு அல்லில்கணப்பேயோ[டு]
ஆடும் பழையனூர் ஆலங்காட்டுஎம் அடிகளே. —சம்பந்தர்.

ஒன்றா உலகனைத்தும் ஆனார்தாமே
ஊழிதோறூழி உயர்ந்தார் தாமே
நின்றாகி எங்கு[ம்] நிமிர்ந்தார் தாமே
நீர் வளிதீ ஆகாசம் ஆனார்தாமே
கொன்றாடுங் கூற்றை உதைத்தார் தாமே
கோலப் பழனையுடையார் தாமே
சென்றாடு தீர்த்தங்கள் ஆனார்தாமே
திருஆலங்காடுறையும் செல்வர் தாமே. —அப்பர்.

முத்தாமுத்திதரவல்ல முகிழ்மென்முலையாள் உமைபங்கா
சித்தாசித்தித் திறங்காட்டுஞ் சிவனே தேவர்சிங்கமே
பத்தாபத்தர் பலர்போற்றும் பரமா பழையனூர்மேய
அத்தா ஆலங்காடா உன் அடியார்க்கு அடியேன் ஆவேனே. —சுந்தரர்.

2. திரு ஆலவாய் (மதுரை)

பாண்டிய நாட்டுத் தலம். புகை வண்டி நிலையம். தமிழகத்தின் தலைசிறந்த பெரிய நகரங்களுள் ஒன்று. தென் பாண்டி நாட்டின் தலைநகர். தமிழ் வளர்த்த தலம். வைகைக் கரையில் அமைந்த வளமிக்க பதி. மாவட்டத் தலைநகரம். சென்னையிலிருந்தும் தமிழகத்தின் பிற பகுதிகளிலிருந்தும் புகை வண்டிகள் மூலமாகவும் பேருந்துகள் மூலமாகவும் வருவதற்கு நிரம்ப வசதிகள் உள்ளன.

புலவர்களுடன் இறைவனும் ஒருவராயிருந்து தமிழ்ச் சங்கத்தில் தமிழாராய்ந்த தனிச்சிறப்புடைய தலம். இறைவன் அறுபத்து நான்கு திருவிளையாடல்களை – அற்புதச் செயல்களை நிகழ்த்திய அரிய தலம். மங்கையர்க்கரசியாரும், அமைச்சர் குலச்சிறையாரும் சைவம் காத்து, மன்னனான கூன் பாண்டியனின் வெப்பு நோயை ஞானசம்பந்தர் மூலம் தீர்த்து வைத்து, அவனை நின்றசீர் நெடுமாறனாக மாற்றிய அற்புதத் தலம். கபிலர், பரணர், நக்கீரர் முதலிய தமிழ்ப் புலவர்கள் வாழ்ந்த பதி. தமிழ்ச் சங்கம் அமைந்த தலம். மூர்த்தி நாயனார் வாழ்ந்த ஊர். இவ்விறைவனே பாண பத்திரர் மூலம் சேரமான் பெருமாளுக்குத் திருமுகப் பாசுரம் தந்தருளியவர். திருஞானசம்பந்தர், அனல், புனல் வாதங்களை நிகழ்த்தி, சைவத்தைத் தழைக்கச் செய்த தண்பதி. பல்வேறு இலக்கியங்களும் பாராட்டுகின்ற பதி. யோக நிலையில் இத்தலம் 'துவாத சாந்த தலம்' எனப்படும். பஞ்ச சபைகளுள் இத்தலம் வெள்ளிச்சபை எனப் போற்றப்படுகிறது. வரகுண பாண்டியனுக்காக

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இறைவன் கால் மாறி ஆடிய அற்புதம் இத்தலத்தில்தான் நிகழ்ந்தது. சங்ககாலப் புகழ்பெற்ற தங்கப்பதி. இறைவியே தடாதகையாக அரசாண்ட தலம். முப்பெருஞ் சக்தி பீடங்களுள் ஒன்று. திருஞானசம்பந்தர் இத்தலத்தில் வந்து தங்கியிருந்து சைவம் பெருக்கிய திருமடாலயம் – மிகப் பழமையான ஆதீனம் (மதுரை திருஞானசம்பந்தர் ஆதீனம்) தெற்காவணி மூலவீதியில் உள்ளது.

குமரகுருபர சுவாமிகள் இத்தலத்துப் பெருமாட்டியின் (மீனாட்சியம்மை) மீது பிள்ளைத்தமிழ், குறம், கலம்பகம் முதலிய பலவகைப் பிரபந்தங்களைப் பாடியுள்ளார். மாநகராட்சி தகுதியில் உள்ள மக்கட் செறிவு கொண்ட மிகப் பெரிய நகரம். இங்குக் காமராசர் பல்கலைக்கழகம் உள்ளது. ஊரின் பெயர் – மதுரை. கோயிலின் பெயர் – ஆலவாய். சிவராசதானி, பூலோக கயிலாயம், கடம்பவனம், கூடல், நான்மாடக்கூடல் என்பன இத்தலத்திற்குரிய வேறு பெயர்கள்.

நாகம் உமிழ்ந்த விஷத்தை இறைவன் அமுதத்தால் மாற்றி மதுரமாக்கினமையால் இத்தலம் மதுரை என்று பெயர் பெற்றதென்பர்.

இறைவன்	–	சோமசுந்தரக் கடவுள், சொக்கலிங்க நாதர், சொக்கேசர், ஆலவாய் அண்ணல், சொக்கநாதர்.
இறைவி	–	மீனாட்சி, அங்கயற்கண்ணி.
தலமரம்	–	கடம்பு.
தீர்த்தம்	–	பொற்றாமரைக்குளம். கோயிலுள் உள்ளது.

ஞானசம்பந்தர், அப்பர் பாடல் பெற்ற பழம்பதி. இத்தலத்தின் சிறப்புக்கள் திருவாசகத்துள் புகழ்ந்தோதப்பட்டு உள்ளன.

இக்கோயில் மிகவும் பரப்புடையது. பெரியது. விண்ணிழி விமானம். சிற்பக்கலைக்கு எடுத்துக்காட்டாகத் திகழும் அழகிய கோபுரங்களை நாற்புறமும் பெற்றுள்ள நகரம். தெற்குக் கோபுரமே பிறவற்றினும் உயர்ந்தது. கோயில் நகரின் நடுவே அமைந்துள்ளது. கோயிலை மையமாகக் கொண்டே இத்தலம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. கோயிலுள் அன்னை மீனாட்சிக்கே முதலில் வழிபாடு நடைபெறுகிறதாதலின் அன்பர்கள் பலரும் கீழ வீதியிலுள்ள அம்பாள் சந்நிதி வாயில் வழியாகவே ஆலயத்துள் செல்வர்.

மிகப் பெரிய கோபுரம். ஏராளமான சிற்பங்கள். சிற்பக்கலை அழகுடையவை. இக்கோபுர வாயில் வழியாக உள்ளே நுழைந்தால் முதலில் உள்ளது அஷ்டசக்தி மண்டபம். வாயிலில் மீனாட்சி கல்யாண சிற்பம் சுதை வடிவில் அமைக்கப் பட்டுள்ளது. பெயருக்கேற்ப எட்டு பெருந்தூண்கள் எட்டு சக்திகளின் வடிவங்களை அழகுறப் பெற்றுள்ளன. திருவிளை யாடற் புராணக் காட்சிகள் பல இதில் இடம் பெற்றுள்ளன. அடுத்துள்ள நாயக்கர் மண்டபத்தில் வைக்கப்பட்டுள்ள எண்ணற்ற விளக்குகளைக் கொண்ட பித்தளையாலான திருவாசி கண்களைக் கவருகின்றது. அடுத்துள்ள வழியே சென்றால் பொற்றாமரைக் குளத்தை அடையலாம். மிகப் பெரிய குளம். இந்திரன் தன் வழிபாட்டிற்காகப் பொன்மலர் பறித்த குளம் இதுவென்பர். திருக்குறள் நூலை இக்குளத்தில் சங்கப் பலகையில் வைத்துத்தான் சங்கப் புலவர் ஏற்றுக் கொண்டதாக ஒரு வரலாறும் உண்டு. அழகிய படிக்கட்டுக்கள் உள்ள இக்குளத்தின் வடக்குக் கரையில் உள்ள தூண்களில் சங்கப் புலவர்களின் உருவங்கள் உள்ளன. தென்கரை மண்டபத்தில் திருக்குறட்பாக்கள் முழுவதும் சலவைக் கற்களில் பொறித்துப் பதிக்கப்பட்டுள்ளன.

பொற்றாமரைக் குளத்தின் மேற்கே ஊஞ்சல் மண்டபம் உள்ளது. அழகான கண்ணாடி அறை. வெள்ளிதோறும் மாலையில் சுவாமி அம்பாள் பொன்னூசல் நடைபெறுகிறது. அடுத்துள்ள கிளிக்கூட்டு மண்டபம் அழகான சிற்பக் கலையழகுடையவை. பாண்டவர்கள், வாலி, சுக்ரீவன், திரௌபதி, புருஷாமிருகம் முதலிய சிற்பங்கள் இங்குள்ளன. மண்டபத்தின் மேற்பகுதியில் தெய்வங்களின் பல்வேறு தோற்றங்களும், மீனாட்சி கல்யாணமும் வண்ணச் சித்திரங்களாக எழுதப்பட்டுள்ளன. அம்பாள் சந்நிதி வெளிப் பிரகாரத்தில் திருமலைநாயக்கர், இரு துணைவியாருடன் உள்ள சுதையாலான சிற்பங்கள் உள்ளன. அருணகிரிநாதரின் திருப்புகழ்ப் பாடல்கள் குமரன் சந்நிதியில் செதுக்கப்பட்டுள்ளன. இப்பிரகாரத்தில் உள்ள ஆறுகால் பீடத்தில்தான் குமரகுருபர சுவாமிகள் பாடியருளிய மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் அரங்கேற்றம் செய்யப்பட்டதென்பர்.

மகாமண்டபத்தில் ஐராவத விநாயகர் சந்நிதியும் முருகப் பெருமான் சந்நிதியும் உள்ளன. அம்பாள் – மீனாட்சி கையில் கிளியுடன் செண்டு ஏந்தி நின்ற திருக்கோலத்தில் நமக்கு அருட்காட்சி வழங்கும் அற்புதம் – அநுபவித்தோர்க்கே

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



தலவிருட்சம் – ஆலமரம்.

(ஸ்ரீவடாரண்யேஸ்வரர் திருக்கோயில், திருவாலங்காடு.)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



குற்றாலநாதர் திருக்கோயில், திருக்குற்றாலம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அருமை தெரியும். திங்கள்தோறும் அம்பிகைக்குத் தங்கக் கவசம், வைரக்கிரீடம் சாத்தப்படுகிறது. அம்பாளை வணங்கிய பின், கிளிக்கூட்டு மண்டபம் வழியாக வந்து கோபுரவாயிலை கடந்து சுவாமி சந்நிதிக்குப் போகும் நமக்கு எதிரில் முக்குறுணி விநாயகர் தரிசனம் கிடைக்கின்றது. எட்டு அடி உயரமுள்ள மிகப்பெரிய திருமேனி. பிராகாரத்தில் சங்கப் புலவர், சம்பந்தர் சந்நிதிகள் உள்ளன.

சுவாமி சந்நிதிக்கு எதிரில் உள்ள கம்பத்தடி மண்டபம் சிற்பக் கலையின் கருவூலம் எனலாம். மண்டபத்தின் நடுவில் தங்கக் கொடி மரமும் நந்தியும் பலிபீடமும் உள்ளன. சுற்றிலும் உள்ள எட்டுத் தூண்களிலும் அற்புதமான சிலைகள் உள்ளன. சங்கரநாராயணர், சோமாஸ்கந்தர், அர்த்தநாரீஸ்வரர் போன்ற தோற்றங்களும் திருமாலின் தசாவதாரக் காட்சிகளும் அற்புதமானவை. இவற்றுக்கு முத்தாய்ப்பு அமைந்துள்ளது மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருமணச் சிற்பமாகும். இச்சிற்ப அழகை எங்ஙனம் வருணிப்பது? அவ்வளவு தத்ரூபமான அமைப்பு. கம்பத்தடி மண்டபத்திற்குப் பக்கத்தில் இரு பெரிய தூண்களில் வடிக்கப்பட்டுள்ள (1) அக்கினி வீரபத்திரர் (2) அகோர வீரபத்திரர் சிலாரூபங்களும்; அடுத்துள்ள தூண்களிலுள்ள (1) ஊர்த்துவ தாண்டவர் (2) காளியின் சிலாரூபங்களும் கொள்ளையழகுடையன.

சுவாமி சந்நிதிக்குச் செல்லும் வாயிலில் இரு பெரிய துவாரபாலகர்கள் கம்பீரமாகக் காட்சி தருகின்றனர். உள் நுழைந்ததும் பிராகாரத்தில் திருவிளையாடற்புராணம் அரங்கேற்றம் செய்யப்பட்ட ஆறுகால் பீடம் உள்ளது. அறுபத்து மூவர் தரிசனம், கலைமகள் சந்நிதி உள்ளது. காசி விசுவநாதர், பிட்சாடனர், சித்தர், துர்க்கைச் சந்நிதிகளும் உள்ளன. கடம்ப மரம் – தலமரம், வெள்ளிக் கவசமிட்டுப் பாதுகாக்கப்பட்டு கனகசபையும், யாகசாலையும், சாட்சி சொல்லிய வன்னி கிணறும் அடுத்தடுத்து உள்ளன.

வெள்ளியம்பலம், கால்மாறி ஆடிய அம்பலக்கூத்தனின் அற்புத நடன அழகு. தரிசித்து உள்ளே சென்று சோமசுந்தரப் பெருமானைக் காண்கின்றோம். சுவாமியின் கருவறை – இந்திர விமானம், விண்ணிழி விமானம் என்றழைக்கப்படுகிறது. அஷ்டதிக்கு யானைகளும் முப்பத்திரண்டு சிங்கங்களும், அறுபத்து நான்கு பூதகணங்களும் தாங்கும் அமைப்பில் இவ்விமானம் அமைக்கப்பட்டுள்ளது.

மூலவர் – சிவலிங்கத் திருமேனி. ஆலவாய் அழகன் – அழகு மிளிரக் காட்சி தருகிறார். சிறிய திருமேனி. இம்மூர்த்தி தொடர்பான ஒரு செய்தி:–

கி.பி.1330–ல் முகமதிய படையெடுப்பு நடைபெற்றபோது மன்னனாக இருந்த பராக்கிரம பாண்டியன் காளையார் கோயில் சென்றுவிட்டார். கோயில் ஸ்தானிகர் சிவலிங்கத்தை மூடி, கிளிக்கூடு வைத்து மணலைப் பரப்பி, கருவறை வாயிலையும் கல்லினால் அடைத்து, முன்புள்ள அர்த்தமண்டபத்தில் வேறொரு சிவலிங்கத்தை வைத்து விட்டனர். படையெடுத்து வந்த முகமதிய மன்னன் முன்னால் இருந்த சிவலிங்கத்தை நிஜமானதென்றெண்ணித் தாக்கிச் சிதைத்தான். படையெடுப்பு முடிந்து 48 ஆண்டுகள் கழித்து கம்பண்ணர் படையெடுத்து வந்து முகமதியரை வென்று, கோயில் வந்து ஸ்தானிகருடன் தோண்டிப் பார்க்க, சுவாமி மேற்பூசிய சந்தனம் மணம் மாறாமல், பக்கத்தில் ஏற்றிவைத்த 2 வெள்ளி விளக்குகளும் சுடர் எரிந்து கொண்டிருந்தனவாம்; அன்றிருந்து சுவாமிக்கு இன்றுவரை முறையாகப் பூஜைகள் நடைபெறு கின்றனவாம்.

இக்கோயிலில் உள்ள ஆயிரக்கால் மண்டபம் மிகவும் பெரியது. மண்டப வாயிலின் மேற்புறத்தில் தமிழ் ஆண்டுகள் அறுபதையும் குறிக்கும் சக்கரம் வரையப்பட்டுள்ளது. இங்குள்ள பிட்சாடனர் குறவன் குறத்தி முதலிய சிற்ப அழகு மிக்க சிலைகள் காணத் தெவிட்டாத கலைச்சுவையுடையன. மண்டபத்தில் எங்கு நின்று நோக்கினாலும் இத் தூண்கள் அனைத்தும் ஓர் ஒழுங்கான வரிசையில் இருப்பதைக் கண்டு வியக்கிறோம். இங்கு நிருத்த கணபதி, சரஸ்வதி, அர்ச்சுனன், ரதி, மோகினி, மன்மதன், கலிபுருடன் முதலிய பல சிற்பங்களும் உள்ளன. இங்குள்ள நடராசரின் சிலை அற்புத மானது. இம்மண்டபத்தில் ''கலைக்காட்சியகம்'' நடத்தப்பட்டு வருகிறது. தெய்விகத் திருமேனிகளையும், தொல்பொருள் களையும் இங்குக் கண்டு மகிழலாம்.

ஆயிரக்கால் மண்டபத்திற்குப் பக்கத்தில் மங்கையர்க்கரசி பெயரால் புதிய மண்டபமொன்று அமைக்கப்பட் டுள்ளது. இதில் கூன்பாண்டியன், மங்கையர்க்கரசி, ஞானசம்பந்தர், குலச்சிறையார் ஆகியோருடைய உருவங்கள் உள்ளன. சிவலிங்கத் திருமேனி ஒன்றும் நடுவிலுள்ளது. இதனையொட்டி மருதுபாண்டியர் கட்டிய சேர்வைக்காரர் மண்டபமும், அழகிய மரவிதானங் கொண்ட கல்யாண மண்டபமும் உள்ளன.

சுவாமி, அம்பாள் புறப்பாடு நிகழும் வீதி 'ஆடி வீதி' எனப்படுகிறது. வடக்கு ஆடி வீதியில் பெரிய கோபுரத்தை யடுத்து ஐந்து இசைத்தூண்கள் உள்ளன. ஒவ்வொரு தூணிலும் 22 சிறு தூண்கள். இவைகளைத் தட்டினால் விதவிதமான இனிய ஓசை எழுகின்றது. இசைத்தூண்களின் அமைப்பும் அழகும் மிகவும் அதிசயமானவை.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கிழக்குக் கோபுரத்திற்கு எதிரில் வசந்த மண்டபம் உள்ளது. இதைப் புதுமண்டபம் என்கின்றனர். திருமலை நாயக்கர் கட்டியது. இதில் தடாதகைப் பிராட்டி, மீனாட்சி திருமணம், திருமலை நாயக்கர், கல்யானை கரும்பு தின்னுவது, இராவணன் கயிலையைத் தூக்குவது, முதலிய சிற்பங்கள் உள்ளன. புதுமண்டபத்தின் எதிரே ராயகோபுரம் முடிவு பெற்றா நிலையில் உள்ளது.

மதுரை செல்வோர் அனைவரும் திருமலை நாயக்கர் மகாலைக் கண்டு மகிழவேண்டும். திருமலை நாயக்கர் தம் தலைநகரை திருச்சியிலிருந்து மதுரைக்கு மாற்றியபோது இதைக் கட்டியதாகத் தெரிகிறது. செங்கல், வெண்சுதைச் சாந்து ஆகியவற்றைக் கொண்டே (மரம் முதலியவற்றின் தொடர்பின்றிக்) கட்டப்பட்டுள்ள இம்மகால் அழகு வேலைப் பாடுடையது.

மதுரையில் உள்ள மாரியம்மன் தெப்பக்குளம் – (வண்டியூர் தெப்பக்குளம்) மிகவும் பெரிய அழகான குளமாகும். இங்குத் தைப்பூசத்தன்று நடைபெறும் தெப்பத்திருவிழா மிகச் சிறப்புடையதாகும். திருமாலிருஞ்சோலை (அழகர் கோயில்), பழமுதிர்சோலை, திருப்பரங்குன்றம் முதலியவை அண்மையிலுள்ள தரிசிக்கத்தக்க தலங்களாகும்.

சித்திரைப் பௌர்ணமியன்று அழகர் வைகையாற்றில் வந்து இறங்கும் திருவிழா இத்தலத்துச் சிறப்பானதொரு திருவிழாவாகும். 3600 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழைமையுடைய பதி, இம்மதுரையாகும். ஞானசம்பந்தர் காலத்தில் சுவாமி கோயில் மட்டுமே இருந்ததாகத் தெரிகின்றது.

மதுரையை ஆண்ட சடையவர்மன் குலசேகரபாண்டியன் 12ஆம் நூற்றாண்டில் மீனாட்சியம்மைக்குத் தனிக் கோயில் எடுப்பித்தான் என்று தெரிகிறது. 13ஆம் நூற்றாண்டில் மாறவர்மன் சுந்தரபாண்டியன் கீழ்க்கோபுரத்தைக் கட்டி சுற்று மதில்களை அமைத்தான். 14ஆம் நூற்றாண்டில் பராக்கிரம பாண்டியனால் மேற்குக் கோபுரம் கட்டப்பட்டது. 16ஆம் நூற்றாண்டில் செவ்வந்திச் செட்டியார் தெற்குக் கோபுரத்தைக் கட்டினார். ஆயிரக்கால் மண்டபத்தை அரியநாத முதலியார் அமைத்தார். 17ஆம் நூற்றாண்டில் மதுரையை ஆண்ட திருமலை நாயக்கர் காலத்தில் புதுமண்டபம், அஷ்டசக்தி மண்டபம் கிளிக்கூட்டு மண்டபம் முதலியன கட்டப்பட்டன. ஆடி வீதிகளில் உள்ள சுற்று மண்டபங்கள் இராணி மங்கம்மாள் அவர்களால் கட்டப்பட்டன. இவ்வாதீனத்திற்குச் சொந்தமான கிளைமடம் மதுரை தானகோனேரியப்ப முதலித் தெருவில் உள்ளது.

மங்கையர்க்கரசி வளவர்கோன் பாவைவரி வளைக்கைம்மடமானி
பங்கயச் செல்வி பாண்டிமாதேவி பணிசெய்து நாடொறும் பரவப்
பொங்கழலுருவன் பூதநாயகன் நால்வேதமும் பொருள்களும் அருளி
அங்கயற் கண்ணி தன்னொடும் அமர்ந்த ஆலவாயாவதும் இதுவே. —சம்பந்தர்

நலந்திகழ் வாயின் நூலாற் சருகிலைப் பந்தர் செய்த
சிலந்தியை அரசதாள அருளினாய் என்று திண்ணம்
கலந்துடன் வந்து நின்தாள் கருதி நான் காண்பதாக
அலந்தனன் ஆலவாயில் அப்பனே அருள் செயாயே. —அப்பர்

3. திருக்குற்றாலம்

பாண்டிய நாட்டுத் தலம். நெல்லை மாவட்டத்தில் தென்காசிக்கும் செங்கோட்டைக்கும் இடையில் குற்றாலம் உள்ளது. தென்காசியிலிருந்தும் செங்கோட்டையிலிருந்தும் அடிக்கடி பேருந்துகள் உள்ளன. மதுரை திருநெல்வேலி யிலிருந்தும் பேருந்துகள் குற்றாலம் வழியாகச் செங்கோட்டை செல்கின்றன. (1) சென்னை – கொல்லம் மெயிலில் (2) சென்னை – செங்கோட்டை பாசஞ்சரில் சென்று செங்கோட்டையில் இறங்கி அங்கிருந்தும் பேருந்தில் வரலாம். இத்தலத் திற்குரிய வேறு பெயர்கள் – திரிகூடாசலம், திரிகூடமலை என்பன.

இறைவன்	–	குற்றாலநாதர், குறும்பலாஈசர், திரிகூடாசலபதி, திரிகூடாசலேஸ்வரர்.
இறைவி	–	குழல்வாய்மொழியம்மை, வேணுவாக்குவாஹினி.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தலமரம்	–	குறும்பலா.
தீர்த்தம்	–	வட அருவி.
		சம்பந்தர் பாடல் பெற்ற பதி.

இறைவனுக்குரிய பஞ்ச சபைகளில் இத்தலம் சித்திரசபை. பட்டினத்தார், மாணிக்கவாசகர், அருணகிரிநாதர் ஆகியோர் பாடல்களில் இத்தலம் சிறப்பிக்கப்படுகின்றது. அப்பர், தாம் பாடிய திருவங்கமாலையில் இத்தலத்தைக் குறித்துள்ளார். மேலகரம் திரிகூடராசப்பக் கவிராயர் அவர்கள் இத்தலத்திற்குத், திருக்குற்றாலத் தலபுராணம் மற்றும் குறவஞ்சி முதலிய பிரபந்தங்களும் பாடியுள்ளார். இதன் அருகில் 'இலஞ்சி', 'பண்பொழி' முதலிய முருகன் தலங்களும் தென்காசி சிவத்தலமும் உள்ளன.

திருமால் வடிவில் இருந்த மூர்த்தியை அகத்தியர் சிவலிங்கத் திருமேனியாக மாற்றிய தலம். கோயில், மலைகள் சூழ்ந்த இயற்கையழகு வாய்ந்த சூழலில் மலையடிவாரத்தில் உள்ளது. இங்குள்ள மலைத்தொடர் 'திரிகூடமலை' என்றழைக்கப்படுகிறது. கோயிலுக்குப் பக்கத்தில் பேரருவி வீழ்கின்றது. கோயிலுக்குப் பக்கத்தில் செல்லும் பாதை வழியே சென்றால் ஐந்தருவியைக் காணலாம். மலை உயரத்தில் சண்பக அருவி, செண்பகாதேவி கோயில், தேனருவி, புலியருவி முதலிய பல அருவிகள் உள்ளன. ஜூன் மாத இறுதி, ஜூலை, ஆகஸ்டு மாதங்களில் அருவிகளில் நீர் பொழிய, அவை களில் நீராடி நலம்பெற ஆயிரக்கணக்கில் மக்கள் இத்தலத்திற்கு வருவர். குற்றால அருவியிற் குளித்தல் உடலுக்குச் சுகத்தைத் தரும். குளிப்பதற்குரிய வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன.

கோயில் சங்கு வடிவில் அமைந்துள்ளது. சிறிய ராஜகோபுரம் முக்கலசங்களுடன் முகப்பில் காட்சி தருகிறது. களிற்று படிகளேறி 2000 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழமையுடைய குற்றாலநாதர் கோயிலுள் நுழைந்தால் மிக விசாலமான மண்டபம் உள்ளது. தூண்களின் வரிசையமைப்பு அழகுடையது. இக்கல் மண்டபம் வசந்த மண்டபம் எனப்படுகிறது. மண்டபத்தின் நடுவில் உயர்ந்த யாகசாலை மேடையும் ஒரு மூலையில் தீர்த்தவாரி மண்டபமும் உள்ளன. நுழைவு வாயிலில் இருபுறமும் உள்ள அம்பல விநாயகரையும், ஆறுமுக சுவாமியையும் வணங்கி நுழைந்தால் நேரே மூலவர் சந்நிதி தெரிகின்றது. அலங்கார மண்டபம் நுழைந்து வலமாகச் சுற்றித் துவார பாலகர்களைக் கடந்து, மிகக் குறுகலான பிராகாரத்தை வலம் வரும்போது, அதிகார நந்தி, சூரியன், கும்பமுனி மற்றும் அருட்சத்தியர்கள், எதிரில் கோஷ்ட மூர்த்தமாகவுள்ள தட்சிணாமூர்த்தி, விநாயகர் முதலிய சந்நிதிகளைத் தரிசிக்கலாம். பஞ்ச பூத லிங்கங்களும், சுப்பிரமணியர், சனி பகவான் சந்நிதிகளும் உள. கருவறைச் சுவரின் வெளிப்புறத்தில் கல்வெட்டுக்கள் உள்ளன. கோயில் கற்றளி, பிராகாரம் பிற்காலத்தில் அமைக்கப்பட்டதெனத் தெரிகிறது. மகா மண்டபத்தின் வலப்பால் நடராசர் திருமேனி உள்ளது. மூலவர் சிவலிங்கத் திருமேனி. மிகச் சிறிய லிங்கம். அகத்தியரால் சிவத்திருமேனியாக மாற்றப்பட்டதாதலின் திருமேனியின் மீது அகத்தியரின் ஐந்து விரல்களும் பதிந்துள்ளன. திருமால் திரு மேனியைச் சிவத்திருமேனியாகவும், ஸ்ரீதேவியைக் குழல்வாய்மொழியம்மையாகவும், பூதேவியைப் பராசக்தியாகவும் மாற்றியதாக ஐதீகம்.

சுவாமி கிழக்கு நோக்கியுள்ளார். சுவாமிக்கு வலப்பால் அம்பாள் குழல்வாய்மொழியம்மை சந்நிதி உள்ளது. இதுவும் கிழக்கு நோக்கிய சந்நிதியே. படிக்கட்டுகள் ஏறி உள்நுழைய வேண்டும். நுழைவு வாயிலில் உள்ள வாயில் தூணில் உள்ள கல்வெட்டுக் குறிப்பொன்று அம்பாள் கோவில் திருப்பணி கொல்லமாண்டு 1108ல் (ஸ்ரீமுக ஆண்டு ஆனி 19) பூர்த்தி செய்யப்பட்டுத் தேவகோட்டை காசி விசுவநாத செட்டியார் அவர்களால் மகா கும்பாபிஷேகம் செய்யப்பட்ட செய்தியைத் தெரிவிக்கின்றது.

விசாலமான சந்நிதி. வலப்பால் பள்ளியறை. அம்பாள் நின்ற கோலம். உள் பிராகாரத்தை வலம் வரும்போது கைலாசநாதர், துர்க்கை சந்நிதிகள் உள்ளன. அம்பிகையை வழிபட்டு வெளிவந்து வலமாக வரும்போது தலமரமான குறும்பலா (புதிய தலமரம்) உள்ளது. அதற்கு எதிரில் பிராகாரத்தில் ஆதிகுறும்பலா மரத்தின் கட்டைகள் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன. அதையடுத்து அறுபத்து மூவர் மூலத்திருமேனிகள், நன்னகரப் பெருமாள் சந்நிதி; பாபவிநாசர் உலகாம்பாள்; நெல்லையப்பர் காந்திமதி; நாறும்புநாதர்; சங்கரலிங்க நாதர்; பால் வண்ணநாதர் ஒப்பனை அம்பாள்; சொக்கலிங்கர்; ஐயனார் மதுநாதேசுவரர், அறம் வளர்த்த நாயகி சந்நிதிகள் உள்ளன. எதிர்ப்புறத்தில் அருவியைப் பார்க்கு மிடத்தைக் குறித்துள்ளனர். அங்கிருந்து பார்த்தால் பேரருவி விழுவது தெரிகிறது. சோழலிங்கம், அகத்தியர், வாசுகி, மகாலிங்கம், சஹஸ்ர லிங்கம் முதலியவைகளும் உள்ளன.

வலமாக வரும்போது அகத்தியரால் பிரதிஷ்டை செய்யப்பட்டதாகச் சொல்லப்படும் 'பராசக்தி பீடம்' உள்ளது. இங்கு மகாமேரு உள்ளது. பைரவர் சந்நிதி உள்ளது. குற்றாலமலை 5134 அடி உயரம். வட அருவி 288 அடி உயரத்தி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

லிருந்து வீழ்கிறது. மகுடாகம முறைப்படிப் பூசைகள் நடைபெறும் இத்திருக்கோயிலில் தை மகம் தெப்போற்சவம், மார்கழித் திருவாதிரை, சித்திரை விஷு உற்சவங்கள் சிறப்புடையன.

சித்திரசபை, கோயிலுக்குப் பக்கத்தில் தனிக் கோயிலாக உள்ளது. எதிரில் தெப்பக்குளம் – நடுவில் மணி மண்டபம். சபா மண்டபத்தில் நுழைந்தால் குறவஞ்சி சிலைகளின் அருமையான காட்சி. கீழே கல்பீடம், மேலே முன் மண்டபம் மட்டும் மரத்தால் ஆனது. விமானம் செப்புத்தகடு. எட்டு கலசங்கள் உச்சியில்.

இச்சித்திர சபையின் வெளிச்சுற்றில் ஊர்த்துவ தாண்டவம், பத்திரகாளி, முருகன், சூரபத்மன், சிங்கமுகன், தாரகன், மன்மதன், ரதி ஆகிய உருவங்கள் வண்ணத்தில் எழுதப்பட்டுள்ளன. முன் மண்டபத்தின் உட்புறத்தில் மேற்புறத்தில் உள்ள கொடுங்கைகளின் அழகு கண்டின்புறத்தக்கது.

சபையின் உட்சுற்றில் துர்க்கையின் பல்வேறு வடிவங்கள், வீரபத்திரர், கஜேந்திர மோட்சம், திருவிளையாடற் புராண வரலாறுகள், அறுபத்து மூவர் உருவங்கள், பத்மநாபரின் கிடந்த கோலம், இரணிய சம்ஹாரம், பைரவரின் பல்வேறு உருவங்கள், சனீ பகவான் ஆகியவை வண்ணத்தில் எழுதப்பட்டுள்ளன. இவை காலப்போக்கால் அழிந்தாற்போல் உள்ளன.

சபையின் உள்ளே – சித்திர சபையாதலின் – நடராசர் உருவம் சிவகாமியுடன், தேவர்கள் தொழுமாறு அழகாக வண்ணத்தில் (சித்திரமாக) வரையப்பட்டுள்ளது. பார்வதி கல்யாணச் சிற்பமும் அழகு. மரத் தூபியில் கண்ணாடி வைக்கப்பட்டுள்ளது. குற்றாலநாதர் அகத்தியருக்குக் காட்சி தந்தது, சுப்பிரமணியரின், விநாயகரின் பல்வகைச் சிற்பங்கள் முதலான ஏராளமான சிற்பங்கள் இச்சபையில் உள்ளன. இச்சபை கிழக்கு நோக்கியுள்ளது. உள்ளே இருக்கும் நடராச சிற்பம் தெற்கு நோக்கியுள்ளது. ஆலயப் பெருவிழாவில் எட்டாந் திருவிழாவில் நடராசர், ஆலயத்திலிருந்து இச்சபைக்கு எழுந்தருளி, (பச்சை சார்த்தி) ஆஸ்தானம் திரும்புவது வழக்கம்.

சுற்றுலாத் தலமாதலின் இங்கு ஏராளமான சத்திரங்களும், உணவுக் கடைகளும் உள்ளன. இக்கோயிலில் 89 கல்வெட்டுக்கள் படியெடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து நீட்டலளவைகோல் – சுந்தர பாண்டியன் கோல் என்ற பெயரால் வழங்கியமை தெரிகிறது. மற்றும் மக்கள் சபை, ஐந்நூற்று மூவர் சபை முதலிய குழுக்களைப் பற்றியும் தெரிய வருகின்றது. மேலும் இவ்வூரின் பேருந்து நிலையத்தின் எதிர்புறம் திருவாவடுதுறை ஆதீனக் கிளைமடமும் ஷெ திருக் கோயிலுக்கு புஷ்பப்பணியும் செய்விக்கின்றது.

வம்பார் குன்றம் நீடுயர் சாரர் வளர் வேங்கைக்
கொம்பார் சோலைக் கோலவண்டியாழ் செய்குற்றாலம்
அம்பா னெய்யோடாடலமர்ந்தான் அலர்கொன்றை
நம்பான்மேய நன்னகர் போலும் நமரங்காள்

திருந்தமதி சூடித் தெண்ணீர் சடைக்கரந்து தேவிபாகம்
பொருந்திப் பொருந்தாத வேடத்தாற் காடுறைதல் புரிந்த செல்வர்
இருந்த இடம் வினவில் ஏலங் கமழ் சோலையின வண்டியாழ் செய்
குருந்த மண நாறுங் குன்றிடஞ் சூழ் தண்சாரற்குறும் பலாவே — சம்பந்தர்

உற்றார் ஆருளரே – உயிர்
கொண்டுபோம் பொழுது
குற்றாலத்துறை கூத்தனல்லால் நமக்கு
உற்றார் ஆருளரோ?

– [அப்பர் – திருவங்கமாலை]

உற்றாரையான் வேண்டேன் ஊர்வேண்டேன் பேர்வேண்டேன்
கற்றாரையான் வேண்டேன் கற்பனவும் இனி அமையும்
குற்றாலத்தமர்ந்துறையும் கூத்தா உன் குரைகழற்கே
கற்றாவின் மனம் போலக் கசிந்துருக வேண்டுவனே.

– திருவாசகம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆடல்வல்லான்
(சித்திர சபையில் அமைந்துள்ள வண்ண ஓவியம்)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கோயிலுள் பொற்றாமரைக் குளம் உள்ளது. நாற்புறமும் நல்ல படிகள். நடுவில் நீராழி மண்டபம் உள்ளது. இக் கோயிலில் ஊஞ்சல் மண்டபம், திருக்கல்யாண மண்டபம், ஆயிரங்கால் மண்டபம், வசந்த மண்டபம், சங்கிலி மண்டபம், சோமவார மண்டபம், நவக்கிரக மண்டபம், மகா மண்டபம் போன்ற மண்டபங்கள் சிற்ப வேலைப்பாடுகளுடன் விளங்கு கின்றன.

மூன்று தெப்பக்குளங்கள்இக்கோயிலில் உள்ளன. சுவாமிக்கு நான்கு ராஜகோபுரங்களும் அம்பாளுக்கு ஒரு கோபுரமும் உள்ளன. சுவாமி, அம்பாள் ஆகிய இரு சந்நிதிகளும் கிழக்கு நோக்கியவை. நந்தி பெரியது – சுதையாலானது சுவாமி சந்நிதிக்குச் செல்லும் வழியில் இசைத் தூண்கள் உள்ளன. துவார பாலகர்களைக் கடந்து மகா கணபதி, முருகன் சந்நிதிகளைத் தரிசித்து உட்புகுந்தால் சுவாமி சந்நிதி மிகவும் விசாலமானது.

நெல்லையப்பர் – சிவலிங்கத் திருமேனி, மேற்புறம் வெட்டப்பட்ட அடையாளம் உள்ளது. இப்போதுள்ளது 21-ஆவது ஆவுடையார் என்றும் 20 ஆவுடையார்கள் பூமியின் கீழ் உள்ளன என்றும் சொல்லப்படுகிறது. இம்மூர்த்தி 'மிருத்யுஞ்சயமூர்த்தி' ஆவார்.

அன்வர்கான் என்ற இஸ்லாமியரின் மனைவிக்கு உண்டான வயிற்றுவலி நீங்காமையால் அவன் வழிபட்டுப் பேறு பெற்ற சிவலிங்கம் 'அனவரத லிங்கம்' என்று வழங்கப்படுகிறது. இதற்கு அவர் தந்துள்ள நகை முதலியவைகளும் உள்ளன.

நாள்தோறும் ஆறுகால பூஜைகள் முறையாக நடைபெறுகின்றன. இவற்றுள் உச்சிக்காலத்தில் மட்டும் காந்திமதி அம்பிகையே – இறைவியே நேரில் வந்து சுவாமியை வழிபட்டுச் செல்வதாக ஐதீகம். அகத்தியருக்கு இறைவன் கல்யாண காட்சியைக் காட்டி அருளிய தலமிதுவே. சுவாமிக்குப் பக்கத்தில் கோவிந்தராஜர் சந்நிதி உள்ளது.

இங்குள்ள உற்சவத் திருமேனி கையில் தாரை வார்த்துத் தரும் பாத்திரத்துடன் இருப்பதைக் காணலாம். திருமால் பார்வதியைத் தாரை வார்த்துத் தர இறைவன் மணந்து கொள்ளும் நிகழ்ச்சியை இது நினைவூட்டுகிறது. திருமாலின் மார்பில் சிவலிங்க அடையாளம் உள்ளது.

இன்றும் ஐப்பசியில் நடைபெறும் திருக்கல்யாண விழாவில் ஒருநாள் வைணவர் வந்து தாரை வார்த்துத் தர, சிவாசாரியார் பெற்றுக் கொள்ளும் ஐதீகம் நடைபெறுகின்றது. சுவாமி பிராகாரத்தில் கன்னி விநாயகர், நந்தி தேவர், பாண்டியராஜா சந்நிதிகள் உள்ளன. பிட்சாடனர், ரிஷிபத்தினியர் உருவங்கள் கல்லில் வண்ணந் தீட்டப்பட்டுள்ளன.

அகத்தியர் பிரதிஷ்டை செய்த சால்வடீஸ்வரர், சிவலிங்கத் திருமேனி சற்றுத் தாழ்வில் உள்ளது. இத்தலம், பஞ்ச சபைகளுள் தாமிரச் சபையாகும். இச்சபை தனியே உள்ளது. இங்குள்ள நடராசர் 'தாமிர சபாபதி' என்றழைக்கப்படுகிறார். சபைக்கு மேலே தாமிரத் தகடு வேயப்பட்டுள்ளது. பின்னால் உள்ள நடராஜர் – சிலாரூபம் – சந்தன சபாபதி என்றழைக்கப் படுகிறார்.

உள்ளே ருத்திர விஷ்ணு, பேதங்கள், ரிஷிகளின் உருவங்கள் உள்ளன. கீழே மரத்தாலும் மேலே தாமிரத்தாலும் ஆக்கப்பட்டு ஏழு அடுக்குகளைக் கொண்டு திகழும் இச்சபை சித்திர வேலைப்பாடுகளுடன் அருமையாகத் திகழ்கின்றது. சபைக்குப் பக்கத்தில் தலமரம் உள்ளது.

இக்கோயிலில் இரு துர்க்கைச் சந்நிதிகள் உள்ளன. மகிஷாசுரமர்த்தினி சந்நிதி தெற்கு நோக்கியும், பண்டாசுர மர்த்தினி சந்நிதி வடக்கு பார்த்தும் உள்ளன.

ஆறுமுகர் சந்நிதி இங்கு மிகவும் விசேஷமானது. வள்ளி தெய்வ யானையுடன் ஆறு முகங்களும் சுற்றிலும் திகழ, ஒவ்வொரு முகத்திற்கும் நேரே இரண்டிரண்டு திருக்கரங்கள் வீதம் சுற்றிலும் திகழ, அவ்வவற்றிற்குரிய ஆயுதங்களும் கொண்டு மயில் மீது அமர்ந்துள்ள பாங்கு அற்புதமானது. அமாவாசைப் பரதேசி என்பவர் ஒருவர் 120 வயது வரை வாழ்ந்திருந்து இச்சந்நிதியை விசேஷித்துக் காவடி எடுத்து இறுதியில் ஓர் அமாவாசையில் சித்தியடைந்தார். இவராலேயே இச்சந்நிதி மிக்க சிறப்பு பெற்றது. பாம்பன் சுவாமிகள் பதிகம் சுவரில் பதிக்கப்பெற்றுள்ளது.

இக்கோயிலில் உள்ள 'சுரதேவர்' – 'ஜ்வரதேவர்' சந்நிதி மிகவும் சிறப்புடையது. மூன்று தலைகள், மூன்று கால்கள் மூன்று கைகளுடன் இம்மூர்த்தி, கையில் தண்டம், மணி, சூலத்துடன் காட்சி தருகின்றார். எவருக்கேனும் சுரம் இருப்பின்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸ்ரீநெல்லையப்பர் திருக்கோயில்
(திருநெல்வேலி)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



ஊர்த்துவ தாண்டவர் (தூணில் காணும் சிற்பம்)
(ஸ்ரீபட்டீஸ்வரர் திருக்கோயில், பேரூர், கோயம்புத்தூர்.)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இம்மூர்த்திக்கு மிளகு அரைத்துச் சார்த்தி வெந்நீரால் அபிஷேகம் செய்தால் தீரும் என்னும் செய்தி மக்கள் வழக்கில் சொல்லப்படுகிறது.

பொல்லாப் பிள்ளையார் சந்நிதி இங்கு மிகவும் விசேஷமானது. புத்திரப் பேறில்லாதவர்கள் நாற்பத்தொரு நாள்கள் விரதமிருந்து, கருப்பமுற்று, குழந்தையைப் பெற்றெடுத்தபின் இச்சந்நிதிக்கு எடுத்து வந்து இங்கு சன்னல் போல் உள்ள பகுதியில் உட்புறமாகத் தந்து வெளிப்புறமாக வாங்கும் பழக்கம் உள்ளது. இதனால் இவருக்குப் 'பிள்ளைத் துண்ட விநாயகர்' என்றும் பெயர்.

அறுபத்து மூவர் மூலத் திருமேனிகளைத் தொடர்ந்து மேலே கயிலாய பர்வதக் காட்சி உள்ளது. இங்குப் பெருமான் இராவணனை அழுத்திய – நொடித்த பாவனை நன்கு சித்தரிக்கப்பட்டுள்ளது.

நடராசர் சந்நிதி மற்றொன்று தனியே உள்ளது. இப்பெருமான் அக்கினி சபாபதி என்றழைக்கப்படுகிறார். சிவகாமி உடன் நிற்க, காரைக்காலம்மையார் கையில் தாளமிட்டுப் பாட, சிரித்த முகத்துடன் ஆடும், அம்பலக் கூத்தன் அழகைக் காணக் கண் ஆயிரம் வேண்டும்.

காந்திமதி அம்பாள் சந்நிதி தனியே உள்ளது. கிழக்கு நோக்கியது. நின்ற திருக்கோலம், வியாழன் தோறும் அம்பாளுக்குத் தங்கப் பாவாடை சார்த்தப்படுகிறது. அம்பாள் சந்நிதி முன்புள்ள மண்டபத்தில் உள்ள இரு தூண்கள் இசைத் தூண்களாக விளங்குகின்றன.

இத்தலத்திற்குத் தலபுராணம் உள்ளது. 'காந்திமதியம்மை பிள்ளைத் தமிழ்' சிறப்புடைய நூலாகும்.

ஆனியில் 41 நாள்களுக்குப் பெருவிழா, மண்டலாபிஷேகத்துடன் சேர்த்து நடத்தப்படுகின்றது.

ஆடிப்பூர உற்சவம் அம்பாளுக்குப் பத்து நாள்களுக்குச் சிறப்பாக நடைபெறுகின்றது. ஐப்பசியில் கல்யாண உற்சவம் 10 நாள்களுக்கு நடைபெறுகின்றது.

கார்த்திகை மாதத்தில் காலை 4 மணிக்கெல்லாம் கோயில் தரிசனத்திற்காகத் திறந்திருக்கும். நான்கு சோம வாரங்களும் சிறப்பானவை.

மார்கழித் திருவாதிரை உற்சவம், தைப்பூச உற்சவம், பங்குனி உத்திரத்தில் செங்கோல் உற்சவம் முதலியவை ஒவ்வொன்றும் பத்து நாள்களுக்குச் சிறப்பாக நடைபெறுகின்றன. மாசி மகத்தில் அப்பர் தெப்பம் சிறப்பு. வைகாசி விசாகத்தில் சங்காபிஷேகம் விசேஷனமானது.

இவ்வூரின் மேலரத வீதியில் திருவாவடுதுறை ஆதீனக் கிளைமடமாகிய ஈசான்ய மடம் விளங்குகின்றது. ஷெ ஆதீனத் திருக்கோயில்களின் நிர்வாகமும் சைவசித்தாந்த வகுப்பும் நடைபெறுகின்றன.

மருந்தவை மந்திர மறுமை நன்னெறியவை மற்றுமெல்லாம்
அருந்துயர் கெடுமவர் நாமமே சிந்தைசெய் நன்னெஞ்சமே
பொருந்து தண் புறவினிற் கொன்றை பொன் சொரிதரத்துன்றுபைம்பூ
செருந்தி செம்பொன்மலர் திருநெல்வேலியுறை செல்வர்தாமே.

வெடிதரு தலையினர் வேனல் வெள்ளேற்றினர் விரிசடையர்
பொடியணி மார்பினர் புலியதளாடையர் பொங்கரவர்
வடிவுடை மங்கையோர் பங்கினர் மாதரைமையல் செய்வார்
செடிபடு பொழிலணி திருநெல்வேலியுறை செல்வர்தாமே. – *சம்பந்தர்*

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

5. சிதம்பரம் (தில்லை)

சோழநாட்டு வடகரைத் தலம். 'கோயில்' என்று பொதுவாக வழங்கினாலே சைவத்தில் சிதம்பரம் நடராசப் பெருமான் கோயிலைத்தான் குறிக்கும். ஊர்ப்பெயர் தில்லை. கோயிலின் பெயர் சிதம்பரம். இன்று ஊர்ப் பெயர் வழக்கில் மறைந்து, கோயிலின் பெயரே ஊர்ப் பெயராக வழங்கி வருகிறது.

நடராசப் பெருமான் ஆலயத்தால் பிரசித்தி பெற்ற இத்தலத்திற்கு தமிழகத்தின் பல இடங்களிலிருந்தும் - சென்னை, கடலூர், விழுப்புரம், திருச்சி, சேலம், தஞ்சை முதலிய பல ஊர்களிலிருந்தும் பேருந்து வசதிகள் உள்ளன. சென்னை – திருச்சி மெயின் லைன் இருப்புப் பாதையில் உள்ள புகைவண்டி நிலையம். தில்லை மரங்கள் அடர்ந்த காடாக இருந்தமையால் தில்லைவனம் என்று பெயர் பெற்றது. (இம்மரங்கள் தற்போது சிதம்பரத்தில் இல்லை. ஆனால் இதற்கு அண்மையிலுள்ள பிச்சாவரத்திற்குப் பக்கத்தில் உப்பங்கழியின் கரைகளில் காணப்படுகின்றன.) வியாக்ரபாதர் (புலிக்கால் முனிவர்) மிகுதியான பற்றினால் பூசித்த ஊராதலின் பெரும்பற்றப்புலியூர் என்றும் சித் + அம்பரம் (அறிவு - வெட்டவெளி) – சிதம்பரம் ஞானாகாசம் என்றும்; பூலோக கயிலாயம், புண்டரீகபுரம், சிதாகாசத்தலம் எனவும் இதற்குப் பல பெயர்களுண்டு. தில்லைவாழ் அந்தணர்கள் இருந்து பெருமானைப் பூசித்துக் காத்துவரும் அற்புதத்தலம். ஜைமினி, 'வேத பாதஸ்தவம்' அருளிச் செய்ததும்; சேந்தனார் அருள் பெற்றதும்; மாணிக்கவாசகர் திருவாசகமும் திருக்கோவையாரும் பாடி முத்தி பெற்றதும்; வியாக்ரபாதர், பதஞ்சலி, உபமன்யு, வியாசர், சுகர், திருநீலகண்டர், திருநாளைப்போவார், கூற்றுவ நாயனார், கணம்புல்ல நாயனார், சந்தானாசாரியர்கள் முத்தி பெற்ற சிறப்புடையதுமாகிய பழம்பதி. தில்லைவாழ் அந்தணர் களாகிய தீக்ஷிதர்களின் கட்டுப்பாட்டில் உள்ள கோயில். இக்கோயிலுள் 'திருமூலட்டானம்' என்னும் தனிக்கோயில் ஒன்றுள்ளது. அர்த்தசாம வழிபாடு முடிந்தபின் எல்லாக் கோயில்களிலும் உள்ள சிவகலைகள் அனைத்தும் இந்த மூலத்தான இலிங்கத்தில் ஒடுங்குவதால் இம்மூர்த்திக்கு இப்பெயர் உண்டாயிற்று. எனவே தில்லைத் தலத்தில் வசிப்போர், வந்து கண்டு செல்வோர், அர்த்தசாம வழிபாட்டைக் காண வேண்டியது அவசியமாகும்.

இறைவன் – விராட்புருஷனின் வடிவத்தில் திருவாரூர் மூலாதாரமாகவும், திருவானைக்கா 'உந்தி'யாகவும், திருவண்ணாமலை 'மணிபூரக'மாகவும், திருக்காளத்தி 'கழுத்தாகவும்', காசி 'புருவமத்தி'யாகவும், சிதம்பரம் 'இருதய ஸ்தான'மாகவும் சொல்லப்படும். இக்கோயிலில் உள்ள பேரம்பலத்திற்கு 'மேரு' என்றும் பெயருண்டு. ''பெருமதில் சிறந்த செம்பொன் மாளிகை மின் பிறங்கு பேரம்பலம் மேரு வருமுறை வலங்கொண்டிறைஞ்சிய பின்னர் வணங்கிய மகிழ் வொடும் சென்றார்'' என்பது சேக்கிழார் வாக்கு. (தடு.புரா.) வடக்கிலொரு 'மேரு' இருப்பதால் இதைத் 'தட்சிணமேரு' என்று கூறுவர்.

'மேருவிடங்கன்' என்பது 'சேந்தனார்' தொடர். பஞ்சபூதத் தலங்களுள் இஃது ஆகாயத்தலம். பஞ்ச சபைகளுள் இது கனகசபை, பொற்சபை, சிற்சபை. பதஞ்சலி வியாக்ரபாதர்களுக்குப் பெருமான் கனகசபையில் நடனக் காட்சியை அருளிய தலம். தரிசிக்க முத்தி தரும் பதி. மூவர் பாடல் பெற்ற தலம்.

இராசராசன் வேண்டுதலின் பேரில் நம்பியாண்டார் நம்பிகளால் பொல்லாப் பிள்ளையாரின் துணை கொண்டு திருமுறைப் பதிகங்கள் கண்டெடுக்கப்பட்ட தெய்வீகத்தலம். பெரியபுராணமென்னும் திருத்தொண்டர் புராணம் சேக்கிழார் பெருமானால் அரங்கேற்றம் செய்யப்பட்ட அருமையான தலம். வைணவத்திலும் 'திருச்சித்திரகூடம்' என்று புகழ்ந்தோதப்படும் திருப்பதி. நாற்புறமும் கோபுரங்கள். தெற்குக் கோபுர வாயிலே பிரதான வாயிலாகும்.

இறைவன்	–	நடராசர், அம்பலக்கூத்தர், திருச்சிற்றம்பலமுடையார், அம்பலவாணர், (கூத்தபிரான், கனகசபாபதி, சபாநாயகர்)
இறைவி	–	சிவகாமி, சிவகாமசுந்தரி.
தலமரம்	–	தில்லை, ஆல் (திருமூலட்டானப் பிரகாரத்தில் 'ஆல்' கருங்கல் வடிவில் செய்து வைக்கப்பட்டுள்ளது.)
தீர்த்தம்	–	சிவகங்கை, பரமானந்தக் கூபம், புலிமேடு, வியாக்ரபாத தீர்த்தம், ஆனந்த தீர்த்தம், பிரமதீர்த்தம், நாகசேரி தீர்த்தம், சிவப்ரியை, திருப்பாற்கடல் முதலியன. (சிவகங்கையே பிரதான தீர்த்தம். இளமையாக்கினார் கோயிலின் எதிரில் வியாக்ரபாத தீர்த்தம் உள்ளது.)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



தில்லை நடராசப் பெருமான் ஐந்தொழில் ஆற்றும் வடிவம்
(பஞ்ச கிருத்தியம்)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



தில்லை நடராஜப் பெருமான் முத்தி பஞ்சாக்கர வடிவம்

சி வ ய ந ம

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இக்கோயிலுள் 1. சிற்றம்பலம், 2. பொன்னம்பலம், 3. பேரம்பலம், 4. நிருத்தசபை, 5. இராசசபை என ஐந்து பெருமன்றங்கள் உள்ளன.

1. சிற்றம்பலம் – நடராசப் பெருமான் திருநடம்புரிந்தருளும் இடம்

இவ்வம்பலம் 'தப்ரசபா' எனப்படும். முதலாம் ஆதித்த சோழனின் மகன் முதற் பராந்தக சோழன் இச்சிற்றம்பலத்திற்குப் பொன் வேய்ந்தான் என்று திருவாலங்காட்டுச் செப்பேடுகளும் 'லெய்டன்' நகரப் பெரிய செப்பேடுகளும் கூறுகின்றன. இவனுக்கு முன் இரண்யவர்மன், பொன் வேய்ந்தான் என்று கோயிற்புராணம் தெரிவிக்கின்றது. இச்சிற்றம்பலம் உள்ள இடம் உயர்ந்த அமைப்புடையது. பக்கவாயில் வழியாக மேலே செல்லவேண்டும். இச் சிற்றம்பலத்தின் உள்ளே செல்வதற்கு ஐந்து படிகள் – பஞ்சாக்கரப்படிகள் உள்ளன. இப்படிகளின் இருபுறமும் யானை உருவங்கள் உள்ளன. பதினான்கு சாஸ்திரங்களில் ஒன்றை இப்படியில் வைத்தபோது, இப்படிகளிலுள்ள யானைகளில் ஒன்று தன் தும்பிக் கையால் அந்நூலையெடுத்து நடராசப் பெருமான் திருவடியில் வைத்தமையால் அந்நூலுக்குத் 'திருக்களிற்றுப்படியார்' என்ற பெயர் ஏற்பட்டது. நடராசப் பெருமானின் வலப்பால் ரஹஸ்யம் – அருள் ஞானப்பெருவெளி உள்ளது.

2. பொன்னம்பலம் (கனகசபை)

நடராசப் பெருமான் அபிஷேகம் கொண்டருளும் இடம். சிற்றம்பலத்திற்கு முன்னால் உள்ள பகுதி. இங்கு ஸ்படிக லிங்கத்திற்கு நாடொறும் ஆறுகால பூஜையும், இரண்டாங் காலத்தில் ரத்னசபாபதிக்கு அபிஷேக வழிபாடுகளும் நடைபெறுகின்றன. இப்பொன்னம்பலத்தின் முகட்டை, முதலாம் ஆதித்த சோழன், கொங்கு நாட்டிலிருந்து கொண்டு வந்த உயர்ந்த மாற்றுடைய பொன்னால் வேய்ந்தான் என்று தெய்வச் சேக்கிழார் 'இடங்கழி' நாயனார் வரலாற்றில் கூறுகின்றார். தில்லைக் கோயில் கல்வெட்டுப்பாடலொன்று சிறந்த சிவபக்தனும், படைத்தலைவனுமான மணவில் கூத்தனான காளிங்கராயன் ஏன்பவன் இப் பொன்னம்பலத்தைப் பொன்னால் வேய்ந்தான் என்று கூறுகின்றது.

3. பேரம்பலம்

இது தேவசபை எனப்படும். மணவில் கூத்தனான காளிங்கராயன் விக்கிரமசோழன் காலத்தில் இச்சபையைச் செம்பினால் வேய்ந்தான் என்று தில்லைக்கோயில் பாடலால் அறியலாம். பின்பு, இப்பேரம்பலத்தைப் பொன் வேய்ந்தவன் மூன்றாங் குலோத்துங்கசோழன் ஆவான். இங்குத்தான் பஞ்சமூர்த்திகளும் எழுந்தருளியுள்ளனர். இம்மணவில் கூத்தன் செம்பொற்றாளமும் செய்து தந்தான்; நூற்றுக்கால் மண்டபம் அமைத்தான்; நந்தவனம் அமைத்தான்; ஓராயிரம் கறவைப் பசுக்களைக் கோயிலுக்கு வழங்கினான்; திருப்பதிகங்கள் ஓத மண்டபம் அமைத்தான்; திருமுறைகளைச் செப்பேடு செய்வித்தான் என்னும் பல அரிய செய்திகளும் கல்வெட்டுக்களால் தெரியவருகின்றன.

4. நிருத்தசபை

நடராசப் பெருமானின் கொடி மரத்துக்கு (துவஜ ஸ்தம்பத்திற்கு)த் தென்பால் உள்ளது. ஊர்த்துவ தாண்டவம் செய்தருளிய இடம் இதுவே. அப்பெருமானின் திருமேனி இங்கே உள்ளது.

5. இராச சபை

இஃது ஆயிரக்கால் மண்டபமாகும். சோழ மன்னர் மரபில் முடிசூடப் பெறுபவர்களுக்கு, முன்னர்ச் சொல்லிய பஞ்சாக்கரப்படியில் அபிஷேகமும் இம்மண்டபத்தில் முடிசூட்டு விழாவும் நடைபெற்று வந்தன. இம்முடிசூட்டினைத் தில்லைவாழ் அந்தணர்களே செய்து வந்தனர்.

இத்தலத்தில் நிகழ்ந்த அரிய செயல்களுள் சில...

1. மாணிக்கவாசகர் புத்தரை வாதில் வென்று ஊமைப் பெண்ணை பேசுவித்தது.
2. திருஞானசம்பந்தர் தில்லைவாழ் அந்தணர்களைச் சிவகணங்களாகக் கண்டது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

3. உமாபதி சிவம் 'கொடிக்கவி' பாடிக் கொடியேற வைத்தது.

4. திருப்பல்லாண்டு பாடிச் சேந்தனார் தடைப்பட்ட தேரை ஓடச் செய்தது.

5. திருமுறைகளை வெளிப்படுத்தியது.

6. சேக்கிழார் பெருமானுக்குத் திருத்தொண்டர் புராணம் பாட அடியெடுத்துத் தந்தது முதலிய பலவாகும்.

தேவாரப் பதிகங்கள், திருவாசகம், திருக்கோவையார், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, கோயில் நான்மணி மாலை, கோயில் திருப்பண்ணியர் விருத்தம், சிதம்பர மும்மணிக்கோவை, சிதம்பரச் செய்யுட் கோவை, சிவகாமி இரட்டை மணிமாலை, தில்லைக் கலம்பகம், கோயிற் புராணம் முதலிய நூல்களாலும், ஏனைய அளவற்ற நூல்களில் ஆங்காங்கு வரும் பகுதிகளாலும் இத்தலத்தின் பெருமையை அறியலாம்.

நான்கு கோபுர வாயில்களின் இருமருங்கிலும் ஆடற்கலைச் சிற்பங்கள் உள்ளன. பல வண்ண ஓவியங்கள் அமைந்த ஆயிரங்கால் மண்டபமும் விளங்குகிறது.

அடுத்துள்ளது சிவகங்கைத் தீர்த்தம். கரையில் தென் கீழ்புறச் சுவர்களில் திருவாசகப் பாடல்கள் முழுவதும் கல்வெட்டுக்களாகப் பதிக்கப்பட்டுள்ளன. குளத்தின் மேற்கரையில் 'பாண்டி நாயகம்' என்கிற முருகன் சந்நிதி உள்ளது. சிவகாம சுந்தரி சந்நிதி தனிக் கோயிலாகப் பொலிவுற உள்ளது. நிருத்த சபையில் வலக்காலை மேலே தூக்கியுள்ள ஊர்த்துவ தாண்டவர், சரப மூர்த்தி முதலிய சந்நிதிகள் உள்ளன. வெளிப்பக்கத்தில் பிட்சாடனர் சுதை சிற்பம் உள்ளது.

நடராச சந்நிதிக்கான தங்கத்தகடு வேய்ந்த கொடிமரம் உள்ளது. பிராகாரத்தில் அம்பாள் சந்நிதி, கம்பத்திளையனார், தாயுமானவர், விநாயகர், சுப்பிரமணியர், படிகளேறிச் சென்றால் திருமுறை காட்டிய விநாயகர் (பொல்லாப் பிள்ளையார்) சுதை சிற்பம், முதலியனவுள்ளன. தொடர்ந்து பிராகாரத்தில் விசுவநாதர் லிங்கம். வைத்தியநாதர், தையல்நாயகி சந்நிதி, கால பைரவர், சண்டேசுவரர், விநாயகர், அறுபத்து மூவர் திருமேனிகள் உள்ளன. திருமூலட்டானம் சுவாமி சந்நிதி. பக்கத்தில் 'உமைய பார்வதி' தங்கக் கவசத்தில் பேரழகோடு காட்சி தருகின்றாள். அர்த்தசாம அழகர் புறப்பாட்டுச் சபையுள்ளது. உற்சவ மூர்த்திகள் வைத்துள்ள மண்டபம், சனிபகவான் சந்நிதி உள்ளது.

சிற்றம்பலத்து நட்டமாடும் சிவக்கொழுந்தைத் தரிசிக்கும்போது மனம் இலயிப்புற்றால் 'என்று வந்தாய்' எனும் குறிப்பு நமக்கும் கிடைக்கும். அம்பலக்கூத்தர் இருப்பது சிற்றம்பலம் – சிற்சபை. முன்மண்டபம் பேரம்பலம். நடராசப் பெருமானுக்குப் பக்கத்தில் 'சிதம்பர ரகசியம்' உள்ளது. இந்த ரகசியம் உள்ள இடத்தில் வில்வ தளங்கள் தொங்கவிடப் பட்டுள்ளன. ஞானவான்கள் தரிசிக்கும்போது பெருமானின் திவ்ய ரூபம் தரிசிக்கப்பெறும்.

வைணவத் தலம்

நடராசப் பெருமானை நின்று தரிசிக்கும் போது இடப்பால் கோவிந்தராசப் பெருமாள் சந்நிதியுள்ளது. 'திருச்சித்ர கூடம்' எனப்படும் இச்சந்நிதியில் பெருமாள் கிடந்த கோலத்தில் காட்சி தருகிறார். உள்ளே வலமாக வரும் போது வேணு கோபாலர் சந்நிதி, யதிராசர், யோக நரசிம்மர், கூரத்தாழ்வார், ஆசார்யர்களின் உற்சவ மூர்த்தங்கள், ஆஞ்சநேயர் திருமேனிகள் முதலியவை உள்ளன.

தில்லையாடியின் திருவடி – ஆட எடுத்திட்ட பாதம் – குஞ்சிதபாதம் நம் குறைகளைப் போக்கி நிறைவையும் நல்வாழ்வையும் தருமே! ஆனித் திருமஞ்சனமும் மார்கழித் திருவாதிரையும் இத்திருக்கோயிலில் நடைபெறும் மிகச் சிறப்பான விழாக்களாகும். 11.2.1987ல் கும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளது. மகுடாகமப்படி பூசைகள் நடைபெறு கின்றன.

கல்வெட்டுக்கள்

சிதம்பரம் ஒரு தனியூராக அரசன் நேர்பார்வையில் இருந்து வந்தது. இதனைச் சூழ பதினான்கு சிற்றூர்கள் இருந்தன வாகக் குறிக்கப்பட்டுள்ளன. இத்தலத்தின் பழைய பெயர் சிற்றம்பலம். புலியூர், பெரும்பற்றப்புலியூர், பொற்புலியூர்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



சபாநாயகர் திருக்கோயிலும் சிவகங்கை தீர்த்தமும் –

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



பொன்னம்பலம்
(சிதம்பரம்)



ஸ்ரீசபாநாயகர் திருக்கோயில் வடக்குக் கோபுரம் உட்புறம்
(சிதம்பரம்)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தில்லை, தில்லையூர் கோயில் என்று கல்வெட்டுக்களில் வழங்கப்படுகிறது. தில்லையின் தேவகாரிய கண்காணிப்பாளர்களே சோழநாடு முழுமைக்கும் தேவாலயக் கண்காணிப்பாளராக இருந்து வந்தனர். சோழ மன்னர்களுக்கு முடிசூட்டும் உரிமை தில்லை தேவகாரிய குழுவினர்க்கே இருந்தது.

கல்வெட்டுக்களில் மிகப் பழமையானதாகிய இராஜேந்திர சோழ தேவனுடைய 24ம் ஆண்டுக் கல்வெட்டும், குலோத்துங்க சோழ தேவனுடைய 47ம் ஆண்டுக் கல்வெட்டும் கனகசபையையும் திருமூலட்டானத்தையும் பிரிக்கும் சுவரில் உள்ளன.

கனகசபையைச் சுற்றியுள்ள பிராகாரம் விக்கிரமசோழன் திருமாளிகை என்றும், திருமூலட்டானத்தைச் சேர வருகின்ற இரண்டாம் பிராகாரம் குலோத்துங்கசோழன் திருமாளிகை என்றும், அதற்கும் வெளியிலுள்ள மூன்றாம் பிராகாரம் இராசாக்கள் தம்பிரான் திருமாளிகை என்றும் வழங்கப்பட்டன. இவற்றுள் குலோத்துங்க சோழன் திருமாளிகை என்ற பெயரும், விக்கிரமசிங்கன் திருமாளிகை என்ற பெயரும் மேற்குறித்த சுவரிலுள்ள கல்வெட்டுக்களிலேயே காணப்படுகின்றமையின், விக்கிரமனே தன் தந்தையாகிய குலோத்துங்கன் பெயரால் உட்பிராகாரத்தையும், தன் பெயரால் இரண்டாம் பிராகாரத்தையும் செய்திருக்கவேண்டுமென்று தெரிகிறது.

சம்பந்தர் முதலிய மூவர் காலத்திலேயே இத்தலம் சிறப்புற்றிருக்கவும், அவர்கள் காலத்திய பல்லவ வேந்தர்களின் கல்வெட்டொன்றும் இதில் காணப்பெறாமை குறிப்பிடத்தக்கது.

சிதம்பரத்தைப் பற்றிய கல்வெட்டுக்கள் 271 உள்ளன. அவைகளுள் பெரும்பாலன கோப்பெருஞ்சிங்க அரசனைப் பற்றியும், ஜடாவர்மன் சுந்தர பாண்டியனைப் பற்றியும் கூறுவனவாகும். மற்றும் சோழ மன்னர்களாகிய ராஜேந்திரன் முதல் இராஜராஜன்(3) முடிய உள்ள பலருடைய கல்வெட்டுக்களும், விஜயநகர மன்னர்களின் கல்வெட்டுக்களும், நாயக்க மன்னர்களின் கல்வெட்டுக்களும் இருக்கின்றன.

இவைகளுள் பெரும்பாலனவற்றில் நந்தவனப் பணிகளே அறிவிக்கப்பட்டுள்ளன. மிகச் சிலவற்றுள் பூசை வழிபாட்டுக்குரிய நிபந்தங்கள் குறிக்கப்பட்டுள்ளன. அறச்சாலைகளைப் பற்றியும், அக்கிரகாரங்கள் அமைப்பதைப் பற்றியும், திருப்பாவாடை போடுவதைப் பற்றியும் தெரிவிக்கின்றன சில கல்வெட்டுக்கள்.

விக்கிரமசோழனது காலம் வரையில் கோயிற் சார்பாக நடைபெற்ற சாசனங்களெல்லாம் திருப்புலியூர்ச் சண்டேசுவர தேவ நாயனார் பெயராலேயே நடைபெற்று வந்தன. இவன் காலத்துக்குப் பிறகு கோயில் கண்காணிப்புச் சபையின் பெயராலேயே நடைபெற்று வந்திருக்கின்றன. அரசாங்கத் தலைமை அதிகாரிகளும், உள்நாயகத்தார்களும், சீகாரியஞ் செய்வார்களுமாகப் பலர் மேற்கூறிய சபையின் அங்கத்தினர்களாக இருந்து கோயிற் காரியங்களை மேற்பார்வை செய்து வந்துள்ளார்கள்.

சிதம்பரம் திருக்கோயிலைக் கண்காணித்தவர்களாக 1. தொண்டைமான், 2. திருவையாறுடையான், 3. மதுராந்தகப் பிரமராயன், 4. தில்லையம்பலப் பேரரையன், 5. விழிஞத்தரையன், 6. இராசராசவிழுப்பரையன், 7. சித்தரையன், 8. வில்லவரையன், 9. அங்கராயன், 10. சிங்களராயன், 11. விஜயராயன், 12. மூவேந்தரையன், 13. வாணதரையன், 14. வயல் நாட்டரையன், 15. பொத்தப்பிச்சோழன், 16. காரணை விழுப்பரையன், 17. குருகுலராயன், 18. மழவராயன், 19. காடுவெட்டி, 20. வயிராதிராயன், 21. விலாடராயன், 22. விக்ரமசோழப் பிரமராயன், 23. விளநாடுடையான் 24. நிகரில் சோழப் பல்லவரையன், 25. குலோத்துங்க சோழவாணகோவரையன், 26. எதிரில்சோழவேளான், 27. நரசிம்மவர்மன், 28. பாண்டியராயன், 29. மலையப்பிராயன், 30. வேணாடுடையான் என்பவர்கள் குறிக்கப்படுகிறார்கள்.

கிழக்கு, தெற்கு, மேற்குக் கோபுரங்களை முடிசூடிய மன்னர்கள் கட்டியதாகவும், வடக்குக் கோபுரத்தைக் கடவுள் தானே கட்டிக் கொண்டாரென்றும் கல்வெட்டுப் பாட்டொன்று அறிவிக்கிறது. இவ்வடக்குக் கோபுரத்தைக் கிருஷ்ணதேவராயன் தொடங்கி நிலைமட்டம் வரையிலோ, அல்லது அதற்கு மேலுமோ நிறுத்தியதாகவும், அச்சுத தேவராயன் இதனை முற்றுப் பெறுவித்ததாகவும் கல்வெட்டுக்களில் யூகிக்க இடந்தருவதால், கடவுள் தானே கட்டிக் கொண்டார் என்று கல்வெட்டு உபசாரமாகக் கூறுகிறது போலும். தெற்குக் கோபுரம் கோப்பெருஞ்சிங்கனால் கட்டப்பட்டது. இவனுக்கு அழகிய சிங்கன் என்ற மற்றொரு பெயருமுண்டாதலால் இக்கோபுரம் சொக்கசீயம் என்று குறிக்கப்பட்டுள்ளது. இதனைத் தெற்கில் சொக்கச்சீயன் திருநிலை யேழு கோபுரத் திருவாசல் திருப்பணிக்கு உடலாகத் தொண்டை நாட்டு ஆத்தூரில் நிலம் விட்டதாக வரும் ஆத்தூர் முத்தீசுரமுடையார் கல்வெட்டும், கச்சி ஏகம்பமுடையார் கல்வெட்டும் தெரிவிக்கின்றன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மேலைக் கோபுரத்தைத் திருப்பணி செய்த சிற்பிகள் விருத்தகிரிசேவகப் பெருமாளும் அவன் மகன் விச்வ மித்துருவும், திருப்பிரைக்குடையாசாரி திருமருங்கனும், அவன் சகோதரன் சாரணாசாரியும் ஆவார்கள் எனக் கல்வெட்டுக் காட்டுகிறது. இன்னும் அதிலேயே கீழ்ப்புறச் சுவரில் காமதேவன், அகத்தியன், சீதேவி, தேவேந்திரன், கணேசன், துர்க்கை இவ்வுருவங்களும், வடபுறச் சுவரில் ருத்ரதேவர், ராகு கேதுக்கள், நாரதன், அளகேசன், சந்திரன், கிரியாசக்தி, சனி, வாயு, இவ்வுருவங்களும், மேல்புறச் சுவரில் க்ஷேத்ரபாலப் பிள்ளையார், கங்காதேவி, தன்வந்தரி, திரிபுரசுந்தரி, சுக்கிரன், வைஜயன், நாகன், யமுனை, பத்ரகாளி, ஆதிசண்டீசர் இவ்வுருவங்களும், தென் சுவரில் புதன், நிருதி, ஞானசக்தி, அக்னி தேவன், இவ்வுருவங்களும் இருப்பனவாக அறிவிக்கிறது.

தேவாரம் பாடிய மூவர் முதலிகளாகிய ஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகிய மூவருக்கும் தனித்தனியே ஆலயங்கள் இருந்தனவாகக் கல்வெட்டுக்கள் அறிவிக்கின்றன.

வடக்குக் கோபுரத்தையடுத்துத் திருத்தொண்டைத் தொகையீச்சரம் என்ற ஒன்று குறிப்பிடப்படுகிறது. இதில், திருத்தொண்டத்தொகையில் பாராட்டப்பெற்ற தனி அடியார் அறுபத்து மூவரும், தொகையடியார் ஒன்பதின்மருமாக உள்ள பெருமக்களில், தனியடியார்களுக்குத் தனித்தனித் திருவுருவம் அமைக்கப்பெற்றமை போலத் தொகையடியார்களாகிய கூட்டத்தினருக்குத் தனித்தனி உருவம் அமைக்க முடியாமையின், ஒவ்வொரு தொகுதிக்கும் ஒவ்வொரு இலிங்கத் திருமேனியாக எழுந்தருளச் செய்திருக்கிறது. முத்தியடைந்த பெருமக்களை உருவம் தெரிந்தால் உருவமமைத்தும், உரு அமைக்க முடியாததற்குச் சிவலிங்கந் தாபித்தும், அதுவுமில்லையானால், பீடங்கள் அமைத்தும் வழிபடலாம் என்று ஆகமங் கூறுகிறது. ஆதலால், உருவம் அமைக்க முடியாத தொகையடியார்களைச் சிவலிங்கத் திருமேனி வாயிலாக வழிபட வேண்டித், திருத்தொண்டத் தொகையீச்சரம் என்ற இக்கோயிலை அமைத்து உள்ளார்கள். அன்றியும், தொண்டத்தொகை பாடிய சுந்தரர் வடக்கு வாயில் வழியாக வந்தாரென்பதும் ஊன்றிக் கருதத்தக்கது. இவ்வாலயம் நவலிங்கம் கோயில் என இப்பொழுது வழங்கப்படுகிறது.

மூர்த்திகளின் திருநாமங்கள்: பொன்னம்பலக் கூத்தன், பொன்னம்பல நாதன், ஆனந்த தாண்டவப் பெருமாள் நாயனார், அழகிய திருச்சிற்றம்பலமுடையார், ஆளுடைய நாயனார், சிதம்பரரேசுவரர், தில்லைநாயகத் தம்பிரானார் முதலாய பல பெயர்களால் குறிக்கப்படுகிறார். திருச்சிற்றம்பலக் கோவையில் மாணிக்கக் கூத்தன் என்றும் இறைவன் பெயர் வழங்கப்படுகின்றது. அதற்குப் பேராசிரியர் மாணிக்கம் போலும் கூத்தினை உடையான் என்று உரை கண்டார். ஆனாலும், அது இரத்தின சபாபதியாகிய மரகத நடராஜரைக் குறிப்பது என்பது தெளிவு.

அம்மை சிவகாம சுந்தரி என்றும் திருக்காமக்கோட்டமுடைய பெரிய நாச்சியார் என்றும் வழங்கப்படுகிறார். சிவகாம சுந்தரி என்பது சிற்சபையில் இறைவன் இடப்பாகத்தில் எழுந்தருளியிருக்கும் அம்மையைக் குறிப்பதாகும். முக்குறுணி விநாயகர் முகக்கட்டணத்து விநாயகர் எனவும், குலோத்துங்க சோழ விநாயகர் எனவும் கல்வெட்டுக்களில் குறிப்பிடப் படுகின்றார். முகக்கட்டணம் என்பது முகப்பு. தில்லைக்குத் தெற்குக் கோபுரமே சிறந்த பெருவாயில். அவ்வழியாகவே நடராஜப் பெருமானை வழிபடச் செல்கின்றவர்கள் செல்வது முறையாம். நடராஜப் பெருமானின் திருமுன்பும் இதுவே. ஆதலால் முகப்பிலிருக்கும் பிள்ளையார் முகக்கட்டண விநாயகர் எனக் குறிப்பிடப்படுகிறார். முகக் கட்டணமென்பது முக்கணமாகி – முக்கணம் முக்குணியாகப், போலி இலக்கண அறிவு அதனை முக்குறுணியாக்கிவிட்டது. அதன்மேல் உருவத்தின் பெருமையொட்டி, முக்குறுணி அரிசிக்கு ஒரே மோதகம் செய்து நிவேதிக்கப்படுவதால் இப்பெயர் உண்டாயிற் றென்ற செவிவழிச் செய்தியும் கிளைத்துவிட்டது.

'விக்கிரமசோழன் தெற்குத் திருவீதியில் வடபக்கத்துச் செங்கனிவாயான் திருநந்தவனத்து எழுந்தருளியிருக்கும் திருஞானசம்பந்தப் பிள்ளையார் பண்டார உடலிட்டும்' என்ற குறிப்பு காணப்பெறுவதால் விக்கிரமசோழன் திருவீதியில் திருஞானசம்பந்தருக்குத் தனியாகக் கோயில் இருந்தமை தெற்றெனப் புலப்படும். மேலைக் கோபுரத்தையடுத்து, திருநாவுக்கரசருக்குத் தனிமடமிருந்ததாகக் காட்டப்பெறுகிறது. முருகன், 'சுப்பிரமணியப் பிள்ளையார்' என்று ஒரு கல்வெட்டில் குறிக்கப்பெறுகிறார்.

கற்பக விநாயகர், க்ஷேத்திரபாலப் பிள்ளையார் என்றும், குலோத்துங்க சோழ விநாயகர் என்றும் குறிப்பிடப்படு கின்றார்.

தில்லைக்காளி, 'தில்லைவனமுடைய பரமேசுவரி' என்று குறிப்பிடப்படுகின்றார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



ஸ்ரீ நடராஜர் (கோஷ்ட மாடத்தில்)

(கங்கை கொண்ட சோழபுரம்)

ரிஷபத்தின் அருகில் சிவகாமி, கந்தர்வர்கள், பூத கணங்கள், காரைக்கால் அம்மையார், காளி நிருத்தம், விநாயகர், முருகன், விஷ்ணு இசைக்கருவி வாசித்தல்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸ்ரீநடராஜர்
(மேலப்பெரும்பள்ளம், நாகை மாவட்டம்.)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

விழாக்கள்

தில்லையில் திரு ஆனித் திருநாளும், மார்கழித் திருவாதிரைத் திருநாளும் சிறப்பாகக் கோப்பெருஞ்சிங்கன் காலத்து முன்பிருந்தே நடைபெற்று வந்தன. மாசி மாதத்தில் ஒரு திருவிழா நடந்ததாகத் தெரிகிறது. அதில் திருத் தொண்டத் தொகை விண்ணப்பம் செய்யப்பெற்று வந்தது. ஏனைச் சிவதலங்களில் அம்மைக்கு ஆடிப்பூர விழா நடைபெற்று வருவது போல, இங்கு ஐப்பசிப் பூரவிழா நடைபெற்று வருகிறது. மாசிமக நட்சத்திரத்தன்று நடைபெறம் கடலாட்டு விழாவும் குறிப்பிடப்படுகின்றது. 'திருப்புதியது விழா' என்று ஒன்று காணப்படுகின்றது. அதில் அம்மைக்குப் புதிய ஆடை சாத்தியதாகக் குறிப்பிடப்பெற்றுள்ளது. திருப்புடவையீடுவிழா என்றும் அது வழங்கப்பெற்றுப் பின் திருப் புதியதுவிழா என்று வந்திருக்கலாமோ என்று கருத இடமுண்டு. அன்றி, திருப்பாலிவளத் திருநாள் என்று ஒரு விழா குறிப்பிடப்பட்டுள்ளது. அது ஐப்பசிப் பூரத் திருநாளைக் குறிப்பதாகுமோ? என ஐயந்தருகிறது. இதில் அம்மை நீராடி, வெள்ளணி அணிந்து பயறு முதலிய நவதானியங்களின் முளையைத் தன் மடியில் தரிக்கும் நாளாதலின் பாலிவளத் திருநாள் எனப்பட்டது போலும், (பாலிநவதானிய முளை) வசந்தத் திருநாள் என்பது பெருமான் வசந்த உற்சவம் கொண் டாடக் குலோத்துங்கள் தோப்புக்கு எழுந்தருளியதாகத் தெரிகிறது. திருக்கண் சாத்தும் திருநாளும், பெருமான் பரிவார நாயன்மார் களுக்குத் திருவருள் நோக்கம் செய்யும் திருநாளாகும் என அக்கல்வெட்டே குறிப்பிடுகிறது.

இந்த ஒன்பது விழாக்களையுமன்றி 'எதிரிலிசோழன் சிவபாதசேகரன் சித்தத்துணைப் பெருமாள் விழா' என ஒன்று குறிப்பிடப்படுகின்றது. சிவபாதசேகரன் என்பது முதல் இராஜராஜனுக்கு வழங்கிய பெயர். எதிரில் என்பது முதற் குலோத் துங்கனுக்கு வழங்கிய பெயர். ஆகவே தன்னாட்களில் தன் குலமுதல்வனாகிய இராஜராஜன் வரையில் இருந்த சோழ மன்னர்கட்குச் சித்தத் துணையாகவே இருந்து வந்த நடராஜப் பெருமானுக்கு நடந்த பெருவிழாக்களையே இது குறிப்பிட்ட தாகுமென ஊகிக்கலாம். இதுவன்றித் தைப்பூசத்தில் பாவாடையிட்டுப் பெரிய பூச விழா ஒன்று நடத்தியதாகவும் தெரிகிறது. இத்தகைய திருவிழாக்கள் கல்வெட்டுக்களிலிருந்து அரிய வருகிறது என்பது சிந்திக்கத் தக்கதொன்று.

கீழக் கோபுரத்தின் வாயிலின் வலப்பக்கத்தில் காணப்பெறும் கல்வெட்டு, சோழகுலவல்லியால் நாயன்மார்க ளுடைய பாமாலையைப் பாராயணம் செய்விப்பதற்காக நிபந்தம் விட்டதை அறிவிக்கிறது. முதலாம் இராஜேந்திரன் காலத்தில் மாசித் திருவிழாவில் அழகிய திருச்சிற்றம்பலமுடைய நாயனார் சந்நிதியில் திருத்தொண்டத் தொகை பாராயணம் செய்வாருக்கு நிலம் விட்டதாக உள்ளது. சம்பந்தர் முதலிய மூவருக்கும், தெற்கு, மேற்கு, வடக்கு ஆகிய கோபுரங்களைச் சார இராஜாக்கள் தம்பிரான் திருமாளிகைத் திருவீதியில் தனித்தனியே திருக்கோயில்கள் இருந்ததாகவும், அவற்றுள் சம்பந்தப் பிள்ளையார் திருக்கோயில் பொன்வேயப் பெற்றிருந்ததாகவும் கல்வெட்டுக்கள் அறிவிக்கின்றன. இதனால் திருமுறைகளுக்கும், திருமுறைகளைப் பாடியருளிய சமயாசாரியர்களுக்கும் எவ்வளவு சிறப்பு சிதம்பரத்தி லிருந்தது என்பதை ஊன்றிநோக்க வேண்டும்.

அப்பூதியடிகள் நாவுக்கரசர் மீதிருந்த பற்றினால் நிலம் புலம் எல்லாவற்றிற்கும் அவர் பெயரிட்டு வழங்கியது போல, அரசர்கள் ஆனந்தக் கூத்தர் மீதிருந்த பற்றால், குடிஞைக் கல்லுக்கும், மரக்காலுக்கும் ஆடவல்லான் என்று பெயரிட்டு வந்தனர். சிற்றூர்களுக்குத் தில்லைவிடங்கன், கூத்தனூர், கோயிற்பூண்டி, சபாநாயகபுரம், தில்லைநாயகபுரம், நடராஜபுரம் என்றும் ஓடை நீர்நிலை முதலியவற்றிற்குக் கூத்தாடு நாயகன் திருவோடை, ஆளுடைய நாயகன் திருவோடை என்றும் பெயரிட்டிருந்தனர். தம்மிடம் அரசகாரியம் பார்ப்பாருக்குத் தில்லையம்பல பல்லவராயன், திருச்சிற்றம்பல முடையான் நக்கன், இளைய திருச்சிற்றம்பலமுடையான், தில்லையம்பலப்பேரரையன் என்றும் பெயர் வைத்திருந்தமை அரசர்கட்கு உள்ள அன்பின் முதிர்ச்சியை எடுத்துக்காட்டும் தக்க சான்றுகளாம்.

இத்தலத்திற்குப் பணிசெய்த மன்னர்களில் பல்லவர்களில் இரணியவர்மன், கோப்பெருஞ்சிங்கன் முதலியோர் களும் பாண்டியர்களின் மாறவர்மன் சுந்தரபாண்டியன், ஜடாவர்மன் சுந்தரபாண்டியன், மாறவர்மன் வீரபாண்டியன், விக்கிரமபாண்டியன், குலசேகரன் முதலியோர் குறிக்கப்படுகிறார்கள். சோழமன்னர்களில் முதல் பராந்தகன் முதல் மூன்றாம் இராஜராஜன் வரையிலுமாகப் பதின்மர் குறிப்பிடப்படுகின்றார்கள். இவர்களில் இரணியவர்மனும், முதற் பராந்தகனும், மணவில் கூத்தன் காளிங்கனும், அனபாயன் முன்னோர்களும் அனபாயனும் பல காலங்களில் பொன் வேய்ந்தார்கள் என்று கல்வெட்டுக்கள் அறிவிக்கின்றன.

இன்னும் விஜயநகர அரசர்களும் நாயகர் அரசர்களும், சேர அரசர்களும் திருப்பணிகள் மிகச் செய்துள்ளார்கள்.

இத்தலத்தில் இவ்வாதீனத்திற்குச் சொந்தமான கிளைமடம் மாலைக்கட்டித் தெருவில் உள்ளது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உலகிலேயே மிக உயரமான நடராஜர்

உலகிலேயே மிகப் பெரியநடராஜர் சிலை நெய்வேலியில் அமைந்துள்ளது. 10 அடி உயரமும், எட்டேகால் அடி அகலமும் கொண்ட இச்சிலை, முழுவதும் பஞ்சலோகத்தாலானது. இதன் எடை 2 ஆயிரத்து 420 கிலோ! துண்டு துண்டு களாக இணைக்கப்படாமல், ஒரே வார்ப்பில் அமைக்கப்பட்டுள்ளது இச்சிலையின் இன்னொரு தனிச்சிறப்பாகும்!

நடராஜர் சிலைக்கு அருகில் அமைந்துள்ள சிவகாமி சிலை 700 கிலோ எடையுடையது. பஞ்ச லோகத்தால் வடி வமைக்கப்பட்ட இச்சில்லயின் உயரம் ஏழு அடி. இவ்விரண்டு சிலைகளையும் கும்பகோணம் சிற்பி அருணசடேஸ்வரர் வடிவமைத்துள்ளார். இங்குள்ள நடராஜர் சிலை திருவாரூர் அருகே உள்ள வடகண்டம் (கரம்வீரம்) கோயிலில் உள்ள நடராஜரின் உருவத்தையொட்டியது! கோயிலின் அருகே செம்பொறஜோதி நாதர், அறம் வளர்த்த ஜோதி அம்மன் கோயில் களும் உள்ளன.

மக்களின் நலன் கருதி இக்கோயிலில் மனுநீதி முறை கையாளப்பட்டு வருகிறது. மனக்குறைகள், துன்பங்களைத் தீர்க்கவும், நேர்மையான வழிகளில் கிடைக்கவேண்டியவைகளை பெறவும் இந்த ஆராய்ச்சி மணி மனுநீதி முறை உதவுகிறது. முதலில் தாங்கள் விரும்புவனவற்றை ஒரு வெள்ளைத் தாளில் எழுதி மனுநீதி பெட்டியில் சேர்க்கவேண்டும். பின்னர், சபையின் உள்ளே சென்று திருச்சிற்றம்பலவாணனை வழிபட்டு, ஆராய்ச்சி மணி அடித்தால் காரியம் கைகூடும் என்ற நம்பிக்கையில் பலர் இக்கோயிலுக்கு வருகின்றனர்.

நெய்வேலி நடராஜர் கோயில் வரலாறு குறித்து பன்னிரு திருமுறை வளர்ச்சிக் கழக செயலாளர் தியாகராஜன், முன்னாள் செயலாளர் தியாகராஜன், முன்னாள் செயலாளர் சிவா.ராஜப்பா ஆகியோர் கூறியதாவது:

''கடந்த 1986ம் ஆண்டு பன்னிரு திருமுறை வளர்ச்சிக் கழகம் நெய்வேலியில் துவக்கப்பட்டது. அப்போது தலைவராக இருந்த ராமலிங்கம் ஓய்வு பெற்றார். இதனைத் தொடர்ந்து எஸ்.பி.பஞ்சாபகேசன் சிறப்புத் தலைவராக நியமிக் கப்பட்டார். இந்நிலையில் நெய்வேலியில் தியான சபை ஒன்று கட்டவேண்டும் என உறுப்பினர்கள் கருத்து தெரிவித்தனர். இதற்கு அனுமதியும் வழங்கப்பட்டது. அதன்பின் நடராஜர் உருவத்தை காகித அட்டையில் செய்து வைத்திருந்தோம். இதை அறிந்த எஸ்.பி. பஞ்சாபகேசன் பஞ்சலோகத்தில் சிலையை வடிவமைக்கவேண்டுமென யோசனை தெரிவித்தார்.

மே மாதம் 1986ல் திருப்பணிகள் துவங்கின. அனைவரும் கோயில் ஒன்று உருவாகவேண்டும் என்ற பேராவலில் நன்கொடைகளை வாரி வழங்கினர். கடந்த 1987ம் ஆண்டு நடராஜர் சிலை வார்ப்பும், குடமுழுக்கு விழாவும் மயிலை சுவாமி சுந்தர்ராம் குருஜி முன்னிலையில் நடந்தது.

நடராஜர் சிலையைச் சுற்றியுள்ள வளைவில் 45 திருவாட்சி சுடர்கள்தான் வழக்கமாக அமைக்கப்படும். ஆனால், இங்கு தமிழ் எழுத்துக்களை கணக்கில் கொண்டு 51 திருவாட்சி சுடர்கள் வடிவமைக்கப்பட்டது. கங்கை, யமனை, காவிரி, கோதாவரி, நர்மதை, சரஸ்வதி, குமரி (முக்கடல்) இவற்றில் இருந்து கொண்டு வரப்பட்ட புனித நீரால் கும்பாபிஷேகம் நடத்தப்பட்டது.

சிதம்பரம் நடராஜர் சிலை திருமூலரால் உருவாக்கப்பட்டது என கூறப்படுகிறது. திருமூலர் கூறியதைப் போல் 29 மூலிகைகளில் ஆறு மூலிகைகள் எவை என கண்டு அறிய முடியாததால், 23 மூலிகைகள் பஸ்பமாக்கப்பட்டு சிலை வார்ப்பு உலையில் சேர்க்கப்பட்டது. இம்மூலிகைகள் யாவும் தமிழகம் மற்றும் வட மாநிலங்களிலிருந்து கொண்டு வரப்பட்டவை. சிதம்பரம் நடராஜர் கோயிலில் நடப்பதைப் போல் இங்கும் ஆண்டுதோறும் ஆறு அபிஷேகம் நடக்கிறது. இதற்கென சிதம்பரத்தைச்சேர்ந்த தீட்சிதர் ஒருவர் நிரந்தரமாக நியமிக்கப்பட்டுள்ளார். பஞ்ச புராணத்தை ஓத தனி ஓதுவாரும் உண்டு.

இங்குள்ள நடராஜர் சிலையின் மதிப்பு ரூ. 14 லட்சம்! கோயில் கட்ட மட்டும் ரூ.3 லட்சம் செலவானது! பாஸ்கர தாஸ் என்பவர் இதைக் கட்டினார். ஆண்டுதோறும் திருமுறை விழா நடைபெறுகிறது. மேலும் நாயன்மார் குருபூஜை, சிவராத்திரி லட்சார்ச்சனை நாட்டியாஞ்சலி விழா போன்றவைகளும் சிறப்பாக நடத்தப்படுகிறது. நாட்டியாஞ்சலி விழாவை தென்னிந்திய கலை பண்பாட்டு மையத்தினர் ஆண்டுதோறும் நடத்தி வருகின்றனர்.

'நினைப்பவர் மனம் கோயிலாகக் கொண்ட நின்மலனை தினைத்தலைப் பொழுதும் மறந்து உய்வனோ', என்றார் அப்பர். கற்பனை கடந்த ஜோதி கருணையே உருவமாகி, சிற்பர வியோமமாகி சிவபுரத்து அம்பலத்துள் நின்று பொற்புடன் நடம் செய்கின்ற பூங்கழல்களை போற்றி மகிழும் புண்ணியம் நமக்குக் கிடைத்ததன்றோ!''

ஆதாரம்:– *தினமலர் – தீபாவளி மலர் – 1994 பக்கம் 177.*

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



ஊர்த்தவ தாண்டவர்
(கோபுர சிற்பம் – சிதம்பரம்.)



ஸ்ரீநடராஜர்
(நெய்வேலி)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சண்ட நிருத்தம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நூற்றெட்டு தாண்டவங்கள்

1. தலபுஷ்பபுடம்

இடது பக்கத்துக்கு மார்பிற்கு நேராக, புஷ்பபுட முத்திரை பிடித்து, கால் நுனிகளால் சஞ்சரிப்பவராக, சிறிது வணங்கிய பக்கத்தையுடையவராக நடிப்பது, புஷ்பபுடத்தோடு இடது பக்கமாக இருப்பதால் இது தல புஷ்பபுடம் என்னும் பெயர் பெற்றது.

2. வர்த்திதம்

இரு மணிக்கட்டுகளை வளைத்து, தொடையின் பக்கத்தில் கைகளைத் தொங்க விடுவது.

3. வலிதோருகம்

கிளிமூக்குப்போல் கையை மடக்கி அவற்றை உட்புறமாக இரு பக்கமும் வளைத்து, தொடைகளையும் வளைத்து நிற்கும் நிலை.

4. அபவித்தம்

சதுரஸ்ரமாக நின்று, கைகளைத் திருப்பிக் கொண்டு சமகாலத்தில் எடுத்து வைக்கப்பெற்ற சாரியைச் செய்து, கையையும் சுகதுண்டமாகச் செய்து, தொடையின் பின்புறம் வைப்பதும், இடது கையைக் கடாகாமுகமாகச் செய்து மார்பின் மேல் வைப்பதும் ஆம்.

5. சமநகம்

கால்களை நகங்கள் நேராகத் தெரியும்படி வைத்து, கொடிபோலத் துவண்டு தொங்குகிற கைகளுடன், உடல் வளையாமலும் நிமிராமலும் இயல்பாக இருப்பது.

6. லீனம்

கழுத்தையும் தலையையும் முன்பக்கம் நீட்டி வளைக்கப்பட்ட தோட்பட்டையோடு பதாகாஸ்தத்தை மார்பின் நேரே பிடிப்பது.

7. ஸ்வஸ்திகரேசிதம்

ஸ்வஸ்திககரத்தை வீசியும், இடுப்பில் வைத்தும் நடிப்பது.

8. மண்டலஸ்வஸ்திகம்

சதுரஸ்ரகாலில் நின்று, முன்நோக்கி உத்வேஷ்டித வர்த்தனையாற் சென்று, ஊர்த்துவமண்டலி வர்த்தனையால் ஸ்வஸ்திதம் அமைய நடிப்பது.

9. நிகுட்டகம்

தன் தோளுக்கும் சிரத்திற்கும் இடையில் கைகளைத் தூக்கியும் தாழ்த்தியும், கால்களையும் அவ்வாறே செய்தலாம். கைகளால் செய்யப்பெறும் நிகுட்டகம் அலபல்லவ முத்திரையோடு கூடிய கையில் சிறுவிரலைத் தூக்குதலும் தாழ்த்து தலுமாகிய முறை; கால்களுக்கோ உத்கடிதபாதத்தால் அடையாளம் செய்யப்பெற்ற முறையில் நிற்பது. உத்கடித பாத மாவது கால் நுனியில் நின்று, குதிகாலைப் பூமியில் தட்டுவது. அங்ஙனம் தட்டும் போது, இடது கையை உயர்த்தும் போதும், தாழ்த்தும் போதும் இடது குதிகாலைத் தட்டவேண்டும். வலது கையை உயர்த்தும்போது வலது குதிகாலைத் தட்டவேண்டும்.

10. அர்த்தநிகுட்டகம்

கைகளைச் சிரத்தின்மேல் வைத்து, கைகளை விரலுக்கு நேராகக் குவித்து, பாதி வளைய இருப்பது.

11. கடிச்சின்னம்

வண்டு போன்ற சாரியால், இருபக்கமும் சுழன்று, மண்டல ஸ்தானத்தில் நின்று, தோள் பட்டையின் உச்சியில் பல்லவ முத்திரைக் கையை வைத்தலாம்.

ஆதாரம்: ஆடல்வல்லான் – ஆதீன வெளியீடு. இந்த 108க்கும் படங்கள் ஷ நூலில் காண்க.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பல்லவஹஸ்தம்: எல்லா விரல்களையும் நீட்டிக் கட்டைவிரலை மட்டும் குறுக்கியதாக பதாகா முத்திரையோடு கூடிய இரு கைகளையும், மணிக்கட்டிலிருந்து தொங்கவிட்டு, விரல் நுனியை அசைப்பது. வண்டுசாரி – பிரமரிசாரி எனப்படும். இது வண்டுபோல் சுழன்று சுற்றுதலாம். மண்டல ஸ்தானம். பாதங்களை ஒன்றற்கொன்று நான்கு சாண் தூரத்தில் வைத்துக் கொள்வது.

12. அர்த்தரேசிதம்

அலபத்ம முத்திரையோடு கூடிய இரு கைகளையும் சுழற்றி, இடது பக்கம் இடக்கையைச் சுசிஹஸ்தமாக நீட்டி, கால்களை சிறிது பார்சுவமாக வளைப்பது.

13. வக்ஷஸ்வஸ்திகம்

கால்களை ஸ்வதிகமாக வைத்து, கைகளையும் மார்பிற்கு மேல் ஸ்வஸ்திகமாக வைப்பது.

ஸ்வஸ்திகாபாதம்: பாதங்களை மாறிச் சிறுவிரலோடு சிறுவிரல் பொருந்த வைப்பது. ரேசிக ஹஸ்தம் – மணிக் கட்டோடு மணிக்கட்டு பொருந்தக் குறுக்காக வைப்பது.

14. உந்மந்தகம்

கால்களைத் தொட்டிபோல் வளைத்து, கைகளையும் நன்றாக நீட்டி, மணிக்கட்டிலிருந்து முன்கையைத் தொங்க விட்டு நடிப்பது.

15. ஸ்வஸ்திகம்

கை, கால்களைச் சுவத்திகம் போல் அமைத்து நடிப்பது.

16. பிருஷ்டஸ்வஸ்திகம்

முன்போலக் கைகளையும் கால்களையும் ஸ்வஸ்திகமாக அமைத்துத் திரும்பி, முகத்தை மட்டும் சபைக்குக் குறுக்காக வைத்து நிற்பது.

17. திக்ஸ்வஸ்திகம்

முன்போலவே பிருஷ்ட ஸ்வஸ்திகமாக நின்று பக்கங்களிலும் முன்பும் அசைந்து நடக்கின் அது திக் ஸ்வஸ்திகமாம்.

18. அலாதகம்

அலாதபாதமாக நின்று, வலது கையை அதன்மேல் வைத்து முழந்தாளைத் தூக்கி நின்று ஆடுவது.

19. கடீஸமம்

ஸ்வஸ்திக நிலையிலிருந்து பிரிந்த பாதத்துடன், கைகளை உந்திக்கு நேராக இடுப்பில் வைத்து, பக்க நோக்காகச் சாய்ந்து நின்று ஆடுவது.

20. ஆக்ஷிப்த்ரேசிதம்

இடது கையை மடக்கி மார்புக்கு நேராக வைத்து, வலது கையை ரேசித ஹஸ்தமாகத் தொங்கவிட்டு, முழங் கால்களை மடக்கி நின்று ஆடுவது.

21. விக்ஷிப்தாக்ஷிப்தகம்

வலது காலை வீசி நின்று, வலது கையை வீசி, இடது கை கால்களை முன்போல வைத்து ஆடுவது.

22. அர்த்த ஸ்வஸ்திகம்

கால்களை ஸ்வஸ்திகமாக வைத்து, வலது கையைக் கரிஹஸ்தமாக இடுப்பில் வைத்து, இடது கையைப் பாதி ஸ்வஸ்திகமாக மார்பின் மேல் வைத்து ஆடுவது.

23. அஞ்சிதம்

கால்களை மாறி வைத்து, வலது உள்ளங்கால் வெளியில் தெரியும் வண்ணம் வைத்து, இடது கையைச் குசியாக மூக்கு நுனியை நோக்கி நீட்டி, வலது கையைக்குறுக்காக இடது பக்கம் நீட்டி நின்று ஆடுவது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



நிருத்தர்

(கைலாசநாதர் திருக்கோயில், காஞ்சிபுரம்)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



சதுரத் தாண்டவர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

24. புஜங்கத்ராஸிதம்

காலை வளைத்து உயரத் தூக்கி, முக்கோண வளைவாகத் தொடையை வளைத்து, இடுப்பு முழந்தாள்களையும் வளைத்து நின்று ஆடுவது. அதாவது பாம்பைக் கண்டு அஞ்சி ஓடுவதுபோல நிலை. வலது கையைத் தோலஹஸ்த மாகவும், இடது கையைக் கட்காமுகமாகவும் வைத்துக் கொள்வது.

25. ஊர்த்துவஜாநு

வலது முழந்தாளை மார்பினளவாக உயர்த்தி அதற்கேற்ப வலது கையையும் வீசி நின்று, இடது கையை இடது தோளுக்கு நேராகக் கடாகாமுகமாகப் பிடித்து நின்று ஆடுவது.

26. நிகுஞ்சிதம்

தேளின் கொடுக்குப் போலக் காலை வைத்து, கையைப் பக்கத்தில் தொங்கவிட்டு, இடது கையை மூக்கின் நேராகப் பிடித்து ஆடுவது.

27. மத்தல்லி

வலது கால் நுனியை ஊன்றி. இடது காலைக் குறுக்காக அமைத்து, வலது கையைத் தொடைமேல் வைத்து, இடது கையைக் கடாகாமுகமாக மார்பிற் சேர்த்து மத்தளக்காரன்போல நின்று ஆடுவது.

28. அர்த்தமத்தல்லி

முற்கூறியவாறு நின்று, இடது கையை மட்டும் வீசி நின்று ஆடுவது.

29. ரேசிதநிகுட்டிதம்

வலது கையை வீசி, வலது காலை மடக்கி வாமஹஸ்தத்தைத் தோலஹஸ்தமாகக் கொண்டு நின்று ஆடுவது.

30. பாதாபவித்தகம்

சூசிபாதமாக நின்று, நாபிக்கு நேரே கைகளை அமைத்து, இரண்டாவதாகிய பாதத்தை, அபவித்தகரணமாக வைத்து அதாவது தொடைகளால் சுழற்றிநடித்தல். சூசிபாதம் – குதிகாலைத் தூக்கிக் கால் நுனியை ஊன்றி நிற்றல். அபவித்தகரணம். தொடைகளை வலயமாகச் சுழற்றுதல்.

31. வலிதம்

இடது கையைத் தொடையில் சர்ப்பசிரசு போல வளைத்து வைத்து சூசி பாதமாகப் பிரமரிசாரியைச் செய்து அதாவது வண்டு போல் சுழன்று ஆடுவது.

32. கூர்ணிதம்

வலது கையைப் பக்கவாட்டாக உயர்த்தித் திருப்பி, இடது கையைத் தோல ஹஸ்தமாகத் தொங்கவிட்டு, ஸ்வஸ்திக நிலையில் பிரிந்தது போல் பாதத்தை வைத்து ஆடுவது.

33. லலிதம்

வலது கையைக் கரிஹஸ்தமாக நீட்டி, இடது கையைத் தலைக்கு நேராக வளைத்துப் புறந்தெரியும்படியாக நீட்டி, பலமுறை தரையைத் தட்டும் பாதத்துடன் ஆடுவது.

34. தண்டபட்சம்

வலது முழந்தாளை மார்புக்கு நேராக உயர்த்தி, இடது முழந்தாளைத் தாழ்த்தி, கொடிபோலக் கைகளை இரு மருங்கும் துவளவிட்டு நடிப்பது.

35. புஜங்கத்ரஸ்தரேசிதம்

வளைந்த காலைத் தூக்கி, கைகளை இடப்பாகத்தில் பாம்பு போலத் தொங்கவிட்டு நடிப்பது.

36. நூபுரம்

முற்கூறிய வண்ணம் லதாரேசிதமாகக் கைகளை இருமருங்கும் நீட்டி, ஒரு காலை மற்றொரு காற்சிலம்பின்மேல் வைத்து நடிப்பது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

37. வைசாகரேசிதம்

கை கால்களை வளைத்து, இடுப்பு, கழுத்து இவைகளையும் வளைத்து, சுழன்று ஆடுவது. ராகுலகர் என்பவர் கழுத்து முதலிய அங்கங்களைத் தனித்தனியே சுழற்றுதலும் வளைத்தலும் செய்வது என்பர். வைசாகம் – மூன்றரையடி இடைவெளி இருக்கும் படியாகக் கால்களை வைத்துக் கடாகாமுக முத்திரைக் கையுடன் ஆடுவது. இந்த இரண்டும் சேர்ந்தமையால் இப்பெயர் பெற்றது.

38. பிரமரகம்

திரிகபாதத்தால் வளைந்து நின்று, இடதுகையை அஞ்சிதமாக அமைத்து வலது கையைச் சதுரமாக வைத்து நின்று ஆடுவது. திரிகம் – வளைந்த காலைத் தூக்கி, ஊன்றிய காலைச் சிறிது மடக்கி முழந்தாள்கள் ஸ்வஸ்திகம் போல அமையும் படி வைத்து நிற்பது.

39. சதுரம்

வலது காலைக் குட்டிதமாக அமைத்துச்சதுரம் அமையக் கைகளை இருமருங்கும் நீட்டி நின்று ஆடுவது.

40. புஜங்காஞ்சிதகம்

கால்களைப் பாம்பு ஓடுவது போல அமைத்து, வலது கையைத் தொங்கவிட்டுத் தாண்டவம் ஆடுவது.

41. தண்டகரேசிதம்

தண்டம் போலக் கைகளை நீட்டியும், வளைத்தும் வைத்து, தண்டபாதசாரியாக நடிப்பது.

42. விருச்சிககுட்டிதம்

தேள் கொடுக்கைப் போலக் காலை அமைத்துக் கைகளைத் தேளின் முன்பரிசின் போல் வைத்து நின்று ஆடுவது.

43. கடிப்பிராந்தம்

வளைந்த பாதத்தைத் தூக்கி முழந்தாளை மேனோக்கியதாகச் சிறிது உயர்த்தி, நிற்பதாகிய சூசி பாதத்துடன், ஒரே காலத்தில் இடுப்பை வளைத்து ஆடுவது. இடுப்பு வளைந்து ஆடும்போது கைகளும் அதனை ஒட்டிச் சுழலவேண்டும்.

44. லதாவிருச்சிகம்

இடது காலைச் சிறிது மடக்கி ஊன்றி, வலது காலைத் தேள் கொடுக்குப் போலப் பின்புறம் வளைத்து நீட்டி, இடது கையைக் கொடிபோல நீட்டி துவளவிட்டு நின்று ஆடுவது.

45. சின்னம்

வைசாக ஸ்தானத்தில், கைகளை அலபத்ம முத்திரையாகப் பிடித்து இடுப்பில் வைத்துக் கொண்டு நின்றா டுவது.

46. விருச்சிகரேசிதம்

காலைத் தேள்போல வைத்து இரு கைகளையும் ஸ்வஸ்திகமாக அமைத்து, இருமருங்கும் நீட்டி நின்று ஆடுவது.

47. விருச்சிகம்

தோள், சிரம் இவற்றிடைக் குறிக்கும் கரிஹஸ்தக் கைகளுடன் கால் பின்பக்கம் வளைந்திருக்க, தூரத்தில் வளைந்த பின்பக்கத்துடன் நின்று ஆடுவது.

48. வ்யம்ஸிதம்

வளைந்த வலது காலை ஐந்தடி அகற்றி வைத்து நிற்கும் ஆலீடஸ்தானத்தில் நின்று, கைகளை மார்பிற்கு நேரே மடக்கிப் பிடித்து, மேலும் கீழுமாகச் சுழன்று ஆடுவது.

49. பார்சுவ நிகுட்டகம்

கைகளை ஸ்வஸ்திகமாகப் பக்கங்களில் அமைத்து, நிகுட்டிதபாதமாக நின்று ஆடுவது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



தாண்டவேஸ்வரர்
(சங்கமேஸ்வரம் – ஆந்திரா)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



ஊர்த்துவ தாண்டவர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

50. லலாடதிலகம்

வலது காலை விருச்சிக பாதம் போல நெற்றிற்கு நேரே தூக்கி இடது கையால் பிடித்துக் கொண்டு நெற்றியில் பொட்டு வைப்பது.

51. கிராந்தகம்

பின்பக்கம் சாய்ந்து நின்று, வளைந்த காலைத் தூக்கி முன்பக்கம் விசிறி நின்று காற்படத்தைத் தரையில் தட்டுதலாகிய அதிக்ராந்தசாரியில் நின்று, கைகளை மார்புக்கு நேராக அமைத்து நின்று ஆடுவது.

52. குஞ்சிதம்

முதலில் வலது காலை வளைத்து, வலது கையையும் வளைத்து, இடது காலை தூக்கி நிறுத்தி ஆடுவது.

53. சக்ரமண்டலம்

முன்பாவது பின்பாவது கைகால் நுனிகளைப் பூமியில் ஊன்றி உடலை வளைத்து, சக்கரத்தின் வட்டம் போல இருந்து நடிப்பது.

54. உரோமண்டலம்

ஸ்வகதிகமாக விசப்பட்ட பாதத்துடன், அபவித்த நிலையில், கைகளை வட்டமாக மார்பில் அமைத்து நின்று ஆடுவது.

55. ஆக்ஷிப்தம்

ஆக்ஷிப்தசாரியாகப் பக்கவாட்டில் சிறிது சாய்ந்த கைகளால் சதுரமான கடகாமுகக் கையுடன் நின்று ஆடுவது.

56. தலவிலஸிதம்

உயரத் தூக்கிய வலது காலுடன் பதாகக் கையையும் இரு பக்கங்களிலும் தோளுக்கு மேலாக உயர்த்தி நின்று ஆடுவது.

57. அர்க்கலம்

கால் நுனியில் நின்று கொண்டு பின்புறமாகச் சாய்ந்து கைகளைத் தரையில் ஊன்றி வளைந்து நிற்பது. இந் நடனத் திற்கு ஒரே சமயத்தில் இரு கைகளும் அலபல்லவமாகச் சிறிது முன் நீட்டப்பட்டதாக இருக்கவேண்டும்.

58. விட்சிப்தம்

கை கால் இரண்டையும் ஒரு பக்கமாகப் பின்னாகவாவது, பக்கங்களிலாவது நீட்டி ஆடுவதாம்.

59. ஆவர்த்தம்

மடங்கிய காலை நீட்டி விரைவாக மீட்டும் திருப்பி, பிரயோகத்திற்கு ஏற்றாற்போலக் கைகளைத் திருப்பி ஆடுவதாம்.

60. டோலாபாதம்

வளைந்த காலைத் தூக்கி, ஒரு பக்கத்திலிருந்து மற்றப் பக்கத்திற்குத் தொங்கவிட்டு அசைந்து நின்று ஆடுவதாம்.

61. விவிர்த்தம்

இடது காலையும், தன் உடலையும் சிறிது வளைத்துத் தூக்கி, கைகளை இரு மருங்கும் விசிறி, பிரமரி ஹஸ்தமாக வைத்து நிருத்தம் செய்வது.

62. விநிவிர்த்தம்

சூசிஹஸ்தமாக, வலது காலைத் தொடைப் பக்கத்தில் வளைத்து, ஸ்வஸ்திகம் போல் வைத்து, மற்றொரு காலைத் திருப்பும்போது தொடை திரும்பும்படி பக்கங்களில் ஹம்ஸபட்சம் அமையச் சுற்றி ஆடுவது.

63. பார்கவக்ராந்தம்

கால் முன் வீசி, அதற்குத் தக ஏற்றவாறு கைகளையும் வீசி நின்று நடிப்பது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

64. நிஸ்தம்பிதம்

வலது காலை வளைத்து, குதத்தின் சமீபமாக வைத்து உயர்த்தி, கடகாமுக ஹஸ்தமாக ஒரு கையை அமைத்து, வலது கையை லலாடதிலகமாகச் செய்து நடிப்பது.

65. வித்யுத் பிராந்தம்

வலது காலைக் குதத்திலிருந்து நன்றாக வளைத்துப் பின்புறமாக உயர்த்தி, இடது கையை இடது காலின் இடுப்பு ஓரமாக முன்புறம் தொங்கவிட்டு, வலது கையை விசிறி நடிப்பது.

66. அதிக்ராந்தம்

தன் உடலுக்கு முன்னாக அதிக்ராந்த சாரியாக நடந்து பிரயோகத்திற்குத் தக்கவாறு கைகளை அமைத்து நின்று ஆடுவது.

67. விவர்த்திதகம்

கைகால்களை ஆக்ஷிப்தமாக அமைத்து, இருந்து பிரமரி ரீதியாகத் திரும்பித் திரும்பி நடிப்பது.

68. கஜகிரீடிதகம்

வளைந்து சுட்டிய இடக்கையைக் காதுக்கு நேராகப் பிடித்து, வலது கையை டோலாபாதசாரியால் நின்று ஆடுவது.

69. தலஸம்ஸ்போடிதம்

விரைவாகக் காலை தூக்கி முன்னாக வைத்து, கைகளைத் தல சம்ஸ்போடிதகரமாக வைத்து நடிப்பது.

70. கருடப்லுதகம்

விருச்சிகபதமாக நின்று, லதாரேசிதக கரமாக நின்று ஆடுவது.

71. கண்டசூசி

சூசிபாதமாக, பக்கத்தில் வளைய நின்று, ஒரு கையை மார்பில் வைத்து, மற்றொரு கை கண்டத்தில் சுட்டும்படி வைத்துக்கொண்டு நின்று ஆடுவது.

72. பரிவிர்த்தம்

சூசிபாதமாக மற்றொரு காலைத் திருப்பி, பதாகையாகக் கைகளை இருபக்கமும் சிரத்தில் சுட்டவைத்து ஆடுவது.

73. பார்கவஜாநு

ஒரு காலைச் சமமாக வைத்து, ஒரு காலைத் தொடையின் பின்னாக அமைத்து, முஷ்டி ஹஸ்தமாகக் கையை மார்பில் வைத்து, மற்றொரு கையைப் பக்கமாக வீசி நின்று ஆடுவது.

74. கிருத்ராவலீனகம்

இடது காலைப் பின்புறமாக வளைத்து வலது காலைத் தூக்கி முன் வைத்து, கை விசி நின்று ஆடுவது.

75. சன்னதம்

சூசிஹஸ்தமான கைகளைக் கட்டிக் கொண்டு, கால்களை வளைத்து விரல் நுனியைப் பூமியில் ஊன்றச் செய்து ஆடுவது.

76. சூசி

கால் நுனிகளால் நின்று சூசி ஹஸ்தமாகக் கைகளைப் பிரயோகத்திற்குத்தக மார்பிற்கு நேராக அமைத்து ஆடுவது.

77. அர்த்தசூசி

வலது கையை அலபத்மமாகத் தலைக்கு நேரே பிடித்து சூசிக்குச் சொன்னதுபோல் நின்று ஆடுவது.

78. சூசீவித்தம்

சூசிபாதமாக நின்று, வலது கையை இடுப்பிலும், இடது கையை மார்பிலும் அமைத்து நின்று ஆடுவது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

79. அபக்ராந்தம்

தொடைகளை வளைத்து, வளைந்த காலைத் தூக்கிப் பக்கங்களில் வளைய வைத்து, பிரயோகத்திற்குத் தக, கைகளை அமைத்து ஆடுவது.

80. மயூரலலிதம்

விருச்சிகபதம் அமைத்து, கைகளை ரேசிதமாக வைத்து, பிரமரியாகவும் சுழன்றும் மயில்போல ஆடுவது.

81. சர்ப்பிதம்

வளைத்து வீசப்பட்ட கால்களுடன் தலையையும் சாய்த்து நின்று, அதற்குத் தக கைகளை ரேசிதமாக வைத்து மாறி மாறி அவ்வாறே இருமருங்கும் ஆடுவது.

82. தண்டபாதம்

வலது காலைப் பின்பக்கமாகத் தூக்கி, இடது காலைத் தரையில் நுனிக்காலால் தட்டி நின்று, சிலம்பு ஒலிக்க, இடது கையை உயரத் தூக்கி, வலது கையைத் தொங்கவிட்டு நின்று ஆடுவது.

83. ஹரிணப்லுதம்

முழந்தாளை வளைத்துத் தூக்கி, கைகளைப் படத்தில் காட்டியபடி இடப்புறமாகத் தோளுக்கு நேராகத் தொங்கவிட்டு ஆடுவது.

84. பிரேங்கோலிதம்

பாதங்களை வளைய வைத்துக் கொண்டு கைகளைத் தோலாகரமாகப் பக்கத்திற்குப் பக்கம் திருப்பி, பிரமரிசாரியாகத் துள்ளிக் குதித்து ஆடுவது.

85. நிதம்பம்

மேல் நோக்கிய விரல்களையுடைய பதாக முத்திரையோடு கூடிய கைகளால் தலை வரைக் கொண்டு சென்று, பின்பு திரும்பிய கைகளால் மேலிடத்துச் சென்று திரும்பியதாகக் கைகளை அமைத்து, சுற்றிலும் பார்க்கக்கூடியதாகப் பதாகக் கையை அமைத்து, பின்பு உடம்பை நோக்கியதாகக் கையைத் தொங்கவிட்டு நிதம்ப நிருத்த ஹஸ்தத்துடன் ஆடுதல்.

86. ஸ்கலிதம்

இடது காலைச் சமபதமாகவும் வலது காலை வளைத்தும், வலது கையை ஹம்ஸ பட்சமாகவும் இடது கையைத் தொங்க விட்டும் இவ்வண்ணம் மாறி மாறி நடிப்பது.

87. கரிஹஸ்தகம்

வலதுகால் குதியைச் சாய்த்து ஊன்றி இடது காலைச் சிறிது மடங்க வைத்து, லதாஹஸ்தமாக அமைந்த ஒரு கையைத் தூக்கி, ஒரு பக்கத்திலிருந்து ஒரு பக்கம் அசைத்து, பின்பு திரிபதாக முத்திரையாகக் காதோரத்தில் ஒரு கையை அமைத்து நின்று ஆடுவது.

88. பிரஸர்ப்பிதகம்

ஹம்ஸபட்சமாகவும், லதாஹஸ்தமாகிய நிருத்த ஹஸ்தமாகவும் கைகளை அமைத்து, வளைந்த கைக்கு எதிராகவுள்ள காலால் மெதுமெதுவாக பூமியைத் தட்டிக் கொண்டு நடந்து வருவது.

89. சிம்ம விக்ரீடிதம்

அலாத சாரியை முன்னர் விரைவிற் செய்து, அதனை ஒட்டிக் கைகளையும் வட்டமாகச் சுழற்றி ஆடுதல். இது சிங்கத்தின் கையை அடித்தல் போலிருப்பதால் இப்பெயர் பெற்றது.

90. ஸிங்காகர்ஷிதகம்

விருச்சிகபாதமாக நின்று, வலது கையை வளைத்து ஸ்வஸ்திகமாக அமைத்து, இடதுகையைப் பதாகையாகத் தொடைக்கு நேரே தொங்கவிட்டு ஆடி, மீட்டும் இடது காலையும் அதற்கு ஏற்பக் கைகளையும் அமைத்து நின்று ஆடுவது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

91. உத்ருத்தம்

பாதங்களையூன்றி முழங்கால் இடுப்பு இவை திரும்பும்படியாக அமைத்து, கைகளையும் முறுக்கி நின்று ஆடுவது.

92. உபசிருதகம்

வளைந்த காலைத் தூக்கி ஆட்சிப்தசாரியை அமைத்து, இடது பக்கமாகத் திரும்பி, கைகளைத் திரும்புவதால் உடலை வணங்கச் செய்து, கைகளையும் லதாஹஸ்தமாகத் தொங்கவிட்டு நின்று ஆடுவது.

93. தலஸங்கட்டிதம்

கால்களைத் தோலாபாதமாக இருமருங்கும் வளைத்து வைத்து, கைகளைப் பதாகை முத்திரையாகப் பிடித்து, கீழ்நோக்கி இரண்டையும் சேர்த்துப் பிடித்து நின்று, இடது கையை இடுப்பிலும் வலது கையை ஹம்ஸபட்சமாகவும் பிடித்துச் சுழன்று ஆடுவது.

94. ஜநிதம்

காலை இருமருங்கும் வளைய வைத்து, வலது கையை முஷ்டிஹஸ்தமாக மார்புக்கு நேரே பிடித்த இடது கையை லதாஹஸ்தமாக தொங்கவிடுவது.

95. அவகித்தகம்

ஜநிதத்தைப் போல நின்று, கைகளை மார்புக்கு நேரே மடக்கி, நெற்றி மார்பு இவற்றிற்கு நேராக முறையே பிடித்து, தளிர் ஒன்றுக்கொன்று நேராக இருப்பது போலக் கைகளை அமைத்து மெதுவாக ஆடுவது. வேறு சிலர் கிளிமூக்குப் போலக் கைகளை மார்புக்கு நேரே அணைத்து நின்று ஆடுவது என்பர்.

96. நிவேசம்

கைகளை மார்புக்கு நேராகப் பிடித்து, மார்பைத் தாழ்த்தி, மண்டல ஸ்தானகமாக நின்று ஆடுவது.

97. ஏலகாக்கிரீடிதம்

வளைந்த வணங்கிய உடலமைப்போடு தலசஞ்சரபாதங்களால் தூக்கி அசைத்து, துள்ளி விழுவது.

98. ஊருத் விருத்தம்

வலது கையைச் சிறிது திருப்பித்தொடையில் வைத்துக் கொண்டு முழங்காலை வளைத்துச் சிறிது தூக்கி ஆடுவது.

99. மதஸ்கலிதம்

கைகளைத் தோலகஸ்தகமாகவும் சிரத்தைச் சிறிது வளைத்தும் கால்கள் இரண்டையும் வளைய வைத்தும் ஆடுவது.

100. விஷ்ணுக்கிராந்தம்

கால்களை முன்னர் வீசியும் ஆகாயத்தை நோக்கி வளைத்தும் கைகளை ரேசிதமாகவும் அமைத்து நின்று ஆடுவது.

101. ஸம்ப்ராந்தம்

கைகளை மடக்கி இடுப்புக்கு நேராக வைத்துக் கொண்டு தொடைகளையும் அவ்வாறே வளையவைத்து நின்று ஆடுவது.

102. விஷ்கம்பம்

அபவித்தகரமும் நிகுட்டிதபாதமும் அமைய இடது கையை மார்பில் வைத்துக் கொண்டு நின்று ஆடுவது.

103. உத்கட்டிதம்

பாதங்களைச் சதுரம்பட வளைத்து, முன் காலால் நின்றும் கைகளைத் தலசங்கட்டிதமாக வைத்தும் பக்கத்தைச் சிறிது வணக்கி நின்று ஆடுவது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

104. விருஷபக்கிரீடிதம்

கைகளை அலாதஹஸ்தமாகச் செய்து கால்களை வளைத்து நின்று ஆடுவது.

105. லோலிதம்

கைகளை மார்புக்கு நேராக மலர்ந்த தாமரை போல் அமைத்து, கால்களை ஸ்வஸ்திகமாக வைத்து சிறிது சாய்ந்த முகத்தோடு ஆடுவது.

106. நாகாபஸர்ப்பிதம்

கைகளில் வலது கையை மார்புக்கு நேராக வைத்து, இடது கையைச் செவிக்கு நேராக வைத்து, வலது காலை முழங்கால் வரையில் மடக்கி, இடது காலைப் பின்புறமாகக் கழுத்து வரையில்தூக்கி, பாம்புஅசைவதுபோல அசைந்து ஆடுவது.

107. சகடாஸ்யம்

கால், கை, உடல் இவற்றை வண்டிச்சக்கரம் போல அமைத்து முகத்தைத் திரிபதாகை போல் அமைத்து நடிப்பது.

108. கங்காவதரணம்

ஆகாயத்திலிருந்து கங்கை கீழே இறங்குவது போல இரு கைகளையும் பூமியில் ஊன்றி, உடலைப் பின்புறமாக வளைத்து, கால்களை இடுப்புவரை நேரே தூக்கி ஆடுதல்.

இந்த நூற்றெட்டு பேதங்களும் சாரிகளுக்கும் வழங்கப்படுகின்றன. ஆகையால் சாரிகளாலேயே இவைகளுக்குப் பெயர் அமைந்தது எனல் பொருந்தும்.

(குறிப்பு: இப்பகுதி யாவும், இவ்வாதீன வெளியீடாகிய "ஆடல்வல்லான்" நூலிலிருந்து கொடுக்கப்பட்டதாகும். ஆசிரியர் – ஆதீன மகாவித்துவான். ச. தண்டபாணி தேசிகர் அவர்கள். ஷ நூலில் பல ஆலயங்களில் காணும் நடராசர் திருமேனிகள் உள்ளன. மேலும் 108 தாண்டவத் திருமேனிகளை முதன் முதலாக வரைந்து அச்சிட்டு 1967ல் வெளியிடப் பட்டது. இந்த 108 திருமேனியினை திருவிடைமருதூர் ஸ்ரீமகாலிங்கப் பெருமான் ஆலயத்தின் சித்திரப் பிரகாரத்தில் காணலாம்.)



ஸ்ரீசக்கரத்தில் ஆடல்வல்லான்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிவபராக்கிரமத்தில் நிருத்த மூர்த்திகள்

1. புஜங்கலளித நிருத்தம்

காசிபன் மனைவியர் பதின்மூவரில் கற்பின் மேம்பட்ட கத்துரு, விநதையென்னுங் காரிகையரிருவர் தாம் அழகிற் சிறந்தவரென ஒருவரோடொருவர் வாதிட்டுத் தமது நாதனை வினாவி, அவர் தீர்மானித்த வண்ணந் தோற்றவள் சிறையிருப்பதாக ஏற்படுத்திக் கொண்டு, முனிவரையணுகிக் கேட்க, கத்துரு சிறந்தவளென, மற்றவள் சிறையிலகப்பட்டனள். சிறையிலிருக்கும் விநதை தன் மாற்றவளை நோக்கித் தன்னை விடும்படி வேண்ட, ''தேவலோகத்துள்ள அமிர்தமளித்தாற் சிறைநீக்குவேன்'' என, விநதை தன் குமாரனாகிய கருடனுக்கறிவிக்க, கருடன் தேவலோகஞ் சேர்ந்து அமுத கலசத்தைக் காத்திருந்த அந்தரத்தவரைச் சயித்துக் கையிற் கொண்டு வருகையில் திருமால் எதிர்த்துச் செருச்செய்து செயிக்க மாட்டாமல் ''பக்ஷிராசனே! உன் பராக்கிரமத்தை மெச்சினேன்; வேண்டிய வரத்தைக் கேள்'' என, கருடன் சிரித்து ''கமலாக்ஷ! உன் வலிமைக்குக் களித்தேன். நீ விரும்பிய இரண்டு வரங்களைக் கேள்'' என, விண்டு இதுதான் சமயமென்றுட்கொண்டு ''சர்ப்பங்கட்கமுதூட்டாதிருக்க வொருவரமும், நீ எனக்கு வாகனமாகித் தாங்க மற்றொரு வரமும் வேண்டும்'' என கருடன் அவ்வாறேயியைந்து அமுதகலசத்தைத் தாயினிடஞ் சேர்த்து, சர்ப்பங்கட்கமுதூட்டாவகையாகக் கூறிச் சிறைவிடுவித்து, சிவலிங்க பூஜை செய்யப் பெருமான் களித்துப் பிரசன்னமாய்ப் பல வரமளித்து ''விட்டுணு நமதடியாரிற் சிறந்தோன். நீ யவனுக்கு வாகனமாதல் பற்றிக் களித்தோம்.'' என்று திருவாய் மலர்ந்தருளக் கருடன் மனம்பூரித்து மாலுக்கு வாகனமாயினன்.

காசிகாண்டம்

கலுழ னாற்றிய காமரு தவத்தினை வியந்து
நிலவு தூங்கிளம் பிறையணி நீள்சடைக் கடவு
ளலகி னல்வர மளித்துநம் மடியரிற் சிறந்தோ
னுலகு பூத்தசெந் தாமரை யுந்தியங் கடவுள்.

ஆங்க வற்குநீ யூர்தியா யடதமென் றறைந்த
தீங்கி னல்வர முவந்தனஞ் செல்லெனக் கலுழன்
வீங்கி னான்றடம் புயமுளங் குளிர்ப்புற விழிநீர்
தூங்க மெய்ம்மயிர் சிலிர்ப்புறத் தொழுதிவை சொல்வான்

கருடன் சிவார்ச்சனை செய்து பெற்ற வல்லமையால், தன் மாற்றாந் தாயாகிய கத்துருவென்பாள் பெற்ற கட்செவிகளைக் கடுங் கோபத்துடன் கொன்று துன்புறுத்தி வருதல் கண்டு, நாகங்கள் நாமும் சிவபிரானைப் பூசித்து வைநதேயனால் மாயாத வரமுறல் வேண்டும் என்றாலோசித்துக் கொண்டு ஓர் சிவலிங்கக் குறியைத் தாபித்து விதிமுறையே சிவார்ச்சனை செய்து நேர்நின்று ''ஆதி மத்தியாந்தரகிதராகிய அருட்பெருங்கடலே! தேவரீரது பூஜா பலத்தாலும், திருமாலுக்கு வாகனமாயிருத்தலாலும், மாற்றாந் தாய் மைந்தனாதலாலும், கருடன் எங்களைக் கொல்கின்றான். அவனா லிறவாவண்ணம் அருள் புரியவேண்டும்'' என்று பிரார்த்தித்தன. சிவபிரான் அச்சர்ப்பங்கட்குத் திருவுளமிரங்கித் தமதருமைத் திருமேனியிலாபரணமாக அவைகளை அழகுறும்படி அணிந்து கொண்டனர். இது நிற்க.

பின்னொரு காலத்தில் விஷ்ணு சிவதரிசனார்த்தமாக வந்த பொழுது அச்சர்ப்பங்கள் அச்சமின்றிக் கருடனை நோக்கி ''ஏன் கருடா சுகமா'' என வினாவின. இதனை உலகத்தாரோர் வழக்கச் சொல்லாகக் கூறுகின்றனர். அஃதெற்குக் கெனில் சிறியோரைச் சேர்தலினும் பெரியோரைக் கூடுதல் சிறந்ததென்றுணர்த்தற்கென வறிக.

புஜங்கம் – பாம்பு, லளிதம் – அழகு செய்தல். இக்காரணத்தால் இறைவர் புஜங்கலளித மூர்த்தி எனப் பெயரெய்தினர்.

புஜங்கலளித மூர்த்தயே நம:

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

புஜங்கத்ராச நிருத்தம்



புஜங்கலளித நிருத்தம்

சந்தியா நிருத்தம்

சதா நிருத்தம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

2. புஜங்கத்ராச நிருத்தம்

தாருகாவநத்து முநிவர்கள் தவமே சிறந்ததென்றும், அவர் பன்னியர் கற்பே மிகுந்ததென்றுங் கருதிக் கடவுள் பெருமானாகிய கண்ணுதலைப் பரம்பொருளென மதியாது மமதை கொண்டு வாழ்ந்திருக்குநாளில், சிவபெருமான் திகம்பரமாய்ப் பிக்ஷாடனத் திருக்கோலங் கொண்டும், திருமால் மோகினி வடிவேற்றுஞ் சென்று அம்முநிபத்தினிகள் கற்பையும் அம்முனிவர் தவத்தையுமழித்தனர். அக்காலத்தில் அரிவையர் முயக்கி லவாவுற்றுத் தமதிருக்கை நாடிய அவ்வந்தணர் தத்தம் வீதியிற் கற்பழிந்துழலுங் காரிகையரைப் பார்த்துத் தமது ஞானத்தால் ''நம் தவத்தையழித்து நமது மனைவியர் கற்பையொழித்தவன் சிவனே; அவனேவலால் ஆயிழையாயடைந்தவன் அச்சுதனே'' என்றறிந்து விஷவிருக்ஷங்களைச் சமிதையாக்கி வேம்பு முதலியவற்றின் நெய்யினால் அபிசார வேள்வி செய்து அதனின்றெழுந்த பல பொருள்களையும் பரமபதியின் பேரிற் பிரயோகிக்க, சிவபிரான் அவற்றை எண்ணியவகையெலாம் உடை, பாதச் சிலம்பு, ஆயுதம், சிரோமாலை, சேனை முதலியவாகச் செய்து கொண்டனர்.

தாம் பிரயோகித்தவை பிரயோசனப்படாதது கண்ட தாருவன முனிவர் யாகாக்கிநியினின்றெழுந்த சர்ப்பங் களையுஞ் சங்கரன் மேல்விட, அவை அச்சமின்றி அவனியழியும் வண்ணம் அதிவேகமாகத் தமது காளி – காளாஸ்திரி – யமன் – யமதூதன் என்னும் நான்கு நச்சுப் பற்களிலுள்ள தொளைவழி விஷஞ்சிந்திக் கொண்டு நாதனை நண்ண, அண்ணல் ஆதி நாளையில் விண்டுவின் வாகனமாகிய கருடனுக்கஞ்சித் தம்பால் சரண் புகுந்த சாப்பங்களைத் தமதுடலிற் றாங்கியிருந்ததுடன் இப்பாம்புகளையும் ஏற்று ''உமது குலத்தாருடன் ஒன்றுவடி வாழுங்கள்'' என்று திருவுள்ளஞ் செய்து அப்பாம்புகளஞ்சும்படி திருக்கரத்தாற் பற்றிச் சிறிது பொழுது நடித்து, திருக்கரம் திருவடி அரை முதலிய விடங்களிற் கங்கணம் – காலணி – அரைநாண் – கடிசூத்திர முதலியவாகப் பிணித்தருளினர். (இச்சரிதத்தின் ஏனைய விஷயங்கள் பிக்ஷாடநம் சார்த்தூலஹத மிவற்றில் விளக்கப்பட்டுள்ளன. ஆங்குக் கண்டு கொள்க.)

தாருவநத்து முநிவர் செலுத்திய சர்ப்பங்களை அச்சுறுத்தினமையால், சிவபெருமான் புஜங்கத்ராஸமூர்த்தியெனத் திருநாமமெய்தினர்.

கந்தபுராணம்

ஏந்திய பின்னர் வேள்வி யெரியதற் கிடையே யெண்ணில்
பாந்தளங் கொழுந்து தீயோர் பணியினாற் சீற்றங் கொண்டு
போந்தன வவற்றை மாயோன் புள்ளினுக் கஞ்சித் தன்பால்
சேர்ந்ததோர் பணிகளோடு செவ்விதிற் புனைந்தா னெங்கோன்.

புஜங்கத்ராஸமூர்த்தயே நம:

3. சந்தியா நிருத்தம்

தேவர்கள் சிவாக்கினையின்றித் திருப்பாற்கடலை மதித்தபொழுது அதில் நாட்டிய மந்தர மலையாகிய மத்திற்குப் பூட்டப்பட்ட தாம்பாகிய வாசுகியென்னும் பாம்பு தன் தலைவால்களைப் பற்றியீர்க்குந் தேவாசுரர் வலிக்காற்றாமல் வாய்வழி நஞ்சுகக்கியது. அவ்விஷம் யாவரையுமெதிர்க்கத் திருமால் அதனையெதிர்த்து உடல் கருகி உம்பர் குழுவுடன் வெள்ளி மலையை யடைந்து சிவபிரானுக்கு விண்ணப்பஞ் செய்துகொள்ள, அருள்வள்ளல் அதனை அமுது செய்தனர். (இதன் வித்தாரம் விஷாபஹரணத்திற் காண்க.)

ஆகமத் திரட்டு

பொங்குங்கங் காதரன் காளமயின் றேயொன்றும்
புகலாம லிருந்தனனோர் கணப்பொழுது புலவோர்
அங்கவனை யிடைவிடா தருச்சனைமுன் புரிந்தா
ரத்திதியே காதசியா மடுத்ததிதி யதனிற்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

புங்கவர்பா ரணம்புசித்தே பூர்த்தியுற்றா ரதன்மேற்
பொருந்துதிதி தனிலிமவான் பொற்கொடியைவைத்தே
சங்கரன்சூ லஞ்சுழற்றி நடித்தனனோர் யாமஞ்
சதுர்மறைநூ லதுபிரதோ டம்மெனவே சாற்றும்.

என்னும் பிரமாணத்தின்படியே,

சிவபெருமான் தேவர் துயர் தொலையும்படி விஷபானஞ்செய்த காலத்தில், அதனால் தாமொரு தீமையுமடைந்தாரில்லையாயினும், ஓர் திருவிளையாடல் செயக் கருதி ஓர் க்ஷணப்பொழுது ஒன்றுங் கூறாராய் உமாதேவியார் தம்மையுபசரிக்கும்படி மௌநமாய்ச் சயனித்திருந்தனர். அதுகண்ட அமரர் அரனை யருச்சித்தனர். அத்திதியை ஆன்றோர் ஏகாதசியென்பர். அற்றையநாள் முற்றும் உணவில்லாது அன்றிரவெல்லாம் நித்திரையின்று நீங்கி மறு நாளாகிய துவாதசியிற் பண்ணவர் பாரணஞ் செய்தனர். அதன் மேற்பட்ட திதியாகிய திரயோதசியிற் சிவபிரான் மலையரசபுத்திரியாராகிய உமாதேவியாரை நிறுத்திச் சூலத்தைச் சுழற்றி, கையில் தமருகமேந்தி ஓர் ஜாமகாலம் நிருத்தஞ் செய்தனர். அக்காலத்தையே வேதசிவாகமங்கள் பிரதோஷமெனக் கூறும். இது பற்றி, பதினைந்து தினங்கட் கோர்முறைவருந் திரயோதசியைப் பிரதோஷமென்பதன்றி, தினந்தோறுமாலையு மிரவுங்கலக்கும் ஒரு சாமப் பொழுதையும் பிரதோஷ காலமெனவும், வருடத்திற்கோர்முறையெய்தும் மகா சிவராத்திரியை வருடப் பிரதோஷமெனவுங் கூறா நிற்பர். ஒவ்வொரு தினமும் உதயாதி இருபத்தாறேகால் நாழிகை முதல் இரவு மூன்றே முக்கால் நாழிகை வரையும் நாழிகை ஏழரை. இதில் ரஜநிமுககாலத்திற் சம்பவிப்பது பிரதோஷமெனவும், மத்தியான முகூர்த்த மெட்டனுள் ஏழுகழித்து எஞ்சிய எட்டாவது முகூர்த்தமே பிரதோஷமெனவும் ஆகமங்கள் கூறும். இம்முறை பற்றி மாதப் பிரதோஷத்தை மாத சிவராத்திரியென்பர்.

இது நிற்க. சிவபிரான் நிருத்தஞ் செயக் கண்ட தேவர் களித்து இரு கரங்களையுஞ் சிரமேற்குவித்து மனதை மகாதேவன்பாற் பதித்து அரனே பரனென மதித்து ஆநந்தக் கூத்தாடினர்; அன்புருகிப் பாடினர்; ஐயனைக் கொண்டாடினர்; அருளாளர் விடைபெற்றுத் தமதிடத்தை நாடினர். இத்தகைய நிருத்த காலத்தில் தேவர்கள் தத்தமக்கியைந்த வாச்சியங்களும், திருமால் மிருதங்கமும் வாசித்தனர். பெருமான் திருக்கயிலாயகிரியில் உமாதேவியார் முதலானோர் காணப் பிரதோஷ காலத்தில் நடனஞ் செய்த அவசரம் ஸந்த்யாந்ருத்தமூர்த்தமெனப்படும்.

ப்ரஹ்மோத்தர காண்டம்

வாக்தேவீத்ருதவல்லகீஸதமகோவேணும்தத்பத்மஜ:
ஸ்தாளோந்நித்ரகரோரமாபகவதீகேயப்ரயோகாஞ்சிதா
விஷ்ணுஸ்ஸாந்த்ரம்ருதங்கவாதநபடர்தேவாஸ்ஸமந்தாத்ஸ்திதா:
ஸேவந்தேதமநுப்ரதோஷஸமயேதேவம்ம்ருடாநீபதிம்.

ஸந்த்யாந்ருத்தமூர்த்தயே நம:

4. சதா நிருத்தம்

சிவபெருமான் ஆன்மாக்களுக்குப் பெத்த முத்திகளைத் திருவருள் செய்தற் பொருட்டுப் பஞ்சாக்கரமே திருமேனியாகக் கொண்டு பஞ்ச கிருத்தியத் திருநடனத்தை யெஞ்ஞான்றும் இயற்றியருளா நிற்பர்.

தோற்றந் துடியதனிற் றோயுந் திதியமைப்பிற்
சாற்றியிடு மங்கியிலே சங்காரம் – ஊற்றமாய்
ஊன்று மலர்ப்பதத்தி லுற்ற திரோதமுத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு.

மாயை தனையுதறி வல்வினையைச் சுட்டுமலஞ்
சாய வமுக்கியரு டானெடுத்து – நேயத்தால்
ஆநந்த வாரிதியி லான்மாவைத் தானழுத்தல்
தானெந்தை யார்பாதந் தான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

என்னும் உண்மைவிளக்கத்தின்படி, பெருமான் மூன்று திருக்கரங்களாலும் இரண்டு திருவடிகளாலும் பஞ்சகிருத்திய மியற்றுகின்றார். எவ்வாறெனில், தமருகமேந்திய கரத்தினாற் சிருட்டியும், அமைத்த அஸ்தத்தினால் திதியும், மழுவேந்திய கையினாற் சங்காரமும், முயலகன் முதுகிலூன்றிய திருவடியினால் திரோபவமும், அநவரத நடம்பயிலும் அடித் தாமரை யினால் அநுக்கிரகமம் புரிவர். அன்றியும்,

உரையுணர்வுக் கெட்டா வொருவன்மிகு பஞ்சாக்
கரத்தால் வரைமகடான் பாதி – பரையிடமாய்க்
காணும் படியே கருணையுருக் கொண்டாடல்
பேணுமவர்க் குண்டோ பிறப்பு.

என்றபடியே, ஆன்மாக்கள் அநாதியே பந்தித்துள்ள பாசநீக்கம் போக்கி முத்தியடைதற் பொருட்டே, அருள் வடிவாகிய அம்மையார் பக்தாநுக்கிரக காரணமாய், பஞ்சாக்கர வடிவமாகிய அவ்வாநந்தத் திருநடனத்தை வாமபாகத்தினின்றுந் தரிசிப்பர். மேலும்,

ஆடும் படிகேணல் லம்பலத்தி லையனே
நாடுந் திருவடியி லோகரங் – கூடு
மகர முதரம் வளர்தோள் சிகரம்
பகருமுகம் வாமுடியப் பார்.

என்றபடியே, சிவபிரான் நிருத்தக் கோலங் கொண்ட ஞான்று திருவடியில் நகரமும், திருவயிற்றில் மகரமும், திருத்தோளில் சிகரமும், திருமுகத்தில் வாகாரமும், திருமுடியில் யகரமுமாகக் கொண்டு ஸ்ரீபஞ்சாக்ஷரமே திருவுருவாக நின்று ஆன்மாக்களின் மீதுள்ள கருணையால் ஐவகையான கிருத்தியங்களையுமியற்றா நிற்பர். இனி இந்நடனம் ஊன நடனம் ஞான நடனம் என இருவகைப்படும். சிவபிரான் திருக்கயிலரய மலை ஸ்ரீமேருமலை – வடாரண்யம் – திருத்தில்லை – திருவாலவாய் – திருநெல்வேலி – திருக்குற்றாலம் – திருத்தெளிச்சேரி முதலாகக் கூறப்படும் பலவிடங்களிற் பலகாரணங் களாற் பலமுறை பதம் பெயர்த்தாடியிருப்பினும், ஸ்ரீபஞ்சாக்கரமே திருமேனியாகக் கொண்டு பஞ்ச கிருத்திய காரணமாக எப்போதும் உமையம்மையார் தரிசித்து நிற்கும்படி திருமால் திருநந்திதேவர் பிரமத கணங்கள் முதலானாரது தோற்கருவி தொளைக் கருவி நரப்புக் கருவி கஞ்சக் கருவி மிடற்றுக்கருவி முதலியவற்றி னோசையோடு திருநடனஞ் செய்திருத் தலின், ஸதாந்ருத்தமூர்த்தியெனப் பெயருற்றனர்.

ஸதாந்ருத்தமூர்த்தயே நம:

5. சண்ட நிருத்தம்

ஸ்ரீவடாரண்யத்தின் மகிமையைச் சிவபிரானாற் சொல்லக் கேட்ட சுநந்த முனிவர், பெருமான் அநுக்கிரகித்த வண்ணந் தாண்டவ தரிசனத்தை விரும்பி ஆங்கடைந்து தவத்திருந்தனர். அவ்வாறிருக்கையிற் கண்ணுதல் கைவிரலணி யாகிய கார்க்கோடகன், திருவிரலில் விஷத்தைக் கக்க, விடையூர்தி "நம்மை மனத்திற் கருதாது மமதையோடு நீ செய்த தீமைக்காகத் திருக்கைலையை நீங்குக" என, நாகம் நடுங்கிப் பணிய, நாதன் "வடாரண்யத்தலத்திற் பல வாண்டுகளிருந்து அருந்தவம் புரியுஞ் சுநந்தருடன் சண்ட தாண்டவத்தைத் தரிசித்துப் பிறவருதி" என, கட்செவி கருடனுக்கஞ்சி முறையிட, இறைவர் "இத்தீர்த்தத்தில் மூழ்கி ஆண்டுள்ள முத்தி தீர்த்தத்தில் முளைக்க" என அரவு அவ்வாறே ஆலவனமடைந்து அருந்தவஞ் செய்யுஞ் சுநந்தரைக் கண்டு தொழுது தனது வரலாற்றைச் சொல்ல, சுநந்த முனிவர் மகிழ்ந்து தன் பக்கலிற் றவமியற்றப் பணித்து, பழையபடி நெடுங்காலந் தவத்திருப்ப, முனிவரைப் புற்றுமூடி முடிமேல் முஞ்சிப் புல் முளைத்த மையால், அவர் முஞ்சிகேச முநிவரெனப் பெயர் பெற்றனர். இது நிற்க.

நிசும்பன் சும்பன் என்னும் நிசாசரிருவர் செய்துவருந் தீமையைப் பொறாத தேவர்கள், பார்வதியாரை நோக்கிப் பலகால் அருந்தவஞ் செய்ய, இறைவி இமையவர் முன் தோன்றி, "அமரரே! நீங்களவாவிய அடைவே அவர்களை யழிப்பேன்" என்றருளிச் செய்து மலைச்சாரலையடைந்து தவவடிவேற்று வசித்திருக்கையில், சண்டன் முண்டன் என்னுந் தானவரிருவர் சாம்பவியைச் சார்ந்து, "தார்குழலே! தனித்திருப்பானேன்; சாற்றற்கரிய வலியுடைய சும்பனிடஞ்சேர்க" எனச் சொல்ல, அம்பிகை "அருந்தவமாற்றும் யான் ஆடவரோடுரையாடேன். அரைக்கணத் தகலுமின்" என்றறைய, அவர்கள் சும்பாசுரன்பால், தேவியின் பொலிவை வியந்து செப்பி, அவனேவலாற் சில படையுடன் மீட்டுஞ் சென்றழைத்தும் வாராமை நோக்கி வலிதிற் கைபற்றி யீர்க்கக் கருதுகையில், விமலை வெகுளி கொள்ள, அம்மையார் தோளிலிருந்த அனே கஞ் சேனையும் ஒரு சத்தியும் அவதரித்து, அவ்விருவரையுஞ் சேனையுடன் சங்கரித்தனர். "சண்டனையு முண்டனை யுஞ் சங்கரித்தமையாற் சாமுண்டியெனப் பெயர் பெற்றுத் தரணியோர் தொழ வாழுதி" என அச்சத்திக்கருளினர். அவற்றை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

யறிந்த நிசும்பன் – சும்பன் என்போர் அநேக அசுரருடன் ஆர்ப்பரித்து வந்து அம்மையையெதிர்த்து அஸ்திரமாரி சொரிய, உமாதேவியார் தமதுடலினின்று ஸப்தமாதர்களையுஞ் சிவதூதியரையும் உதிப்பித்து யுத்தத்திற் கனுப்பி அவர்களால் அசுரச் சேனையை யழிப்பித்து, தாமே முதலில் நிசும்பனையும் பிறகு சும்பனையு மாய்த்தனர்.

ஆற்றலுடைய அவ்விரண்டு அசுரர்கட்கும் இளையாளாகிய குரோதியென்பவள் பெற்ற இரத்தபீசன் தனதுடற் சோரியில் ஒரு துளி தரைமேல் விழுந்தால் அத்துளி தன்னைப்போலத் தானவனாமாறு வரம் பெற்றனன். அவன் இச்செய்தி யறிந்து இமைப்பொழுதிலெதிர்த்தனன். அந்நிருதனுடன் ஸப்தமாதர்கள் சமர்செய்கையில் உதிரத் துளிகட்கு ஒவ்வோர் உருவேற்றதுகண்டு ஓடிவந்து உமையம்மையோடுரைப்ப, தேவியார் சினமிகத் திருத்தோளினின்றுங் காளி தோன்றினள். ''பெண்ணே யான்! இரத்தபீசனைச் சங்கரிக்கையில் உதிரத் துளியொன்றும் பூமியில் விழாமல் உன்கைக் கபாலத் தேந்தியுண்ணக் கடவாய்'' எனப் பணித்து, அவளுதிரபானஞ் செய்துவர, இறைவியார் இரத்தபீசனை இமைப்பிலழித்து இமையவரை அவரவர் நாட்டிற்கேக விசைத்து, காளியைக் களிப்பித்து அவளுக்குச் சண்டியென்று பெயரும் தெய்வீகமும் சிவபெருமானிடம் நிருத்தஞ் செய்து அவர் பக்கலில் வசித்தலும் ஆகிய இவற்றை அநுக்கிரகித்து, ஸப்தமாதர்கட்கருள் செய்து, அந்தர்த்தானமாயினர். காளி அசுரருதிரமருந்திய ஆற்றலாலும், இறைவியாரிடம் பெற்ற வரத்தாலுமிறுமாந்து மாமிசம் நிண முதலியவற்றைப் புசித்து, மோகினி இடாகினி பசாசு பூதங்கள் புடைசூழ ஒரு வனத்திலிருந்து மற்றொரு வனத்திற்குப் போய் உலக முழுவதுமுலவி வடாரண்யத் தருகில் வந்து யாவரையுந் துன்புறுத்தி வாழ்ந்திருந்தனள். இஃதிவ்வாறிருக்க,

ஒருநாள் திருவாலங்காடு சென்ற நாரத முனிவருக்குக் காளியின் தீச்செயல்களைக் கார்க்கோடக முனிவர் கூற, நாரதர் கேட்டுச் செல்லுமளவில், காளி விழுங்கவர, அவர் கரந்து சென்று விண்டுவைக் கண்டு விஷயத்தை வாய்விண்டனர். திருமால் சிவபிரான்பால் திருவிண்ணப்பஞ் செய்ய, இறைவர் ''இப்பொழுதே அக்காளியின் வன்மைகுன்ற வடவன மடைவோம்'' என்று கூறி, சுநந்த முனிவர் கார்க்கோடக முனிவர்கட்குக் கருணைசெய்யக் கருதி ஆலவனமடைந்தனர்.

மாதேவன் வயிரவவடிவு கொண்டமையின், உடன்வந்த பூதகணங்களுடன் காளியின் சேனை எதிர்த்து ஆற்றாது காளிக் கறைய, அவள் அமர்க்கோலங் கொண்டு வந்து ஐயனைக் கண்டு பயந்து ''நிருத்த யுத்தஞ் செய்வோம்'' என நிகழ்த்த, முன்னோனிசைந்து முஞ்சிகேச கார்க்கோடகர்கட்குத் தரிசனந் தந்து திருநடனத்துக்குத் தேவருடன் வந்தனர். அக்காலத்து அமரர் அவரவர்கட்கிசைந்த பல வாத்தியங்களை வாசித்தனர். அநவரதம் – அற்புதம் – இரௌத்ரம் – கருணை – குற்சை – சாந்தம் – சிருங்காரம் – பயம் – பெருநகை – வீரிய மென்னும் நவரசங்களும் அபிநயமும் விளங்க வாத்தியங்கட்கொப்பப் பாண்டரங்கமாகிய சண்ட தாண்டவத்தைக் காளியுடன் செய்கையில், கருணாநிதியின் திருச்செவியிலிருந்த குண்டல மானது நிருத்தவேகத்தால் நிலத்தில் நழுவ, அதை இறைவரே திருவடியொன்றினாலெடுத்துத் தரித்துத் திருத்தாண்டவஞ் செய்து காளியைத் தோல்வியடையச் செய்தனர். அவள் செயலற்று நாணிப் பணிந்தனள். அருள் வல்லல் ''ஈண்டோர் சத்தியா யிருத்தி'' என அநுக்கிரகித்து இரு முனிவரும் எண்ணில்லா அடியார்களும் தமது தாண்டவக் கோலத்தைச் சர்வ காலமுந் தரிசிக்கும்படி ஆண்டு வீற்றிருக்கின்றனர். இக்காரணத்தாலிறைவர் சண்டதாண்டவ மூர்த்தியெனப் பெயரெய் தினர்.

திருவாலங்காட்டுப் புராணம்

இன்சுவை பொழியுஞ் சாய லபிநய மிலங்கச் செவ்வாய்
புன்சிறு முறுவல் பூப்பப் புரணவா னந்தம்பூரித்
தன்புறு மவையோ ருள்ள மயர்தர வியங்கட் சேறப
வின்படு நடனங் காளி யோடரன் விளைத்த வேலை.

மடிதரு முலக மென்ன வயங்கரு ணல்கி மெல்ல
வடிபெயர்த் தாடல் செய்ய வருகுறுங் காளி நோக்கி
யொடிவுறு நாணின் மேவி யொளிமுக மிறைஞ்சி யொல்கி
வடிவுறு பாவை போலச் செயலற மயங்கி நின்றாள்.

சண்ட தாண்டவ மூர்த்தயே நம:

ஆதாரம்: சிவபராக்கிரமம் நூல் – 1895 – ஈ. இரத்தினவேலு முதலியார், சென்னை.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உத்தர காமிகாகமத்தில் நிருத்தமூர்த்தி ஸ்தாபன முறை

(46-ஆவது படலம்)

சுலோகம் 1-5

நடராஜாவின் பிரதிஷ்டையை லட்சணத்துடன் கூறுகின்றேன். நான்கு கைகள், மூன்று கண்கள், விகீர்ணமான (பரந்த) ஜடையை உடையவரும்,

ஜடாமகுடத்துடன் கூடியவரும், சுருட்டிக் கொண்டு படத்துடன் கூடி சுற்றப்பட்ட சர்ப்பமுடையவரும், ஐந்து முதல் ஒவ்வொன்றதிகமான பின்பாகம் இருபக்கமுடைய,

இடைவெளியுடைய முப்பது எண்ணிக்கையுடைய ஜடையை உடையவரும், கருவூமத்தை, கொன்னை, எருக்கு முதலிய புஷ்பங்களையும், பிங்கள வர்ணமுடைய ஜடைகளை உடையவரும்,

ஜடையின் தக்ஷிண பாகத்தில் அஞ்சலி ஹஸ்தமுடைய கங்கையையுடையவரும், இடப்பாகத்தில் ஜடையில் இளம்பிறைச் சந்திரனை உடையவரும் (ஜடாமகுடத்தில்),

மகிழம்பூ மாலையையுடையவரும், ஸர்பாபரணம் அணிந்தவராயும், புலித்தோலை அணிபவரும், சர்வாபரண பூக்ஷிதராகவும்,

சுலோகம் 6-10

இடது தோள் முதல் தொங்கிக் கொண்டிருக்கிற புலித்தோலை தரித்தவராகவோ திவ்யாம்பரத்தோடு கூடியவ ராகவோ, மான் தோலை தரித்தவராகவோ;

தலையில் உள்ள பிரம்ம கபாலமும் எல்லா புஷ்பங்களால் அலங்கரிக்கப்பட்டவரும், பன்றியின் தந்தத்தை தரித்த வரும், புலி நகத்தை உடையவரும், ஆமையின் ஓட்டையும்,

சங்கு மணிகளால் தொடுக்கப்பட்ட மாலையால் அலங்கரித்த ஹ்ருதய்தையுடையவராகவும் வலது காலால் நின்று கொண்டு இடது காலால் மேலே குறுக்காக மடித்தோ;

குஞ்சிதபாதமாகவும், இடது கையை குஞ்சித பாதத்திற்கு மேல் ப்ரஸாரிதகரமாகவும், அம்பிகையின் முகமாகிய தாமரையில் சுற்றுகின்ற வண்டைப்போல் கண்ணையுடையவராகவும்;

பாதத்தில் சலங்கையும், கொலுசு என்ற ஆபரணத்தையுடையவராகவும், இடது காதில் கர்ண பத்ரமும், வலது காதில் மகர குண்டலமும் உடையவரும்;

சுலோகம் 11-25

வலக்கை அபய முத்திரையும், படத்துடன் கூடிய சர்பத்தையுடையவரும், பார்ச்வ இடக்கையில் நெருப்பையும், வலக்கையில் டமருகம் (உடுக்கை) யுடையவராகவும், யக்ஞோபவீதமுடையவரும், பால்போல் வெண்மையானவரும், பன்னிரண்டங்குலம், பங்கமாக உடையவரும் (வளைந்ததாக); பல சர்ப்பங்களையுடையவரும், அபஸ்மாரத்தின் மேல் நிற்பவராகவும், சிரஸ் நெற்றியின் வலப்பக்கம், மூக்கின் வலப்பக்கமும்;

நாபியின் வலப்பக்கம், குதிகால் மத்தியிலும் சூத்ரம் காண்பிக்கவும், நெற்றியின் மத்திய சூத்ரம் இரண்டு மாத்ரமாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கடி (இடுப்பு) பாக சூத்ரங்களின் மத்தி மூன்று மாத்ரமாகும். இடுப்பு முதல் இடது துடை வரை உள்ள சூத்ரமும் மூன்று மாத்ரமாகும்.

இரண்டு கணுக்கால் மத்தியில் உள்ள சூத்ரம் ஒரு அங்குலமாகும், வளைந்த முழங்கால் வரை உள்ள சூத்ரமானம் பன்னிரண்டு, எட்டு, ஏழு என்ற மாத்ராங்குலமாகும்.

அந்த ஜாநு சூத்ரத்திலிருந்து, இடது ப்ருஷ்டம் வரையுள்ளது, பதினேழு அங்குலமாகும். அந்த சூத்ரத்திலிருந்து இடது முழங்கால் வரை நாற்பத்தியொன்றும் பத்தங்குலமாகும்.

இடது சூத்ரத்திலிருந்து வயிறு பக்கம் குக்ஷி பாகம் எட்டு அங்குலமாகும். அந்த சூத்ரத்திலிருந்து வலது குக்ஷி பாகம் பன்னிரண்டங்குலமாகும்.

வலது துடையிலிருந்து சூத்ரம், பதினேழு அங்குலமாகும். இடது பக்க வாமபாக துடையிலிருந்து ஒன்பது மாத்ரமாகும்.

இடது கண்டம் மத்ய சூத்ரத்திலிருந்து, ஐந்தங்குலமாகும். வலது கண்ட (கழுத்து) சூத்ரமும் அதே பாக அளவான ஐந்தங்குலமாகும்.

அந்த சூத்ரத்திலிருந்து இடது தோள்வரை மூன்றங்குலம் குறைவானதாகும். அல்லது வேறு விதமாகவும் சூத்ரபாதம் (கோடிடும் முறை) கூறப்படுகிறது.

கண்ணின் கருவிழி வரையும், தலை மூக்கின் வலது பாகம் தொப்பூழின் வல இடப்பாகம் ஊன்றியதான வலது முழங்கால், கணுக்கால் மத்தியமும் வரை;

ஸ்பர்சமான சூத்ரம், மத்ய சூத்ரம் எனப்படும். மேல் சூத்திரத்திலிருந்து இடப்பாகம் ஐந்து மாத்ரமும், முகமும் கழுத்தும் மூன்று மாத்ரமும்;

தோள்பாகம் வரை பதினைந்து மாத்ரமும், கக்ஷ பாகம் வரை ஒன்பது மாத்ரமும், வயிறு மத்தியில் எட்டு மாத்திரையும் இடுப்பு பாகம் ஏழங்குலமாகும்.

இடுப்பு பாகம் பதினைந்து அங்குலமாகும். வேறு இடத்தில் 60 அங்குலமாகும். ஒன்பது மாத்ரம் துடை பாகமாகும். குதிகால் வரை நான்கங்குலமாகும்.

சுலோகம் 26-30

ஏழங்குல முகமும், வேறு இடத்தில் கழுத்து ஆறு மாத்ரமாகும், தோளின் கடைபக்கம் மூன்று மாத்ரையும், கக்ஷாந்தம் ஏழு மாத்ரையுமாகும்.

பதினான்கங்குலம் குக்ஷி பாகமும், இடுப்பின் மேல் பாகம் நான்கு மாத்ரமும், கடி பாகம் நான்கு மாத்ரமும், முழங்கால் எட்டங்குலமும் ஆகும்.

பாதாக்ரபாகம் ஒரு மாத்ரமும் (முகத்திற்குச் சொன்ன ஏழு மாத்ரமும்) அறிந்து செய்யவும், நீட்ட பாதத்தின் நீளம், ஸ்தித பாதத்தின் முழங்கால் சமமாகும்.

அப்பக்கத்து முழங்கால்களின் இருமுக இடைவெளி இரண்டங்குலமாகக் கூறப்பட்டது. இடுப்பின் மேல் உயரமானது, இடது முழங்காலின் உயரமாகும்.

அந்த துடை மத்தியிலிருந்து நாபி வரை இடைவெளி ஒன்பது மாத்ரையாகும். இடது முழங்கால் லம்பஹஸ்தத்தின் மணிக்கட்டின் இடைவெளி பதினான்கு மாத்ரையாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சுலோகம் 31–35

தொங்குகின்ற இடது ஹஸ்தத்திற்கும், அபய ஹஸ்தத்திற்கும், இடைவெளி ஆறங்குலம் வலக்கை கட்டைவிரல் கடை பாகத்திலிருந்து மார்பக நுனிவரை இரண்டங்குலம் இடைவெளி ஆகும்.

அந்த பாகூ உச்சமும், அந்த தோள்களிலும் மத்ய ஹ்ருதயத்திற்கு சமமாகும். பதினேழு அங்குலம் தண்ட ஹஸ்த (லம்ப) புறங்கை ப்ரதேசத்திற்கும் இடைவெளியாகும்.

முழங்கை கடையிலிருந்து அக்னி உச்சமும் அக்னி உயரமும் ஐந்தங்குலம் சிரோபாகம் முதல் கேசம் வரை உள்ள கோலகமும் மூன்று சிகைகளுக்கும் ஐந்தங்குலம்.

உடுக்கை தரித்த ஹஸ்தம் கர்ணத்தின் உயரத்தில் ஓரங்குலம் அதிகம். டமருக விஸ்தாரம் ஒன்பதங்குலமாகும். முக விஸ்தாரம் ஐந்தங்குலமாகும்.

கோலக மத்ய விஸ்தாரம், சுற்றிலும் உள்ள விஸ்தாரமும், மூன்றங்குலம் ஒரு நாக்கு உடையதும், கம்பீர சப்தம் உடையதுமாக ஸர்ப்பமுடையவராக உள்ளன;

சுலோகம் 36–40

இரண்டு கைகளிலிருந்து மணிக்கட்டின் கடையளவு முப்பதங்குலமாகும். அபஸ்மார உயரமானது பதினொன்று, பன்னிரண்டு (ஒன்பது) எட்டு மாத்திரையாகும்.

தேவருடைய முகம் போல் அபஸ்மார முகம் அமைக்கவும். இரண்டு மடங்கு முதல் ஐந்து வரையானவுள்ளதாகவும்; முகத்தின் அரை அளவு அதிகமாக்கி ஏழு அளவு வரை உதாரணம் கூறப்பட்டது. நான்கு தாள அளவில் அபஸ்மார உருவம் அமைக்கவும்.

சிரோ பாதத்திலிருந்து பாதம் வரை ஆறு, எட்டு என்று பாகமாக பிரிக்கவும். சிரோ பாகத்திலிருந்து கேசம் வரை உள்ள ப்ரதேசம் கோளகம் ஆகும். தலைப்பாகையிலிருந்து தலைக்கேசம் வரை கோளகம் ஆகும்.

கேசத்தின் கடைப்பாகம் முதல் சரீம் வரை அஷ்டபாகமாகும். களதேசம் அரையங்குலம், ஒன்றரை அங்குலம் கர்ண தேசம்.

சுலோகம் 41–45

இடுப்பிலிருந்தும் பாகத்திலிருந்தும் ஹ்ருதயம் வரை ஆறங்கலம் ஆகும். ஹ்ருதய்திலிருந்து நாபிவரை ஆறங்குலமாகும்.

நாபியிலிருந்து ஆண்குறிக் கடைப்பாகம் வரை ஐந்தங்குலமாகும். அதிலிருந்து துடைப்பாக நீளம் ஏழு அம்சமாகும். முழங்கால் அளவு இரண்டு மாத்ரை ஆகும்.

ஜங்கையின் (முழங்கால் கிழ்ப்பிரதேசம்) அளவு ஏழம்சம், பாதத்தின் அளவு இரண்டு மாத்ரை, இரு புஜம், இரண்டு கண், மேல்நோக்கிய உடம்பு கீழ்நோக்கிய முகம்;

ஸர்ப சரீம் இடது கையிலும், ஸர்ப சிரஸ்தக்ஷ ஹஸ்தத்திலும் அழகாக அலங்கரிக்கப்பட்டதும் வளைந்த சரீம் உடையவராகவும், ஸ்வாமியின் வலப்பாக சிரசை உடைய அபஸ்மாரத்தை அமைக்கவும்.

தேவருடைய முக அளவு சமமாகவே கங்கையின் முழு அளவு ஆகும். இரு கைகளும் முக்கண்ணும் கரண்ட மகுட முடையவளாகவும்;

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சுலோகம் 46-50

சர்வாபரண பூஷிதையாயும், அஞ்சலி ஹஸ்தமுடையவளாயும், ஊர்த்தவ பாகத்திலிருந்து அதோ பாகம் வரை நீர்வழியும் தோற்றத்துடனும், அமைத்து லக்ஷணமுடைய;

கங்கா தேவியுடன் கூடியவராகவோ கங்கா தேவி ரஹிதமாகவோ அமைக்கவும், ப்ரபை என்கிற திருவாசியின் விஸ்தாரம் நூற்றுப் பத்தங்குலமாகும்.

நூற்றி முப்பத்தி ஏழு ஆயாமம் ப்ரபையின் தண்டபாக அளவாகும். ஒன்று முதல் பத்து மாத்ரைகளால் குறைவாகவோ அதிகமாகவோ ஆகும்.

இரண்டங்கலம் முதல் ஒரங்குல கணத்தில் ஏழங்குல பரிமாணமாக பிறைச்சந்திரனாகும். அதைப் போலவே ஈசனை அனுசரித்து பக்கத்தில் தேவியைக் கல்பிக்கவும்.

பத்ரகாளியையோ ப்ருங்கீரடியையோ அமைக்கவும். பரந்த விரிந்த கையையுடையதாக புஜங்கத்ராஸர் கூறப் பட்டு, நிருத்த லக்ஷணமான புஜங்கத்தையுடையதாகவும் அமைக்கவும்.

சுலோகம் 51-55

புஜங்கத்ராஸமாகவே செய்யவும் விசேஷமாகவும் கூறப்படுகிறது. மேல்பாகம் முழங்காலுக்கு மேல் தூக்கிய தாகவும் அமைக்கவும் முழங்காலுக்கு,

இரண்டு மாத்ரம், மூன்று மாத்ரம், நான்கு மாத்திரையாகவோ, நிருத்யலக்ஷணம் புஜங்கலலிதமாகும். அது பைரவம் எனப்படுகிறது.

புஜங்க த்ராஸப்படி எல்லாம் செய்யவும், என விசேஷமாக கூறப்படுகிறது. மேல் தூக்கிய தக்ஷிண பாதத்தையோ, இடது பாதத்தை உடையதாகவோ அமைக்கவும்.

பாதத்துடன் கூடிய சரீர மத்தியில் மேல் நோக்கிய பாததளமுடையவராகவும் அமைக்கலாம். சதுர்புஜமோ, அஷ்ட ஹஸ்தமோ, பலவித திவ்ய அஸ்த்ர பூஷிதராகவும் அமைக்கலாம்.

கற்சிலை முதலான த்ரவியங்களைச் சேர்த்து நடராஜரை அமைக்கவும். இவ்விதமாக நடராஜ லக்ஷணம் கூறப்பட்டது. இனி பிரதிஷ்டை கூறப்படுகிறது.

பிரதிஷ்டை விபரம் (சுலோகம் 56-60)

பிரதிஷ்டை காலம் முன்போல் எனக் கூறப்பட்டுள்ளது. அங்குரார்ப்பணம், ரத்ன ந்யாஸம், நயனோன்மீலனம், முதலியவை முன்போலவே செய்யவும்.

பிம்பசுத்தி, க்ராமாதி, ப்ரதக்ஷிணம், ஜலாதி வாஸம், மண்டபப் ப்ரவேசம் முதலியவை செய்யவும்.

சதுரஸ்ரம், விருத்தம், அஷ்டாச்சரம், முதலிய ரூபத்தில் எந்த ரூபத்திலோ ஒன்பது, ஐந்து, ஒன்று முதலிய எண்ணிக்கையில் குண்டங்களை அமைக்கவும்.

பத்து நபரதிகமானதாக ஆயிரம் ப்ராமணர்களுக்கு போஜனம் செய்வித்து மண்டப சுத்திக்காக புண்யாக ப்ரோக்ஷணம் செய்யவும்.

மரீசிபத பூஜையுடன் வாஸ்து ஹோமம் செய்யவும். வாஸ்த்து ஹோமம் இல்லாமலாவது பூமி பரிக்ரஹம் செய்யவும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



உத்தம தச தாளத்தில் நடராசர் படிமக்கோலம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



புஜங்கத்ராச நிருத்தம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சுலோகம் 61–65

सूत्रात्तु सव्यकुक्षिस्तु त्र्यङ्गुल इति स्मृतम् ॥

ऊरोर्दक्षिणतस्सूत्रं सप्ताधिकदशाङ्गुलम् ।
सूत्रात्तद्वामभागे तु नवमात्रमुदाहृतम् ॥

सूत्रात्तु वामकण्ठस्तु पञ्चाङ्गुल उदाहृतः ।
सूत्रात्तु दक्षकण्ठे तद्भाग इत्यभिधीयते ॥

सूत्रात्तु वामबाह्वन्तं त्र्यङ्गुलक्षयसंयुतम् ।
अथवान्यप्रकारेण सूत्रपातोऽभिधीयते ॥

कनीनिकान्तं तन्मूर्ध्नः तद्वन्नासापुटान्ततः ।
नाभेश्च दक्षवामान्तं स्थिताङ्घ्रेर्गुल्फमध्यमम् ॥

स्पृष्ट्वा यत्पतितं सूत्रं मध्यसूत्रमुदाहृतम् ।
सूत्राद्वाममुखं पञ्च[मा*]त्रं कण्ठं त्रिमात्रकम् ॥

बाह्वन्ते तिथिमात्रं स्यान्नवमात्रं तु कक्षगम् ।
मध्योदरेऽष्टमात्रं स्यात् श्रोणी विश्वाङ्गुलेन च ॥

कटिस्तिथ्यङ्गुलेन स्यादन्यत्र षष्टिमात्रकः ।
नवमात्रं तदूरु स्यात्पार्ष्ण्यन्तं वेदतुङ्ग[क*]म् ॥

सप्ताङ्गुलं मुखं नेत्रं कण्ठस्स्याद्दसमात्रकम् ।
बाह्वन्ते तु त्रिमात्रं स्यात्कक्षान्ते विश्वमात्रकम् ॥

मुन्यङ्गुलं भवेत्कुक्षौ श्रोण्यां स्याद्युगमात्रकम् ।
कट्यां च वेदमात्रं स्याज्जानुरष्टाङ्गुलं भवेत् ॥

पादाग्रे मुखमात्रं स्यादेवं बुद्ध्वा समाचरेत् ।
स्थितजानुसमं विद्याद्वर्तिताङ्घ्रेस्समुच्छ्रयम् ॥

तत्पार्ष्णिजान्वोर्द्विमुखव्यन्तरं परिकीर्तितम् ।
श्रोणीसमुच्छ्रयं वामजानोरुद्धरणं मतम् ॥

तदूरुमध्यान्नाभेश्च अन्तरं नवमात्रकम् ।
तज्जानोर्दण्डहस्तस्य मणिबन्धान्तरं मनुः ॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



நந்தி மீது சதுர தாண்டவர்
(ஸ்ரீஅமிர்தகடேஸ்வரர் திருக்கோயில், மேலக்கடம்பூர், சிதம்பரம் வட்டம்)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



ஸ்ரீநடேசர்
(தற்போது உள்ள இடம்: விக்டோரியா – ஆல்பர்ட் மியூசியம், தெற்கு கென்சிங்டன், லண்டன்)
(12ஆம் நூற்றாண்டு)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

तस्मादभयहस्तस्य मणिबन्धो रसाङ्गुलः ।
तस्य चाङ्गुष्ठमूलान्तात्स्तनाक्षब्यन्तरं मतम् ॥
ततो(द्वो?)स्समं तलोच्चं स्यात्तद्वाह्वोर्मध्यमात्पुनः ।
सप्तादशाङ्गुलं विद्याद्दण्डहस्तस्य को(कू?)र्परम् ॥
भुजान्तं साग्निहस्तोच्चं सोग्निः पञ्चाङ्गुलोच्छ्रयः ।
विस्तारः कोलकस्तस्य शिखाभिस्त्रिसृभिर्युतः ॥
धृताडमरुको हस्तो कर्णोच्चादङ्गुलोऽधिकः ।
साग्नि डमरुकायामो भूतैस्तु मुखविस्तृतिः ॥
कोलको मध्यविस्तारः परितस्सूत्रयन्त्रितः ।
एकजिह्वासमायुक्तो गम्भीरध्वनिसंयुतः ॥
बाह्वास्तु मणिबन्धान्तं चतुर्विंशत्तथापरम् ।
अपस्मारोच्छ्रयं भानुरुद्रनन्दाष्टमात्रकैः ॥
देवस्य वक्त्रमानेन स्यादपस्मारमानकम् ।
वक्त्रद्वयं समारभ्य पञ्चवक्त्रावसानकम् ॥
वक्त्रार्धमानवृद्धया तु सप्तमानमुदाहृतम् ।
चतुस्तालेन कर्तव्यमपस्मारो द्विजोत्तमाः! ॥
उष्णीषात्पादपर्यन्तं षडष्टांशं विभाजयेत् ।
उष्णीषात्केशपर्यन्तं कोलकं चेति कीर्तितम् ॥
केशान्ताद्धनुपर्यन्तमष्टभागमिति स्मृतम् ।
गलमर्धाङ्गुलं प्रोक्तमध्यर्धः कर्ण उच्यते ॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

षडङ्गुल इति प्रोक्तो हिकादिहृदयान्ततः ।
तथैव तस्मान्नाभ्यन्तं षडङ्गुलमिति स्मृतम् ॥
तस्मात्तु मेढ्रमूलान्तं कौशिकाङ्गुलमुच्यते ।
ऊर्वायामं तु सप्तांशं जानूत्सेधो द्विमात्रकः ॥
जङ्घायामस्तु सप्तांशः पादोत्सेधो द्विमात्रकः ।
द्विभुजश्च द्विनेत्रश्च ऊर्ध्ववक्त्रस्त्वधोमुखः ॥
व्यालं वै वामहस्ते तु तस्य मूर्धा तु दक्षिणे ।
आवृतालङ्कृता भङ्गी सव्यपार्श्वशिरोयुतः ॥
देवस्य वक्ष्मानेन जाह्नव्यायाम उच्यते ।
द्विभुजा च त्रि(द्वि?)नेत्रा च करण्डमकुटान्विता ॥
सर्वाभरणसंयुक्ता कृताञ्जलिपुटान्विता ।
ऊर्द्ध्वभागादधोभागं तोयाकारेण कारयेत् ॥
गङ्गादेव्यानया देवस्संयुक्तो वा विवर्जितः ।
प्रभावकाशं विस्तारो दशाधिकशताङ्गुलम् ॥
सप्तत्रिंशच्छतायामतद्दण्डो भागविस्तरः ।
एकाद्यदशपर्यन्तमात्रैरूनाधिकापि वा ॥
द्व्यङ्गुलादङ्गुलघ्र्या तु बालचन्द्रस्तु सप्तधा ।
तद्दशात्पार्श्वगां देवीं कल्पयेत्तद्विधानतः ॥
कुर्य्याद्भृङ्गीरटिं (भृङ्गिरिटिं?) वाथ भद्रकालीमथापि वा ।
भुजङ्गत्रास आख्यातो भुजङ्गललितस्ततः ॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



ஸ்ரீஆனந்த நடராஜத் திருவுருவம்
(ஸ்ரீஉமாமகேஸ்வரர் திருக்கோயில், கோனேரிராஜபுரம்)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸ்ரீ நடராஜர்
(சேமங்கலம் – தஞ்சை மாவட்டம்)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

भुजङ्गत्रासवत्सर्वं विशेषः कश्चिदस्ति हि ।
उद्धृतस्य तलं कुर्यात्स्थितजानूर्ध्वतः क्रमात् ॥
द्विमात्रं वा त्रिमात्रं वा चतुर्मात्रमथापि वा ।
भुजङ्गललितः ख्यातस्तज्ज्ञैरेव इहोच्यते ॥
भुजङ्गत्रासवत्सर्वं विशेषस्तत्र चोच्यते ।
उद्धृतं दक्षिणं पादं वामपादं तु वा नयेत् ॥
स पादो देहमध्यस्थ ऊर्द्ध्वपादतलान्वितः ।
चतुर्भुजोऽष्टहस्तो वा नानादिव्यास्त्रभूषितः ॥
शिलादिद्रव्यमासाद्य कुर्य्यादेवं नटेश्वरम् ।

(उत्तरकामिकागमे षट्चत्वारिंशत्तमपटले ॥)

नृत्तार्धोद्धृतवामाङ्घ्रि जानु नाभिसमोत्थितम् ।
पादाङ्गुष्ठसमो जानु जान्वङ्गुष्ठसमोद्धृतम् ॥
प्रसार्य वामहस्तं च दण्डव दयोपरि ।
अभयं दक्षिणं हस्तं शेषं डमरुकान्वितम् ॥
कण्ठसीमान्तमुद्धृत्य यथाशोभं प्रकल्पयेत् ।
साग्निकं वामहस्तं तु बाहुसीमान्तमुद्धृतम् ॥
पादाधस्स्थमपस्मारं सर्पक्रीडासमन्वितम् ।
धुस्तूरकं करोटिं च गङ्गेन्दुबकपिञ्छकम् ॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

तिस्रः पञ्चजटास्सप्त प्रसार्य कुसुमोज्ज्वलाः ।
सव्ये त्वेवं तथा वामे दीप्ताग्निसदृशोज्ज्वलाः ॥
नृत्तरूपमिदं वत्स ! सर्वशान्त्यर्थमुच्यते ।

(सुप्रभेदागमे चतुस्त्रिंशत्तमपटले ॥)

नृत्तमष्टाशतविधं तत्रादौ नव कथ्यते ।
भानुरुद्रदशांशं वा तुङ्गं नृत्तनतं भवेत् ॥
हिक्कासमानमुन्नम्य दक्षहस्ताङ्गुलाग्रकम् ।
तद्धस्ततलमध्ये वा मध्यमाङ्गुलिकाग्रके ॥
तन्मध्यपर्वगं वाथ वह्निं पात्रगतं तु वा ।
पात्रं विनाथवा कुर्यादपरे डमरुं तथा ॥
दक्षिणे त्वन्यहस्ते स्यादभयं पूर्वमुक्तवत् ।
अभये प्रकोष्ठमध्ये तु भुजङ्गवलयं न्यसेत् ॥
डोलायमानं तद्वामहस्तं कुर्याद्यथोचितम् ।
स्थिताङ्घ्रिजानोर्वामाङ्घ्रिजानुनीव्रं कलाङ्गुलम् ॥
सुविकीर्य जटाभारं नानानागविचित्रितम् ।
करोटिकाभिर्दुर्द्धूर(धुस्तूर ?)कुसुमैश्च भुजङ्गमैः ॥
भूषितं मकुटं कुर्याद् दक्षिणेऽर्धेन्दुशेखरम् ।
सिन्दूरालङ्कृतोत्तंसमक्षमालावलम्बितम् ॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



சதுர தாண்டவ நடேசர்
(ஸ்ரீமகுடேஸ்வரர் திருக்கோயில், திருப்பாண்டிக் கொடுமுடி)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



சந்தியா தாண்டவம்
(படிமக் கோடுகள்)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

भस्मधूलितसर्वाङ्गं किंचित्प्रहसिताननम् ।
यज्ञोपवीतादियुतं व्याघ्रचर्माम्बरान्वितम् ॥

दक्षिणं कुञ्चितं पादमपस्मारोपरि स्थितम् ।
चतुस्तालेन कर्तव्यमपस्मारं प्रमाणतः ॥

शम्भोस्सव्यगतं तस्य शिरः कुर्यादधोमुखम् ।
पादौ विकीर्ण्य(र्ये ?) हस्ताभ्यां व्याललीलामुदान्वितम् ॥

व्यालं वै वामहस्ते वा दक्षिणं मुद्रयान्वितम् ।
सस्यश्यामनिभं कुर्यादपस्मारं विशेषतः ॥

पद्मपीठमधः कुर्यात्कलाङ्गुलसमुच्छ्रयम् ।
तच्चतुर्गुणविस्तारं प्रभामण्डलसंयुतम् ॥

रविमण्डलवृत्तं तु प्रभामण्डलमत्र तु ।
तत्र वामेऽप्युमादेवीं प्रागुक्तविधिना कुरु ॥

एतत्स्यात्प्रथमं नृत्तं सर्वलोकहितावहम् ।
(शिल्परत्ने द्वाविंशपटले ॥)

चतुर्भुजं त्रिनेत्रं च सुविकीर्णजटान्वितम् ।
कुररीवक्ष(?)संयुक्तं बर्हिपिञ्छसमन्वितम् ॥

[मौलेर्दक्षे तु [1]धुर्तूरमर्धचन्द्रसमन्वितम् ।
दक्षिणे तु जटाग्रे तु जाह्नवीमभिवन्दिताम् ॥

---

१. धुस्तूरपदं धुर्तूर इति दुर्द्धूर इति च कारणाद्यागमेषु बहुत्र प्रयुज्यते ।

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

पत्रं तु वामकर्णे तु दक्षिणे नक्रकुण्डलम् ।
सर्वाभरणसंयुक्तमुपवीतसमन्वितम् ॥
व्याघ्राजिनाम्बरोपेतं पादकिङ्किणिशोभितम् ।
जगत्प्र(गजप्र?)सारितं वामे दक्षिणेऽभयहस्तकम् ॥
डमरुं सव्यहस्ते तु वह्निर्वै वामहस्तके ।
वक्रं तु दक्षिणं पादमपस्मारोपरि स्थितम् ॥
उद्धृतं वामपादं तु पादाग्रं दक्षिणानुगम् ।
ललाटमध्यं दक्षे तु हित्वा सार्धाष्टकं यवम् ॥
तस्मात्तु लम्बयेत्सूत्रं दक्षनासापुटान्तकात् ।
दक्षिणाङ्घ्रेस्तु गुल्फस्य मध्यमादेव पातितम् ॥
तत्सूत्रकक्षयोर्मध्ये ऊरुस्स्मृत्यङ्गुलं भवेत् ।
तत्सूत्रकक्षयोरन्तर्वामोरोर्वसुमात्रकम् ॥
तत्सूत्राद्दक्षिणे ग्रीवा षडङ्गुलमिति स्मृतम् ।
तत्सूत्राद्वामके ग्रीवा गुणाङ्गुलमुदाहृतम् ॥
तत्सूत्राद्दक्षिणे नाभेर्व्यन्तरं चाङ्गुलं भवेत् ।
तत्सूत्रान्मेढ्रमूलान्ताद्वामभागमिति स्मृतम् ॥
वामा स्फिक्पिण्डिका सूत्रात्सप्तानामङ्गुलं भवेत् ।
तत्सूत्राद्वक्रपादस्य जानुकं तु दशाङ्गुलम् ॥
दक्षिणे बाहुसीमान्ताद्धिक्कासूत्रस्य मध्यमम् ।
(यवद्वयसमायुक्तं विंशदङ्गुलं चेति कीर्तितम् ॥)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

यवद्वयाधिकं विंशदङ्गुलं चेति कीर्तितम् ।
हिक्कामध्यं समारभ्य दोस्सीमान्तं तु वामके ॥

यवद्वयसमायुक्तं सप्तादशाङ्गुलं भवेत् ।
नाभेर्दक्षिणके कुक्षितारं भागमिति स्मृतम् ॥

नाभेर्वामे तु कुक्षौ च तारं त्रयोदशाङ्गुलम् ।
वरदाभिधरं हस्तं दोस्समं चेति कीर्तितम् ॥

शरमात्रं पावकोत्सेधं विस्तारं तु गुणाङ्गुलम् ।
त्रिशिखाभिस्समायुक्तं कल्पयेत्तलमध्यमे ॥

बाहोश्च मणिबन्धाच्च चतुस्त्रिंशदङ्गुलं भवेत् ।
डमरुकोपेतहस्तं तु सूचीहस्तमिति स्मृतम् ॥

तत्सूचिहस्तकस्योर्ध्वं कर्णोर्ध्वसममुच्यते ।
बाहोश्च मणिबन्धाच्च चतुर्विंशदङ्गुलं भवेत् ॥

वामाङ्घ्रेश्चैव जानूर्ध्वं नाभेस्तु सममुच्यते ।
वामाङ्घ्रेः पार्ष्णिकाधश्च वक्राङ्घ्रेर्जानुकोपरि ॥

तत्समं त्विति विज्ञेयं तत्पार्ष्णेर्जानुकान्ततः ।
चतुस्त्रिंशतिमात्रं तु ह्यन्तरं चेति कीर्तितम् ॥

मणिबन्धकजान्वोश्च ह्यन्तरं तु यवं भवेत् ।
दोर्मूलान्तसमं चैव अभयाग्रं प्रकीर्तितम् ॥

मणिबन्धकबाहोश्च ह्यन्तरं तु यमं भवेत् ।
तस्य कूर्परमध्ये तु व्यालं तत्रैव विन्यसेत् ॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

चूचुकं नाभिकामूला द्व्यन्तरं[1] तु यमं(त्रं?)भवेत् ।
सव्यस्य वामसूत्रस्य मध्याद्वै पार्श्वयोस्तयोः ॥

वामबाहुद्वयोर्मध्ये शार्दूलाजिनकं न्यसेत् ।
त्रिवक्त्रायाममानेन अपस्मारं ततः कुरु ॥

चतुस्तालप्रमाणेन भूतरूपेण कारयेत् ।
तस्यैव वामपार्श्वे तु देवीं कुर्यात्सलक्षणम् ॥

भुजङ्गत्रासमेवं तु भिक्षाटनमथ श्रृणु ।

(पूर्वकारणागमे ॥)

नृत्तमूर्तिः । (२)

तदेव दक्षिणे पार्श्वे जटाग्रे जाह्नवी भवेत् ।
स्त्रीमानोक्ताङ्गसम्पूर्णं हृदयेऽञ्जलिसंयुतम् ॥

एवं जाह्नविसंयुक्तं नृत्तं यत्तद्द्वितीयकम् ।

(अंशुमद्भेदागमे पञ्चषष्टितमपटले ॥)

तदेव दक्षिणे पार्श्वे जटाग्रे जाह्नवी भवेत् ।
शम्भोरुच्चाङ्गुलेनैव षोडशाङ्गुलमुन्नतम् ॥
स्त्रीमानोक्ताङ्गसंपूर्णा हृदयेऽञ्जलिसंयुता ।
एवं जाह्नविसंयुक्तं नृत्तं यत्तद् द्वितीयकम् ॥

(शिल्परत्ने द्वाविंशेपटले ॥)

---

१. सूचिकानाभिकामूलद्व्यन्तरमिति स्यात् ।

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



ஸ்ரீநடராசர்
(திருமலை நாயக்கர் அரண்மனை அருங்காட்சியகம், மதுரை)
(10ஆம் நூற்றாண்டு)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



கால்மாறி ஆடும் ஸ்ரீநடராஜர்
(ஸ்ரீசொக்கநாதசுவாமி திருக்கோயில்,
வன்னியன் சுரக்குடி – திருப்பத்தூர்)
(14ஆம் நூற்றாண்டு)

கற்சிலா ரூபத்தில் ஸ்ரீநடராஜர்
(செண்பகராம நல்லூர் – 14ஆம் நூற்றாண்டு)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

नृत्तमूर्तिः । (३)

तदेव वामपादं तु अपस्मारोपरि स्थितम् ।
उद्धृतं दक्षिणं पादं वामात्तुङ्गं प्रसारयेत् ॥
शेषं प्रागिव कर्तव्यं नृत्तं...तुस्तृतीयकम् ।

(अंशुमद्भेदागमे पञ्चषष्टितमपटले ॥)

नृत्तमूर्तिः । (४)

सुविकीर्णजटाभारं जटामकुटमण्डितम् ।
जटामकुट(मण्डल ?)संयुक्तं शेषं प्रथमनृत्तवत् ॥
चतुर्थं नृत्तमेतत्स्यात् सर्वप्राणिहितावहम् ।

(अंशुमद्भेदागमे पञ्चषष्टपटले ॥)

अनुकीर्णजटाभारं जटामकुटमण्डितम् ।
जटामण्डलयुक्तं वा चतुर्थेऽन्यद्यथादिमम् ॥

(शिल्परत्ने द्वाविंशपटले ॥)

नृत्तमूर्तिः । (५)

उष्णीषोर्ध्वकसीमान्तं सव्यपादं समुद्धृतम् ।
सुवक्रं वामपादं तु अपस्मारोपरि स्थितम् ॥

भुजाष्टकसमायुक्तमेतत्पञ्चममुच्यते ।
अभयं शूलपाशं च डमरुं दक्षिणे करे ॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

कपालं चाग्निपात्रं च घण्टां हस्तिकरोपमम् ।
गजहस्तोपमं हस्तं प्रसार्य्य दक्षिणानुगम् ॥
यत्तत्प्रथमनृत्तस्य पूर्वसूत्रं प्रसारयेत् ।
पञ्चमं नृत्तमेवं स्यात्ततष्षष्ठं वदाम्यहम् ॥

अंशुमद्भेदागमे पञ्चषष्टपटले ॥

उष्णीषोर्ध्वैकमात्रान्तं सव्यपादं समुद्धरेत् ।
सवक्रं वामपादं तदपस्मारोपरिस्थितम् ॥
(उप) भुजाष्टकसं [आ*] युक्तमेतत्पञ्चममुच्यते ।
अभयं शूलपाशौ च डमरुं दक्षिणे करे ॥
कपालं चाग्निपात्रं च घण्टां[1] हस्तिकरोपमम् ।

(शिल्परत्ने द्वाविंशपटले ॥)

नृत्तमूर्तिः । (६)

दोर्भिष्षोडशभिर्युक्तं वामे गौरीसमायुतम् ।
स्कन्दधृग्वामहस्तेन सव्यहस्तोद्धृताञ्जलिः ॥
स्कन्दोभयकराभ्यां तु मातुस्तनकदाहृतम्[2] ।
एवं गौरी समीक्ष्येशं भीतातिस्नेहविस्मयात् ॥

---

१ 'तालिण्डुकरोपम'मिति पाठान्तरम् ॥ २ 'हस्ताभ्यामुद्धृतं स्कंधं स्तनं तस्य प्रसारितम्' इति पाठान्तरम् । 'निपीड्य वे' ति शिल्परत्नगतार्धेन समनन्तरस्थितेन भवितव्यमिति प्रतिभाति ।

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

अभयं डमरुं चैव वज्रं शूलं तथैव च ।
पाशं टङ्कं तथा दण्डं नागं वै दक्षिणे करे ॥

अभयं शूलपाशं च खड्गं डमरुकं ध्वजम् ।
वेतालं सूचिहस्तं च दक्षिणेऽष्टकरं भवेत् ॥

सव्यानुगकरं डोलं वामं चैव गजोपमम् ।
अनलं मिथुनं चैव वलयं केतुरेव च ॥

घण्टा खेटकपालं च वामपार्श्वेऽष्टहस्तके ।
अनलं गजहस्ताभं खेटकं विस्मयं तथा ॥

घण्टां चैव कपालं च क्षुरिका सूचिमेव च ।
वामे त्वष्टभुजं ख्यातं शेषं पञ्चमनृत्तवत् ॥

पादौ पंचमनृत्तं स्यात् यत्तत्तद्वद्विधीयते ।
षष्ठमं ह्येवमाख्यातं सप्तमं शृणु सुव्रत ! ॥

(अंशुमद्भेदागमे पञ्चषष्टितमपटले ॥)

दोर्भिष्षडङ्गसंयुक्तं[1] वामे गौरीसमायुतम् ।
स्कन्दो भयात्कराभ्यां तु मातुः स्तनहृदोदरात् ॥

निपीड्य वा कराभ्यां तु वामभागोद्धृताञ्जलिम् ।
एवं गौरी निरीक्ष्येशं भीत्यातिस्नेहविस्मयात् ॥

---

१ 'दोर्भिष्षोडशभिर्युक्त' मिति भवितव्यम् ।

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

अभयं डमरुं चैव वज्रं शूलं तथैव च ।

पाशं टङ्कं तथा दण्डं नागं वै दक्षिणे करे ॥

सजानुगकरं डोलं वामं गजकरोपमम् ।

अङ्गु(न?)लं मिथुनं चैव वलयं केतुरेव च ॥

घण्टां चैव कपालं च वामपार्श्वेऽष्टहस्तके ।

पादौ पञ्चमनृत्तस्य विधिवत्तद्विधीयते ॥

(शिल्परत्ने द्वाविंशपटले ॥)

नृत्तमूर्तिः । (७)

त्रिनेत्रं चाष्टहस्तं च सुविकीर्णजटायुतम् ।

कुञ्चितं वामपादं तु अपस्मारोपरि स्थितम् ॥

उद्धृतं दक्षिणं पादं चाङ्गुष्ठं चाग्रसीमगम् ।

अभयं शूलपाशं च डमरुं दक्षिणे करे ॥

कपालं चाग्निपात्रं च तथा विस्मयहस्तकम् ।

गजहस्तोपमं हस्तं सव्यासव्यानुगं तथा ॥

नतमानं दशांशं स्यात् वामे गौरीसमायुतम् ।

सप्तमं नृत्तमाख्यातं जगदार्तिविनाशनम् ॥

(अंशुमद्भेदागमे पञ्चषष्टपटले ॥)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

नृत्तमूर्तिः । (८)

तदेव षड्भुजोपेतमभयं डमरुं तथा ।
शूलं दक्षिणपार्श्वे तु कपालं विस्मयं तथा ॥

गजहस्तोपमं वामे सूत्रं प्राग्वत्तदष्टमम् ।
पञ्चमस्य च नृत्तस्य षष्ठमस्य च ... स्मृता ॥
नेत्रद्वयमिति ख्यातं शेषाणां तु त्रिनेत्रकम् ।

~(अंशुमद्भेदागमे पञ्चषष्टपटले ॥)

नृत्तमूर्तिः । (९)

चतुर्भुजं त्रिनेत्रं च जटामकुटसंयुतम् ।
अभयं डमरुं सव्ये वामेऽग्निर्गजहस्तवत् ॥

अपस्मारं विना पीठे वामाङ्घ्रिं कुञ्चितं स्थितम् ।
तत्तत्पुरस्स्थितं पीठे सव्यपादकानिष्ठिका ॥

तत्पादं कुञ्चितं युक्त्या सूत्रं युक्त्या तु लम्बयेत् ।
नवमं नृत्तमाख्यातं गङ्गाधरमथ श्रृणु ॥

(अंशुमद्भेदागमे पञ्चषष्टपटले ॥)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

காஸ்யப சில்ப சாத்திரத்தில் நிருத்தமூர்த்தி

(படலம் – 68)

நிருத்தமூர்த்தி லக்ஷணம்

இனி நடராஜ மூர்த்தியின் லக்ஷணத்தை விசேஷித்துக் கூறுகிறேன். சர்மமுண்டிகையானவள் உத்ஸாஹத்தை விருத்தி செய்வதற்காக உண்டானாள். ருருதண்டவதனத்தைச் செய்து ... ... (?)

அவள் ஹிம்சையில் உத்ஸாஹமுடைய முகத்தையுடையவளாக இருந்தாள். (அவள் லோக ஹிம்சையைச் செய்யாமல்) ஸுகமாக உட்கார்ந்திருப்பதற்காக, உலகத்திற்கு நன்மையை உத்தேசித்தும், அரசன் தேசம் இவைகள் அபிவிருத்தியடைவதற்காகவும் (பரமேசுவரன்) நர்த்தனம் செய்கின்றார். (3)

நர்த்தநமானது 18 விதமாகும். அவைகளில் முதலில் 9 விதமான நடநத்தைக் கூறுகிறேன்.

கீழே பரமேசுவரனுக்குக் கூறப்பட்ட விதியின்படிக்கு, பிம்பமானத்தைக் கொள்ளவேண்டும். ஸகல அங்கங்களையும் உத்தம தச தாலத்தில் கூறியுள்ளபடிக்கு கல்பிக்கவேண்டும். நிருத்த மூர்த்தியின் உயரமானது 120 அங்குலமாகும். (5)

(நடராஜ மூர்த்திக்கு) பூர்வ ஸூத்திரமானது, பிரபா மண்டல மத்தியிலிருந்து, உஷ்ணீஷ மத்தியத்திற்கு வலது பக்கம், லலாட மத்தியத்தின் வலது பக்கத்தில் 1 அங்கலத்திலுள்ள இடம், வலது கண்ணின் கோடி, நாஸாபுடத்தின் வலது பக்கம், முகவாய்க் கட்டையின் வலது பக்கம், கண்ட மத்தியம், நாபி மத்தியம், இடது துடையின் மத்தியம், ஸ்தித பாதத்தின் கணுக்கால் ஸந்தியின் (முண்டின்) நடு, இந்த இடங்களில் விழவேண்டும். (7.1/2)

நெற்றி, மத்தியஸூத்திரம், இவைகளின் மத்திய அளவு (ஒதுக்கம்) 4.1/2 அங்குலமாகும். கணுக்கால் முண்டு, மத்திய ஸூத்திரம் இவைகளின் ஒதுக்கம் 12 அங்குலம் விதிக்கப்பட்டிருக்கிறது. மத்திய சூத்திரத்திலிருந்து கண்ட மத்தியம் வரையில் ஒதுக்கம் 7.1/2 அல்லது 9.1/2 அங்குலமாகும். பூர்வஸூத்திரமானது, ஊர்துவ குக்ஷியை மேல் வயிற்றைத் தொட்டுக் கொண்டிருக்கவேண்டும். இவ்விதமாக பூர்வஸூத்திரத்தைத் தொங்கவிடவேண்டும். (10)

அந்த ஸூத்திரத்திலிருந்து டோலஹஸ்தாக்கிரம் (ஆடுவதுபோலத் தோன்றும் வலதுகை நுனி) வரையில் ஒதுக்கம் 16.1/2 அங்குலமாகும். அந்த ஸூத்திரத்திலிருந்து மற்றொரு கையாகிய இடது கையின் நுனியானது 4 அங்குலமாகும். அந்த ஸூத்திரத்திலிருந்து அக்நியை தரித்திருக்கும் (இடது) கராக்கிரகம் வரையில் (ஒதுக்கம்) 38 அல்லது 40 அங்குலமாகும். கீழே கூறிய அளவுக்கு மேலே (38 அல்லது 40 அங்குலத்திற்கு மேலே) 3 அங்குலம் கூடுதலாக (43 அங்கலம்) இருப்பதுமாகும். (12)

அந்த ஹஸ்தத்தின் (இடது கையின்) நடுவிரல் நுனியானது ஹிக்காஸூத்திர ஸமமாக (கழுத்துமட்டமாக)த் தூக்கி இருக்கவேண்டும். அக்கிநி பாத்திரமானது, அந்த தலத்தின் (இடது உள்ளங்கை) நடுவிலாவது, நடுவிரல் முதலிய விரல்களின் நுனிகளிலாவது, அவைகளின் மத்திய பர்வாக்களிலாவது தரிக்கப்பட்டிருக்கவேண்டும். பாத்திரமின்றி, பாத்திரத்திலிருக்கும் அக்கினியின் அகலம் 5 அங்குலமாகும். அந்த அக்கினியின் உயரமானது 7, 8 அல்லது 9 அங்கலமாகும். அந்த அக்கினியின் ஜிஹ்வைகள் (தீச்சுடர்கள்) 3,5, அல்லது 7 இருப்பதாகும். இவைகளில் மனதிற்குகந்தபடி கல்பித்துக் கொள்ளுவதாகும். (15)

இச்சுடர்களில் நடுச்சுடர் வலமாக இருக்கவேண்டும். வலப்பக்கத்தில், பூர்வ ஸூத்திரத்திலிருந்து பாஹு வக்கிரம் (கைநுனி) வரையில் ஒதுக்கம் 20 அங்குலமாகும். அங்கிருந்து (அந்த மத்திய ஸூத்திரத்திலிருந்து) உடுக்கையுடன் கூடிய வலது கையின் *மணிக்கட்டின் வெளிப்பக்கமானது 28 அல்லது 30 அங்குலமாகும். 40 அங்குலம் வரையில், முறையே கூடுதலாகக் கல்பித்துக் கொள்ளுவதுமாகும். அந்தக் கையின் மணிக்கட்டின் உச்சியானது, கழுத்து மட்டமாக இருக்க வேண்டும். (18)

ஆதாரம்: "காஸ்யப சில்பம்" – த.ச.ம. நூலகப் பதிப்பு.

* மணிக்கட்டின் வெளிப்பக்கமானது 38 அல்லது 40 அங்கலமாகும். இடது கையின் வலப்பக்கங்களில் 40 அங்குலமாகும் என்பது அச்சிட்ட புத்தகத்திலுள்ள பாடம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



ஸ்ரீநடேசர் (முன் அழகு)
(ஸ்ரீவடாரண்யேஸ்வரர் திருக்கோயில், திருவாலங்காடு)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



ஸ்ரீநடேசர் (பின் அழகு)
(ஸ்ரீவடாரண்யேஸ்வரர் திருக்கோயில், திருவாலங்காடு)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸூசீஹஸ்தமானது (வலது கையானது) உடுக்கை நடுவைப் பிடித்து, காது வரையில் உயர்ந்திருக்க வேண்டும். சுட்டு விரல் நுனியானது ஸூசீமுகமாக இருக்கவேண்டும். சுட்டுவிரலானது ரஜநியாக (?) (நேராக) இருக்கவேண்டும்.

அல்லது (உடுக்கையின் நடுவில் இழுத்துக் கட்டியிருக்கும்) சர்மஸூத்திரமானது (கயிறு போன்ற வாரானது) பீடம் போன்ற நடுவிரலுக்கு மேலே இருக்கவேண்டும். உடுக்கையை அணிவிரலின் மீது கல்பிக்கவேண்டும். (20)

உடுக்கையின் நீளமும் அகலமும் முறையே 8 அங்குலமும், 5 அங்குலமுமாகும். அதன் மத்தியத்தின் அகலமானது, 3 அங்குலமாகும். இதை பத்மாகாரமாகக் கல்பிக்கவேண்டும். இது இரண்டு வளையங்களுடன் கூடியதாக தோல்க் கயிற்றினாலே கட்டப்பட்டிருக்கவேண்டும். (இந்த உடுக்கையானது) பசுமாட்டின் தோலாலே உருவகப்படுத்தப் பட்டிருக்கவேண்டும்: இதை பசுமாட்டின் தோலாலேதான் கல்பிக்கவேண்டும். (22)

ஸூச்சியக்கிரத்திலிருந்து (சுட்டுவிரல் நுனியிலிருந்து) காது வரையில் ஒதுக்கமானது 40 அங்குலமாகும். 45 அங்குலம் அல்லது 50 அங்குலமிருப்பதுமாகும். ஸூசியானது பார்சுவஸூத்திரத்திற்கு ஸமமாக இருக்கவேண்டும். (23.1/2)

வலது பக்கத்தில் பூர்வ ஹஸ்தத்தை அபய ஹஸ்தமாக கல்பிக்கவேண்டும். பூர்வஸூத்திரத்திலிருந்து அபய ஹஸ்தத்தின் மத்தியமானது (மத்தியம் வரையில் ஒதுக்கம்) 24 அங்குலமாகும். அந்தக் கையின் நடுவிரல் நுனியானது, ஹிக்காஸூத்திரத்திற்கு ஸமமாக இருக்கவேண்டும். மத்திய ஸூத்திரத்திலிருந்து அந்தக் கையின் முழங்கை வரையிலுள்ள ஒதுக்கம் 42(40) அங்குலமாகும். அபய ஹஸ்தத்தின் ப்ரகோஷ்டம் (முன்கை) நடுவிரல், ஸர்ப்ப வலயத்தைக் கல்பிக்கவேண்டும். அந்த ஸர்ப்பத்தின் நீளமானது நடுமுன் கையின் சுத்தளவைப்போல் 1.1/4 பங்கு இருக்கவேண்டும். அந்த 1.21/4 பங்கு நீளத்திற்கு மேலே, படமானது 12 அங்குலம் உயர்ந்திருக்கவேண்டும். அந்தப் படலத்தின் அகலமானது 7 அங்குலமிருக்கவேண்டும். அதன் கனம் 1 அங்குலமாகும். அந்த் ஸர்ப்பமானது, நீண்ட நாக்கையுடையதாக முன் பக்கத்திலிருப்பவர்களைப் பார்த்துக் கொண்டிருக்கவேண்டும். முறையறிந்தவன், இவ்விதமாக புஜங்க வலயத்தைக் கல்பிக்கவேண்டும். (28.1/2)

மத்திய ஸூத்திரத்திலிருந்து, வலது பக்கத்தில் கக்ஷாந்தரமானது 12 அங்குலமாகும். மத்திய ஸூத்திரத்திலிருந்து இடது பக்கத்தில் மத்தியோதரமானது, 9 அங்குலமாகும். *பிண்ட ஸூத்திரமானது 9 முதல் 18அங்குலமாகும்.(?) (30)

மத்திய ஸூத்திரத்திலிருந்து குஞ்சித பாதத்தின் முழங்கால் வரையில் மத்தியிலுள்ள ஒதுக்கம், 10,9 அல்லது 8 அங்குலமாகும். அந்த குஞ்சிதபாதத்தின் நதமாநமானது. (நதமாநம் – செரிவின்அளவு) 12, 11 அல்லது 10 அங்குலம் இருக்கும்படி கல்பிக்கவேண்டும்.

ஸ்தித பாதத்தின் முழங்காலிலிருந்து இடதுகால் முழங்கால் வரையில் ஒதுக்கம் முறையே 3 அங்குலம், 5 அங்குலம் 14 அங்குலம் என்று 3 விதமாகும்.

புத்தியில் சிறந்தவனே! ஸ்தித பாதத்தின் நளகையின் நடுவிலிருந்து (நளகை – கணுக்காலுக்கு மேலே கண்டைக் காலில் சிறுத்திருக்குமிடம்) இடது குதிகால் வரையிலுள்ள ஒதுக்கம் 44 அல்லது 45 அங்குலமாகும், என்று விதிக்கப்பட்டிருக்கிறது. (உத்திருதபாதத்தின்) நதமாநமானது 45, 46, 47 அல்லது 48 அங்கலமாகும். (நதம் – சாய்வு அல்லது செறிவு). (34)

ஸ்தித பாதத்தின் முழங்காலிலிருந்து உத்திருதபாதத்தின் (தூக்கிய காலின்) குதிகால் வரையில் ஒதுக்கம் 34 அல்லது 33 அங்குலமாகும். இது ஜாநுபார்ஷ்ணியந்தரமாகும். (இது ஊன்றிய பாதத்தின் முழங்காலுக்கும், தூக்கிய பாதத்தின் குதிகாலுக்கும் மத்தியிலுள்ள அளவாகும்). (35)

தூக்கிய காலின் முழங்காலின் உச்சியானது நாபிமட்டமாக இருக்கவேண்டும். டோலஹஸ்தத்தின் முழங்கையானது நாளஸூத்திரத்திலிருந்து (மத்திய ஸூத்திரத்திலிருந்து) 10 அல்லது 11 அங்குலம் (ஒதுக்கம்) இருக்கும்படி கல்பிக்கவேண்டும். அந்த (டோல) ஹஸ்தத்தின் மணிக்கட்டிலிருந்து, இடது முழங்கால் வரையில் (ஒதுக்கம்) 10 அல்லது 9 அங்குலமாகும். டோலஹஸ்தத்தில் தொங்க விடப்பட்டிருக்கும் விரல் நுனியானது விசேஷித்து (அந்த அளவில்) இருப்பதாகும்.**

---

*மத்திய ஸூத்திரத்திலிருந்து, இடது பக்கத்தில் பிருஷ்ட பாகம் வரையில் ஒதுக்கம் *18* அங்குலமாகும் என்று இருக்க வேண்டுமென்று தோன்றுகிறது.

**டோலஹஸ்தத்தின் அளவானது *11* அங்குலமாகவும் இருப்பதாகும் என்பது ஸரஸ்வதி மஹால் நூலிலுள்ள பாடம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இடது முழங்கால், மத்தியஸூத்திரம் இவைகளின் ஒதுக்கம் 9 அல்லது 11 அங்குலமாகும். டோலஹஸ்தத்திலிருந்து அபயஹஸ்தம் (?) (வரதஹஸ்தம்) வரையில் ஒதுக்கம் 10 அங்குலமாகும். இங்கு கூறப்படாத மற்ற ஒதுக்கங்களை அழகாக இருக்கும்படி அமைத்துக் கொள்ளவேண்டும். (40)

கேசாந்தத்திலிருந்து பகபக்ஷத்தின் உயரமானது 18, 17, அல்லது 16 அங்குலமாகும். அதன் அகலமானது அதன் உயரத்தில் ஸரிபாதி அல்லது 3/4 பங்கு இருப்பதாகும். ஜடைகள் விரிந்து தொங்குவதானால் அவைகள் 5,6,7,9 அல்லது 11 சடைகளாக இருக்கவேண்டும். ஜடையின் நீளமானது, 32 அங்குலம் முதல் 61 அங்குலம் வரையில் ஒவ்வொரு அங்குலம் வீதமாக நீண்டிருப்பதாகும். தொங்கும் சடையின் நீளமானது இவ்விதமாகக் கூறப்பட்டிருக்கிறது. கேசாந்தத்திற்கு மேலே தலையின்மேலேயிருக்கும் சடைகள், சிறு விரலின் கனமுள்ளவைகளாக இருக்கவேண்டும்.

நடராஜ மூர்த்தியானது விசேஷித்து ஜடையில் புஷ்பமாலை, ஸர்ப்பம், எருக்கம்பூ, ஊமத்தம்பூ, ஹஸ்திசிரீஷம், (பெருவாகைப்பூ) கரோடீரத்நபந்தனம். (மண்டையோடுகளுடன் கூடிய ரத்னாபரணம்) இவைகளாலே அலங்காரம் செய்யப்பட்ட ஜடாமகுடத்தையுடையதாகும். ஸிந்தூரத்தினாலே அலங்கரிக்கப்பட்டிருப்பதாகும். (கழுத்தில்) மாலைகளும் ஹாரங்களும் தொங்கிக் கொண்டிருப்பதாகும்.

இந்த மூர்த்தியானது திருநீறணிந்து சிரித்த முகமும், யஜ்ஞோபவீதமும், ஹாரமும் தரித்திருப்பதாகும். (48)

ஸ்வாமியின் உதரமத்தியம் (நடுவயிறு) வரையில் பாஹுதர்மாக்கிரமானது (கையிலணிந்த மாலையின் நுனியானது) தொங்கிக் கொண்டிருக்கவேண்டும்.

உதரபந்தத்தின் அக்கிரமானது (வயிற்றில் இறுக்கிக் கட்டியுள்ள கயிற்றின் நுனிகள்) பிரபாமண்டலத்தை (பிரபாவளியை)த் தொட்டிருக்கவேண்டும்.

துடையின் மத்தியபாகம் வரையில் புலித்தோலை ஆடையாக அணிந்திருக்கவேண்டும்.

டோலஹஸ்தத்திற்கு மேலே அணிந்து கட்டப்பட்ட புலித்தோலாலான மேலாடையை அணிந்திருக்க வேண்டும். அந்த ஆடையானது பாஹுமூலத்தில் (கையினடியில்) 12 அல்லது 13 அங்குலமாகும். அந்த அளவில் ஸரிபாதி, அல்லது 3/4 பங்கு அதன் அகலமிருக்கவேண்டும். அது வட்டமாக இருக்கவேண்டும். (51)

இரு பாதங்களும் பாதஸரமணியைப் பெற்றிருக்கவேண்டும். ஸகல ஆபரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருக்க வேண்டும். கை விரல்கள் கால் விரல்கள் எல்லாவற்றிலும் ரத்நங்கள் பதித்த ஸவர்ணமோதிரங்கள் இருக்கவேண்டும். நடுவிரல் நீங்கிய விரல்கள் யாவும், மோதிரங்களுடனிருக்கவேண்டும்.

வலது கால் குஞ்சிதமாகவும், இடது கால் அபஸ்மாரன் மீது வைக்கப்பட்டுமிருக்கவேண்டும். பரமேசுவரன், பாத தலத்தை குறுக்காக வைத்துக் கொண்டு நிருத்தம் செய்து கொண்டிருப்பவராவர். இடது காலைத் தூக்கி வலது பக்கத்தில் குறுக்கே (நீட்டிக் கொண்டு) இருப்பவராவார். டோலஹஸ்தமானது முற்றிலும் அபஸ்மாரன் இதோ (எனது காலின் கீழே) இருக்கிறான் என்று சுட்டிக் காட்டுவதாகும். *அபஸ்மாரனுடைய உயரமானது 3,4 அல்லது 5 அங்குலமாகும் (?)

(அபஸ்மாரனுடைய சரீரத்தில்) உஷ்ணீஷம் 1 அங்குலம். கேசாந்தம் 1 அங்குலம். முகம் 8 அங்கலம். களமும் கண்டமும் 1/2 + 1.1/2 = 2 அங்குலம். ஹிருதயாந்தம் 9 அங்குலம். நாபியந்தம் 9 அங்குலம். மேட்ராந்தம் 6 அங்கலம். துடை 7 அங்கலம். முழங்கால் 2 அங்குலம். கண்டைக்கால் 7 அங்குலம். பாதம் 2 அங்குலம் ஆக உச்சியிலிருந்து பாதம் வரையில் 1, 1, 8, 2, 9, 9, 6, 7, 2, 7, 2 = 54 அங்குலமாகும்.

**கையின் நீளம் 14 அங்கலம். (கையின்) நடுவிரலானது கழுத்து மட்டமாகும். மற்றவைகளை யுக்தியுடன் கல்பித்துக் கொள்ளவேண்டும். அபஸ்மாரனை அதோமுகமாக (பூமியை நோக்கி) படுத்திருக்கும்படி கல்பிக்கவேண்டும்.

*அபஸ்மாரனுடைய உடலானது 3,4 அல்லது 5 வளைவு அல்லது நெளிவு உடையதாகும் என்பது ஸரஸ்வதி மஹால் நூலிலிருக்கும் பாடம்.

**இங்கு அபஸ்மாரனுடைய அளவுகளில் பலவித ஸந்தேகங்கள் உண்டாகின்றன. ஆகையால் புத்திமான்கள் மற்ற நூல்களில் கூறப்பட்டிருப்பதைப் பார்த்து, அவைகளை பொருத்தமாகக் கல்பித்துக் கொள்ளவேண்டும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



ஸ்ரீநடராஜர் (முன் அழகு மற்றும் பின் அழகு)
(வேளாங்கண்ணி – 10ஆம் நூற்றாண்டு)



ஆடல்வல்லான் செப்புத் திருமேனி (முன் அழகு மற்றும் பின் அழகு)
(ஸ்ரீபிரகதீஸ்வரர் திருக்கோயில், தஞ்சாவூர்)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பரமேசுவரனுடைய வலது பக்கத்தில் அபஸ்மாரனுடைய தலையை வைக்கவேண்டும். இடது பக்கத்தில் இரண்டு கால்களும் உதரப்பட்டிருக்கவேண்டும். அபஸ்மாரனின் வயிற்றின் உயரமானது (அபஸ்மாரனின் உயரமானது) 10, 9 அல்லது 8 அங்குலமாகும்.

அபஸ்மாரன் முகத்தைத் தூக்கிக் கொண்டு ஸர்ப்பத்தோடு விளையாடிக் கொண்டிருக்கவேண்டும். அவனுடைய இடது கையில் ஸர்ப்பமும், வலது கையில் அரிவாளும் இருக்கவேண்டும். அபஸ்மாரன் பயிர்ப்பச்சை நிறமுடையவனாவான். (62.1/2)

பத்ம பீடத்தின் உயரமானது 16 அங்கலமாகும். அதன் விஸ்தாரமானது உயரத்தைப் போல் 4 மடங்காகும். அதன் நீளமானது உயரத்தைப் போல் 1.1/4, 1.1/2 அல்லது 2 மடங்கு உள்ளதாகும். மேல் பத்மம், கீழ் பத்மம், பிண்டிகை இவைகளை (நூல்களில்) கூறியிருப்பது போலவே செய்யவேண்டும். பத்மாஸநத்தை பிரபாவளியுடன் முறையோடு செய்யவேண்டும். (64.1/2)

3 அங்குலம் முதல் 100 அங்குலம் வரையில் .... (66.1/2)

அதற்கு மேலே, 8ல் 1 பாகம் குறைந்து முறையே சிறுத்திருக்கவேண்டும். 1,2,3,4,5,6,7,8, அங்குலம், மறுபடியும் அதே கணக்கும், மேன்மேலும் கல்பிக்கவேண்டும். அவைகளில் தண்ட எண்ணிக்கைகளை கர்த்தாவின் அபிப்ராயப்படி செய்வதாகும். (அந்த தண்டங்கள்) பலவிதக் கொடிகளாலேயும் பலவிதமான பூக்களாலேயும் அலங்கரிக்கப்பட்டு அழகாக இருக்க வேண்டும். அதற்கு மேலே 3 தீச்சுடர்களைக் கல்பிக்க வேண்டும். அதைச் சுற்றிலும், ஒரு தாலம் (ஒரு அடி) இடைவெளி இருக்கவேண்டும். இத்தகைய பிரபா மண்டலத்தின் இருப்பானது (அமைப்பானது) சூரிய மண்டலத்தைப் போல இருக்கவேண்டும். (70.1/2)

அந்த நடராஜ மூர்த்தியின் இடது பக்கத்தில் முன்பு கூறியுள்ள விதியுடன் உமாதேவியைக் கல்பிக்கவேண்டும். இது முதலாவது நிருத்த (நடராஜ) மூர்த்தியாகும். இந்த மூர்த்தியானது, ஸகல லோகங்களுக்கும் (பிராணி அல்லது ஜனங்களுக்கும்) நன்மையைக் கொடுப்பதாகும்.

அதே மூர்த்தியானது, வலது பக்கத்தில் சடை நுனியில் கங்கையுடனிருந்தால், அது, இரண்டாவது நிருத்த மூர்த்தியாகும். கங்காதேவியானவள், ஸ்திரீ மாநத்தில் கூறப்பட்ட அங்க அமைப்புகளுடன், இரு கைகளையும் சேர்த்தக் கூப்பி மார்பில் அஞ்ஜலி பந்தத்துடனிருக்கவேண்டும். இந்த நிருத்தத்திற்கு ஜாந்ஹவீயுதம் (கங்கையுடன் கூடியது) என்று பெயர். *கங்கையானது, ஸ்வாமியின் தேஹலப்தாங்குலத்தினாலே 16 அங்குலமிருக்கவேண்டும். (73.1/2)

அதே மூர்த்தியானது, இடது காலை அபஸ்மாரன் மீது வைத்துக்கொண்டு, வலது காலைத் தூக்கி இடது காலுக்கு மேலே வைத்துக் கொண்டிருப்பதாகும். இந்த மூர்த்தியின் ப்ரம்ஹஸூத்திரமானது, நடு நெற்றியின் இடது பக்கம், இடது நாஸாபுடத்தின் பக்கம், ஸ்தித பாதத்தின் கணுக்கால் முண்டின் மத்தியம், இந்த இடங்களில் தொங்கவேண்டும். (76)
மற்றவைகள் முன் கூறியதுபோலவே கல்பிக்கப்படவேண்டும். இது 3வது நிருத்த மூர்த்தியாகும்.

விரிந்து சிதறிய சடையுடனாவது, சடை முடியுடனாவது இருந்து, மற்ற லக்ஷணங்கள் முதலாவது நிருத்தத்தைப் போல இருப்பது, நான்காவது நிருத்த பேதமாகும். இது ஸகல பிராணிகளுக்கும் நன்மையையுண்டு பண்ணும். (77.1/2)

வலது காலானது காதளவுக்குத் தூக்கப்பட்டு, இடது கால் குஞ்சிதமாக இருந்து, 8 கைகளுடனிருப்பது 5வது நிருத்தமாகும். வலது பக்கத்திலுள்ள 4 கைகளிலும், அபயம், சூலம், பாசம், உடுக்கை இவைகளிருக்கவேண்டும். இடது கைகள் 4லும், கபாலம், அக்னி, பாசம், (நாகம் – நாகபாசம்) மணி இவைகளிருக்கவேண்டும். யானையின் துதிக்கை போன்ற கையை வலது பக்கத்தில் நீட்டிக் கொண்டிருக்கவேண்டும். இதன் பூர்வ ஸூத்திரமானது, முதலாவது நிருத்தத்திற்குக் கூறப்பட்டதைப் போலவேயாகும். இவ்விதமாக 5வது நிருத்தத்தின் லக்ஷணம் கூறப்பட்டுள்ளது.

16 கைகளுடனும் இடது பக்கத்தில் கௌரீதேவியுடனும் இருப்பது, மற்றொரு வித மூர்த்தியாகும். (தூக்கிய) காலை இரு கைகளாலே தூக்கி கழுத்தில் போட்டுக் கொண்டு நீட்டியிருக்கவேண்டும். வலது பக்கத்திலுள்ள 8 கைகளில் அபயம் (1) சூலம் (2) பாசம் (3) கத்தி (4) உடுக்கை (5) துவஜம் (6) வேதாளம் (பூதாகிருதி விசேஷம்)(7) ஸூசீஹஸ்தம் (8)

*இந்த 1/2 சுலோகம் புதுப்பித்த புத்தகத்திலுள்ளது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இவைகளையும் தரித்திருப்பதாகும். மற்றவைகள், 5வது நிருத்த லக்ஷணத்தைப் போன்றவைகளாகும். இது 6வது நிருத்த மூர்த்தியின் லக்ஷணமாகும். இது அரசனுக்கும் ராஜியத்திற்கும் நன்மையைக் கொடுக்கும். (85)

மூன்று கண்களும், 8 கைகளும், விரிந்த சடையும் தரித்து, குஞ்சிதமான இடது காலையுடையவராய் அபஸ்மாரன் மீது நிற்பது மற்றுமோர் மூர்த்தியாகும். அபஸ்மாரனுடைய தலையானது ஸ்வாமியின் இடது பக்கத்திலும், அவனுடைய உதரப்பட்ட கால்கள் வலது பக்கத்திலுமிருப்பதாகும். [1]அவன் மேலே ஸுஸ்திதமாக வைக்கப்பட்டிருக்கும் ஸ்வாமியின் கால் பெருவிரல் நுனியானது பயங்கரமாக இருப்பதாகும்.

பூர்வ ஸூத்திரத்திலிருந்து பெருவிரல் வரையில் ஒதுக்கம் 12 அங்குலமாகும்.

வலது பக்கத்திலுள்ள கைகளில், அபயம் (1) சூலம் (2) பாசம் (3) உடுக்கை (4) இவைகளும், இடது பக்கத்திலுள்ள கைகளில், கபாலம் (5) அக்நியுடன் கூடிய பாத்திரம் (6) விஸ்மய ஹஸ்தம் (7) கஜஹஸ்தம் (8) இவைகளுமிருப்பதாகும். (89)

[2]வலது கரத்தில் கஜ ஹஸ்தமும், இடது கரத்தில் வியாள ஹஸ்தமும் (வியாளம் – ஸர்ப்பம்) இருப்பதுமாகும்.

பிரம்ஹ ஸூத்திரமானது, நடு நெற்றியிலிருந்து இடது பக்கத்தில் 3 அங்குலத்திலும், இடது நளகையின் நடுவிலும் தொங்கவேண்டும். அந்த பிரம்ஹ ஸூத்திரத்திலிருந்து இடது முழங்கால் வரையில் ஒதுக்கம் 9 அங்குலமாகும். நதமானம் (தொய்வு) 10 அங்கலமாகும். இடது பக்கத்தில் கௌரீ தேவியுடனிருக்கவேண்டும். இது 7வது நிருத்த மூர்த்தியாகும். இது ஸகல ஜகத்தின் துக்கங்களையும் நாசம் செய்துவிடும். (92)

அதே மூர்த்தியானது, 6 கைகளுடையதாக இருந்து, வலது பக்கம் கைகளில் (1) அபயம் (2) உடுக்கை (3) சூலங்களுடனும் இடது பக்கம் கைகளில், (4) கபாலம், (5) விஸ்மய முத்திரை (ஆச்சர்ய முத்திரை) (6) கஜஹஸ்தோபம முத்திரைகளுடனும் இருந்தால், அது 8வது நிருத்த மூர்த்தியாகும். இதன் ஸூத்திரம் முன்போலவேயாகும்.

நான்கு கைகளும், மூன்று கண்களும், வலது கைகளில் அபயம், உடுக்கையும், இடது கைகளில், அக்நி, கஜ ஹஸ்தமும் தரித்து, அபஸ்மாரனின்றி பீடத்தில், வலது கால் ஸுஸ்திதமாகவும் இடது கால் குஞ்சிதமாகவும் இருக்கும் மூர்த்தியானது ஒன்பதாவது மூர்த்தியாகும். இந்த மூர்த்தியின் கால் சிறுவிரல் பீடத்தின் முன் பக்கத்திலிருப்பதாகும். குஞ்சிதபாதத்தையும், பிரம்ஹ ஸூத்திரத்தையும் யுக்தியுடன் கல்பித்துக் கொள்ளவேண்டும். நடராஜ மூர்த்தியானது, இவ்விதமாக 9 விதமாகக் கூறப்பட்டிருக்கிறது.

1. (ஸ்வாமியின்) பெருவிரல் தூக்கியும் அதன் நுனியானது (அவனடைய உடலில்) அழுத்தப்பட்டுமிருப்பதாகும் என்பது அச்சிட்டிருக்கும் புத்தகத்திலிருக்கும் பாடம்.

2. கஜஹஸ்தம் போன்ற ஹஸ்தமானது வலது கையிலுமிருக்கலாம், அல்லது இடது கையிலுமிருக்கலாம் என்பது ஸரஸ்வதி மஹால் நூலிலுள்ள பாடம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸ்ரீநடராஜர்

(ஸ்ரீசிவகுருநாதசுவாமி திருக்கோயில், சிவபுரம். 10ஆம் நூற்றாண்டு)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நிருத்த மூர்த்தி

(பூத கணங்கள் இசைக்கருவிகள் வாசிக்க, வடிக் காதுகளுடன்
ஜடாமகுடத்துடன் கீழ் நோக்கிய பார்வையுடன்)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சில்ப ரத்னத்தில் – நடனமூர்த்தி

நடனமூர்த்தி

சிவபெருமானுடைய நடனம் நூற்றெட்டு வகைப்படும். அவற்றுள், முதலில் ஒன்பது வகைகள் கூறப்படுகின்றன. ந்ருத்தத்தினுடைய உயர்ந்த நிலையும் தாழ்ந்த நிலையும் பன்னிரண்டு, பதினொன்று, பத்து அம்சங்களுக்குள் இருக்க வேண்டும். வலது கையின் விரல் நுனியை நெஞ்சுக்கு நேராக உயர்த்தவேண்டும். இடது கையின் உள்ளங்கை மத்தியிலாவது அல்லது நடுவிரலின் நுனியிலாவது, அல்லது நடுவிரலின் நடுக்கணுவிலாவது நெருப்புச் சட்டியை அமைக்கவேண்டும்; அல்லது, அச்சட்டியில்லாமல் வெறுங்கையுடனும் அமைக்கலாம். மற்றொரு வலது கையில் உடுக்கையையும் அமைக்கவேண்டும். வலது முன் கையில் முன் கூறியபடி அபயதான முத்திரையை அமைக்கவேண்டும். அபய ஹஸ்தத்தில், கோஷ்டத்தின் (முற்பகுதியின்) நடுவில் பாம்பு வலயத்தை அமைக்கவேண்டும். (பாம்பு வளைபோல் சுற்றியிருப்பது) மற்றொரு இடது கையை, தகுந்தவாறு அசைந்தாடும் நிலையில் அமைக்கவேண்டும். ஊன்றி நிற்கும் காலின் முழங்காலுக்கும் இடது காலின் முழங்காலுக்கும் பதினாறு அங்குலம் இடைவெளியும் உயரமும் இருக்கவேண்டும். சடைகள் அழகாகச் சிதறிக் கிடக்கும். சடையில் பல்வேறு விதமான பாம்புகள் விசித்திரமாகச் சுற்றிக் கொண்டிருக்கும். தலையில் மகுடம் அணிந்திருப்பர். அதில் மண்டை ஓடுகளும் ஊமத்த மலர்களும், பாம்புகளும் இலங்கும். இம்மகுடத்தில், வலது புறம் அரைச்சந்திரனை அணிந்திருப்பர். தலையணி செந்தூரத்தினால் அலங்கரிக்கப்படும். ருத்திராக்ஷ மாலையை தொங்கவிட்டுக் கொண்டிருப்பர். அவரது திருமேனி முழுதும் திருநீறு பூசப் பெற்றிருக்கும். சிறிது குறுநகையுடன் கூடிய முகத்தினராயிருப்பர். முப்புரி நூல் முதலியவை அணிந்திருப்பர். புலித்தோலை ஆடையாக அணிந்திருப்பர். வலது காலை மடக்கி அபஸ்மாரத்தின் மேல் பதியவைத்தவாறு நின்றிருப்பர். (அபஸ்மாரம் – சிவபெருமான் நடனமாடும் பொழுது, அவரது பாதத்தின் கீழுள்ள 'முயலகன்' எனப்படும் குறட்பூதத்தின் பெயர்) இந்த அபஸ்மாரத்தின் அளவு நான்கு தாலமாகும். (தாலமானத்தின் விவரம் மற்றொரு இடத்தில் காண்க). இவ் வபஸ்மாரத்தின் தலை, சிவனது வலதுபுறம் கீழ் நோக்கியவாறு இருக்கும். கால்களும், மேல்தூக்கி விரிக்கப்பட்ட கைகளும் சர்ப்பம் படமெடுத்தது போன்றிருக்கும். இடதுகையில் பாம்பைப் பிடித்திருக்கும்; வலது கை முத்திரையுடன் கூடியிருக்கும். இவ்வபஸ்மாரத்தை, சிறப்பாகப் பசுமையான பயிர் நிறமுள்ளதாகச் செய்யவேண்டும். அதன் கீழ் பதினாறு அங்குலம் உயரமுள்ள பத்ம பீடம் (தாமரை மலர் பீடம்) அமைக்க வேண்டும். அந்தப் பீடத்தைப் போல் நான்கு மடங்கு அகலமுள்ள (வட்டமான) பிரபையுடன் கூடியவர் இங்கு அமைக்கப் படும் வட்டவடிவமான பிரபை சூரிய மண்டலம் போல் அமைக்கப்படவேண்டும். அங்கு, முன் கூறியபடி இடது புறம் பார்வதி தேவியையும் அமைக்கவேண்டும். இதுவே, அனைத்துலகுக்கும் நலம் பயப்பதான முதல் வகை நடனம்.

இரண்டாவது நடனமூர்த்தி

இதே நடன மூர்த்தியில் சடையின் நுனியில் வலதுபுறம் கங்காதேவி வீற்றிருப்பள். சிவபெருமானுடைய அர்ச்சா விக்ரகத்தின் அங்குலத்தினால் ப்தினாறு அங்குலம் உயரமுள்ளதாக இந்தக் கங்காதேவியை அமைக்கவேண்டும். பெண்களுக்கேற்ற உயரமுள்ளவளாகவும், இதயத்தில் கை கூப்பியவாறாகவும் இந்தக் கங்காதேவி அமைக்கப்பெற வேண்டும். இவ்வாறு கங்கையுடன் கூடியது சிவபெருமானுடைய நடனங்களில் இரண்டாவதாகக் கருதப்படுகிறது.

மூன்றாவது நடனமூர்த்தி

அதே வடிவத்தில், அந்த அபஸ்மாரத்தின் மேல் இடது காலைப் பொருத்தி வைத்து, வலது காலைத் தூக்கியவாறு அமைத்திடின், இது மூன்றாம் வகையான நடனமாகும்; மற்றவையெல்லாம் முதல் வகையைப் போன்றே இதிலும் அமைக்கவேண்டும்.

நான்காவது நடனமூர்த்தி

இதில் சிவபெருமானின் நடனத்துக்கேற்ப, சடைகளும் சாய்ந்தவாறிருக்கும்; சடைமுடியணிந்தவாறாகவும், அல்லது மண்டலம்போல் வட்டவடிவமாக சடைகள் உள்ளவாறும் அமைக்கப்படலாம். மற்றவை முதல் நடனத்தில் போலவே கண்டுகொள்க.

ஆதாரம்: ''சில்பரத்னம்'' – த.ச.ம. நூலகப் பதிப்பு.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஐந்தாவது நடனமூர்த்தி

இதில் சிவனது தலைப்பாகை (கிரீடம்) க்கு மேல், ஒரு மாத்திரை அளவுக்கு வலது காலை உயர்த்தவேண்டும்; இடது பாதம் வளைந்தவாறு அபஸ்மாரத்தின் மேல் பொருத்தப்படவேண்டும். இந்த மூர்த்தியில் எட்டு (துணைக்) கைகள் உண்டு. அபய முத்திரை, சூலம், பாசக்கயிறு, உடுக்கை இவைகளை வலது கைகளிலும், கபாலம், தீச்சட்டி, தடி, யானைத் துதிக்கை போன்ற கை, இவைகளை இடது கைகளிலும் தரித்திருப்பர். ஆறு அங்கங்களுடன் கூடியிருப்பர். இடது புறம் பார்வதியுடன் கூடியிருப்பர். கந்தன் பயத்தினால் தனது இரு கைகளாலும் தாயினுடைய கொங்கைகளையோ, மார்பையோ வயிற்றையோ அணைத்துக் கொண்டிருப்பர். அல்லது இடது புறம் இரு கைகளையும் உயர்த்திக் கூப்பியவாறிருப்பர். இவ்வாறாக சிவபெருமானைப் பார்த்தவாறு, பயம் எல்லை கடந்த அன்பு, வியப்பு இவற்றுடன் கூடியவளாய் பார்வதி இருப்பள்.

ஆறாவது நடனமூர்த்தி

அபய முத்திரையையும், உடுக்கையையும், வஜ்ரம், சூலம் இவற்றையும், பாசக்கயிறு, மழு, தடி, பாம்பு இவற்றையும் வலக்கைகளில் தரித்திருப்பர். இடது புறத்து எட்டுக் கைகளுள், யானைத் துதிக்கை போன்றது ஒன்று. முழங்கால் வரை நீண்டு, வீசிய நிலையில் இருக்கும் மற்றொன்று. மற்ற கைகளில், நெருப்பு, மிருனம் (இரட்டை), வளையம், கொடி, மணி, மண்டையோடு இவற்றைத் தரித்திருப்பர். (இந்த ஆறாவது நடனத்தில் சிவபெருமானுக்குத் திருக்கைகள் பதினாறு). இதில், சிவனுடைய கால்கள், ஐந்தாவது நடனமூர்த்திக்குள்ளவாறே அமைக்கப்பெறவேண்டும்.

ஏழாவது நடனமூர்த்தி

மூன்று கண்களும் எட்டுக் கைகளும் இவருக்குண்டு. இவரது சடைகள் அழகாக நாற்புறமும் விரிந்து பரந்திருக்கும். இடது கால் வளைக்கப்பட்டு அபஸ்மாரத்தின் மேல் வைக்கப்பட்டிருக்கும். வலது பாதம், தாமரை மலரையொத்த கட்டை விரலின் நுனியளவு உயர்த்தப்பட்டிருக்கும். நான்கு வலது கைகளில் முறையே அபய முத்திரை, சூலம், பாசம், உடுக்கை இவற்றை வைத்திருப்பர். இடது புறம் உள்ள கைகள் நான்கனுள் இரண்டு, மண்டையோடும் தீச்சட்டியும் ஏந்தியிருக்கும். மற்றொன்று வியப்பை உணர்த்தும் குறியில் அமைந்திருக்கும். மற்றொன்று, யானைத் துதிக்கைபோல தொங்கிய நிலையில் இருக்கும். இது, வலது புறமும் இடது புறமுமாக ஊசலாடும் நிலையில் அமைந்தாலும் தகும். இடது புறத்தில் பார்வதி வீற்றிருப்பள். இவ்வகை ஏழாவது நடனமாகும்.

எட்டாவது நடனமூர்த்தி

இதில் முன் (ஏழாவது) போலவே எல்லாம் அமையும். கைகள் மட்டும் ஆறு. வலது மூன்று கரங்களில் அபய முத்திரை, உடுக்கை, சூலம் இவை விளங்கும். இடது மூன்று கைகளில் இரண்டு, மண்டையோடு வியப்புக்குறி இவற்றுடன் அமைய, மற்றொன்று யானைத் துதிக்கைபோல் தொங்கவிடப்பட்டிருக்கும். இது எட்டாவது வகை நடன மூர்த்தியாகும்.

ஐந்தாவது ஆறாவது நடனங்களில் சிவபெருமானுக்குக் கண்கள் இரண்டும், ஏனையவற்றில் மூன்றுமாக அமைக்க வேண்டும்.

ஒன்பதாவது நடனமூர்த்தி

இதில் கைகள் நான்கு, கண்கள் மூன்று, பரந்து விரிந்த சடைகள்; அபய முத்திரை, உடுக்கை இவற்றை ஏந்திய வலது கைகள்; தீச்சட்டியுள்ளதும், யானைத் துதிக்கை போன்று தொங்குவதுமான இடது கரங்கள். இதில், காலின் கீழ் அபஸ்மாரம் இல்லை. பீடத்தின் மேல் இடது கால் மடங்கியவாறு வைக்கப்பட்டிருக்கும். வலதுகால் சுண்டுவிரல் அதற்கு முன் பீடத்தில் பொருத்தப்பட்டிருக்கும். வலது காலும் சாதுர்யமாய் மடக்கியவாறே அமைக்கப்படவேண்டும். இதுவே ஒன்பதாவது வகை நடனமூர்த்தியாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



காளிகா தாண்டவம்
(படிமக் கோடுகள்)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



ஊர்த்வ தாண்டவர் - காளி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸ்ரீதத்வநிதி சிற்ப நூலில் சப்த தாண்டவ மூர்த்தி ரூபங்கள்

ஸப்த தாண்டவ மூர்த்தி ஸ்வரூபங்கள் (சைவம் காரணாகமத்தில்)

அவைகளில் முதலாவது ஆனந்த தாண்டவ தியாநம்

4 கைகளையுடையவரும், 3 கண்களையுடையவரும், விரிந்த சடைகளையுடையவரும், வெளுப்பு நிறமுடையவரும், மயில் தோகையையணிந்திருப்பவரும், தலையில் சடையில் வலது (இடது) பக்கத்தில் ஊமத்தம் பூவையும் அரை வட்ட சந்திரனையும் தரிப்பவரும், வலது பக்கத்தில், தனது சடையின் நுனியில் கங்கையினாலே சோபிப்பவரும், இடது காதில் கர்ண பத்ரமும், வலது காதில் மகரகுண்டலமும் அணிந்திருப்பவரும், ஸகல ஆபரணங்களையுமணிந்திருப்பவரும், யஞ்ஞோபவீதத்தை தரிப்பவரும், புலித்தோர் ஆடையையணிந்திருப்பவரும், கால்களில் சதங்கைகளை அணிந்திருப்பவரும், இடது பக்கத்தில் கையை நீட்டிக் கொண்டிருப்பவரும், வலது பக்கத்தில் அபயஹஸ்தத்துடனிருப்பவரும், வலது கையில் உடுக்கையை தரிப்பவரும் இடது கையில் அக்நியை தரிப்பவருமான பரமேசுவரன், அபஸ்மாரன் மேலே வைத்திருக்கும் வலது காலைக் கோணலாக வைத்துக் கொண்டும், ஊர்துவமுகமான (மேல் நோக்கான) இடதுகாலின் நுனிப்பக்கத்தை வலது பக்கமாக வைத்துக் கொண்டும்செய்யும் நர்த்தநமானது, ஆநந்ததாண்டவம் எனப்படும். (வெளுப்பு நிறம்).

ஸந்தியா தாண்டவ தியாநம்

4 கைகளும், 3 கண்களும், ஜடாமகுடமும் தரிப்பவரும் வலது பக்கம் கைகளில் அபயத்தையும், டமருவையும் இடது கைகளில் மயில் தோகையையும், விஸ்மய ஹஸ்தத்தையும் தரிப்பவரும், அபஸ்மாரனின்றி பீடத்தின் மேலே இடது காலை குஞ்சிதமாக வைத்திருப்பவரும் ஸர்பங்களை கங்கணங்களாக அணிந்திருப்பவருமான ஸ்ரீபரமேசுவரன், இடது பக்கமாக இருக்கும் வலது காலை ஊர்துவ முகமாகவாவது (மேல் நோக்காகவாவது) குஞ்சிதமாகவாவது வைத்துக் கொண்டு செய்யும் தாண்டவமானது ஸந்தியா தாண்டவமாகும். (நிறம் முதலியன முன்பு கூறியது போல்).

உமாதாண்டவ தியாநம்

ஒரு முகமுடையதும், 3 கண்களுடையதும், ஜடா மண்டலத்தைத் தரிப்பதும், வெளுப்பு நிறமுடையதும், 6 கைகளுடையதும், அபயம், டமரு, சூலம் இவைகளை வலது பக்கம் கைகளிலும், கபாலம், விஸ்மய ஹஸ்தம், கரிஹஸ்தம் இவைகளை இடது பக்கம் கைகளிலும் தரிப்பதும், இடது காலை அபஸ்மாரன் மேலே வைத்துக் கொண்டிருப்பதும், இடது காலை ஒட்டி வலது காலை மேலே தூக்கிக் கொண்டிருப்பதும், இடது பக்கத்தில் உமாதேவியுடன் கூடியிருப்பதும், கங்கையைத் தரித்திருப்பதும், ஸகல ஆபரணங்களையுமணிந்திருப்பதும், புலித்தோலாடையையணிந்திருப்பதுமான பரமேசுவர மூர்த்தியானது, உமாதாண்டவ மூர்த்தி எனப்படும். (மற்றது முன்புபோல்).

கௌரீ தாண்டவ தியாநம்

மன அமைதியையுடையதும், 4 கைகளும் சிவப்பு நிறமும் சிரித்த முகமுடையதும், மண்டையோடு, பகபுஷ்பம் (கொக்கு மந்தாரைப்பூ) ஊமத்தம்பூ, எருக்கம்பூ, இவைகளையும் இளம்பிறை சந்திரனையுமணிந்து விரிந்திருக்கும் சடைகளையுடையதும், ஸர்ப கங்கணத்தை தரிப்பதும், அபஸ்மாரன் மேலே வலது காலை குஞ்சிதமாக வைத்துக் கொண்டு, இடது காலை மேலே தூக்கிக் கொண்டிருப்பதும், வலது பக்கம் கையில் அபயமும், உடுக்கையும் இடது பக்கம் கைகளில் கீழ்க்கையில் ஸர்பமும் மேல்கையில் அக்கிநிபாத்திரமும் தரிப்பதும், இடது பக்கத்தில் கௌரி தேவியுடனும், வலது பக்கத் தில் நந்திகேசுவரருடனும், கூடியிருப்பதும், விரிந்திருக்கம் சடையை அல்லது ஜடா மகுடத்தைத் தரிப்பதும், இடது பக்கத்தில் மௌளியை (கங்கையை) தரிப்பதுமான மூர்த்தியானது, கௌரி தாண்டவமூர்த்தி எனப்படும். மற்றவைகள் முதலாவது நர்த்தநத்தில் கூறியிருப்பதைப் போலவேயாகும். (சிவப்பு நிறம்).

ஆதாரம்: "ஸ்ரீதத்வநிதி – முதற்பாகம்" – த.ச.ம. நூலகப் பதிப்பு.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

காளி தாண்டவ தியாநம்

ஒரு முகமும், 2 கண்களும், ஜடைகளினாலே சுத்தப்பட்ட தலையும், 8 கைகளும், நன்கு உயரத்தூக்கிய வலது காலும், அபஸ்மாரன்மேலே குஞ்சிதமாக (சிறிது வளைந்திருக்கும்படி) வைக்கப்பட்டிருக்கும் இடது காலும் உடையதும், அபயம், சூலம், பாசம், உடுக்கை இவைகளை வலது கைகளிலும், கபாலம், அக்கிநி பாத்திரம், மணி, வலது பக்கத்தில் நீட்டித் தொங்கவிடப்பட்ட கரிஹஸ்தம் போன்ற கை, இவைகளை வலது கைகளிலும் தரித்து, ஸகல லக்ஷணங்களும் பொருந்தியிருக்கின்ற மூர்த்தியானது, காளிகா தாண்டவ மூர்த்தி எனப்படும். மற்றவை முதலாவது நர்த்தநத்திற்குக் கூறியது போலவேயாகும். (வெளுப்பு நிறம்).

திரிபுர தாண்டவ தியாநம்

16 கைகளுடன் கூடியதும், இடது பக்கத்தில் கௌரீதேவியை அணைத்துக் கொண்டிருப்பதும், வலது பக்கத்தில் முருகனுடனிருப்பதும், வலது கையை அஞ்ஜலியாக (குழிவாக) வைத்துக் கொண்டிருப்பதும், வலது பக்கத்திலுள்ள 8 கைகளில், அபயம் 1, உடுக்கை 2, வஜ்ரம் 3, சூலம் 4, பாசம் 5, டங்கம் (உளி அல்லது மழு அல்லது மண்வெட்டி)6, தண்டம் 7, நாகம் 8, இவைகளையும், இடது பக்கத்திலுள்ள 8 கைகளில், வலது பக்கத்தில் நீட்டிய பூர்வகரம் 1, அக்கிநிபாத்திரம் 2, புஸ்தகம் 3, வரதம் 4, துவஜம் 5, கேடயம் 6, மணி 7, கபாலம் 8 இவைகளையும் தரிப்பதும் ஸகல லக்ஷணங்களுடன் கூடியதுமான மூர்த்தியானது, திரிபுர தாண்டவமூர்த்தியாகும். மற்றவை முதலாவது நிருத்த மூர்த்திக்குக் கூறப்பட்டதைப் போன்றவைகளேயாம். (வெளுப்பு நிறம்).

ஸம்ஹார தாண்டவ தியாநம்

ஸம்ஹார தாண்டவ மூர்த்தியானது, 3 கண்கள், 8 கைகள், விரிந்த சடைகள், அபஸ்மாரன் மேலே குஞ்சிதமாக வைத்துக் கொண்டிருக்கின்ற இடது கால், உயரத் தூக்கியிருக்கின்ற வலது கால், மேலே அணியப்பட்ட புலித்தோலாடை, இவைகளையுடையதும், வலது கைகளில் அபயம், சூலம், பாசம், உடுக்கைகளையும், இடது கைகளில் கபாலம், அக்நிபாத்திரம், விஸ்மய ஹஸ்தம், வலது பக்கத்தில் நீட்டப்பட்டிருக்கும் கஜஹஸ்தம் போன்ற ஹஸ்தம், இவைகளை தரித்திருப்பதும், வலது பக்கத்தில் நந்திகேசுவரர், இடது பக்கததில் கௌரீதேவி, இவர்களுடன் கூடியிருப்பதுமாகும். இது 7வது நிருத்தமாகும். இது, உலகத்திற்கு விருத்தியையளிக்கும். மற்றது முதலாவது நிருத்தத்தைப் போன்றதாகும். (வெளுப்பு நிறம்).

பதஞ்சலி

வியாக்கிரபாதர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸ்ரீசிவகாமி சமேத ஸ்ரீநடராஜர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



ஆடல்வல்லான்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மூர்த்தி தியானத்தில்
நடேசர் – சிவகாமி தியானங்கள்

1. நடேச தியானம்

சய்யாபஸ்மாரகோர்த்வஸ்த்திதபதவிலஸங்வாமமுத்ருத பாதம்
ஜ்வாலாமாலாஸுமத்யே நடபணிசிரஸிஸ்தூல மாஸேதிவாங் ய:!
பஸ்மோத்தூளிதமங்கவித்ருமநிபம் ஹஸ்தாக்ர பாதாக்ரயோ:
அக்நிம் தோலவராபயம் டமரகம் த்ருத்வா நடேசம் பஜே!!

(இ–ள்) படுத்திருக்கின்ற அபஸ்மாரன் என்னும் அரக்கன் மீது (இடது) காலை தூக்கி வைத்துக் கொண்டும், வலது காலைப் பதியவைத்துக் கொண்டிருப்பவரும், அக்னி ஜ்வாலைகளின் வரிசைகளுக்கு நடுவில் விளங்குபவரும் படமெடுத்தாடுகின்ற பாம்பின் தலையில் ஸ்தூலமாக அமர்ந்திருப்பவரும், (இப்படி அமர்ந்திருப்பது அபஸ்மாரன்மீது காலை வைத்துக் கொள்ளாத சமயம் என்று அறியவேண்டும்) திருநீறு பூசப்பட்ட சரீரத்தையுடையவரும், பவழம்போல் சிறப்பு நிறம் கொண்ட உள்ளங்கைகள், உள்ளங்கால்களையுடையவரும், அக்னி (நெருப்பு) உடுக்கை தொங்கப்போட்டுள்ள கை, வரத முத்திரை அபய முத்திரைகளை முறையே பெற்றிருப்பவருமான நடேசரை வணங்குகிறேன்.

2. சிவகாமீ தியானம்

ஏகவக்த்ராம் த்விநேத்ராம்ச ஸர்வாபரண ஸம்யுதாம்!
ப்ரலம்பவாமஹஸ்தாஞ்ச தக்ஷஹஸ்தோத்பலாம் சிவாம்!!
ஸவ்யபாதஸ்த்திதாம் தேவீம் குஞ்சிதேதரஜாநுகாம்!
சிவகாமேச்வரீம் வந்தே சிவதாண்டவ ஸாக்ஷிணீம்!!

(இ–ள்) ஒரு முகத்தையும் இரண்டு கண்களையுமுடையவளும், ஆபரணங்கள் யாவற்றாலும் அலங்கரிக்கப்பட்டிருப்பவளும், தொங்கவிட்டுக் கொண்டிருக்கிற இடது கையையும், நீலோத்பல மலரைக் கொண்ட வலது கையையுமுடையவளும், க்ஷேமத்தைச் செய்பவளும், வலது காலை நேராகவும், இடது காலை கொஞ்சம் மடக்கியும் வைத்துக் கொண்டிருப்பவளும், பரமேச்வரனின் தாண்டவத்தின் பொழுது பக்கலில் இருப்பவளுமான சிவகாமேச்வரியை வணங்குகிறேன்.

3. சபாபதி தியானம்

கங்காசந்த்ரதரம் ரக்த ஜடாதரம், ஸ்மிதானனம்!
வாமகர்ணேபத்ரகம்ச தக்ஷிணேநக்ரகுண்டலம்!!
ஸாசீக்ருதத்ருசம் ஸௌம்யம் த்ரிணேத்ரம் நாகபூஷணம்!
பில்வார்க்கத்ரோண சம்யாக துத்தூரஸுமபூஷிதம்!!
குஞ்சிதம்வாமபாதஞ் சாபஸ்மாரோபரி ஸம்ஸ்திதம்!
தக்ஷே டக்காம்ச வரதம் வாமே அக்நிம் டோலஹஸ்தகம்!!
த்ருத்வா நடந்தம்தம் நம்ரத்வ்யாக்ரபாத பதஞ்ஜலிம்!
சிவகாமேச்வரீபார்ச்வம் ஸபாபதிமஹம் பஜே!!

(இ–ள்) மூன்று கண்களையுடையவரும், சிவந்த ஜடையையுடையவரும், கங்கையையும், சந்திரனையும் ஜடையில் தரித்திருப்பவரும், புன்முறுவலுடன் கூடிய முகத்தையுடையவரும், இடது காதில் பத்ரம் என்னும் ஆபரணத்தையும், வலது காதில் முதலை வடிவிலான குண்டலத்தையும் அணிந்திருப்பவரும், சாய்த்து (ஓரக்கண்ணால்) பார்க்கப்

ஆதாரம்: "மூர்த்தித் தியானம்" – த.ச.ம. நூலகப் பதிப்பு.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பட்ட த்ருஷ்டியையுடையவரும், சாந்தமான தோற்றத்தையுடையவரும், பாம்புகளை ஆபரணமாகக் கொண்டவரும், பில்வம், அருகம்பில்லு, த்ரோணம், சம்யாகம், துத்தூரம் முதலான புஷ்பங்களால் அலங்கரிக்கப்பட்டவரும், வளைந்திருக்கிற இடது காலையுடையவராக வலது காலின்கீழ் அபஸ்மாரன் என்பவனைக் கொண்டவரும், வலது கைகளில் உடுக்கையையும், வரத முத்திரையையும், இடது புறமள்ள ஒரு கையில் நெருப்பை வைத்துக் கொண்டும், மற்றொன்றை தொங்கவிட்டுக் கொண்டும் இருக்கிறவரும், நடித்துக் கொண்டிருப்பவரும் வியாக்ரபாதர், பதஞ்சலி இவர்களால் வணங்கப் பட்டவரும், சிவகாமியம்மனைப் பக்கலில் உடையவருமான ஸபாபதியை வணங்குகிறேன்.

4. அஷ்டபுஜ ஸபாபதி தியானம்

ஏகவக்த்ரம் த்விநேத்ரஞ்ச தீர்கஹஸ்த ஸமன்விதம்!
அபயம் சூலஹஸ்தம்ச டமரும் துங்கஹஸ்தகம்!!

பாதாக்ரே ந்ருத்தஹஸ்தஞ்ச நாகஹஸ்தஞ்சவஹ்நிகம்!
இத்யேவாஷ்டகரம்ப்ரோக்தம் ஊர்த்வபாதம் விசேஷத:!!

திஷ்டத்தக்ஷிணபாதஞ்ச ஹ்யுத்ததம் வாமபாதகம்!
ஹரிர்ப்ருஹ்மாதி தேவேட்யம் நந்திகேச்வரஸேவிதம்!!

ஸந்த்யாந்ருத்தம் ஸபாமத்யே பரமாநந்ததாண்டவம்!
